நாபாஜிசித்தர்-அசமுமுகமுமலர்ந்துசகஸ்த்ராரமான ஆக்னேய சக்ராத்தில வளியையேற்றி-ஒளியைப்போற்றி-ஒளியுந்திரிசிய மென்றகற்றி - பாவெளியாகி ஆனந்தமாத்திரமாயிருக்கும் சித்தர்களே! எனக்குகந்தபக்தர்களே! மூவரையுந்தேவரையும் மற்றியாவரையும் விழுங்கியுமிழ்ந்த மாயையைக்கடந்த சுகப்பிரம்மரிஷியின் அவதாரந்தைக்கேட்கின் களியாதவரு முன்டோ? உத்தமர்களே, மிகவுங்கண்யர்களே; தேகமென்னும் பூமியில்-விஷயங்களென்கிற பதாதிகளையும் இந்திரியக்களென்கிற வீரர்களையும்-அம்சக்ரணக்களென்கிற-சேனாபதிகளையும்-எண்ணங்களென்கிற தாகங்களையும் மற்...க்களென்கிற ...திறகரிகளையும்-மானுபிமானங்களென்கிற ரதங்களையும்-இச்சையென்கிற சாரதிகளையும்-ஜீவத்வமென்கிற அரசனையும், ஞானமென்னும் பாணத்தைதொடுத்து - கண்டதுண்டங்களாகும்படி விடுத்து-தன்னெதிரில் வாராமற்கெடுத்து-ஆனந்தத்தை யடைந்து ஆத்மமாத்திரமா யிருக்கும்-முத்தர்களும்-பாசமென்கிற நாட்டைவிட்டு-ஆசையென்கிற வீட்டைச்சுட்டு-காயமென்கிற ஸ்திரீஸம்பந்தி-விஷ்காமமென்கிற ஸ்திரீயுடனேங்கி-நிர்த்தலென்கிற மார்க்கத்திற்சென்று-ஏகாந்தமென்கிற வனத்தினில்நின்று-கூடஸ்தபிர்ம்மமேதானுகிதே யாநிகளுக்குக்கோனுகியிருக்கும்) சுத்தர்களும் வர்ழுமிடமாகிய சகலருமே, புகழும்படியான-கங்காதிரமாயிகாசிதேசத்திலிருப்பவர்பாவிகளையிகவும் வெறுப்பவர்-சஞ்சலமானதை - மறுப்பவர் மேல்விழ்ந்தடிக்கப் பொறுப்பவர்-நித்யசத்ய - நிர்விகார நிராங்கார வஸ்துவாகிய பரப்பிர்யமத்தை பரிசுத்தமனதுடன் - ஐந்துவேளையுமிடையறு அன்புடன்-தியானஞ்செய்பவர் * மோசலமாமுனிவாரலேற்படுத்தி அதுக்கர்க்குலத்திலுற்பவித்தவர் - தமாலென்றும் பேருடையவர்-விசாலமான விடுையவர்-தான் ஜீவஇம்ஸைசெய்யும் துடுக்கர்குலத்தி லுற்பவித்திருந்தும்- தன்னுயிர்போல் மன்னுயிரைப்பார்க்கவெண்ணி-எக்கே

* மோஸைமாமுனிவரா லேற்பட்டவர்களே யோசல் மான்கள்.





ரமுங்கடவுளைப் பஜனைபண்ணி-நமதுஜீவனம் ஜீவ இம்சையில்லாமல்-எத்தொழிலால் நடக்கு-மென்றுயோசித்து-வஸ்திரம் நெய்யுந்தொழிலிலே நலமென்றறித்துன்றாய் நெய்வோருடன் நேசித்து யாவர்க்கு மிது நல்ல தொழிலென்-றுபதேசித்து வேறுதொழில்களைத் தூஷித்து-நல்லயோசனைவந்ததெனச் சந்தோஷித்து பிதாம்பரம் நெய்வோரைப் பூஷித்து-பரப்பிரம்மசங்கீர்த்தனங்களைக்கோஷித்து நாணயமாய் நெய்யுந் தொழிலைக் கற்றுக்கொண்டு- தனதுநாயகியையும் நெய்யும்படியாய் விண்டு-கொல்லாவிரதமே நல்லவிரதமென்று-ஞானவழியிற்சென்று-அஞ்ஞானமனைத்தைக்கொன்று-கடவுளை நமக்குத்துணையென்று நானென்னு மாங்காரத்தை வென்று-எழுவர்க்கன்னமென்று-அன்னம் பருப்பேதின்று—சாதுக்கள் சங்கமேநன்று-மற்றவர்களுறவு நன்றன்று-எல்லாச்சமயத்துக்கும் தெய்வம் ஒன்று எனப்புகன்று-இல்லறத்தில் நல்லறத்துடனிருந்து-சாதுக்களுக்கடிக்கடி விருந்து அன்பாய்ச்செய்து அகப்பாவத்தைக்கொய்து - ஏழைகள்பேற் கருணைமழை பெய்து-ஏழைகளைவருத்துவோரைவைது-நெய்யுந்தொழிலால் திரவியஞ்சேகரித்து-லோபகுணத்தைத் திரஸ்கரித்து-சதாகாலமுஞ் சாதுக்கள் பணிவிடை செய்துகொண் டிருக்கிற தருணத்தில்.

ஓர் மகாத்மா இவர்கள்செய்யும் பணிவிடைக்குகந்து-இவர்களுக்கெல்லாம் பாக்கியமிருந்தும் - புத்திரபாக்கிய மில்லாக்குறையால் சற்றுத்தாழ்வடைந்திருக்கிறார்களென்றன் பின்மிகுதியால் தமால்மனைவியாகிய ஜிஜ்ஜாபியியை நோக்கி-ஓ! அம்மா புண்ணியவதி-உனக்கு முப்பத்திரண்டு லட்சணங்களும்-ஈஸ்பரபக்தியும் பிரம்மக் ஞானமுமுள்ள-ஓர் புத்திரனுண்டாகக்கடவதென் றாசீர்வதித்துத் தன்னிருப்பிடமபோக.

ஜிஜ்ஜாபியி-மிகவும் மனமகிழ்ந்து-பெரியோரைப் புகழ்ந்து-தன்பதியிடம்வந்து வந்தனஞ்செய்து-ஓ! ஸ்வாமி-யாரோ ஓர் மகாத் மா எனக்குப் புத்திர சந்தானமுண்டாகும்படி ஆசீர்வதித்துப் போனார்-அவர்வாக்கியப்படியே - நமக்குப்புத்திரபாக்கிய முண்டாகுமாவென்று கேட்க.

அதற்கு-தமால் பெருநகைபுரிந்து ஓ; பெண்ணே-என்னிருகண்ணே உனக்கல்யாணபருவங்கடந்து விருதாப்பிய பருவம்டந்து வருகின்றது- இனியுனக்குப் பிள்ளைபிறக்குமா? உனக்குத்தா எண்ணமிறக்குமா? அப்படிகுழந்தை பிறந்தாலும் மழவியால் மோக்ஷமடைவோமா? ஆனந்தம் பெறுவோமா? பாவங்கள் நசித்துப்போமா? இகவெண்ணங்க ளிறந்துபோமா! இல்லையே-நீநினைத்திருப்பது தொல்லையே-நானயின்றியுனைத்தா யிச்சொல்லையே - நீ மோக்ஷமடைகிறவனல்லையே அடிபாவையே - பூவையே - நமக்குரியமைந்தன் கொல்லாவிரதமே யாதலால் - ஜீவகாருண்யத்தைக் கடைப்பிடித்தொழுகென்றுரைக்க.

அதற்கு ஜிஜ்ஜாபியி - ஓ! என்பிராணவல்லபா-தெய்வவாக்குப் பொய்த்தாலும் - பெரியோர்கள் வாக்குப் பொய்த்துப்போகாதே-பொய்த்தால் பெரியோர்களென்று சொல்லலாகாதே - அப்படியிருக்க நீரிப்படி சொல்லலாகுமா வெனப்புகல-

அதற்கு - தமால் அடிமானே! இன்பந்தருந் தேனே, பெரியோர்கள்வாக்கும் - வேதவாக்கும் மண்ணாசை-பொன்னாசை மகவாசை முதலானதுந் துறக்கவேண்டுமெனச் சொல்லியிருக்க-பிள்ளைபிள்ளையென்று பிதற்றுகிறாய்-பெரியோ ராசீர்வாதஞ்செய்தாலும்-நமக்குப்பிள்ளை பிறக்கவேபிறக்காது - இனியுனக்குக் கர்ப்பந்தரிக்கவே தரிக்காது-போபோ பேதைமையென்பது-மாதர்க்கணிகலம்-என்னுஞ்சொல்லை நிலைநிறுத்தினையென்று நவில;

அதற்கு-ஜிஜ்ஜாபியி-ஓ! என்பிராணநாயகா- எனக்காசிசெய்த பெரியோர் வாக்கியப்படி - நமக்குப்பிள்ளைப் பேறுகிடைக்கும்-நடவாக்காரியமும் நல்லோரால் நடக்கும்-ஏனெனின்-முன்னும் ஓர் பெரியோரால்-ஒருத்தலைகிழாய்ப் போனதும் (மன்றுமொன்றும்) புண்ணியவானைமுந்த - சூரியனோர் பர்வதத்தி லிறங்கினதும்-இறந்துபோன குழவியுயிர்பெற் றெழுந்ததும்-உண்மையல்லவா? சாதுக்கள் மகிமையை விரித்துச் சொல்லவா? வென்றறைய.

அதற்கு தமால்-அடிகோதையே; அறிவில்லாப் பேதையே; இகவாசை நீத்தவர்களே புனிதர்-மற்றவர்களினமனிதர்-என்றுரைத்தில் முறைபிசகாதிருந்தும்-இகவாசையான மகவாசையைக் கோரினை-வேதவாக்கியத்துக்கு மீறினை-மலையைக்கெல்லி-எலியைப் பிடிப்பதுபோல-நெடுநாளாய்என்னுடன் கூடிகடவுளைத் தியானஞ் செய்தும் - இகவெண்ணங்களைத் தொய்த்தும் துச்சமான இச்சைக்குட்பட்டாய்-நாத்துமாங்கன்பால் கேட்டுக் கொள்வது அநித்தியப் பொருளையா? நித்தியப் பொருளையா? என்னைறக்கற்று-நொவதி

த்காலும் - பெண்புத்தி பின்புத்தியென்கிறபழமொழி யுனவிடத்திற் பிரத்தியக்ஷமாய்க்கண்டேன்-சிசீ - புத்திரவாஞ்சையை யிக்கணமகற்றிவிடேனென்றுரைத்து தனக்குரிய தொழில் செய்ய- பட்டுநூலேயெந்திக்கொண்டு -சிங்கைநகரிற் சென்று பட்டுநூலின் சிக்கை வாங்கிக்கொண்டிருக்கையில்.

பிள்ளைபேற்றுக்காக- அநேகர்-கங்கையில் ஸ்நானஞ்செய்து - பாகீரதியைநோக்கி-ஓ, கங்காபவானி - எங்களுக்கு மகப்பேருண்டாகும் படியாய் வரமளிப்பாயென்று தோத்திரஞ் செய்கிறதைக்கேட்ட தமாலாச்சரியப்பட்டு - ஆ,ஆ, குழந்தைகளுக்காக - எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள்- மகவாசை மகாவெறி யென்றே சொல்லவேண்டும் - இதனாலேயே நமதுமனைவி வெகுநேரந் தர்க்கஞ்செய்தாள் க்ஷணபங்கமான - இம்மல வுடலைமெய்யென்று நம்பியிழிவான குழவியாசையால் குழம்பும் ஜீவர்களினஞ்ஞானத்தாற் குழைந்த மந்தபுத்தியை என்னவிதந்திருத்தியும்- போக்குவதரிதல்லவா, ஒ தெய்வமே! மோகாந்த காரக்குகையிற் சிக்கியிருக்கும்-ஜிஜ்ஞாஸி-யுன்திருவடி யடைவதெப்படி- என்னகாரணத்தா லவனுக்குப் புத்திரபாக்கிய மில்லாமற்செய்தாய்- குழப்பமுள்ள மனைவியாளுடன் கூடி வாழ்கிறதைப் பார்க்கிலும்-செழிப்புள்ள அடவியிற் போய் தியானஞ்செய்வதே யுத்தமமல்லவா, என்றனந்தம் விதங்களா யோசித்துக்கொண்டிருக்கையில்.

கையிலிருந்த பட்டுநூல்நழுவி - கங்கையி லடித்துக்கொண்டுபோயிற்று அதுதெரிந்ததமால் அடாநமமுடைய பேய்த்தனம்பட்டுநூலிழந்து விடச்செய்தது - புத்திரனுலென்ன பேற்றைப்பெறப் போகிறான் புத்திரர்பிறப்பதுமிருப்பதுமிறப்பதுந் துன்பமேயன்றி இன்பமில்லவேயில்லை, அஞ்ஞானிகள்கோருமகித்தியப் பொருளைமெஞ்ஞானிகள் வெட்கமின்றி வேண்டுவார்களா,அன்பாய் மகவைத்தீண்டுவார்களா, பன்றியுடன் சேர்ந்தகன்றுங் கெட்டதுபோல் - பாமரரைப்பார்த்து வைராக்கியத்தைத் தோற்று - வட்டிக்காசைப்பட்டு முதலிழந்ததுபோல் - பாலனை யோசனையால் பட்டுநூலை யிழந்தேன் - வீணெண்ணத்தாற்குழைந்தேன் - இப்பட்டுநூலால்-ஐம்பது பசிரிகளுக்கன்னமிடலாமே! பிரம்மாமனந்தத் துட்படலாமே, என்கிறவெண்ணத்துடன் நூலைக்கண்டெடுக்க கங்கையோரமாய்ப் பார்த்துக்கொண்டே மனிதசஞ்சாரமில்லாக் காட்டிற் பிரவேசித்து ஆ,ஆ, இதென்ன-பேராசையாற் பேதற்றதுபோ வி[illegible]த்தி அற்பமான பட்டுநூலாசையாற் கால்கள்நோகநடந்தேன்-கானகத்தையடைந்தேன் ஆயாசத்தால் விடைந்தேன் வேதவாக்கியத்தைக் கடந்தேன்- சீசீ, நாட்டையடைந்தநாமினிநாட்டையடைவது மாசையே மனக்குறையுள்ள மாதுடன்கூடிவாழ்கிறதை விட வனத்திலிருந் தரிதானதவஞ்செய்கிறதே உத்தமமென்று-அங்கிருக்குமோர் பர்ணசாலையிற் பிரவேசித்து மெய்ப்பொருளை யாசித்து, இரு கண்களையும் மூடி - பரப்பிர்ம்மத்தைநாடி பலசங்கீர்த்தனங்களைபாடி-கடவுளருளுக்குவாடி-தபஞ்செய்யத்தொடங்கினர்.

கேட்டீர்களோ சித்தர்களே, தமாலிப்படியுத்குருஷ்டமான தபத்திலிருக்கும்போது.

வைகுந்தத்தில்-ஸ்ரீமந்நாராயணர் (சுகப்பிர்ம்மரிஷியைநோக்கி-ஓமாயாதீதனே, தன்னைமறந்த அவதூதனே, நாமனைவரும் யோசித்தபடியே-நீயிந்த தக்ஷணம் புண்ணியக்ஷேத்திரமாவாரணசியிற்போம் ஜீவகாருண்யத்தையே விரதமாகபூண்டு- நெய்புந்தொழிலாற் சீவனஞ்செய்யும்-மிகவும்புண்ணியவானை தமால் மனைவியின்கர்பத்திற்றங்கி-ஈவிபிண்டத்தைப்போல் ஓர்முகூர்த்தத்துக்குள்-காசினியிலுள்ளோராச் சரியம்படும்படியாயும்-ஈடேறும்படும்படியாயும் - அவதாரஞ் செய்வாயென்றாக்கியாபிக்க.

அதற்கு-சுகர் பகவானைப்பணிந்து-ஓ என்னாண்டவனே என்னைத்துர்க்கந்தமான கர்ப்பத்திற்பிறங்கி-ஜென்மித்துமயங்கி மாயையிற்சிக்கி வாட்டத்தாற்சொக்கி இஷ்[illegible]தய்வமாகியஉம்மையும்- அகமமதையை மாற்றும்பிர்மக்ஞானத்தையும் -மறந்து- அஞ்ஞானம்நிறைந்து-தேருநளையைப்போல் பலஜென்மங்க ளெடுத் துழலும்படியாப் யுக்திசெய்தீரோ, உமதாசீர்வாதத் தாலடியேனு மமதுமாயையைச் சற்றறிந்தவனே - உலகிலுள்ளஜீவர்களை- ரக்ஷிக்கும்படியான கருணையுமக்குப் பூரணமாயிருக்குமாயினு மதுமாயை யென்னுந் திரையைச்சற்றே நீக்குமிவ்வீராணிக்கணமே சகலஜீவர்களும் பிர்மக்ஞானத்தால் மோக்ஷமடைவார்கள்- மத்தியிலேப்படிசெய்யக்கூடாதென்று லடியேனுக்குத்தாவுகொடு மிக்கணமே யிவ்வுருவுட னிலத்திற்போய்ச் சகலருக்குஞ் சாந்தகுணமான உம்முடைய திவ்விய திருநாமங்களின் மகிமையையும் - மமதாகங்காரதை மாற்றும் பிர்மக்ஞானத்தையும்- போதித்துவருகிறேனென் றுவணங்கும்போது.

பகவான்சுகயோகியைநோக்கி ஓமாதவனே:எந்தெந்தயுகத்தி லெ[illegible]ந்தவிதமாதயுலகத்தை ரட்சிக்கவே



மாயாக்ஷிக்காமல்-உலேனென்னைப்படி செய்தால்- விபரீதத்துக் கிடமுண்டாகும்-அன்றி நீயிவ்வுருவோ டகிலத்திற்சென்று லவித்தியாசம்பந்தமுள்ள சிலர்களநித்தியத்தையே கோருவதன்றி பட்சமுகத்தோடு நிர்வாணியாயிருக்கு முன்னைப் பரியாசகமேசெய்வார்கள், மேலும்கலியுக தர்மத்தை நீயறிந்தவனேயன்றி யறியாதவனல்ல மூவுலகவர்முனிவருருவங்களான விக்கிரகங்களை நிக்கிரகிக்கும்படியான - துடுக்கர் உம்மை முடுக்காம லெளிதில் விடமாட்டார்க ளாதலாலென்னவாக்கியப்படி நடந்து கொள்வதே யுத்தமமென்றும் திருவாய்மலர்ந்தருள.

அதற்கு - சுகர்-ஓபகவானே - என்னுயிர் நீங்கினு முதரத்தில் மாத்திரம் பிரவேசிக்க மாட்டேனென்று சாற்ற.

அதற்கு - ஸ்ரீமந்நாராயணர்- ஓசுகமுனியே-நான் வாமனவதாரத்திலும்- பாசுராம ஸ்ரீராம கிருஷ்ணவதாரத்திலும்--ஓரோர் புண்ணியவதியின் கர்பத் திலிருந்தவதரித்ததுநீயறிந்ததுதானே-அல்லாம லிப்போது- நானும்-அரனயனுறி சத்தியும்ஓர் புண்ணியவதியின் கர்ப்பத்திலிருந் தவதாரஞ் செய்யயோசித்திருக்கிறோ மிதினுனக்குச் சந்தேகமிருக்குமாகில் அவர்களையுங்கேட்டுத் தெரிந்துகொள்ளுமென்று அம்மூவரும் வரும்படியாய்ச்சிந்திக்க-உடனே சிவனயனம்பிகையும்வைகுந்தத்திற் கெழுந்தருளி பகவானிடம் க்ஷேமவார்த்தைகள் பேசியபின் - சுகனைநோக்கி- ஓபுண்ணியவானே ஈண்டிவ்வாண்டவன்புகன்றவாக்கியப்படி[illegible]நாங்களோர் கன்னியின் கட்டிலிருந் தவதரிப்பது சத்[illegible]மெனப்புகல,

அதற்கு - சுகர் - மூவரையும் வணங்கி - ஓ யான்தொழுந் தெய்வங்களே, நீங்கள்மாயா விளையாட்டுடையவர்களாதலால் துர்கந்தமான கர்ப்பத்திற் பிரவேசித்தாலும்-சேற்றிலுற்ற பூச்சியைப்போல நிர்மலமாகவே யிருப்பீர்களன்றிசர்வக்ஞருமுள்ளதேவரீர்களெப்படி உற்பவித்தாலு முற்பவிக்கலாம்-கிஞ்சிக்ஞ வறிவுள்ள அடியேன் மாயையினுட் பட்டபின் மாயையைச்செயிக்க வல்லமையிராது முன்னமோர ரம்பையையனுப்பி பரிசோதித்த தின்னும்மறந்துபோக வில்லையென்று தொழ.

அதற்கு-பகவான்-ஓ சுகமுனியே நீர் சிறுகுழவியாய் கங்கையிற் பிரவேசித்து-கா[illegible]ற்றலஞ் செய்யும் தமாலுக்குக் குழவியாய்ப்போம் நாங்களு மவதாரஞ் செய்கிறோமென்றாக்யாபிக்க.

அதற்கு-அரிதாஸனாகிய-சுகர்-ஓ! பகவானே-அடியேன் காண்முளையா யுலகிற்சென்று - பிர்மக்ஞானத்தையே முக்கியமாய் ஸ்தாபிக்கட்டுமோ, உமதுதிருநாமத்தையே ஸ்தாபிக்கட்டுமோ, வென்று வணங்க.

அதற்குமூவரும் - பவானியும்-ஓ முனீஸ்வரனே நிர்குணமான பரப்பிர்ம்மத்தைத் தியானஞ்செய்யும் தனுக்கரை-சகுணத்தால் வெல்லக்கூடாதாதலா லவர்களை-நிர்க்குணத்திலேயேவென்று சகுணத்தையும் நிர்க்குணத்தையுமுலகத்தில் ஸ்தாபித்து - எங்களைத் தொழாப் பாவிகள்மேல் கோபித்து ஜீவர்களை ரக்ஷிபுமென்றுகூற.

அதற்கு - சுகர் மகாபாக்கியமென்று - முப்பத்திரண்டி லக்ஷணங்களும் வாய்ந்தசிறுகுழந்தை யுருவாகி பாகீரதியிற் பிரவேசிக்கையில்- அம்மதலையைப்பார்த்த அரனயனுறி சத்தியும்மயங்கி னின்றார்கள், மாயாவிசாலனை பகவானச்சிசுவை வாநதியிற் பலதாமமிழ்த்தி பிர்ம்மிக்கும்படியாய்ச் செய்ய அப்போதக் குழவி-சானவியிற் பலதா மமிழ்ந்தும் எழுந்தும்-திக்குமுக்கிட்டு தட்டுகெட்டு-பீதிமேலிட்டு-ஜபஸ்மரணைகெட்டு-முற்பிறப்பை மறந்துவிட்டு-காகாவென்று கூக்குரலிட்டு-பெருமூச்சுவிட்டுக் கொண்டேமந்தாகினியி லடித்துக் கொண்டே. போகையில் [illegible]வான் தமால் மனதிற்பிரவேசித்துப் புத்திரவாஞ்சையை யுண்டாக்கினர்.

உடனே தபங்கலைந்துகுழந்தையி னழுகுரலைக்கேட்டதமாலிதேது-இச்சுரநதியில் குழந்தையினழுகுரல் கேட்கின்றதென்றுநி சீக்கிரமாய்த் திரிபதகையினருகிற்சென்று-கோடிசூரியப் பிரகாசமான பாலனைக்கண்டு ஆனந்தங்கொண்டு ஆச்சரியமென் றுவிண்டு - ஜிஜ்ஞாஸிபிதவஞ் செய்தவனேயண்டு- என்று சொல்லிக் கொண்டு-மனமிகவிரங்கி-மந்தாகினியி லிறங்கி வாரியெடுத்து- மார்புடனணைத்து-சுரநதியேறி- சுதன்கைமீறி-அப்பனே-மகனே அழகான முகனே-ஒப்பில்லாதவனே - ஒளிருமாதவனே-செப்புதற் கரிய செல்வமே நலமே-இப்புவியேத்து மெழிலேபொழிலே-துப்புளவடிவே-தூய்மறைமுடிவே செப்பமேதிருவே-திவ்வியவுருவே-சுப்பிரமணியே சுரர்சிகாமணியே - எப்படிநதியி லிறவாதிருந்தாய் எப்படியிதந் தின்டேனிடம் வந்தாய்-எனக்குன் சேவையேனீ தந்தாய்-எனக்கானந்த மீந்த வென்மைந்தா வென்று (கடந்தனுர்வியுர். கடப்பசோ

மக்கள்பேற் காதலென்பதைப்போல) புதல்வனையேந்திக்கொண்டு - (ஜலம்காடினவனுக் கமிர்தமும் சிப்பியைத்தேடுவோனுக்கு முத்தமும் - வேசியைத்தேடுவோனுக்குப் பதிவிரதையும்-பிட்சைக் கேருவோனுக் கிராஜரிகமும்-எட்டியைத் தேடுவோனுக்குக்கற்பகமும் சூதாடுவோனுக்குப்புராணமும் துன்மார்க்கரைத் தேடுவோனுக்குச் சன்மார்க்கரும் கல்லைத்தேட ரத்தினமும்-கழுதையைத் தேடக்குதிரையும் - பைசாசைப் பூசிக்கக் கடவுளும்-உலக வியாபாரத்தை நாடக்கடவுள் தியானமும் வலித்ததுபோல) பட்டுநூலைத்தேடி வரத் தபமும் தபத்தாற் சுபமும் கிடைத்தபாக்கியமே பாக்கியமென்று பலவிதங்களா யோசித்து மனையாளிடம் போக ஆசித்து-ஓ அல்லா! பிஸ்மல்லா! ஓ கர்த்தனே பரிசுத்தனே! தெய்வமே! கைம்மாறென்ன செய்வமே என்றனைத்தும் விதங்களாய்த் தோத்திரஞ் செய்துகொண்டே காட்டைக்கடந்து நாட்டையடைந்து-வீட்டினுட் புகுந்து மிகவும் மகிழ்ந்து மனைவியை நோக்கி வாட்டத்தைப்போக்கிக் காதலனைத்தந்து கடவுளைப்புகழ்ந்து - அடி! பெண்ணேயென்னிரு கண்ணே. இத்தோன்றலை யாரோ கங்கையில் விடுத்தார்கள் - நமக்குக் கொடுத்தார்கள் உன் துன்பத்தைக் கெடுத்தார்கள் என்தபத்தைத் தடுத்தார்கள் - ஓ நாயனே;இன்பந்தருந்தேனே முப்பத்திரண்டு லக்ஷணங்களும் வாய்ந்த புத்திரசிகாமணிநமக்குக் கிடைத்த பாக்கியமே நாம்செய்த பாக்கியமேதோ நீயிருந்த யோக்கியமேதோ பெரியோருரைத்த சத்தியவாக்கியமீதோ குழந்தையின் மேற்சுகந்த வாசனை வீசும் கோலத்தைப்பார் நமக்குண்டான அநுகூல காலத்தைப்பார் என்று துள்ளிக் கூத்தாடினார் சங்கீதம்பாடினார் தெருக்களிலோடினார் கடவுள் தயவை நாடினார் இவரிப்படிச் சந்தோஷமேலிட்டு தான் முனையகப்பட்ட வித்தையையும் கற்போன் திருக்கொரு கொடியினுருகின சிந்தையையும் பலர்பாலுஞ் சொல்லிக்கொண்டே திரிகையில்.

ஜிஜ்ஜாபீபி பெரியோர் வாக்கியப் படியே கிடைத்த அழகான பிள்ளையைப் பார்த்த சந்தோஷத்தாற் றன்னை மறந்து - ஆனந்தம் நிறைந்து துன்பமிறந்து அளவற்ற ஆசைமிகுந்து அன்பார்ந்த நெஞ்சுடன் மருமானை மார்பிலணைத்துக் கொண்டாள், உடனேபகவானருளால் பால்சுரந்து வடிந்தது, வழியவே குழந்தையைத்தான் பெற்றதாகவே மோகமாகி பாலூட்டி நீராட்டி சீராட்டி பாராட்டி அலங்காட்டி மைதீட்டி ஆபரணம்பூட்டி தொட்டில்மாட்டி ஓசைகூட்டி தாலாட்டி ஏனையாட்டி துன்பங்களையோட்டி கண்களை காட்டி என்கண்ணுட்டி நீ மேட்டானமேட்டி மற்றவர்கள்கோட்டி என்றருமையாய்வளர்த்து ஆசங்கிளை மூச்சு போற்றளித்து களிப்பின்னுங் கடந்திப்படித்து ஒன்றுந்தோன்றாதவளாயிருந்தாள்.

தமாலோ-சகாதன்;ஸ்ரீராமன்பிறந் தபோதும் வசுதேவன், ஸ்ரீ-கிருஷ்ணபகவான் ஜனனித்தபோதும் அடைந்த சந்தோஷத்தைப்போலுடன் பிறந்தவிருக்கப் பூரித்து, உச்சாகமிகுந்து, விட்டிற்புகுந்து, குழந்தையின்மேல் அபிர்வாசனை வீசுவதால் கபீரென்று * பேரிட்டு பந்துக்களுக்கு விருந்திட்டு அதிதிகட்கன்னமன் புடவைவித்து, சதிபதிதங்களிற் றனாகலித்து, மிகவும் அருமையாய் வளர்த்து வருங்காலத்தில்.

முன்னம்-சாருலகில் தேவேந்திரன் முன் காப்பிர்மரிஷியைப் பங்கஞ் செய்துவருகிறேனென்று பிரதிக்கினை செய்து சுகாசிரமத்தை யடைந்தவருடைய பேழுகைக் கண்டு ஆசைமிகவுகொண்டு தாங்கி மயங்கி அவனை வெல்லுதற்குத் தன்னுலாகாமல் தேவராலபோத நாணமுற்ற அரம்பையானவள்- தன்னிச்சையை நிறைவேற்றிக் கொள்ளும்பொருட்டுக் கபீர்வளருங் குலத்திற் றனுமவதரித்து கண்டோர் மயங்கும்படியான் மின்னற்கொடிபோ லழகுருவுடன் வளர்ந்துவருங் காலத்தில்.

அக்கன்னிகையைப் பார்த்த தமாலுந் ஜிஜ்ஜாபீபியும் நமது மைந்தனுக் குகந்த ரதியிவளே யாமென்றம் மாதின் தாய் தந்தையரை வாஞ்சையாய் விசுவாசித்து மிகவும் நேசித்து திரவியமுதல் வஸ்திராபரணங்களளித்து சம்பந்திகள்மிகவுங்களித்துபலவந்தமாய்ப் பேசும்படியாய்ச் செய்து ஓர்நாள் செல்வனைச் சிங்காரித்து அழகைக் கண்டு பூரித்து சம்பந்தியின் மனைக்கழைத்துக் கொண்டுபோய் ஓ புனிதர்களே! உங்களுடைய கன்னிகையை எமதுமைந்தனுகிய இந்தச்சுந்தரனுக்கு மணஞ்செய்ய வாக்களிக்கின்றீர்களா; வென்று கேட்க, கபீரழகைக்கண்ட அவர்களுள்ளங் களிகூர்ந்து நமது கன்னிகைக் கிவனேதகுந்த மணாளனெனத் தேர்ந்து வேறொருவர்க் களிக்கலாமென்கிற சந்தேகந்தீர்ந்து உங்கள்தனயனுக்கெங்கள் வனிதையே மனைவியென ஒத்துமையுடன் சேர்ந்து உற்றோர் மற்றோருடனே நிச்சயதாம்பூலமும் மாற்றிக்கொண்டு சந்தோஷசாகரத்தி லமிழ்ந்திருந்தார்கள்.

கேட்டீர்களோ, சித்தர்களே! யென்று பின்னும் காபாலி சித்தர் சொல்லத் தொடங்கினர் கடவுள் துணை.

* கபீர்-உற்பத்தியைச்சிலர் வேறுவித மாகச் சொல்லுகிறார்கள் ஆனலும்-இதிற் குறித்தபடியே - முன்னோர் செய்தநூலிலிருக்கின்றது.



## உ-வது-கபீர்-சுன்னத்துச்செய்கிறதை மறுத்த அத்தியாயம்.



கேளும் காலனுக் கித்துலத்தை ஒப்பிக்காத சிலர்களே! இப்படி சுகவாரிதியி லமிழ்ந்திருந்த தமாலுஞ் ஜிஜ்ஜாபீயும் குலமுறைத் தர்மப்படி கபீருக்குச் சுன்னத்துசெய்யச் யோசித்து நன்னுளில் (காஜி) முதலான சகலரையு மழைப்பித்துச் செய்யவேண்டிய கிரிகைகளெல்லாஞ் செய்துமுடித்தபின்.

காஜி-கபீருக்கு சுன்னத்துச் செய்யுமென்று மஞ்சிகனுக்காக்யாபிக்க.

கபீர்-காஜியைநோக்கி இதென்ன விபரீதச்சடங்கினைச்செய்ய யோசித்தீரென்று வினவ.

குலகுரு-நமதுமரபிற் செய்யவேண்டிய கொள்கையென.

கபீர் - இச்சடங்கு ஆண்பிள்ளைக்கு மாத்திரமோ பெண்பிள்ளைக்குக் கூடவுண்டோவென.

ஆசான்-ஆண்பிள்ளைக்கே செய்யவேண்டியதென.
கபீர்-இதனுலடையும் பயனேதென.

காரியன்-இதனுற் பரிசுத்த மாகின்றனென.
கபீர்-இதனு லாண்பிள்ளைதான் பரிசுத்தமாகின்றன் பெண்பிள்ளை எவ்விதத்தாற் பரிசுத்த மாகவேண்டுமென.

தேசிகன்-மந்திரோப தேசத்தாற் சுத்தமாக வேண்டுமென.

கபீர்-மந்திரோப தேசத்தா லடைவன் கிர்த்தார்த்தனுகமாட்டானே; வென.

உபதேசி - புருடர்க்கு அனுக்கிரகமுஞ் சுன்னத்துஞ் செய்யவேணுடுமென் றுதியிலிருந்து நமது பெரியோர்களுக்கு கடவுள் விதித்திருக்கிறபடியா லகத்தியஞ் செய்துகொள்ளவேண்டுமென.

கபீர் -:கடவுளிட்ட கட்டளையா யிருக்குமாயின் கட்டளையிட்டது முதற்கொண்டு அசுத்தமான வஸ்து சிருஷ்டிக்கவே மாட்டார் நாளதுவரையிற் சிருஷ்டித்துக்கொண்டே வருகிறபடியா லாண்டவனிப்படி விதித்திருக்க மாட்டா ரென்கிற கருத்தைப் பிரத்தியக்ஷமாய்க் காட்டுகின்றதென.

காஜி-நமக்கு முதன்மை யாசாரியனுனே (இப்பிராயிம் பயம்பர்) காலத்தில் கடவுளுத்தரவு செய்திருக்க இல்லையென் றனக்குள்ள குழந்தைப் பருவமல்லவா.

கபீர்-இப்பிராயிம் என்பவன் கடவுள்மேற் சத்தியஞ் செய்ததைக் காப்பாற்றும லற்பமான விஷயானந்தத்தை யிச்சித்துக் கடந்தபடியா லிவ்வாக்கினையவனுக்குக் கிடைத்ததேயன்றி கடவுளிட்டகட்டளையல்லவென.

காரிய குரு (நம்ருத் அரசன்) அக்கிரமமாயவருக் காக்கினை கொடுத்தானே யன்றி - பயம்பர் யாதொரு குற்றமுஞ் செய்தவரல்லவென.

கபீர்-இப்பிராயிம், சாராவென்னும் இளையமனையாள் மேற்கொண்ட மோகத்தால் அவளைப்பார்த்து ன்னுத்தரவுக் கெதிருஞ்சாஞ் சொல்லேனென்று கடவுள்மேற் சத்தியஞ் செய்துகொண்டிருந்து முத்தமனைவியான ஆஜராவென்பவள் மகாபதிவிரதையாயிருப்பதன்றி கர்ப்பவதியாயிருப்பதறிந்திருந்தும கடினநெஞ்சையுடையவனுயிளையாளிட்ட கட்டளையைக் கடவாமல் மனிதசஞ்சாரமில்லாத ஆரண்யத்திற் கொண்டுபோய் விட்டுவைத்தபின்பு கடவுளருளால் ஆஜராவென்பவட் கொருநீங்கு மின்றி புத்திரனுற்பத்தியா யச்சாங்கமுங் கிடைக்கவே அதைக்கேள்விப்பட்ட இப்பிராயம் ஆஜராவிடம்போக அதுதெரிந்த-சாரா-மறுத்தனேகமாய்க் கினை மொழிகள்புகலவும்கேட்கமற்போனதால்சாராவும் அரசனும்-போய்-அந்தப்பயம்பரை-அவமானப்படுத்தினர்கள் இதன்விபரம் சவிஸ்தாரமாய் உங்கள் சரித்திரங்களில் வரைந்திருக்கின்ற தன்றோவென-காஜி நம்ருத்என்னும்அரசனுலெங்கள் ஆசானுக்குட

ந்தது முதற்கொண்டு மற்றெல்லோரையும் இப்படியே செய்துக்கொள்ளும்படியாய் - கடவுள் கட்டளையிட்டதினால் அவர் மரபைச்சார்ந்த-நங்குலத்தோர் அசுத்தமானவைகளை-களைந்து கொண்டு வருகின்றார்களென கபீர் இப்பிராயிம்-இரண்டாவது மனைவியான சாராவின்மைந்தனாகிய இஸாக்கென்பவனை மறுத்திருக்கானெப்படி சம்மதிக்கக்கூடுமென-காஜி-அந்த இஸாக்கென்பவன் பைசாசத்தின் வார்த்தைக்குட்பட்டு இபிலிஷ் ஆயபபோனான் அவனைப்போலவே நீயும் ஆகவெண்ணங்கொண்டாயோ வென - கபீர் - இஸாக்கென்பவன் - ஓர்மதத்துக்கு காரணகுருவானவ னன்றோவென -காஜி *இஸாக் மதத்தோர்க்கு ஞானந்தவிர மற்றபிரம்பதியானம் முதலானவைகளில்சமானமானவராயிருந்தும் சுன்னத்துசெய்துக் கொள்ளாமையால்இழிவுள்ளவரானார்களென-கபீர் ஞானமில்லாதவர்கள் தியானமுதலானவைகள் செய்வதால்-ஓர் - பிரயோசனமின்று அதெப்படி யெனின் விழியில்லாதவன் வழியறியாதது போல்ஞானக் கண்துலங்காதவர் அஞ்ஞானந்த காரக்கூபத்தில் விழுந்திருப்பார்கள் இதுண்மைதான்இப்பேர்க்கொத்த ஞானமார்க்கம் அறிந்துக்கொள்வதற்கு அனுகூலஞ்செய்யாமல் சுன்னத்து செய்யவந்தகாரணமேதென - காஜி - வரன்முறை தர்மப்படி செய்துக்கொள்வதேயன்றி இதனால் ஓர் பிரயோசனமில்லையென-கபீர்-பிரயோசனமில்லாக் காரியத்துக்கு நானொருகாலத்து உடன்படமாட்டேன் இதைக்ஷமித்து ஞானமார்க்கத்தைப் போதிக்குமையாவென- காஜி-கபீர் பேசும் சாதுரிய வசனங்களைக் கேட்டதிசயித்து அறியாச் சிறுகுழந்தையாகிய உனக்கு ஷரீகத்-என்றால் சரிதை-தரீகத்-என்றால் கிரிகை-அகீகத்-என்றால்-யோகம் என்னும் மூன்றுமார்கத்திற் தேர்ந்தவனன்றோ மாரிபத்-என்றால்-ஞானமென்னும் மார்க்கத்தை அனுசரிக்கவேண்டும் இப்போதுரைத்த முதற்படியான ஷரீகத என்பதே அறியாச்சிறுகுழந்தையாகிய-நீ-இறுதியான மாரிபத் மார்க்கத்தைக் கேட்கின்றாய் இதைச்சொன்னதினால் நீயடையும் பயனேதென கபீர் ஜனனமரணமும் அஞ்ஞான வசங்காரமும் துன்பமும் சிற்றின்பமும் ஆசாபாசமும் பிருத்திபயமும் அபஜயமுமின்றி அகண்டபரிபூரண சச்சிதானந்த நித்ய நிர்மல சொரூப சாக்ஷாத்காரசுயம் பிரகாசமாய் விளங்கும் பிரம்மத்தையுணர்ந்து சதாகாலமும் ஆனந்தவாரியில் மூழ்கியிருக்கலாமென-காஜி-அப்பப்பா சமஸ்தமர்மங்களுமிந்த இச்சிறுவன் நாமென்ன சொன்னபோதிலும் சுன்னத்துசெய்துக்கொள்ளமாட்டான் நான் என்னிருப்பிடத்துப் போகிறேன் நீபெற்ற தந்தையாதலால் சுன்னத்துசெய்துக் கொள்ளும்படியாய் சம்மதிக்கச்செய்து என்னையழைப்பியுமென்று கூட்டங்களைக் ஆ தங்கள்தங்கள் இருப்பிடமடைந்து கபீர்பேசிய வார்த்தைகளை உன்னியுன்னி ஆச்சரியப்படத் தொடங்கினார்கள், இங்கே தமனும் நிஜ்ஜாபீபியும் கபீரை நோக்கி அப்பா ஒப்பிலாமகனே அறியாச்குழந்தையாகிய நீ காஜிமுதலான நமதுமரபுக்குச் சிறந்த பெரியோர்களோடெதிர்த்துப் பேசலாமா குலதர்மத்தை வெறுக்கலாமாவென கபீர் ஓ யென்தாய் தந்தையே மோக்ஷமடையும் மார்க்கத்தைத் தவிர வேறுகாரியங்களுக்கு நானுடன்படவேமாட்டேன் இது-நிச்சயமென்று நம்புவீர்களென கபீரால் கோபித்து அடாதுஷ்டப்பயலே தாய்தந்த உயர்ந்தோர் மற்றோர்களின் வாக்கியத்தைத் தள்ளிய உன்னை இப்போதே கொல்லுகிறேனென்று கோபக்குறிகாட்ட கபீர் தந்தையின் கோபத்துக்குப் பயந்து வெளியிலோடிப்போய் ஓரிடத்தில் மறைந்திருக்க நிஜ்ஜாபீபி மகன்மீதிருக்கும் அன்பினால் பலவிடங்களிற்றேடிக் கண்டுபிடித்து வீட்டுக்கழைத்துக்கொண்டுவந்து பலபுத்திகளைச்சொல்லியுங்கேட்காத கபீர்மேற் கோபித்து இவ்வளவு சவுடகல்விகளெல்லாம் பேசும் நீ வேலைசெய்தாலொழிய உனக் அன்னமிடுகிறதில்லையென்று ஓர்தரியிலுள்ள பட்டுநூலால் வஸ்திரத்தை நெய்யடாவென்று வைதடித்து வஸ்திரம்நெய்யும்படியாய்ச் செய்தாள் கேட்டீர்களோ சித்தர்களே அந்த இப்பிராயிம் பயம்பர் உற்பத்தி வெகுவிநோதமானது அதைப் பின்னுரைப்பேன். கபீர் கடவுளருளால் இவ்வுலகில் லவதாரஞ்செய்தது அஞ்ஞானத்தை நீக்கி மெய்ஞ்ஞானத்தைப் போதிக்கவேயாம், பேயுலகமானது அவரது மகிமையறியாமல் சாராவென்னும் கொடிய ஸ்திரீயின் வார்த்தைக்குட்பட்டு அவருக்கு சுன்னத்து முதலானதும் செய்தது வெகு அக்கிரமம் அவரும் சத்தியத்துக்குட்பட்டு அவ்வாக்கினைக் குட்பட்டாரேயொழிய நினைத்தால் நம்த் அரசன் முதலானவர்களையும் பஸ்பமாக்கிவிடுவார் உத்தமர்க்கும் ஓவ்வொருகாலத்தில் ஓர் நிந்துநேரிடும் வினையின்காரணத்தையே நோகவேண்டும் இவர் மகிமையை பின்னால்வரும் அவ்கடஷாசரித்திரத்தில் புலப்படக் காணலாம். என்றுரைத்து பிர்மாவதாரனான நாபாஜி சித்தர் கபீர் சரிதையைச் சொல்லத் தொடங்கினர்.

* இஸாக்கை ஐஜிக்கென்றும் இஸ்மதும் கிறிஸ்துமதமென்றும் சொல்லப்படும்.





குருவாழ்க.

## ௩ - வது - பிராமணரூபமாய்வந்த பகவானுக்கு கபீர்வஸ்திரதானஞ் செய்த அத்தியாயம்.

காயமென்னும் வீட்டில் அஞ்ஞானமென்னும் இருளைமாற்றி ஞானமென்னும் விளக்கேற்றி தேவனை யிருக்கும் சித்தர்களே, பரிசுத்தர்களே, சிக்கனிவசி-மண்டலத்தின் சண்டம்-மாளிடர்க் களிருதயம் பசாரமல்லைகயின் கெஞ்சம்-தாமமரனுள்ளம் போல சதாகாலமும் - பிர்மத்தைத் தியானஞ் செய்யும் சுவாத்மநிஷ்டை செய்து எப்படியிருக்கதென்றால்:

பதிவிரதையை வேசையுடனும்- யோக்கியனை தீக்கனோடும்- ஜீவகாருண்யனைக் கொலையாளியோடும் சந்திரனை ராகு கேதுவோடும் - ஞானியை அஞ்ஞானியோடும்-சர்ப்பத்தைக் கருடனுடனும் பசுவை புலியுடனும்- காமக்கன்னியை நபும்சகனுடனும்-தேவர்களை இராக்கதருடனுஞ் சேர்த்தாற் போலவுமிருந்தது.

இப்படிக் குழைந்த மனதுடைய மகா புண்ணியவானான கபீர் - கடவுளைத் தியானஞ் செய்துகொண்டே ஒருமுழ வஸ்திரம் நெய்துபிர்மக்ஞான மேலீட்டால் - தன்னைமறந்திருந்தாரப்போது-பகவான்மாயமாய்வந்து -கபீருக்குப் பின் ஒருமுழம் நெய்தார். *

* இப்படிபகவான் கபீர் நினையாமுன்னமே வந்து அவர்வேலைக்குதவியான காரணம் சுகப்பிர்மரிஷிக்குமுன் வாக்குகொடுத்ததினாலேயாம் இவ்வளவு உபசாரனை பகவான்செய்வது மாயாதீதனான சுகனை மாயையிலழுத்தவே விஷயபோகமறியா சுகர் தேவர்களாலனுப்பப்பட்ட ரம்பையை பலவிதத்திலுஞ் சோதிக்க அச்சுகனை தந்திரத்தால் வெல்ல ரம்பை சுகர் ஆசிரமத்தினருகில் தபவேஷத்துடன் உக்கிரமான தவம் செய்துகொண்டிருக்கையில் இச்சுதறியா சுகர் ஓர் முனிவனென்றே உன்னி அருகிற்சென்று ஓ தபோநிதியே வெகுநாளாய் எதைநாடி இவ்வித உக்கிரமான தவஞ்செய்கிறீரென்று வினவ ரம்பை முனிவனைப்போல் அந்த இன்புத்தை விர்த்தஞ்செய்தபடியால் நீர்த்தக்ஷணம் நான்கோரிய வரமளிக்கா விட்டால் என்சாபம் பெறுவீரென சுகர் நீர்கோரியதளித்தேன் கேளுமென உடனே ரம்பையாய் நின்று பிர்ம்பித்துதலைதுக்கினியுகத்தில் உன்னிச்சையைநிறைவேற்றுவேனென் றுரைத்தபடி கபீரா யவதரித்து இரண்மெகனைப்பெற்றுர்.

அதற்குள் இஷ்டாபிமானத்து கண்களை மூடிக்கொண்டு தியானத்திலிருக்கும் கபீரை அதட்டி அடா-கபீர் வஸ்திரம் நெய்யச் சொன்னால் சொஸ்தமாய் தூங்குகிறாயா! காலையிலிருந்து மாலைபரியந்தம்-இரண்டு முழந்தானா, நெய்தாய் கஷ்டகலைகளெல்லாம் பேசுமுனைக் கிருமாத்திரந் தெரியாமற்போனதென்ன, நல்லதிந்தனுனைகை பழுதெடுத்துக்கொண்டுபோய் சந்தையில் விக்கிரயஞ்செய்து வந்தாலொழிய உனக்கன்னமப்படாதென்றுரைத்து வீட்டுக்குட் சென்றாள்.

பின்பு கபீர் தறியிலிருக்கும் இரண்டு முழத்துணியை தறித்தெடுத்துக் கொண்டுபோய் கடையின் தெருமத்தியில் நின்றுகொண்டு வஸ்திரத்தை விரித்துக் காட்டி ஓ புண்ணியவான்களே புண்ணியவதிகளே இந்தப் பீதாம்பரத்தை வாங்கிக் கொள்ளுங்களென்று பலதரஞ் சொல்லிக் கொண்டேக்கடைத்தெருவிற் றிரிந்த தெப்படியிருந்த தென்றால்.

சக்ரவர்த்தியாகிய புரூரவச் சக்கிரவர்த்தியும் அரிச்சந்திர மகாராஜனும் விசுகுமார னுடையமாதாவும் விறகையும் மனையாளையும் மகனையும் விலைகூவியதைப் போலிருந்தது, அல்லாமல் பலவந்தமா யவனையும் சம்பியமில்லா ஸ்திரிபுருஷர்களைப் போலவும் பலவந்தமாய் விக்கிரயப் படுத்தும் வஸ்துக்களைப் போலவும் இருந்தது.

இப்படி பலவந்தமாய் விலைகூறும் கபீர் கரத்திலிருக்கும் வஸ்திரத்தைப் பார்த்த சிலர் அடடா இதென்ன, விலையைப்பார ஸஞ்சலத்துக் கோரோணியை செய் திருக்கின்ற ஒரு எவன்செய்தானென்று பரிகாசஞ் செய்து போகையில்.

பகவான் மாயையால் அதை வாங்க வருஞ் சிலர் அன்னுக்கு மேன்மையான விலையுள்ளதாய்த் தோன்றப்பட்டு அப்பா இதை யெங்களால் வாங்கத்தகுந்ததோ, வென்றுபோய் விட்டார்கள், ஏனெனின் பகவான் கைகளால் செய்த வஸ்திரத்திற்கு மொருவரால் விலைமதிக்கக் கூடுமோ! ஓ-சித்தர்களே! கபீர் அரிய வஸ்தமான மாறும்பரியந்த மிருந்தும் யாரும் வாங்காமையா லிப்பீதாம் பரத்தை இனிமேலியார் வாங்கப் போகிறார்க ளென்று வஸ்திரத்தை மடித்து கக்கத்தி லடக்கிக்கொண்டு வீட்டை நோக்கிப் போகையில்.

பகவானேழைப் பிராமணனாய் கபீர் முன் வந்து லெபெலென் றத்துணையைப் பிடுங்கிக் கொள்ளத் தொடங்கினார்.

உடனே கபீர் அடடா திருட்டுப் பிராமணா முட்டா பிராமணா! தெருக்காலிகளின் வஸ்திரங்களை யபகரித்துக் கொண்டோடிப்போன திருட்டுக்கிருஷ்ணனைப் போல எனையன்ன பீதாம்பரத்தைத் திருடிக் கொண்டா போகிறாய்? என்றுசொல்லிக் கொண்டே பிராமணனை விடாமற் றொடர்ந்தோடி மடியைப் பிடித்துக்கொண் டவசையாய்க் கிருத்திரிமவும் வருந்தி அருமையான பீதாம்பரத்தைத் தாவென்று பிடுங்கத் தொடங்கினார்.

அப்போது மாயா பிராமணரதை விரித்துப் பலருக்குங் காண்பித்து ஓ ஜனங்களே! இந்தவிலைத்துணி அருமையான பீதாம்பரமாம், இப்போர்க்கொத்த வஸ்திரத்தை எங்கேயாவது பார்த்ததுண்டா? வெனப்பழித்து இரண்டாய்க்கிழித்து விட்டார்.

அதற்கு-கபீர் பிராமணனை நோக்கி சாந்தத்தை நீக்கி ஓபிராமணா! நீ வேதமோதும் விப்பிரனாயிருந்தும் மகாவிஷ்ணுவின் மார்பிலணிந்து கொண்டிருக்கும் பச்சை பீதாம்பரத்திற்குச் சமானமான விலையில்லாப் பீதாம்பரத்தைக் கிழித்துவிட்டாயே நீ கெட்டாயெனாருடைமைக்குப்பேய் பறக்கும்பிராமணர்களைப் படைத்தபிரமதேவன், எமனைப் படைத்தது நிஷ்பிரயோசன மென் றுரைத்து வஸ்திரத்தைப்பிடுங்கிக் கொண்டார்.

அப்போது மாயா பிராமணர் அடா! கபீனந்தருக்கு முதலாகிக் கந்தையுந் தாமோதரனணிந்து கொண்டிருக்கும் பீதாம்பரத்துக்கு மேலானதென் றுரைத்தது எப்படியிருக்கிற தென்றால்-லோபியைப-பதியும், வேசையை-விபசாரியும் கொலையாளி வேட்டையையும், இச்சையுள்ளோன் சம்சாரத்தையும், காமமுள்ளோன் ஸ்திரீயையும், அத்தன் தன் வல்லமையையும், புகழ்வதைப் போலிருக்கின்ற தென்றுரைத்துப் பெருநகை புரிந்து பலரும் பரிகாசஞ்செய்து கைக்கனி கொட்டி நகைக்கும்படியாய்ச் செய்தார்.

அதற்கு-கபீர்-பதிவிரதைக்கழகும் - குணவானுக் கைஸ்வரியமும்-தர்மிக்குத் தபமும்-ஜீவகாருண்ணியனுக்கு விரதமும் - சாந்தருணனுக்குச் ஜபமும்-வி



ராசை யுள்ளோனுக்குச் சன்யாசமும்-குலஸ்திரீக்கு நாணமும்-ஆத்மக்ஞானிக்குத் தியானமும் - மனோசுத்தியுள்ளவர்க் காசாரமும் இல்லாதிருந்தாலும்-மேன்மையே யடைவது போல-இவ்வஸ்திரம் விலையைப் பெறாததாயிருந்தாலும் பகவானால் செய்திருப்பதால் மேன்மையான தாகவே யிருக்கிறதன்றி பச்சை வர்ணனுன அச்சுதனணியத்தக்கதே யாமென் றுரைத்து வீட்டை நோக்கிப் போகையில்.

மாயா பிராமணர் மறித்து அதனைவாங்கிக் கொள்ளுகிறேன் - விலையென்ன சொல்லடா! வென்று கேட்க.

கபீர் - எனக்கிதன்விலை தெரியாது - நாலுபேருமாப்படித விலையென் றறிசொல்ல.

பிராமணர்-பலரையுங் கூப்பிட்டு ஓபுண்ணியவான்களே; இந்தவிலைக் கந்தைக் கென்னவிலை கொடுக்கலாஞ் சொல்லுங்களென்று கேட்க.

வழிப்போக்கரி லொருவனிதற்கு ஒருபணமென்னும், மற்றொருவன் - ஒருகாசென்னவும், இன்னமொருவன் பத்துவராகனென்றும் ஒருவர்த்தகன் நூறுவராகனென்றுஞ் சொன்னார்கள், அதற்கு மாயாபிராமணர் ஒருகவடிவிலையும் பெறாதபட்டு நூலால சிக்காய்வாங்கக் கூடாமல் - ஐந்திரமாய் விரித்துக்கொண்டு வந்த விக்கத்தைக்கோர் விலைசெப்பாது - பத்துவராகன் நூறுவராகனென்று பரிகாசஞ் செய்கிறீர்களென்றுரைத்து கபீரை நோக்கி ஓ கபீர் ஓர்கவடிக்கும் பெறாத இவ்வஸ்திரத்தை இவ்வளவுவிலைகொடுத்து விடு கிடீர்தன் நீயின்றையத்தினம் இராசன்முகத்தைப்பார்! கர்மமுகத்தையோ-பதிவிரதையின் முகத்தையோ நீ தன்னுகத்தையோ-பார்த்துவந்தாயென் றுரைத்தும் இவ்விரம் பொதுதலாயிருக்கும் பொக்கைக்கந்தையிலிரு சம்சேதமாய் முடித்து வைத்திருக்கும்-இரண்டு கோதமைக் கவடிகளையவிழ்த்தெடுத்து மெத்தவிலை யெனப்புகழ்ந்து தொகுத்துக்கொண்டே கபீரகரத்திற் கொடுத்து இத்தன் விலையெப்பொழுதைக் கந்தைக்கு வாங்குவ துத்தமமல்லவென்றார்.

பகிரி - தன்கையிற் கொடுத்த இரண்டுவெள்ளிகளையும்பார்த்த-கபீர்-ஓ ஜனங்களே! இக்கப்பிராமணன் கூடியமட்டிக்குஞ் செட்டிக்காரன் ருனிவன் மிகவும் பிரையாசத்துடன் கொடுத்தமேன்மையான விலையைப் பார்த்தீர்களா! சந்தோஷத்தைத் தீர்த்தீர்களா வென்று பலதரங்களை விதித்தார்.

உடனே பம்மனந்போன் - அடா; அஷ்டப்பயலே பிரஷ்டப்பயலே; எங்கள் முதாதைகள் சம்பாதித்த-ஆஸ்தியை நாஸ்தி செய்யவா யோசித்தாய் - இனியெவ்வளவு பொருளைத்தானுசித்தாய-இதற்கா பிராமணோத்தமா வென்று பூசித்தாய் வீண்வழக்கை வளர்க்கவா-நேசித்தாய்-அடடா-சாலக்கிராமத்தையும் விக்கிரகத்தையும் மாணிக்கத்தையும் வைடூரியத்தையும்-அரிய ஹேமத்தையும் இந்த க்ஷேமத்தையும் எறிந்து விடத்தக்கதோ வென்றதை யெடுத்துக் கொண்டு வந்து-அடா- கபீர் - இக்கவடிகளை அன்னையுமுன்னதாதைகளையும் - முலைகையும் விலக்குவாங்குவேன் குபேரனுக்கும் மேலாயோங்குவேன்-அண்டபிண்ட பிரமாண்டங்களையுந் தாங்குவேன் எனக்குற்ற தரித்திரத்தைவிட்டு நீங்குவேனிதன் மகிமையை யெப்படிச்சொல்லுவேன், நீயதித்தத்தக்கதோ முறுக்கேர்ந்தாய் எனக்கொட்டாததுபோல கிடைப்பதற்கரிய பொருளை மயக்குவிட்டா யென்று சொல்லிப் பூலதால் காட்டிக் காட்டிமறைக்க.

கபீர் - இப்பீதாம் பரத்துக்கென்னையு முன்னைப்பனையும் விற்றாலும் விலைபோதாது போபோவென்று சொல்லி இருவரும் வழக்கிடும்போது;

அங்குநின்றும்-பலரும் - ஒருவரைப்பார்த்தொருவர் சொல்லிக் கொள்ளுகிறார், வார்த்தைகளையாவது கேட்டானுங் குருடனுங் கூடினைப்பார்க்கவும்-பதிவிரதையும் பரத்தையுந் திருடனைப்பார்க்கவும் - கர்மியுந் தர்மியும் பெருமானைப்பார்க்கவும்- விருத்தனும் பாலனும் உத்தந்செய்யவும்-மௌனனுங்கலகனும் புராணங் கேட்கவும்-கோளனுங்கொடியனும் வியாபரிக்கவும்-திருடனும் போர்சைக்காரனும் வியாபாரஞ் செய்யவும் பாபியும்லோபியும் விசாரஞ்செய்யவும் - குடியனும் வெறியனுங் கூத்தாடவும் சித்தனும் உன்மத்தனுந் தர்க்கஞ் செய்யவும்-பார்ப்பானும் பறையனும் பஞ்சாயத்துப்பேசவும்-கெட்டதைப்போல் - இவனிந்த பொற்கந்தைக் கந்தைக்கு விலைகூறுவதும்-அவனிரண்டு கொதகவடிகளைக் காட்டிமறைப்பதுமா யிருக்கிறதென்று கைக்கனி கொட்டிநகைத்து-ஆ! பயித்தியம் மேலிட்டடபார்ப்பானோ-சித்தியம்மேலிட்ட பஞ்சமனோ - தன்னுடைய சண்டி யெருதுக்கிணையான கந்தைக்கு-கொண்டிக்குதிரைக்கிணையான கொதக்கவடிகளை - மான விலையென்றுரைத்தவ ரவர்க ளெழுவேப்பார்த்துக் கொண்டனர்.

பின்பு:- பிராமணர் - கபீரை-நோக்கி - ஓ - கபீர் மேன்மையான காட்சிக்கவடிகளைக் கொடுக்கும் மாட்சிமையாவெனக்கு-இத்தாட்சியான கந்தையைக் கொடுக்காமல் - பிரஷ்ட சாக்ஷியைப் போல குளறிக்குளறிப் பேசலாமா? வென்றுசொல்ல.

கபீர் - பல்லில்லாவாயுள்ள நீயே யேதேதோ வாயில்வந்தபடி வெகுநேரமாயுளறிக் கொண்டிருக்கின்றாய் பிபீதாய்பாத்துக்குத் தருந்தவில பெருமற் கொடுத்தாலென்தாயார் வாயில் வந்தபடிவைவாள், இத்ரவதைசெய்வாள், போ போ பேராசையுள்ள பேயனே! ஏமாத்தவந்தவாயனே! யென்று கவில.

பிராமணர் - பின்னுமச் சொத்தக்கவடிகளைச் சாணியிற்றிதை வாங்கிக்கொண்டதைத் தாலாகாதோ! வென.

கபீர்புழுத்துப்போன வக்குகளுக்கா மடியைத் தருவேன்-குலுக்கிக்கையைப் பிசைய யகப்படாதவன் லக்ஷாதிபதியைச் சம்பத்து செய்யப்போகித்ததைப் போல்-எங்கேயோ விழ்ந்திருந்த கவடிகளைக்கொண்டு வந்து கொடுத்தே மாத்திப்போகவந்தீர் நீர் வாங்கிக்கொண்டது போதும் வந்தவழியைப் பார்த்துக்கொண்டேகுமென்றுரைக்க.

பாபா பிராமணர்- இக் கவடிக ளிரண்டன்றி வேறொருபொருளு மெனக்கில்லை இவ்வேழைப் பிராமணன் மேற்கிருபைகூர்ந்து - பருமார்த்தமாய்ப் பாதிவஸ்திரந் தருவீராகில் - கோலுக்கிருந்தாவனத்திற்கிருஷ்ணருக்குப்போது-பெருமாளுக்கிளைமிற வித்தைவயக் குப் புண்ணியமும் பகழுமுண்டாவதன்றி எச்சிலைக் கொடுத்தசவரியும் பிடியவில் கொடுத்த குசேலனும் பெற்றபேற்றைப்பெறுவீரென்றுரைக்க.

கபீர் இப்பிரம்பயூபெருமானுக்கே யணியத்தக்கதாயிருந்தாலும் யான்றுருந்தவில வாங்காமற் பருமார்த்தமாய்க் கொடுத்தால் - என்தாயுந்தந்தையும் வைய அடிப்பார்கள் உயிரை முடிப்பார்களாதலால் மன்னியுமையா வென்றுவணங்க.

பிராமணர் ஓ மகானுபாவா! சத்தியமாவா; நீ-தருமருனைத்திற் சிறந்தவனென்று பலருஞ்சொல்லக் கேள்விப் பட்டதன்றி முகமும் அகமும் குறியுங்குணமும்படியேயுள்ளதன்றி நல்லாயல் - நீ - பிக்ஷாஸீலிற் சிலகாலிற்றருமக்கொடியை நடுவாய் இன்னும் பயிர்முளையிற்றெரியுமென்ற பழமொழி பழுதாகாது-ஓ தருமப்பிரபுவே பெண்பிள்ளை பண்டம் பதார்த்தம்-நாயகர்-தாய்-தந்தை-உற்றோர்-மற்றோர்-ஆனோசேனை முதலானதுங் கூடவருந் துணையல்லவே தர்மம் அநேக ஜன்மங்களுக்குத் துணையா யிருந்து காப்பாற்று மல்லவா? உனக்கும் விரிச்சொல்லவா-தர்மத்தைக் காத்து மெய்யும் பழமொழி பொய்யா-மெய்யா-சொல்லையா-மிருதுய்யா தர்மஞ்செய்யுங் கையா-வென்று மிகவும் வேண்டிக்கொண்டார்.

அதற்கு கபீர் இந்தர் தன்வேஷ்டிரத்தைக் கொடுக்கலாமென்றும்-இப்போதே தாய்வந்து விபோனே-வந்து துன்பந்தந்து-விசெல்லேன-இதற்கென்ன செய்வாமென்றெ - என்னாத்திருந் தொடுக்கமனம் வராமலும்-இல்லையென் றுரைக்க வாயெழாமலும்-மௌனமாய் நின்றார்.

பகவான் - ஓ-கபீர் - ஜீவர்களுக்குத் தருமத்தையன்றி - வேறு துணை யில்லையே - மௌனமாயிருப்பது தொல்லையே-லோபகுணத்தை மாற்றவில்லையே-நீ-தருமகுணமுடையவ னல்லயே அடடா-இந்தயேழைப் பிராமணனை முகத்தைப்பார்க்கலாகாதோ - பார்த்தாலுனக்கிவைபமுண்டாகாதோ பாபங்களெல்லாம் பஸ்பமாய்ப்போகாதோ-லோப குணம் நசித்துப்போகாதோ தருமஸ்வரூபனே-திவ்விய சொரூபனே லோபியைப் போன்ற பாபியில்லை யென்கிற பழமொழியறியாயோ-அறிந் தென்றுகி பெறுவாயோ-முற்காலத்தில் தருமார்த்தமாய் பரமசிவனுக் கொல்லும் விஷத்தைக் குடிக்கவில்லையா! பஸ்மாசுரன் கேட்ட வரமளித்தவன் ஆத்தோடிப் பதுங்கவில்லையா - வாணாசுரனுடைய ராஜலக்ஷ்காக்கவில்லையா கும்பகர்ணனுக்கு நித்திரையளிக்கவில்லையா- ராவணனுக்குத் தன் மனைவியையீயவில்லையா - அர்ச்சுனனுக்குப் பாசுபதாஸ்திரங் கொடுக்கவில்லையா -மார்க்கண்டனுக்கென்றும் பதினாறு வருஷமருளவில்லையா-மன்மதன பஸ்பமாய் பெரித்துப்போகவில்லையா- ததிமகாரிஷிதன்முதுகெலும்பைத் தரவில்லையா-மாபலி பாதாளத்திலமிழ்ந்து போகவில்லையா சிபிச் சக்கரவர்த்தி சரீரத்தை யறுத்தளிக்கவில்லையா-அரிச்சந்திரராஜன் தன்ஷாசாங்கத்துடன் மனைவிகளோடும் கல்வில்லையா - கர்ணன் தன்னுயிரைக் காக்குங் கவசகுண்டலங்களை யீயவில்லையா தருமராஜன் தன்னுடன்வந்த நாயுங்களைச் சுவர்லோகத்துக்கு கொண்டுபோகவில்லையா அர்ச்சுனன் ஓர் கந்தர்வனைக் காக்கக் கிருஷ்ணரோடு போராடவில்லையா இவையல்லாமலிவனுக்குற்ற



பிரமத்திவைத் தானத்தைக் கொள்ளவில்லையா-கலைக்கோட்டு முனி தசரதனுக்குற்ற புத்திரவாஞ்சையைத் தீர்க்க வில்லையா - சாதன்தேவர்களைக் காக்கவில்லையா புரூரவச்சக்கிரவர்த்தி தேவகன்னிகையை விடுவிக்க வில்லையா - கண்ணன் பஞ்சபாண்டவர்களுக்குத் தூதாகவில்லையா அவர்களுக்குச் சாரத்தியஞ் செய்யவில்லையா - அருச்சுனருக் கேவல் செய்யவில்லையா-மாடுபோவிரதத்தை யிழுக்கவில்லையா-கோவர்த்தனகிரியைக் குடையாக வெடுக்கவில்லையா-குசேலனுக்கு அஷ்டயிஸ்வரியமுங் கொடுத் தடிமையாய்ப்போக எண்ணங்கொள்ள வில்லையா-அம்சத்துவஜன் தன்னுடலை நடுபாதியாயறுத் தியவில்லையா-பாண்டியன் தன்தலையை யறுத்துகாவேரி நதியிற்போடவில்லையா நீ மாத்திர மித்துணை யளிப்பதுதொல்லையா இதற்குத் தாஞ் சொல்லையா-சற்றே என்முன்னில்லையா - சீமைாக கொடுக்காததுபோலமெல்லையா ஓ வென்றுரைத்த வாக்கியங்களைக்கேட்ட.

கபீர்-மனந்தூலங்கி-யிகவுங் கலங்கி - இவருடைய தொனியான குரலுக்கிணையான இனியவன் இவ்வுலகத்திலில்லவே யில்லை ஆ-ஆ, தர்மத்தின் நிமித்தியம் எவ்வளவு நிர்ஷ்டாந்தங்கள் சொன்னார்-எத்தனை புண்ணியபுருஷர்களுடைய திருநாமங்களைப் புகன்றார்-ஆ ஆ, அந்தமாபலி-பகவான் கேட்ட மூன்றடி மண்கொடுத்து-ஸ்ரீமந்நாராயணருடைய - திவ்வியதிருவடி தன் சிரமுடியாகச் சொண்டு அழியாய்ச் சிரஞ்சீவிப் பட்டமும் பெற்றார், தேவகுருவான பிரகஸ்பதிக்குந் தெரியாதசஞ்சீவி மந்திரம்பெற்ற-சுக்கிரன் - தர்மஞ்செய்வி றதைத் தடுக்கப்போய் ஒரு - கண்ணிழந்து லோபியென்றுபேர்பெற்றான், இவ்வுலகிலிழிவான லோபகுணத்தைவிடாமல்- கேட்போர்க்குக் கொடாமல் யாதொரு லாபமும் பெறுதவனுவேனு. இல்லறத்துக் தருமமும் துறவறத்துக்குத்தபமும் ...க்குத்தபும்-புருஷர்களுக்கு ஞானமும்-முக்கியமென்று மெய்யல்லவா, வியாபாரஞ் செய்யப்புறப்பட்ட நாமில்லறவானென்பதற்கோர் தடையுண்டோ, இனி யில்லறத்துக்குத் துணையானதர்மத்தை என்னுயிருள்ளமட்டும் மறப்பேனோ-யார்வந்தாலும் வெறுப்பேனோ-பசியென்றால் பொறுப்பேனோ- பொருந் துயிருட னிருப்பேனோ -என்கிற பலபல யோசனையோடுங் கூடினமனதுடன் வழக்கப்படி பின்பில்லா வென்று கொடுக்கப்போனார்.

அதற்கு மாயாமறையோர் அடாநீச்சா-இது வேதப்பேச்சா-தபத்துக்கும் ஜபத்துக்கும் இரத்துக்கும் பாதத்துக்குந் துணையான ஜீவகாருண்யத்தை நீக்கிச் சூ உயிர்களை வதைசெய் துன்னும்படியான சொற்றொடர் வார்த்தையைபெழுதி யிருக்கும் காட்சித்துறையான ஓர் புத்தகத்திலுள்ள-ஏதோ-ஓர் நாமத்தைச்சொல்லிக்கொடுக்க வந்தால் ஐயையோ-யாரோ - பிராமணப் பிள்ளை யென்றல்லவோ நினைத்தேன் - உத்தமனென்று மதித்தேன்-பிரபுவே யென்று துதித்தேன்-சந்தோஷத்தாற் குதித்தேன்-சிலனென மனதிற் பதித்தேன்-என்று கபீர் தலையை நாலுதிக்கிலுந் திருப்பித் திருப்பிப்பார்த்து-அடா உன்னெற்றியிற் சகலமங்களமும் நிறைந்த திருநாம மணிந்திருக்கின்ற தென்றல்லவோ விருந்தேன்-பஸ்பமும் அணியாப்பாழ் முகனே துடுக்கர்மகனே - விஷ்ணுவாம் ஸமான திருநாமமாவது-சிவாய்வ மானபஸ்பமாவது - அணியாதிருக்கிற அதிவினனே - பிருதிவியம்ஸமான இத்தேகம் - பிருதிவியாய் போகுமென்று பலரும் அறியக்காட்டும்படியான திருநாமத்தையும்-இந்த லலாடஸ்தானத்தில் பரஞ்சோதிப்படியே இருக்கின்றதைப்பாருங்க ளென்று அனைவர்க்கும் அறிவுணர்த்துந் திருமணியையும் இன்றைக்கே யணிந்துகொள்-தர்மமே உயிர்க்குத் துணையென்று அணிந்துகொள்-துடுக்கான வெல்லவந்தைதை அடிக்கடி நினைத்துக்கொள் மனதே உன்தெண்ணப்படி நடக்கமாட்டேனென்று கனைத்துக்கொள்-திருநாமம் பகவானுடைய திருவடிகளென்றறிந்துகொள் பரஞ்சோதியே பரப்பிரமமென்று தெரிந்துகொள் பரமாத்துமாவை யுனக்குள்ளாகவே யுணர்ந்துகொள்-பிரமானந்தமே மேலான இன்பமெனப் புணர்ந்துகொள் எப்போதும் ஸ்ரீராமநாமத்தைத் துதித்துக்கொள் இவ்வுலகம் கானற்சலமென்று மதித்துக்கொள்-எச்சலவஸ்துவைக் கொடுத்தாலுந் தீதாமென்று விதித்துக் கொடு வென்றுசீரைவாங்கிக்கொண்டார்.

இவ்வாக்கியங்களைக் கேட்ட கபீர் கருடனைக் கண்டசர்ப்பத்தைப்போற் றேங்கி சகுணநிர்குணங்களில் நிர்க்குணமே பதிகமாயிருக்க இவர்சகுணத்தையே மேன்மையாகப் பேசுகின்றார் ராஜனிதிலுண்மையை நன்றாயறிந்து கொள்ள வேண்டுமென்று மறையவரை நோக்கி-ஓ! பிராமணோத்தமரே - கிருபையாயிருக்கு மடவனை-இப்போர்க்கொத்த தென்றுசொல்லக்கூடாக்குறையால் பிரமமென்றும் அனித்தியத்தைக்குறித்து நித்தியமென்றும் மலத்தைக்குறித்து நிர்மலமென்றும் குணத்தைக்குறித்து நிர்க்குணமென்றும் ஆகாரத்தைக்குறித்து நிராகாரமென்றும் நிர்நாமமான பரப்பிரமத்துக்கு அநேகநாமங்கள் வேதத்திற்

செய்வதன்றி நிர்க்குணத்தையே மேன்மையாகப் பேசுகின்றது, நீ ரதைவிடுத்து வேதவாக்கியத்தைத் தவித்து-சகுணமான விஷ்ணுவின் திருநாமமான ஸீதாராமென்னுந் திருநாமத்தை மேன்மைப் படுத்திச் சொல்லுங் காரணத்தைச் சவிஸ்தாரமாய்த்தெரியச்சொல்லுமையா வென்றுகேட்க.

அதற்கு மாயா பிராமண ரிந்தக் கபீரை - முன்னஞ் சகுணத் தியானத்திலும் பரிசுத்தனாக்கி பின்பு பிர்மக் ஞானத்தை யுணர்த்த வேண்டு மென்றிருதாற்பரியத்தால் தர்க்கஞ்செய்யாமல் குதர்க்கமார்க்கமாய்ப் பேசத்தொடங்கினர்.

அதெப்படியென்றால்-ஓ-சித்தர்களே! பகவான் கபீரைநோக்கி ஓ கபீர்! சுத்தசூன்யமாய்ப் பரவெளியானபரப்பிர்மம், வாக்குக்கும் மனதுக்கு மெட்டாதென்றுணர்ந்த நீ, வாக்கையும் மனதையும் மவுனமாக்காமல் சஞ்சலமனதை ஞானேந்திரியங்களிற் செலுத்தி கர்மேந்திரியமான வாக்கின் விவகாரமாடிக்கொண்டு தேகேந்திரிய காணஜீவனை நானென்றும் இவ்வுலகத்தாணிமுதலான வஸ்துக்களென்னதென்றும் பிர்மை கொண்டு மூனுநீ அகமதையற்று ஆத்மஸ்வரூபமே தானென்றிருக்கும் பிர்மக்ஞானிக ளேத்தும்வாங் மனோகோசாமான பரப்பிர்மத்தை நினைத்தாற் பிரயோசனமேதுண்டு தன்னையறிந்த பிரமக்ஞானி யொருகர்மஞ் செய்யக்கூடுமோ? ஓ அறிவில்லாதவனே, மண்ணின்மேல் மாக்கலமோமேர், காவலின்றி கட்டுப்பட்டவளை காக்கையன்றி காவலாற் கட்டுப்பட்டவந் கற்புள்ளவளாவாளா சத்கதிக்காகத் தருமஞ்செய்பவனை சத்புருஷனன்றி டம்பத்துக்காகச் செய்பவன் சத்புருஷனுவானு, தன்னை யன்னியர் புகழ்வதே கீர்த்தியன்றி தன்னைத்தானே புகழ்ந்துகொள்வது கீர்த்தியாகுமா, ஒருவனுக்குத்தா னைக்யமாயிருந்தாலே வந்தனமன்றி கன்னக்கும்பிடு வந்தனமாகுமா, அதுபோல எங்கனும் பரிபூரணமாயிருக்கும் பரப்பிரம்மத்துக்கு ஐக்கியமாயிருப்பதேவந்தனமன்றி வேறுபட்டு தியானிப்பது வணக்கமாகுமா நீதான் தெளியச்சொல்லென்றுரைக்க.

கபீர் - ஓ, பழமறையுணர்ந்த பார்ப்பானே சகல சந்தேகங்களையுந் தீர்ப்பானே - உடல்பொருளாவி என்னும் மூன்றையுந் தானென்று நினைக்கு மகத்தைச் சிக்ஷை செய்து நிஷ்கிரிய வஸ்துவாகிய பரப்பிர்மத்துக்கு ஐக்யமாயிருப்பதே உத்தமதானமென்றும் சத்தாதிவசனுதிகளை யடக்கி - அகங்காரமனதை மடக்கி - நிராகாரவஸ்துவாகிய பரப்பிரம்மத்துக்குள் ஐக்கியமாயிருப்பதே சாந்த ஸ்நானமென்றும்- பிபீலிகாதி பிர்ம பரியந்தம் - பரப்பிரம்மமே நிறைந்திருக்கிறதென்றும் - அதில் நானென்னும் அகம் பாவமேதென்றும் பரிபூரண வஸ்துவாயிருப்பதே பிரம்மத்தியானமென்றும் - நானென்றபிமானத்தோடெங்கூடி யாதொரு கிரியையுஞ் செய்யாமல் தானே வந்தகாரியங்களைப் பற்றறச்செய்து - அகம் பாவத்தையடியோடு மில்லாமற் கொய்து - தொனாசமாத்திரமாயிருப்பதே பிர்மக்ஞான மென்னும் சாட்டியகித்திரையில் நசித்திருந்ததுபோல பிர்ம நிஷ்டையில் மனம் நசித்து பிரம்மாகாரவேசம் மேவிட்டு தன்னை மறந்திருப்பதே மகா மௌனமென்றும் - சொல்லலா மிந்த ஞானத்தையும் இடங்கேட்கவில்லை சிதாரா மென்று சொல்லச்சொன்ன காரணமேதோ அதைத் தெரியப்படுத்துமையாவென்று தர்ச்சிக்க.

மாயா பிராமணர் ஓ அறிவில்லாதவனே - யான் சொல்லும் மர்மமறியாமல் கத்தரிக்காய்க்கு கால் கைமுளைத்தாப்போல - பிஞ்சிலே பழுத்து ராகத்தையிழந்து தானம் ஸ்நானத்தியானங் கியானம் மோனமென்றுளறுகிறாய் - உன்னையு முன்னைப்பனையுங் கண்ணையுங் கண்ணைப்பனையும் விழுங்கியுமிழாமல் தனக்குள்ளே ரணுப்போல வைத்திருக்கும் பிரம்மத்துக்கு நீவேறுபட்டிருந்தா லல்லவோ - பிரம்மத்தை நினைக்கத்தகும் அடா மூடா, சமுத்திரத்தையன்றி அலைவேறுகுமா அக்கினியன்றி பொறிவேறுகுமா, பிருதிவியன்றி தூளிவேறுகுமா, பிர்மமன்றி நீவேறுகுமா, தானாகவும் வஸ்துவாகவும் - பரிபூரணமாகவும் - இருக்கும் பிர்மத்தை, தத்தனக்கன்னியமாக்கி - தியானிப்பது அஞ்ஞானமாமெஞ்ஞானமா - சுஞ்ஞானமா - விஞ்ஞானமா - மூக்கில் முட்டனைக்கொண்டாடும் முழுமூடனுக்கிணையான முட்டாளே - ரூபமே தானென்றிருக்கும் நிரூபமுள்ள பகவானையே நினைக்கவேண்டும் - ஏனெனில்-நிரூபமாய் நிர்ச்சலனமாயிருக்கும் பிர்மத்தாற் பிரபஞ்சமுண்டாச்சுதா மாயாசொரூபனான பகவானாற் பிரபஞ்சமுண்டாச்சுதா நீங்கிரஞ் சொல்லடாவென்று தலைமேலோர் குட்டு குட்டினர்.

அதற்கு - கபீர் - ஓ வேதாந்தந்தெரிந்த விப்பிரனே - மறுமாசில்லா சுப்பிரனே-நிருபமாகிய பரப்பிரம்மம் நிர்ச்சலனமா யிருப்பதால் அஃதொன்றையும் நிர்மாணிக்கமாட்டாது, மாயாசொருபனான பகவானாலேயே நிர்மாணிக்கப்பட்டதாகுதும்-காரணமான பர



ப்பிரம்மத்தைத் தியானஞ்செய்யாமல்-காரியமான விஷ்ணுவை நினைப்பதாற் பிரயோசன மேதுண்டு-ஞானம்நிறை பிர்மக்ஞானி மௌனமாயிருக்கவேண்டியது சகஜந்தான், நானென்பதறுதவர் - நிஷ்களமான பரப்பிரம்மத்தைத் தியானிக்கலாமென்று பலசாஸ்திரங்களும் முறையிடுகின்றதே-நீர்மாத்திரம் வேண்டாமென்று சொல்லுங்காரணமே தென்று கவில.

மாயாவிலாசனான பகவான - ஓ கபீர்-சர்வம் பிர்மமயமாயின் - தானங்கொடுப்பவன்யார் - வாங்குபவன்யார - தோத்திரஞ்செய்பவன்யார் - கேட்பவன்யார் மோட்சமென்பதேது - மோட்சமடைகிறவன்யார்-ஆனந்தமென்பதேது-ஆனந்தத்தை யனுபவிப்பவன்யார் ஆசான்யார்-மாணாக்கன்யார்-இகபரமென்பதேது-இகபரசவுக்கியங்கொடுப்பவன்யார் - ஜனனமரணமேது-ஜனனமரணத் துன்பத்தையனுபவிப்பவன்யார் - பிரபஞ்சமேது பிரபஞ்சத்தைச் சிருஷ்டிப்பவன்யார் - சிருஷ்டிஸ்திதியேது-ரட்சிப்பவன்யார்-ஸ்திதி நாசமேது - சங்கரிப்பவன்யார்-ஜாகர சுவப்பனமேது- இதைக்கற்பிப்பவன்யார்-சுவப்பன் சுழுப்தியேது - விகற்பப்படுத்துகிறவன்யார் - தாய்தந்தையேது- பிறந்தவன்யார் நீயென்பதும்-நானென்பதுமேது - மாயையென்பதேது-பிர்மமென்பது - தானேதென்று வகுப்பற்றுப்போம்-இப்பேர்க்கொத்த பிர்மக் ஞானந் தெரிந்தவன்தானே இந்தக்கந்தையைக் கொடுத்தால் தாயார்வந்து விடுவாளே துன்பத்தைத்தந்து விடுவாளே என்று வெகுநேரங்கொடுக்காமல் பின்னிட்டாய் - வாய்ஞானம் பேசுவதற்கு மாத்திரம் முன்னிட்டாய் - வாசாகஞானம்பேச்சாமீனம் என்கிறதறியாயோ - யானுனக்கு பிரகிருதியத்தைக்குறியாயோ - எதுகாலபரியந்த மொருவனுக்குச் ஜாக்ராவஸ்தையிற் சுழுப்திநிலைவராதோ - அதுபரியந்தம் - நீநானென்கிற விவகாரந்தொடர்ந்தேயிருக்கும்-அன்றி-ஊமைபேசுவானு? பதிவிரதையொருவனோடு பரியாசஞ் செய்வாளா;புண்ணியவான் புரண்டுபேசுவானு ; சுழுப்திநிலையுள்ளவன் ஒன்றைத்தியானஞ்செய்வானு செய்யமாட்டானுதலால் அத்துவித பாவந்தெரிந்துநீ-பிர்மத்தைத் துவிதப்படுத்தி தியானிக்கலாகாது எவனொருவன் அபின்னத்தைப்பின்னப்படுத்துவானே அவன் முன்னம்-பிர்மத்துக்கு வேருகவேண்டும் இப்படி வேருக இருப்பவனுக்கு- அபின்னபாவங் கூடவே கூடாது-அபின்னமான பிர்மமேதானவன் - பின்னபாவஞ் செயயக்கூடாது-பின்னப்பட்டிருப்பவனத்து விதத்தைப் பேசலாகாது.

ஏனெனின - பரத்தை பத்மினியாக மாட்டாள் பத்மினி பரத்தையாகமாட்டாள் அதுபோலவே அத்துவிதபாவமறிந்த - உனக்குதுவிதபாவமேன் அத்துவித பாவமுள்ளவனுக்கு அத்துவித்தியானமேன் இதுகளின் மர்மம் நன்ரு யறிந்துகொள்வதற்கு நீ சிறுபையன் பாச்சி சோச்சியென்பவன்-வேதங்களை யோதாதவன் தர்க்கஞ்செய்யப் போதாதவன் - சின்னஞ்சிறுபிள்ளை பேசுவதெல்லாஞ் சொள்ளை - அறிவில்லா வெள்ளை கொஞ்சிப்பேசுங்கிள்ளை-நீயாவாயா வென்போலான் பிள்ளை - யென்று-பலவார்த்தைகள் புகன்று-மீசையை முறுக்கிக்-கோபத்தைப்பெருக்கி அடா கபீர்-நானென்னும் பாவமுடன் -அபிமானமுமுள்ள நீ-பின்மில்லாவென்னும் மொழியின் மர்மமறியாமற் சொன்னாய்-யாவரும்-முன்னஞ் சகுணத்தியானத்திற் றேர்ந்து இகபரங்களனித்தியமென்றறிந்து எல்லா ஆசையுந்தீர்ந்து தேகாபிமானங்களிலிருந்து பேர்ந்து நிர்க்குணத்தியானத்தைக் கைக்கொள்ளவேண்டும் - அப்படிக்கின்றி நின்றபடிபடுத்து தலையையுடைத்துக்கொள்வதுபோல-ஒன்றுமறியாச் சிறுவனுகிய நீ-ஆதியிலேயே நிர்க்குணத்தைத் தியானித்து இகபரத்துக்கு முதவாப்பிரஷ்டனுகவேண்டாம் - சிறுகுழந்தைகள்-மணலால் வீடுகட்டி விளையாடுவதற்கிணையான-வாசாக்ஞானம் பேசவேண்டாம்.பேசினலப்படியே யிருக்கவேண்டாமா, அப்படியிருக்காமல்-வாய்ஞானத்தா லென்னைவெல்ல வந்தாயே இதற்குத்தாஞ் சொல்லக்கூசி நொந்தாயே. யாதலால் - இன்றுடன் நிர்க்குண பாவத்தைவிட்டு நாரதாதி ரிஷீஸ்வரர்களெல்லாம்-எந்தத் திருநாமத்தைத் தோத்திரஞ் செய்கிறார்களோ-எவனுடைய அருளால் நிர்க்குணஞானத்தை யடைந்தார்களோ எதனுஞ் சகலபாபங்களும் நசித்துப்போகுமோ அந்தத்திருநாமத்தை யாரிட்டத்திலாவது உபதேசம்பெற்றுக்கொண்டு அதை நெடுநாள் தியானஞ்செய்து-பரிசுத்தமனதுடையவனுகிப் பின்பு நிர்க்குணத்திற் பிரவேசிக்கலாமப்படிக்கின்றி நிர்க்குணத்தால் திரிமூர்த்திகளையும் நிக்கிரகித்த- தாருகாவன ரிஷிகளைப்போல பங்கப்பட்டுப்போகவேண்டாமென்று பயமுறுத்தி-கபீர்-மனதை சகுணத்தில் ஸ்திரமாய் நிறுத்திப்போய் வருகிறேனென்று மாயாமறையோன் மாயமாய் மறைந்துபோனார்.

கேட்டீர்களோ சித்தர்களே இப்படி பலவாறமையாண்டுகொண்டு பகவான் மறைந்தபின் - கபீர்யோசிக்கின்றார், நாம் தியானத்தைக் குறித்துக்கேட்க ஞானத்தைப்பேசிப் போனா ரப்படிப் பேசிப்போனாலும் முதற்படியில் கால்வைத்தேறாமல் மூன்றாம்படியிற் பா

பிரா கிலத்திற் சாய்ந்து - தவீேைய யுடைத்துக்கொள் வதும் ோல - சரிதை கிரிகைேயோகமென்னும் மூன்றை யுங்கடந்து நிரமதியானந்தையும் ஞானத்தையும் பேசி னபடி நடக்கக்கூடாமல் - இந்துசியின்மேலாசையாய் மோசம்போனேனே-வாசகம் அறியா மாந்தரை வெல்வதற்குரியதாகும் - அறிந்த அனுபவிகளின் பா லோர் வார்த்தையும் பேசுவதற் குதவாது-அன்றி பே சின்படிநிற்கப் பெருமுச்சுவரும் - ஒதினபடி சாத னஞ்செய்யாதவன் பேதையிலும் அதிபேதையென்ப தற் கோரையமேயில்லை - சருணத்தைக் கடந்திர்க்கு ணத்தைப்பேசின நாம்-திர்க்குணத்தில் நிற்பதுவெகு அரிதாகவே தோன்றுகின்றது- ஏனெனில்-குபமுள்ள சகுணத்திலேயே நிலைக்காதமனம்-திர்க்குணத்தில் நிற் பதுமிகவுந் துர்லபந்தான் - ஆனாலும்-மோக்ஷ-இச்சை யுள்ளவர்க்கு ஏகாந்தத்தியானஞ் செய்யவேண்டுமோ- நமக்குத்தெரியவேயில்லை - இனைப்பரிசுத்தமான ஞா சான்பால்கேட்டுத் தெரிந்துகொள்ளும் பரியந்தம்-இப் போதுரைத்துப்போன-பிராமணருடைய வாக்கியத்தை யேசுப்பிறுக்கவேமென்று - பகவானை அத்தியந்தபக்தி யுடன் தியானஞ்செய்துகொண்டேயிருந்தார்.

கேட்டீர்களோ! சித்தர்களே யென்று, பின்னும் நாமசித்தர் சொல்லத்தொடங்கினர்.

குருவே துணை.

சுவாதுகபீருக்கு பகவான்-பகிரூப மாய்வந்து-பஜதரிசனம் கொடுத்த-அத்தியாயம்.

பிர்மாக்கிரத்திற் சுவாசத்தையேற்றி ஜீவகளை யைப்போற்றி ஈதாந்தவசமா யிருக்குந்தன்யர்களே மிகவுங்கன்யர்களே! புண்ணியவானன கபீர் - இந்தக் கந்தையின்மேல் வாஞ்சையாயிருந்த நாம் வாசாஞா னி யென்பதற்கோர் சந்தேகமேயில்லை, வந்தவருனை க்குப்போனதோ உண்மை யானசொல்லே, யென்று பசமரத்தாணிபோற் பகவத்தியானத்திற் பதிந்திருக் கையி லிவனைப்பரிசோதிக்கவேண்டுமென்று பகவா னேர் பகிரிவடிவுகொண்டு கபீர் பக்கலடைந்து ஓ பு ண்ணியவானே! நீ மிகவுந் தயாளகுணமுடையவனெ னப் பலருஞ்சொல்லக் கேள்விப்பட்டு மெள்ளவராமல் துள்ளிவந்தேன், எனக்கோர் வஸ்திரமில்லை உமதுதை யிலிருக்கும் வஸ்திரத்தைக் கொடுத்தெனக்குள்ள தா ரித்திரத்தைப் போக்கலாகாதா? உமதஞ்ஞானமடியோ டுமெவந்து நிற்காதா? பாபங்களெல்லாந் தலையெடுக் காமற் சாகாதா, லோபகுணங் குறைந்துபோகாதா, த ருமஸ்வரூபனே-திவ்வியமானயோபனே லோபியை ப்போன்ற பாபியும் விபசாரியைப்போன்ற அபசாரியும் இவ்வுலகிலில்லையென்ப துண்மையல்லவா; உமக்கும் விரித்துச் சொல்லவா, புருஷனுக்குப் புண்ணியமும் காக்கைக்குக்கற்புமன்றி வேறுதுணை யுண்டா, நான் சொல்லும்வார்த்தையிற் பழுதுண்டா, உம்மைலோப குணத்தி லமிழ்த்தியதித்துண்டா, அல்லதுவேறே யெ ண்ணங்கொண்டா, வெவ்வேறபதபல வார்த்தைகளாடு ம்போது.

கபீர் ஓ, முற்றுந்துறந்த பகிரியே இல்லையென்று கேட்கும்பிகாரியே ஆசைகொண்டது இந்தவஸ்திர த்தின்மீது தானே இந்தாரும் ஜெபசிதாராமென்றுரை த்துக் கொடுக்கப்போனர்.

அதுகேட்டமாயாபகிரி மிகவுங்கோபங்கொண்டு வர்போல் அடாதுர்மார்க்கா அறிவில்லாமூர்க்கா நித்ய நிர்மல நிர்விகற்ப நிரஞ்சன நிராதார நிரூப நிஷ்களங் க நிர்ச்சங்க நிர்ப்பேத நிர்ச்சேத நிர்மாம நிஷ்காம நிர் க்குண நிராங்கார வஸ்துவாகிய பரப்பிரம்மமே ஆதி தெய்வமெனத் தெரிந்திருக்கும் சொரூப ஜெயராமெ ன்றோர் மனிதன்பேரைப்புகழ்ந்து கொடுக்கவந்தாய் நி ரூபமான கடவுளைவிடுத்து வேதனைப்படுதைத் தடு த்துக் குபமுள்ள தெய்வத்தை நினைக்கலாமா, எங்க ணும்பரிபூர்ணமாய் நிறைந்திருக்கும் சச்சிதானந்தக் கடவுளை மறக்கலாமா, என்றுங்கேட்காதவார்த்தையை ச்சொன்னயினி யுன்னருகிலும் நிற்கக்கூடாதென்று ரைத்துப் போகும்போது.

கபீர்-ஓஸ்வாமி உமக்குதத்தஞ் செய்ததைவாங்கி க்கொண்டு போகாமல் என்னை அபாதியாக்கிப்போக லாமா, இதனாலேயான் நரகத்துக்கேகலாமா, ஒருவருக் கு தத்தஞ்செய்த வஸ்துவை வைத்துக் கொண்டு கொடுக்காதவனை எமதூதர்கள் தண்டத்தா லடித்து முடிக்காமற் போவார்களா, வாக்கைக்கொடுத் தொரு போக்கைக்காட்டுவோர்கள் நீதியுள்ளவர்களாவார்களா நானறியாக் குழந்தையென்றறிந்தும் பகவானணியத் தகுந்த இந்தப்பீதாம்பரத்தின்மேல் இச்சைகொண்டும் வாங்காமற்போவது நியாயமா? என்னை நுத்தநுசரிப் போவது சகாயமா? அறிவில்லாக் குழந்தையின்மேல அன்புகூர்ந்து வஸ்திரத்தை வாங்கிக்கொண்டு போமை யா வென்று மிகவும் வேண்டிக்கொள்ளும்போது.

மாயாபகிரி கபீரைநோக்கிப்போபோ வேதவிரோ தமான வார்த்தையைச்சொன்ன உன்னிடத்தில் ஒரு கவடிவாங்கினாலும் பாபம்வந்துசேருமென்றுரைக்க.

கபீர் ஓஸ்வாமி ஞானியாக் குழந்தையாகிய ஞா னமார்க்கம் நன்றாயறியேனாலும் அக்கினியானது நி ரூபமாயிருக்கிற செய்யும்-குளிரானதைத்து ரூபமாய்த் தெரியும் செய்யும் வேறுகுமா? அன்றி நிருபமாயிரு க்கிற பொன்னும் ரூபமாயிருக்கிற ஆபரணமும் நிருப மாயிருக்கிற பஞ்சும் ரூபமாயிருக்கிற வஸ்திரமும் நிரு பமாயிருக்கிற வர்ணமும் ரூபமாயிருக்கிற சித்திரமும் நிருபமாயிருக்கிற பர்வதமும் ரூபமாயிருக்கிற விக்ரக மும் நிருபமாயிருக்கிற இரும்பும் ரூபமாயிருக்கிற ஆயு தமும் நிருபமாயிருக்கிறமண்ணும் ரூபமாயிருக்கிறபாத் திரமும் நிருபமாயிருக்கிற ஜலமும் ரூபமாயிருக்கிற ல வணமும் வேறுகாததுபோல் நிருபமாயிருக்கிற பி ர்மமும் ரூபமாயிருக்கிற பகவானும் வேறென்று சொல் லக்கூடாது அன்றி நிருபமாயிருக்கிற ஜலத்தைவிட ரு பமாயிருக்கிற முத்தேன்னயானதைப்போல நிருப மாயிருக்கிற பிர்மத்திலும் ரூபமாயிருக்கும் பகவானே மேன்மையென்று சொல்லத்தகு மாதலால் அந்தப்ப ரந்தாமனுடைய திவ்வியதிருநாம [illegible] யாதொரு காரியத்துக்குஞ் சிந்தனஞ் செய்யவேண்டுமெனதுரை க்க.

மாயாபகிரி ஓகபீர் ஆசானுக்கு மாணாக்கனுப தேசஞ் செய்கிறதைப்போல சொல்லவந்தாய் எதாகிய வஸ்து பொன்னா? ஆபரணமா? மண்ணா? பாத்திரமா, பஞ்சா, வஸ்திரமா, அயமா, ஆயுதமா, கல்லா, விக்ரகமா, வர்ணமா, சித்திரமா, நிருபமா, ரூபமா, சொல்லும் பிள்ளாயென்றுகேட்க.

கபீர்-ஓபெரியோரே எனக்குத்தாஞ்சொன்ன சிறியோரே நீர்நன்றாய்த் தெளிந்தவரா யிருக்கும் அறி வில்லாக் குழந்தையாகிய அடியேனை ஏமாற்றுகிறீர் எதார்த்தவஸ்து நிருபமாகிய பரப்பிர்ம்மமேயானாலும் அதுவே ஆலங்கட்டியைப்போல் ரூபமாகிப் பகவா னென்கிறபேர் பெற்று இவ்வுலகத்தை ரட்சிக்கின் றார், அன்றி சூரியனாகிரணமும் சந்திரனுஞ் சேர்ந் தும் அக்கினியும் உஷ்ணமும் தீபமும்பிரகாசமும் ஜல மும்ருசியும் தனமுங்காரமும் காபமுங்கோபமும் கோ பமும்பாபமும் ஆசையும் பாசமும் இச்சையுஞ்சென் மமும் சென்மமுங்கர்மமும் கர்மமுந் தேகமும் தேக மும்-நரகமும் நரகமுந்துக்கமும் தானமுந்தயவும் தி தானமும் சாந்தமும் ஜபமுந் தியானமும் ஞானமும் மோனமும் மோனமும் நிஷ்டையும் நாமென்பதும் அக்ஞானமென்பதும் மாயையும் பிரபஞ்சமும் நிரா சையுஞ்சன்யாசமும் பொறுமையுந்தவமும் ஜீவகாரு ண்யமும் வீரமும் குருவுந்தெய்வமும் தெயவமும்பிர் மமும் பிர்மமும் ஆனந்தமும் ஆனந்தமும் மோக்ஷ மும் வேறாயிருந்தா லல்லவோ பகவானும் பரப்பிரம மும் வேறென்று சொல்லக்கூடும்-அன்றியும் ரூபமாகி யதேகாதிகளை நாமென்றிருக்கும் நாம ரூபமாகிய பகவானையே நிதானிக்கத் தகுந்ததென்றுரைக்க.

அதற்கு-பகிரி ஓ! கபீர்-பிர்மப்பிரளயத்தி லழிந் துப்போகும் ரூபத்தையும் க்ஷணபங்கதேகத்தையும் ச த்தியமென்று நம்பலாகுமா, சகுணத்தியானத்தால் சனனமரணத் துன்பமொழிந்துபோகுமா, விஷத்தை அமிர்தமென்று நினைக்கு மதியீனனைப்போல வெகு நேரமாய் குதர்க்கஞ் செய்கிறாய் விஷத்தைக்குடித் தி றப்பதைப்பார்க்கிலும் அமிர்தத்தையுண் டழியாமலி ருப்ப துத்தமமானதைப்போல அநித்திய தெய்வத தை நம்பி அநேகத்தியடையாமல் நித்தியானந்தத்தை யடை யடாவெனப் பலவாறு சொல்லியும் கேட்காத உன்மூடத்தனத்துக்கு நாமென்ன செய்யட்டுமென் றுரைக்க.

கபீர்-ஓ! சாதுவே-பூரணத்தைத்தரும் பாம்பின் விஷம் மாணிக்கமானதுபோல-சாத்தகுணத்திற் பிரதி பலித்த-பிர்மமாகிய-ரூபமுள்ள பகவான்-பிரமாணத்தத் தொட்டதட அயிர்ப்பரியமுந்தரும ஆண்டவனு யிருக்கி ன்றுரவனையாரும் மறக்கவே கூடாது-அன்றி-பிர்மப் பிரளயத்திலெல்லாஞ் சூனியமாகும்போது சீவர்களு ஞ் சூனியமே சீவர்களைரட்சிக்கும் திருமாலின் திருவு ருவும் சூனியமே-ஆனாலும்-கருப்பிய வஸ்தையிலிருக் கும்திருளிரும் - ஜாக்ராவஸ்தையிலுள்ள காலங்களை மேலானதுபோல-நிருபமாயிருக்கிற பரப்பிர்மத்திலும் பக்தர்கள் நினைத்தவண்ணம் மானரூபமெடுத்துரட்சிக் கும் பகவானே முக்கியமானவனென்றுரைக்க.

மாயாபகீரி - அடாமுட்டனே! பிர்மமில்லா விட்டால் மாயையேது - திரிகுணங்களேது திரிகுணப்பிரதிபிம்பமான - திரிமூர்த்திகளேது - நிச்சயந்தெரியாமலேன் குளறுகிறாய் பிர்மத்தையே யுறுதியாய் நம்பி யிரும்பின்வா யிரும்பின்னா யென்றுரைக்க.

கபீர் - ஓமூடனுணர்வோரே! பகவானை ஜலரூபமாய் வருஷிக்காவிட்டால் பிரபஞ்சமேது சராசர ஜீவர்களேது, பிர்மமென்று நினைக்கிறவர்களேது, நீயேது, நானேது, ஆதலால் ஜலரூபமான நாராயணனை ஒருவர் மறக்கத் தகுந்ததோ, ரட்சிப்பவனைவிட மேலான தெய்வமொன்றுண்டோ, போம்போம் என்னவார்த்தையைப் பேசுகிறீரென்று கவில.

பகீரி - ஓ-கபீர-திரிமூர்த்திகளையும் மாயையும் பிரபஞ்சத்தையும் சுவப்பனக் காட்சிபோலவும் சத்திராசிதம்போலவும், ரச்சுசர்ப்பம்போலவும், முழுதும் மித்தையென்றும் பிரம்மமேசத்தியமென்றும் சொல்லும் வேதாந்தத்தைவிடுத்து பிரம்மமே பகவானென்றும், பகவானே நித்தியதெய்வமென்றும் வாயில்வந்தபடிபேசுகிறாய், நிருபமாயிருக்கிற பரப்பிரம்மத்துக்குச் சலனமுண்டா? சலனமில்லாவஸ்துவே! பகவானுகி பிரபஞ்சத்தை ரட்சிப்பதெப்படியாகும் சூரியனிலிருட்டும் ஆனந்தத்திற் றுக்கமும் பிரியத்தில் கோபமும் ஆகாயத்தில் ரூபமும் பதிவிரதைக்குச் சலனமும் உண்டாயிருந்தாலல்லவோ நிருபமாகிய பரப்பிரம்மத்திலிருந்து ரூபமாகிய பகவானுண்டாவார், அன்றி நிராகாரவஸ்துவாகிய பரப்பிரம்மம் ஆகாரவஸ்துவாகியவிஷ்ணுவெப்படியாகும் உனக்கிந்தப்பயித்தியம் எதனாலே நாளாய்ப்பிடித்திருக்கிறதென்று நகைக்க.

கபீர்-ஓ விருத்தரே ஆகாயத்திற் சுழல்காற்றும், சுத்தசூன்யமாகிய சுழுப்திரியிலிருந்து நினைவும், ரூபமில்லாச் சுக்ல சுரோணிதத்தில் ரூபமும், அண்டத்தில்லா னாறுவித தோகையின் வர்ணமும், வித்திலில்லா வாசகந்தம் - புஷ்பத்திலும், விருட்சத்திலில்லாமதுரம் - கனியிலும் எப்படி தனக்குத்தானே யுண்டாகின்றே! அப்படியே நிர்ச்சலனவஸ்துவிலிருந்து தனக்குத்தானே சலனமுள்ளபகவானுண்டாகி இவ்வளவு விசித்திரங்களைச்செய்தார். அல்லாமல் பகவானொருவரில்லாமற்போனால் மாயையேது பஞ்சபூதங்களேது, பஞ்சவர்ணங்களேது பிரபஞ்சமேது மோட்சமும் நரகமும் ஆனந்தமும் துக்கமும் புண்ணியமும் பாவமும் குருவும் சிஷனும் தொழுதலும் துதிப்பதுமேது அசரசாஜீவர்களேது! நீரேது நானேது தர்மமேது தானமேது போ-போ-மூடபாவத்தைப்பேசும் முதுமையனே என்றுரைக்க.

மாயாபகீரி - ஓ-கபீர் தருமமேது தானமேதென்று நான்கேட்ட வஸ்திரத்தைக் கொடுக்கமாட்டீரோவென்று கேட்க.

கபீர் நீர்துணிந்து என்னையிரக்கேட்கிறீர் தருவேன், இந்தவஸ்திரம் பெரிதோவென்று கொடுத்து இனி யும்மிருப்பிடம்போய்ச் சேருமென்று புகல.

மாயாபகீரி வஸ்திரத்தை வாங்கிக்கொண்டு ஓ தனவானே! கனவானே, உனக்கின்னம் ஆத்மஞானந் தெரியவில்லை - ஏனெனில் கர்மத்திலும் பக்தியிலும், வைராக்கியம் மேன்மை, வைராக்கியத்திலும் ஞானம் மேன்மை, என்று வேதத்தில் முறையிட அதைத்தள்ளி பக்தியையே பிரதானமாகச் சொல்வது அறியாமையாகுமென்றுரைக்க;

கபீர் - ஓ; வாசாக்ஞானம்பேசும் வாயனே மேல் மூரக்கு முபாயனே முன்பு பக்தியிற்றேறி பின்பு வைராக்கியத்தைக் கைக்கொண்டு பிரபஞ்சத்துக்குவேறாகி ஞானசாதனஞ் செய்யவேண்டும், அப்படிக்கின்றி முதற்படியிலிருந்தேறாமல் மூன்றும்படியிற் றூண்டி முகத்தையுடைத்துக்கொள்ளுகிறதைப்போல பாவியுணகிய நானிப்போதே ஞானமார்க்கத்திற் பிரவேசித்தால்பிரயோசனமேதுண்டு? ஆதலால் முன்னம் பக்திமுதிர்ச்சியினுற் பக்தவற்சலனுய்ப் பகவானை என்கண் குளிரப்பார்த்து அவருடைய திருவடிகளி லென்றிருதுங்களையுஞ் சேர்த்து மனதை யஞ்ஞானத்தகாக் கூட்டுதில் விழாமல் காத்து சகலசந்தேகங்களையும் பேர்த்து நிர்க்குண நியானபரனுகிப் பந்தபாசங்களைக் கழிந்து ஞானநிஷ்டையிற்செழித்து ஆனந்தமேவிட்டாற் றழைத்து அகமமதையாவழியாமற் பிழைத்துத்தன்னைமறந்த ஆருடஞானியாவே னென்றுசொல்ல,

மாயாபகீரி - ஆ-ஆ, க்ஷணபங்கமான இந்தத் தேகத்தை நித்தியமென்றல்லவோ இவ்வளவு எண்ணங்கொண்டிருக்கின்றீர், யொருவேளை உன்னிஷ்டப்படி பகவான் முடித்தாலும் முடிப்பார், புண்ணியவானனே நீ நினைத்தபடியே முடியட்டும் - ஆனாலும் நிர்ச்சலனமாயிருக்கும் பரபிரம்மத்திலிருந்து பகவானுண்டானாலும் பகவானால் பிரபஞ்சமுண்டானதுமெப்படியோ



அதைச்சற்றே தெரியச்சொல்லுமப்பாவென்று கேட்க.

கபீர்-ஓ - மூதுணர்வோரே இப்பேர்க் கொத்ததென்று - மனதினுல் நினைக்கவும்-வாக்கினுற் சொல்லவுங்கூடாததான - பரப்பிரம்மத்திலிருந்துண்டானது சழுப்திக்கினையான அவ்வியக்தமென்கிற மூலப்பிரகிருதி யென்றும் - அதிலிருந் துண்டானது முக்குணங்களென்றும் திரிகுணங்களில் முதன்மையான சாத்வீகத்திற் பிரதிபலித்த பிர்மமேபகவானென்றும் சொல்லப்படும். அப்பகவானால் பிர்மாவுண்டாகி அவனு லெவ்வெழுவகைத் தோற்றங்களான சராசரங்களும் - அண்டபிண்ட பிர்மாண்டங்களுமுண்டாயிற்று. நிருபமாயிருக்கும்போது பிர்மமென்றும் - ரூபமானபோது விஷ்ணுவென்றும் அப்பகவானுக்கே சொல்லப்படும், விஷ்ணு பரப்பிர்மசுரூபமென்று-வேதத்தில் முறையிடுகின்றதாதலால் - விஷ்ணுவையே ஆதிதெய்வமென்று நம்பவேண்டும், அல்லாமல்-பகவானனவர்-முதல்முதல்-ஜலரூபமாய்ப் பிரகாசித்தார் அதனாலேயே நாராயணனென்கிற பேருண்டாயிற்று (பகவான்பாதத்திலிருந்து கங்கையுண்டாச்சுதென்பதின்றாற்பரியம் ஜலரூபனென்பதாம்) அன்றி ஜலம்வருஷித்ததே-எங்கும்பச்சையாய் விளங்குகிறபடியால் - பச்சைவர்ணனென்றும், மேகமாய் வருஷித்ததால் மேகமேனியனென்றும், சமஸ்தசுபமங்களங்களும் அவர் நினைத்தமாத்திரத்திலுண்டாகின்றதால். அவருடைய இர்தயமானமார்பகத்தில் சுபமங்களங்களின் வடிவமாகிய மகாலட்சுமி வீற்றிருக்கிறாளென்றும், ஜலரூபமான அந்த மகானுபாவர் பூமியைச்சக்கரம்போற் சூழ்ந்திருக்கிறபடியால் அவருடைய ஆயுதஞ் சக்கரமென்றும், எப்போதுந் தொனிக்கும் வாரிதியி லாதியிலிருந்து-சமஸ்தங்களுக்கு மாதாரமாகிய அகார உகார மகார மென்னும் திரியாக்ஷரங்களுங் கூடிய பிரணவாக்ஷரமே யுச்சரிக்கிறபடியால் சங்கையுடையவனென்றும், ஜலத்தினமத்தியி லிப்பூமியுண்டானதால் பூமியே பிர்மாவென்றும், பூமிக்கு நான்குதிக்குக ளிருக்கிறபடியால் சதுர்முகனென்றும், இப்புவியே சிருஷ்டிக்கு காரணமாதலால் சிருஷ்டிகர்த்தாவென்றும், இப்புவிதன் வல்லமையினு லந்தரத்தி லிருப்பதால் தன்சக்தியான ஆதிசேஷன் முடியின்மே லிருக்கிறதென்றும், அதுவே தனக்காதாரமானதால் ஆதிசேஷன்மேல் சயனிப்பவனென்றும், அக்கினியின்மேற் ஜலரூபனான விஷ்ணுவிருப்பதால் அக்கினியம்சனனபா ருத்திரன் முடியிலிருப்பவனென்றும், ஜலாம்சவிஷ்ணுவால் அக்கினியம்சனன மசிவன் தன் தாபத்தை நீக்கிக் கொண்டிருப்பதைப் பற்றி ருத்ரப்பிரியனென்றும், சமஸ்தருசிகளுக்கும் ஆதாரமான ஜலமயனான தர்லக்ஷீரசாகரனென்றும், பக்தர்களுக்கு வேண்டிய வரங்களளித்தலால் வரதனென்றும், எங்கும்வியாபித்திருப்பதால் விஷ்ணுவென்றும், அழியாமலிருப்பதால் அச்சுதனென்றும், பாபங்களை அரிப்பதா லரியென்றும், அன்பர்களிர்தயத்தி லெப்போதும் ரமிப்பதால் ராமனென்றும், விளையாட்டா யிச்சகத்தையுண்டாக்கினதால்-லீலாவினோதனென்றும், சமஸ்த வஸ்துக்களிலும் ஒட்டியும் ஒட்டாமலிருப்பதால் கபடநாடகனென்றும், தன்னை நம்பினோர்க்கழியாப் பதமீதலால் வைகுந்தநாதனென்றும், இதுவே அவருடைய ரூபமென்றுணர்த்துகொள்ளக் கூடாததால் பிர்மமென்றும், பக்தப்பிரியனுதலால் பகவானென்றும், சமஸ்தலோகங்களுக்கு மதிபதியாதலால் ஜகன்னாதனென்றும், அடியார்களுக்கடிமை செய்பவனுதலாற் பக்தவச்சலனென்றும், நித்திரைவருவதும் நீங்குவதும் முதலான தன்மாயையாரானு மறியக்கூடாமற் செய்பவனுலால் மாயனென்றும், காணுதற்கரியவனுகலாற் பராத்பரனென்றும், நாரதாதிரிஷிப்பார்களாற் றுதிக்கப்பட்டவனுதலால் ருஷீகேசவனென்றும், மிகவுந்தபஞ் செய்வோர்கள்முன் பிரசன்னமாகிறவனாதலால் மாதவனென்றும், சமஸ்தத்துக்கு மாதாபுருஷனாதலால் ஆதிமூலமென்றும், சமஸ்தலோகங்களும் ஜலாம்சத்தா லுண்டாவதால் சர்வ சிருஷ்டி யென்றும், சமஸ்தலோகங்களுஞ் ஜலத்தால் ரட்சிக்கப்படுகிறதால் சர்வஸ்திதியென்றும், சமஸ்தமும் ஜலமென்னுந் தன்னி லடங்கிப்போவதால் சர்வசம்ஹாரனென்றும், தசாவதாரங்களால்-இவ்வுலகில் துஷ்ட நிக்கிரகம் சிஷ்டபரிபாலனஞ் செய்தும் செய்பவனுதலால்-மச்ச கச்ச வராக நரசிங்க வாமன பரசுராம ஸ்ரீராம பலபத்ராம கிருஷ்ண கற்கியென்றும், பலபேர்கள் வேதத்தில் முறையிடுகின்றனரே இப்பேர்க்கொத்த பகவானைக் கனவிலும் மறக்கத்தகுந்ததோ! மறக்காமல் சிந்திப்பவர்களுக் கோர்குறையுமுண்டோ! பகவானைப்புகழாத வேதாகமசாஸ்திரங்களுமுண்டோ, ஓ-பகீரியே! பிர்மம் பிர்மம் என்று பசனம் பிதற்றுகிறீரே - அந்தப்பிர்மத்துக்குப் பேச்சுண்டா மூச்சுண்டா, இல்லை ஆதலானினு மென்னுடன் குதர்க்கஞ் செய்யாமல் - வாயில்வந்தபடி வையாமல் - என்னுததியைக் கொய்யாமல் - என்மனம்புண்ணும்படியானசொல்லம் புகலையாமல்-உம திருப்பிடத்துக்குப்போய்ச் சேருமையாவென்று நவில.

மாயாபகிரி-இன்னுஞ்சோதிக்க-சபாசு சபாசு கல்ல வார்த்தைகளைச்சொன்னாய்-அகண்டம்-அகண்டாகண்டம்-அசலம்-அனந்தம்-அப்ரமேயம்-சின்மயம்-தேஜோமயம்-சித்விலாசம்-நித்யசத்யம்-நிஷ்களானந்தம்-பரமம்-பரப்பிரம்மம்-பரமேஸ்பரம்-சுயம்- துரியம்-துரியாதீதம்-விஸ்வம்-பூரணம்-விஸ்வாதீதம்-விமலம் - விசேஷம்-வேதாதீதம்-சுபம்-சுந்தரம்-சுயம்பிரகாசம் - என்கிறவிஷேசணங்களையுடையநிராங்காரவஸ்துவாகிய பரப்பிரம்மத்தைவிடுத்து, ஆங்காரத்துட வனுக்கெல்லாங் கொன்று-அரியென்பவனை - அங்காரத்தால் கோத்திரஞ் செய்துக்கொண்டேவந்தாய, நிச்சயமறியா அறிவினனே விதைமுன்னதா விருட்சம் முன்னதா தந்தைமுன்னவனா தனயன்முன்னவனா ஆண்டவன்முன்னவனா அடிமைமுன்னவனா தமையன் முன்னவனா தம்பிமுன்னவனா சொல்லும் பிள்ளாயென்று அதட்டிக்கேட்க,

கபீர் - ஓ பிகாரி-பனங்காட்டுநரி-லலலல வென்பதற்குப் பயப்படுமா பதிவிரதை மன்மதபாணத்திற்கிடங்கொடுப்பாளா வீரன் எதிரிக்கு முதுகுகாட்டிவோடுவானா பேரின்பத்தை யாசித்தோன் விஷயானந்தத்திலமிழ்வானா, இடைவிச்சமுள்ளவன் தூக்கத்தால் வாடுவானா தைரியசாலி அவதைரியத்துக் குட்படுவானா, படான், அதுபோல-வாய்ஞானம்பேசு மும்மை நாவொருபொருளாய் மதிப்பேனா, ரூபத்தில் இலக்காதமனம்-நிருபத்தில் இலக்குமா, ஆகாயத்தி வேணிவைத் தேறக்கூடுமா, விருட்சமில்லாமல் விதையென்றபேருண்டாகுமா தனயன்பிறக்காமல் தந்தையென்றபேருண்டாமா தம்பியில்லாமல் தமையனென்கிற பேருண்டாகுமா அடிமையில்லாமல் ஆண்டவனென்கிறபேருண்டாகுமா, உண்டாகாததனால் - அடிமையாகிய எனக்கு ஆண்டவனே துணை, அடிமைதனையில்லாவுமக்கு ஆண்டவனேயில்லை, நிச்சலன வஸ்துவாகிய-பிரமத்தைத் தியானித்தால்-அந்தப் பரப்பிரம்மம் அசையுமா பேசுமா காட்சிகொடுக்குமா திக்கற்றவனுக்குத் தெய்வமேதுணை-தாசனுக்குச் சாமியேதுணை. அடிமைக்காண்டவனேதுணை - பக்தனுக்குப் பகவானேதுணை, நரனுக்கு நாராயணனேதுணை-அன்றி ஆதிமூலமேயென்று கூப்பிட்ட கஜேந்திரனைக் காத்து ரட்சித்தது பகவானா பரப்பிரம்மமா பிரகலாதனைக்காக்கத் தூணிலிருந்து புறப்பட்ட நரசிம்மம் பகவானா பிரம்மமா துரோபதையின் துகிலுரியும்போது காத்தது-அனாதனா சுயம்பிரம்மமா ஓ பகிரி நாராயணனே சகலரையுங் காத்தவராதலால் - நாராயணனை நம்பினவனுக்கு நாசமில்லை நனிதாகனைத் தொழுபவனுக்குத் துக்கமில்லை, விஷ்ணுவன்றி எனக்கு வேறுதெய்வமில்லை ஸ்ரீராமராமன் திரான்வேறுயினைப்பதில்லைசானமென்பவர்க்கு மரணமில்லை, பதிவிரதை தன்னுயிர் நீங்கினும் பாபுருஷருக்கிடங்கொடுப்பதில்லை பக்தனாகியானும் பகவானையன்றி வேறுதெய்வத்தை-வணங்க உடன்படுவதில்லை ஆதலால் விருதாவாய் வெகுநேரமாய்-வளவளசளசளவென்றேனே சகிதீர்-உண்மைதெரியாமலேன்பேசுகிதீர் வீணாய்க் கைகளை வீசுகிதீர் - தருக்க உத்தரஞ் சொல்லக் கூசுகிதீர் - இனி பேசினதுபோதும் எழுந்துபோமையாவென்றுசொல்ல,

மாயாபகிரி-ஓ கபீர்-நீ-நிருபமான பரப்பிரம்மத்தைத் துதிக்கும்-துலுக்க வம்சத்திற் பிறந்தும் சகுணத்தைக் கைக்கொண்டு மகம்மதுமதத்தைக் கண்டிப்பது இராக்கதர் வம்சத்திற்பிறந்த விபிஷணனைப்போலிருக்கின்றதென்றுரைக்க

கபீர்-ஓ பகிரி-நான் பிரகலாதனன்-நீர் விபிஷணன் ஆதலால்-விபிஷணன் தன்வம்சத்தை நாசஞ்செய்தாப்போல் நீரும்முடைய குலத்தை நாசஞ்செய்யும் நான் பிரகலாதனைப்போல் - ரட்சிக்கிறேனென்று நவில.

பகிரி-ஓ கபீர் - நீ குலத்தோரை ரட்சிப்பது சகுனியைப்போலவே யிருக்கிறதெனப்புகல,

கபீர்-ஓ பகிரியோரே நான் சகுனியல்ல தோலுண்டு கழியுண்டு-குற்றமுண்டு ஆக்கினையுமுண்டென்ற கலனின்ற விதானைப்போலிருக்கிறேன். நீரோ ஸ்திரமான சகுனியாய் துலுக்கவம்சத்தை நாசஞ்செய்யக் கங்கணங்கட்டிக்கொண்டு-நீண்டகுல்லாவும்-நீண்டதுணியும் போட்டுக்கொண்டிருக்கிறீரெனப்புகல.

பகிரியாகிய பகவான்-ஆ-ஆ-ஆ-சந்தோஷம் சந்தோஷம் என்னவார்த்தையைச்சொன்னாய் சபாசு சபாசு வென்று நகைத்து துஷ்டர்களையும்-பிரஷ்டர்களையும் சிஷ்டைசெய்யவே கங்கணங்கட்டிக்கொண்டிருக்கும் என்சாமார்த்தியத்தை இன்னஞ் சற்றுநோத்திற் காட்டுகிறேன் பம்பரம்போ லாட்டுகிறேன், நல்லதாகட்டும் சற்றேபொழுதும் போகட்டும் - உன்னையிக்தப்பிரம்மால் பதைக்கப்பதைக்க அடிக்காமலும் மூழங்கையா லிடிக்காமலும் - வாயில்வந்தபடி திட்டாமலும்-தலைமேற் குட்டாமலும்-விடப்போகிறேனா? பார்



பேய்ப்பயலே, என்றுவைத்துக்கொண்டே அவ்விடம் விட்டுப்போகையில்.

கபீர் - பகவானை நம்பினோர்கள் மகவான்களன்றி - வுன்னைப்போன்ற பிசாசியான பகிரியல்ல போம் போம் வீண்வார்த்தைகள்பேசவேண்டாமென்று சொல்ல.

மாயாபகிரி - அடா கபீர் போபோவென்று என்னை மிரட்டுகிறாயா இப்போதே உன் தாயாரிடம்போய் பலவந்தமாய் வஸ்திரத்தைக்கொடுத்துவிட்டதாம் சொந்த மதத்தைத் தூஷித்ததும் - சகலருந் தொழும்படியான என்னை யபேட்சித்ததுஞ் சொல்லி - இப்போதே அழைத்துக்கொண்டுவந்து - உன்னை யுதைக்கும்படியாகவும் சிதைக்கும்படியாகவுஞ் செய்கிறேனென்று மிகவுங்கோபத்துடன் தயால்வீட்டை நோக்கிப் போகத்தொடங்கினர்.

கபீர் - அடா இவனென்ன - வம்புசெய்யத்தேன் புள்ளவனாயிருக்கிறான் - குலத்தளவேயாகுங் குணமென்பதைபோலவும், ஜீவகாருண்யமில்லாத் தியர்-துறவிகளாகினும் - தன் தூர்க்குணம் விடாரென்பதைப்போலவும், இந்தத் துடுக்கன் வெகுமுடுக்காய்ப் போகிறான் - ஒருவேளை நமதுமாதா - வஸ்திரங் கொடுத்துவிட்டதைக்கேட்டால் - கொல்லாமலும் - சுடுவார்த்தைகள் சொல்லாமலும்-உதைக்காமலும் சிதைக்காமலும் விடுவாளாவென் றோடோடிப்போய் [illegible]ரியின் பாதங்களைப் பிடித்துக்கொண்டு என் தாயினிடத்தில் இவ்வார்த்தையைச் சொல்லி என்னைக்கொல்லாமல் கிருபைசெய்யுமையாவென்று மிகவும் பரிதாபத்துடன் வேண்டிக்கொள்ள.

பகிரி - அடா - போடாபோ இக்ஷணம் போய் உன்தாயிடஞ் சொல்லாமலும்-உன்னைக் கொல்லாமலும் அலைகாருமையும் பொறுக்கமாட்டேனென் றெட்டியுதைத்து ஜிஞ்ஜாபியிடத்திற்குப் போய்விட்டார்.

பின்பு கபீர் - யோசிக்கின்றார் - ஊர்ச்சண்டைகண் குளிர்ச்சி யென்பதுபோலவும், தேளுக்குநிகராய் கொடுத்தால் காழிக்கொருதாங் கொட்டுமென்பதுபோலவும் - செய்தார் அன்றி - உதிப்பனைப்போய் தெருச்சண்டை பிழுத்ததென்பதுபோலவும் - சனப்பன் வீட்டுக்கோழி தானேமாட்டிக்கொண்டதுபோலவும்-மல்லாந்தபடி உமிழ்ந்தமார்பிலா யெச்சிலாக்கிக்கொண்டதுபோலவும் நமக்குநேரிட்டது பகீரிசெய்யு மகாத்தியஞ்செட்டது - இனியென்னசெய்பலாமென்று பலவிதங்களா யோசித்து ஒன்றுந் தோன்றாமல் - ஓர்பாழ்வீட்டிற்குப்போய பதுங்கிக்கொண்டு-பகவானே இந்தவேளையில் துணையாயிருந்து காக்கவேண்டுமென்று ஸ்ரீமந்நாராயணருடைய திவ்விய திருநாமங்களைத் தோத்திரஞ் செய்துகொண்டேயிருந்தார்,

இப்படியிருக்க - பகவானாகிய பகிரி - கபீர்கொடுத்ததுண்டு வஸ்திரத்தைக் காதிலேத்திக்கொண்டே ஜிஞ்ஜாபியியினிடம் போய் - வஸ்திரத்தைக் காண்பித்து ஓ அம்மா பாக்யவதி-உனதுகுமாரனாகிய கபீர் விக்கிரயஞ் செய்யக்கொண்டுபோன - இந்தவஸ்திரத்தைப் பலவந்தமா யோர்பிராமணனுக்குத் தானஞ்செய்யப்போகும்போது - எனக்குக் கொடுமென்று வேண்டிக்கொண்டேன் - தொடுத்தாமே விரண்டாய்க்கிழித்து அப்பிராமணனுக்கும் எனக்கும் கொடுத்தான், பாதிவஸ்திரம் வேண்டாமென்று மறுத்ததற்கு - பலவந்தமாய்க் கொடுத்து நீரிக்கணம் என் தாயாரிடம்போய் கேட்டால் உமக்குத் தேவையான பெரிய வஸ்திரங்கொடுப்பாளென்றும் நான் சொன்னதாய்ச் சொல்லவேண்டாமென்றும் உம்முடன்வந்தால் நானே மறைத்துக்கொண்டுவந்தாய் நினைப்பாளென்றும் - நீர் வருமுன்னீயந்த மிக்கேயே யிருக்கிறேனென்றும் சொல்லி - ஓர்பாழ்வீட்டில் பதுங்கிக்கொண்டிருக்கிறான், சிறுகுமுதையாயிருந்து மிவ்வளவு தருமக்குணமிருக்கின்றதே ஓ-அம்மணி நீ என்குறைநீங்க - ஓர் வஸ்திரம் தாருமம்மாவென்று கேட்க.

ஜிஞ்ஜாபியி அப்படியே கொடுக்கிறேன் கபீரெவ்விடத்திற் பதுங்கிக்கொண்டிருக்கிறான் காட்ட வாருமையாவென்றழைக்க.

பகிரி - வாருமம்மா காட்டுகிறேனென் றவ்வம்மணியை யழைத்துக்கொண்டு கபீர் தியானஞ்செய்துகொண்டிருக்கும் பாழ்வீட்டிற் பிரவேசித்து - இதோ பார்த்திரா உம்மைப்பார்த்ததே கண்களை மூடிக்கொண்டான் சிறுபையனாயிருந்துங் கெட்ட திருடனாயிருக்கின்றான் ஓர்வேளை எழுந்தப்பக்கமாயோடிப் போனாலும், போய்விடுவானாதலால் நானந்தப் பக்கமாய் வருகிறேன் நீரிந்தப்பக்கத்திலிருந்து அவனைப் பிடித்துக்கொள்ளுமென்றுரைத்து தானப்பக்கமாய்ப்போய் ஒளிந்தான் தாயார்வந்துவிட்டாள் சீக்கிரமிப்பக்கமா யோடிப்போவென்றுரைக்க,

கபீர் - பெருங் கோபங்கொண்டவருந் தாயைக் கண்டு பகிரி சிற்கும் பக்கமா யோடத்தொடங்கினார்.

உடனே - மாயாபகிரி கபீர் - தலைமேற்-குட்டி கையை நீட்டி எட்டி குடுமியைப் பிடித்துக்கொண்டு இதோ வோடுகிறான வோடுகிறானென்று கூக்குரலிடத் தொடங்கினாள்.

கபீர் - பூனைக்குத்தோழனாய் பாலுக்குக்காவலானதுபோலவும், திருடனுக்கு இடங்காட்டி விளக்கைப் பிடிப்பதுபோலவும், செய்வதுமக்குத் தகாது என்தாயாருமில் வராமுன்னமே விட்டுவிடுமையாவென்று வேண்டிக்கொண்டார்.

மாயாபகிரி அடா போடா திருட்டுப்பயலே உன்னை யிக்தமட்டில் விடப்போகிறேனா வென்றுரைத்துச் சீக்கிரம் வாருமம்மா வாருமம்மாவென்று கூப்பிட்டாள்.

ஜிஜ்ஜாபீபிவந்து கபீர் காதைப் பிடித்துக்கொண்டு அடா துஷ்டா வஸ்திரத்தை ஏன் கொடுத்துவிட்டாயென்றடிக்கப்போகையில்.

மாயாபகிரி - இந்தத்திருடனை இக்களாசத்தா லடியுமம்மாவென்று தன்கரத்திலிருக்கும் பிரம்பைக்கொடுக்க.

ஜிஜ்ஜாபீபி அப்பிரம்பா லிரண்டடி ஆங்காரத்தாலோங்கி வாங்கிவிட்டாள்.

அப்போது ஈசனும்முதலான சகல ஜீவராசிகளும் - அசரமானகல் மரம்முதலானதுகளும் ஏனோனென்று சொல்லும்படியான பூரணநிலையைப்பெற்ற சுகாவதாரனான கபீரானவர் அடிகளைப் பொறுக்கமாட்டாமல் அரோராம் அரோராமென்று மிகவுந் துடித்தார்,

இப்படித் துடிக்கும்படியா யடித்த இரண்டடிகளும் - கபீர் மேற்படாமல் - பகிரியாய்வந்த பகவான்மேற்பட்டு - மிகவுந் துடிதுடித்து - துடித்ததனாற்றன்-மாயத்தை விரித்து - அப்பாவெனப்புகன்று - சுயரூபத்துடன் நின்று - கபீரை வாரியெடுத்து - மார்புடனணைத்து - கண்ணீரைப்பெருக்கி - ஜிஜ்ஜாபீபியின மனதையும் உருக்கினார், உடனே அவ்வம்மணி ஆ-என்மகனே - அழகான மகனே-உன்னைக் கோபத்தாலடித்துவிட்டேனே ஆ-கெட்டேனேயென்றலறி-கபீரை எந்திக்கொண்டுருகியழும் மணிமகுடகுண்டலவாகுவலய சங்குசக்கர துளபத்தார் மார்பகத்துடன் விளங்கும் ஸ்ரீமந்நாராயணரைக்கண்டு - ஆனந்தங்கொண்டு - ஒன்றுந்தோன்றாதவளாய் பிரமைபிடித்தவர்போ லசைவற்று தன்னை மறந்திருந்தாள்.

கபீரையேந்திக்கொண்டிருக்கும் பகவானப்போது யோசிக்கின்றார் - முன்னம் மாவலியைச் சோதிக்கப்போயனேகநாளவன் வாயிலைக்காக்கும காவற்காரனாயிருந்தபோதும்-அத்திரிமகாரிஷியின் களத்திரமான அநசூயாதேவியைச் சோதிக்கப்போயவள் கற்பின் மகிமையாற் புத்திரனாயிருந்தபோதும்-மதுகைடவர்கள் இரணியன் இரணியாட்சன் இராவணன் முதலானவர்களோடு யுத்தஞ்செய்தபோதும் - பாணமெடுக்காமற் பாரத யுத்தத்திற் சாரத்தியஞ்செய்தபோதும்-தர்மர் அஸ்வமேதயாகத்தில் தாமரைத் துவஜன் கக்கத்திலிடுக்கிக் கசக்கும்போது - தந்தவக்ரன் தாக்கும்போதும் - சிசுபாலன் வாணாசூரன் நரகாசூரனுடன் போர்புரியும்போதும் - இவ்வளவுசங்கடம் நாமடைந்ததில்லை இந்தக் கபீரைச் சோதிக்கப்போ யிரண்டடிபட்டு பொறுக்கமாட்டாமல் நமதுமாயத்தை விடுக்கும்படியாய் நேரிட்டதாச்சரியம் அம்மம்மா சலந்தர னுருக்கொண்டுபோய் பிருந்தையினழகைக்கண்டு மோகமாகி மாயரூபம்நீங்கி சுயரூபத்துடன் நின்றதைப் போலல்லவோ நேரிட்டது. ஆ-ஆ-நமது வல்லமையுள்ள மாயத்தை நீக்கின அடிகளைத்தாங்க கபீராற் கூடுமோ வென் றன்பின்மேலிட்டால ட[illegible]ய சிகாமணியே உன்தாயாரடித்த அடிகளாற் பொறுக்கமாட்டாமல் பதைத்தாயோ ஸ்ரீராமநாமத்தைத் துதித்தாயோ என்னையழைத்தாயோ அடிகளுக்குத் தப்பிப்பிழைத்தாயோ வென்கிற பலபல வார்த்தைகளாடி யுருகும்போது.

ஜிஜ்ஜாபீபி - பகவான் திருவடிகளிற் பணிந்து-நயனங்களையணிந்து - ஓ-என்னாண்டவனே - உம்மைக் காணும்பொருட் டனேகர் - ஊணுறக்கமின்றி தபஞ் செய்கிறார்களே - அவர்களுக்கேன் உம்முடைய அரிதான தரிசனந்தரவில்லை, ஓ - அரியரக்ஷாமனே - சகஸ்ரநாமனே அநேகருன் திருநாமத்தை மறவாமல் சந்ததஞ் சிந்தனைஞ்செய் தன்புடன் வந்தனைஞ்செய்து இகபோகங்களை வெறுத்து - இழிவான எண்ணங்களை மறுத்து - பரிதாபங்களுக்குப் பொறுத்து - குடலங்களை யறுத்து-உம்மைக்காணத் தேடித்தேடி பலசங்கீர்த்தனங்களைப்பாடி ஆயாசமேலிட்டா லயர்ந்திருக்கிறார்களே அவர்களுக்கேன் உம்முடைய தரிசனக்



தரவில்லை ஓ தெய்வமே - உம்முடைய லீலாவிநோதங்களைப் புகலும் பரமபக்தர்களைத்தேடிப் பிடித்து-அவர்களுக்குற்ற குறைகளை முடித்து - சதாகாலமுஞ்சேவை செய்துகொண்டும் உம்முடைய திருவிளையாடல்களை அன்பாய்க் கேட்டுக்கொண் டநேகரிருக்கிறார்களே அவர்களுக்கேன் உம்முடைய தரிசனந்தரவில்லை ஓ புருஷோத்தமா புண்டரீகாக்ஷா-இல்லறத்திருந்தும் முடைய தரிசனம் பெறவேண்டுமென்ற இச்சையால் தொரு பற்றுமின்றி முற்றுந்துறந்தோராகி-உண்மை பஜனைத்தா லுடலம்பூரித்து மயிர்க்குச்செறிந்து ஆனந்தகீர்த்தனஞ் செய்துகொண்டிருக்கிறார்களே அவர்களுக்கேனேன் உம்முடைய தரிசனந்தரவில்லை ஓமகானுபாவா தேவாதிதேவா - காட்டிலிருந்தால் நாட்டத்துக்குக் குறைவென்று - காட்டையடைந்து இந்திரியங்களையடக்கி-காலைமடக்கி-மென்மூலத்தில் முடுக்கி அதோமுகமாத் தாமரையொடுக்கி-கொடி சூரியப்பிரகாசத்தைக்கண்டு காதானந்தங்கொண்டு - அமிர்தபானத்தை யுண்டு-அதிதானசேவைதரவாவென்று-கண்கிற எண்ணங்கொண்டிருக்கும்பேர்களுக்கேன் உம்முடையதரிசனந்தரவில்லை ஓபகவானே மகவானே - தேகேந்திரியாதிகளை நியதிசெய்து மனக்கோட்டத்தைக் கொய்து-சாட்சிஆவருபமாகி பரமாத்மா விலக்கப்பட்ட பிரம்மஞானிகளும்முடைய காட்சிக்காக மாட்சிமையான நிஷ்டைசாதித்துக்கொண்டிருக்கிறார்களே அவர்களுக்கேன் உம்முடையதரிசனந்தரவில்லை ஓமகானுபாவ[illegible]னே தேவாதிதேவனே நீர்தானே ரட்சிக்குங்கர்த்தர் நீர்தானே வைகுந்தமுடிவிலிருக்குஞ் சித்தர் நீர்தானே ஸ்ரீமக[illegible]ஸ்ரீமந்நாராயணர் மணிகர்ணிகையில் விழ்ந்த குண்டலமும் முடையதுதானே மக்காவிலிருப்பது உம்முடையபாதந்தானே மாபலிசிரத்திற் பதித்தபாதம் இதுதானே இவ்வுலகையளந்த பாதம் இதுதானே ஓ-நீயபத்துவே உம்மைத் தரிசிக்கும்படியான பாக்கியமேதோ நான் செய்த சிலாக்கியமேதோ ஓ பராத்பரா பரமேஸ்பரா ஜகதீஸ்பரா - கருணாசாகரா - மனோகரா - சங்குசக்ரதாமோதரா-பீதாம்பரதரா துளசிதரா வேங்கடேஸ்பரா கமலநேத்ரா சத்குணபாத்ரா தேவர்கள் ஸ்தோத்ரா திவ்யமானகாத்ரா ராவணசம்ஹாரா தசரதகுமாரா நவநீதசோரா சுகண்டசெம்பீரா விராதிவீரா-சிராங்கரா-சொல்வதற்கரிய தீரா - சுபமங்களாகாரா - ஜூலபலத்தை வென்றசூரா-அறிவதற்கரிய அபாரவென்று பலபலவிதங்களாய்த் தோத்திரஞ்செய்தேத்தும்போது.

பகவான் - ஜிஜ்ஜாபீபியைக் கருணையுடன் நோக்கி ஓ பாக்யவதி-இப்போதுனக்குப் பயந்தோடி எனக்கடிகள் வாங்கிக்கொடுத்த-புண்ணியபிருஷனையாரென்று நினைத்தாய் எனக்கருமையான பக்தனையும் ஜீவன்முக்தனையும்-என திருகண்மணியுன் மணியாபோலைப் பாலனவனையும்-எனதாவிக்கிருக்குமவனையும்-என்னைமறக்காதவனையும்-என்னும்-இறக்காதவனையும்-எனக்கு நேயமாயிருப்பவனையும் என்னை விழுங்கினவனையும் இருக்கும்-பிரமரிஷியென்று நினைப்பாயாக - இதற்குக்காட்சியான சாட்சிவேண்டியிருப்பதால்-நீகோபத்தாலோங்கி வாங்கின-இரண்டடிகளு முன்மைந்தன் முதுகிற் பட்டதா பாரென்று திருவாய்மலர்ந்தருள - ஜிஜ்ஜாபீபி கபீர் முதுகைப்பார்த்ததில்லை யென்றுரைக்க - பகவானென் அபாம்பாரென்றுகாட்ட கடவுள் புறத்திலிரண்டடிகளும்பட்டு பருத்தழும்புகளா யெழும்பியிருக்கக்கண்டு முகத்தினமே வறைந்துக்கொண்டு-மிகவும் பதறி தேகமெல்லாம் பதறி வாயுலர்ந்து பெருமூச்செறிந்து மூர்ச்சையாய்விழுந்து-வாய்விட்டழுது-பலதரந்தொழுது ஐயோ வந்துதேபழுது என்று பிரலாபித்து-தெய்வமே விராதிவீரனாகிய இரணியாக்ஷனும்-சூரதிசூரனாகிய-இராவணனும் இந்திரனைச்செயித்த இந்திரசித்தன் முதலானவர்களும் பிரயோகித்த பாணங்களும்-சூலங்களும்-பிண்டபாலங்களும்-தண்டாயுதங்களும்-படாத மேனியில் இக்கொடிய-பாவிபடித்த இரண்டடிகளும்பட்டதா-என்குலத்தைக் கட்டதோ ஓ வைகுந்தநாதா லீலாவிநோதா உம்மையு மடியானடிக்கப்போமா அடித்தனியுமிருடனி நக்கலாமாவென்று-தன்மத்தகத்தைப் பூமியிற் பலதரம் மோதிக்கொண்டு சவுக்கினையாள-மூர்ச்சையாய் விழுந்துவிட்டாள்.

கேட்டீர்களா சித்தர்களே இப்படி மூர்ச்சையாய்விழுந்த ஜிஜ்ஜாபீபியை-பக்தவச்சலனாகிய பகவான்-தனது திவ்விய அஸ்தங்களாற்றடவி - ஆதரவாஞ்செய்து கருணை மழைபெய்து மூர்ச்சையைத் தெளிவித்து ஓ புனிதவதியே-மாசிலா[illegible]யே வீணே யேனுன்னிரானானை விடத்துணிந்தாய் நீ நல்ல உத்தமியென்றல்லவோ என்பக்தனை - மிகவும் பரிசுத்தனை-உன்பாலொப்பித்தேன் உனக்குப்பாலு முண்டாக்கிவித்தேன் முதுகைக்காட்டி நானே பசியென்று மெய்ப்பித்தேன் உன்றுடனுன்கணவனையு முய்வித்தேன்-ஆதலாலின்றுடனிந்தத் தாயனை-எனக்குநல்ல நேயனை-நானுன்பாலிறுத்த அன்பாகச் சேவித்து-பாதுகாப்பிராவென்-என்றபதவியைப் பெறுவீர்கள்-அகண்டானந்தவாழ்வை யுறுவீர்களென்று திருவாய்மலர்ந்தருளி.

கபீரைநோக்கி-ஓ அபிரவாசனேவினங்கபிந்தானனே-உன்னுடைய ஸ்திரமான தியானத்தைக் கலக்கி-ஓ

டிப்போகாமல் மடக்கி-அடிகள்வாங்கிக் கொடுத்ததற்காக-என்மேற் கோபஞ்செய்யாதே - வாயில்வந்தபடி வையாதே-சகாதேவனைப்போற்கட்டாதே-அவனைப்போல நட்டாதே - பிருகுரிஷியைப்போற் சாபங்கொடுக்காதே-கந்தவக்ரனைப்போல் முடிக்காதே-தாமரைத்தவனைப்போலடக்காதே-சத்ருகனைப்போல் மடக்காதேயென்று பலபலவிதங்களாய் வேண்டிக்கொள்ளும்போது.

கபீர்-பகவானுடைய பாசாங்கு வார்த்தைகளைக் கேட்டு-உள்ளமுருகி-அன்புபெருகி-காதங்களைச் சேர்த்து சந்தேகங்களைப்பேர்த்து-பாதத்தில் வீழ்ந்து-பலதரந் தாழ்ந்து ஓ-ஸ்வாமி என்தாயாரடித்த அடிகளென்மேற்படாமல் தாங்கிக்கொண்டாலும் தாய்க்கைநோகாதோ கிரிபினத்தால் களைசம்வெந்து நீரேகாதோ-ஏழைக்காக ஏழைப் பரிவாய்ப் புறப்பட்டீரோ - நான்பொறுக்கமாட்டேனென் றடியாளும்டீரோ வுமது மாயையும் விட்டீரோ உமதன்தங்களையிலன்னையுங் கொட்டீரோ ஓ என்னுண்டவனே-கீர்-பகிரியாய்வந்தீரென் றறியமற்போனேனே-தாக்ஷித்தபசாரு னேனே-வாயில் வந்தபடிவைதேனே அடிகளும்படும்படி செய்தேனே-பிசுரியென் றுறைத்தேனே-கோபங்கொதித் திறைத்தேனே-குருத்தனே பரிகசித்தேனே - காளிப்பதியகுற்றங்களைப் நற்றவமாகக்கொண்டு-காத்தாள்வாயா அன்பர்கள் சகாயா-பிரம்மக்ஞானிகள் நேயா-கபடநாடகனுடைய மாயா-கருணாவிக்ரஹபாயா-வெண்ணெயுண்டவாயா - சகலருந் தொழுந்தூயா கோபாலனைக்காத்த ஆயா-நிருபமாகிய ஆகாயா-நீலமேகச்சாயா - தௌசலையின்றசேயா-பச்சை வர்ணமுள்ளகாயா-அகிலாண்டகோடி பிரம்மாண்டநாயகா ஓ பரந்தாமகா ஓ விஷ்ணு ஓபகவான் - நீர் எளியேனை வன்றிரக்கேட்கக்கூடுமோவென் றனந்தம் விதங்களாகத் துதித்து- ஆனந்த மேலிட்டாற் குதித்து-தீன்காவு முறறீலுமிப்படியே இருக்கும்படி வரந்தாருமையா சங்குசக்காங்கையா வென்று வணங்கும்போது,

பகவான் ஓ யென்னன்பனே நீ நினைக்காவிட்டாலும் உன்னிழல்போலுன்னைப் பிரியாமலிருக்கும்-என்னைப் பிரமானந்த மேலிட்டால் நீமறக்காம லிருக்கவேண்டுமென் றுரைய-

கபீர்-நிர்குணமே முக்கியமென்று திருவாய்மலர்ந்தருளிய - பகவானை வணங்கி-இணங்கி-ஓ-ஸ்வாமி சுலப்பனத்திலுமுனை மறப்பேனோ மறந்திவவாக்கை போடிருப்பேனோ உம்முடைய திருநாமத்தைத் துறப்பேனோ துறந்தினிமேலும் பிறப்பேனோ ஓ என்னுண்டவனே உம்முடைய தியானம் மேன்மையானதோ பிரமக்ஞானம் மேன்மையானதோ உண்மையையுரைத் தென்னைபட்கொள்ளும் ஸ்வாமியென்று பிரசாஷ்டாங்கமாய் வந்தனஞ்செய்ய.

பகவான்-ஓ-கபீர்- இனைக்குறித்து யாரனுமஞ் சொல்லமாட்டேனா-ஏனெனில்- சகலருக்கும் பொதுவான வேதசாஸ்திரபுராணங்களில்-பக்திவைராக்ய ஞானமென்னும் மூன்றையும் அவரவர்கள்பக்குவத்துக்கேற்றபடி யுரைக்கின்றதன்றி - தேகமே தானென்றிருப்பவன் கர்மக்கிரியைகள் செய்யவேண்டும், ஜீவனே தானென்றிருப்பவன் - பக்திமார்க்கமானதாய் லவத்தைக் கைக்கொள்ளவேண்டும், ஆத்மாவே தானென்றிருப்பவன் - பரமாத்மா விலக்கிலப்பட்டு - தேகம்வுலனைவிட்டு-மௌனசமாதியை யடைந்து-நான் நீயென்னும் த்விதபாவனையைக் கடந்து-துரிய நிருவிழ்யை மெய்யிருக்கவேண்டும், உன்மனிபாவனைதயடைந்த பிரம்மக்ஞானிகள்-மேன்மையான பிரமக்ஞானத்திலும் நிர்குணத் தியானத்திலும் - நிரூபமாயிருக்கும்-பரப்பிரமமாகிய என்னைப்பூசித்து - நான்காம் பதவியாகிய கைவல்யத்தையே - அடைந்து - ஜீவன்முக்தர்களாயிருந்து இறுதியில் விதேக கைவல்யத்தை யடைவார்கள், மற்றவர் கர்மபக்தியினும் சகுணமாகிய என்னைச் சகதோஷித்து - பரமபதமடைவார்கள். சிலருக்கு-ஞானமே சுலபமாயிருக்கும் - சிலருக்கு பக்தியே சுலபமாயிருக்கும் ஆனால் பிரமக்ஞானம் - அனந்த ஜென்மங்களில் என்னைப் பூசித்தவர்களுக்கே - கிடைக்கும் - அனந்தமாத்திரமாயிருக்கும்; மௌன நிஷ்டையிலிருப்பதெளிதல்ல - திரிலோகத்திலொரு ஞானியென்று-சாஸ்திரங்களில் முறையிடுகின்றது. கர்மபக்திஞானமென்னு மூன்றும் - பிஞ்சு - காய் - கனியைப்போன்றதேயாம் முன்னஞ் சத்கருமங்களால் என்னைச் சந்தோஷப்படுத்தி-பக்தியினால் என்னருட் பிரசாதம்பெற்று - அவ்வருள்விலாசத்தால் நிருட்சுமமாயிருக்கும் என்னை-அந்தரங்கத்தில் க்ஞான சட்சுவாலறிந்து - சகலசந்தேகங்களையுங்களைந்து - நிர்குணத்தியானபானுவி-ஆனந்தசாகரத்திலமிழ்ந்து-சத்யக்ஞானனந்தமாய்த் தலைக்குதன்னைமறந்து - தக்குநிசாநிகளிறந்து - ஆரூடக்ஞானியாகவேண்டும், அப்படிக்கின்றி - வாசாக்ஞானத்தால்-அகம்பிரமம் என்கிறபாவத்தையடைந்து தேகாதிகளில் வாஞ்சைவைத்து - கர்மபக்தியுமில்லாமல் - மேன்மையான பிரமானந்த லாபமுமில்லாமல் பிரஷ்டர்களாயவ



ர்த சன்மார்க்கனென்றழனும் அஞ்ஞானிகளுக் கெனவருட்பிரகாசம் பிரமாநந்தங்களிலும் கிடைக்கமாட்டாது, அன்றி முன்சொன்ன மூன்றுக்குஞ் ஜீவகாருண்ய விரதமே துணையாயிருக்கவேண்டும் அஹிம்ஸாபரமே தர்மமென்று சுருதியிலு முறைக்கின்றது; தன்னுயிரைப்போல் மன்னுயிரைப்பார்க்கும் தவமே மேலானலாபத்தைக் கொடுக்கும் நிஜேபமாயிருக்கின்றது சமபாவமுள்ளவனே எல்லாரிலு மதிகிக்கிரமா யென்னை அந்தர்முகத்தில்-நிர்குணமாகவும் பஹிர்முகத்தில் சகுணமாகவுந் தரிசிப்பான், ஊனக்கண்களுக்கு ரூபமாகவும் ஞானக்கண்களுக் கரூபமாகவுந் - தோன்றப்பட்டு அகண்டானந்தத்தைத் தருபவன் நானேயாம், ஞானக்கண்திலங்காத அஞ்ஞானிகளானாலும் அன்புடன் என்னைத் தியானிப்பார்களாகில் உடனே பிரசன்னமாகி அகண்ட சாம்ராஜ்யதனைக் கொடுப்பேன், என்னை நம்பினவர்கள்பால் வெளிவளிவாய்ப்பார்த்திலும் சமீபமாயிருப்பேன், பக்திமார்க்கத்தி லிருப்பவர்களை குழந்தைகளைக் காப்பாற்றுந் தாயைப்போலப் பாதுகாப்பேன், வைராக்கியமானயோகமார்க்கத்தி லிருப்பவர்களை பலவிதங்களாய்ச் சோதித்து - சிநேகபாவமாய்ப் பார்ப்பேன், ஞானமார்க்கத்திலிருப்பவர்களை-எனக்குச் சமானமானவர்களைப்போல பாவிப்பேன், பக்திமார்க்கத்திலிருப்பவர்கள் குழந்தைகளாகும், வைராக்கியமுள்ள அடயோகங்களிலிருப்பவர்கள் ஒவ்வொரு புருஷர்களாகும், க்ஞானமார்க்கத்தி[illegible] வாலிருத்தாப்பியர்களாகும், குழந்தைகளுக்கும் - விருத்தர்களுக்கும் - நானென்பது குறைந்திருப்பதுபோல பக்தர்களுக்கும் ஞானிகளுக்கும்-அகம்பாவம் குறைந்திருக்கும், வைராக்கியத்துட னடயோகங்களைச் சாதிப்பவர்களுக்கு நானென்பது மிகுதியாயிருக்கும். அதினாலே அவர்கள் - என்னால் மிகவுஞ் சோதிக்கப்படுவார்கள் பக்தர்கள் - என்னையேநம்பி-எல்லாவற்றிற்கும் பகவானே துணையென்று - அகம்பாவமடையாமற் சதந்தமென்பாராயணத்தால் நாள்களைக் கழிப்பார்கள்-க்ஞானிகள் - பிரமப்பதவிநமான இத்தனுவுக்குச் சுகம் வந்தாலும் - துக்கம்வந்தாலும் - சந்தோஷமும் வாட்டமும் அடையாம லெல்லாமுள்ளபடி-முடியுமென்று மௌனநாட்டத்தையடைந்து-யாதொன்றுக்கும் அகம்பாவங்கொள்ளாமல் நிராங்காரவன்று வில்லயப்பட்டிருப்பார்கள், பக்தர்களுக்கு - முக்கியமானதன்பேயாம். சித்தர்களுக்கு முக்கியமானது வைராக்கியமேயாம், முத்தர்களுக்கு முக்கியமானது மௌனமேயாம், அன்பில்லாதபக்தியும், வைராக்கியமில்லாத யோகமும், சாந்தமில்லாதக்ஞானமும், நிஷ்பலமென்று சொல்லப்படும், எவ்வளவு தர்மங்களையுஞ்-நாசஞ்செய்வது-நானென்னு மகங்காரமும்-எனதென்னு மமகாரமும் - ஜீவஹிம்சையேயாம். சுபத்தை விர்த்திக்கச்செய்வது நிராங்காரமும் அமோகவும் - அஹிம்சையேயாம். ஆதலால் கர்மபக்திஞானமென்னும் மூன்றிலேதன்மே விச்சையோ அதையே உறுதியாய் நம்பவேண்டுமானாலும் - குழந்தைப்பார்வமுள்ள உனக்கு நாசதமான பக்திமார்க்கம் லபிக்குமாறுந் சீக்கிரத்திற் சகலலாபங்களையு மடைவாயாதலாற் சகல சாஸ்திரார்த்தங்களையு மறிந்த ஞானத்தின் நோடுக்கல் [illegible]மையைத் தெரிந்துக்கொள்ளாய் பாவென்று மாயமாய் மறைந்துபோனார்,

பின்பு கபீர் - கன்றைபிரிந்த காராம்பசுவைப்போலவும், கலையைப்பிரிந்த மானைப்போலவும், பதியை யிழந்த பதிவிரதையைப்போலவும், படையையிழந்த பார்த்திபனைப்போலவும், பணத்தைப்பறிகொடுத்த பார்ப்பானைப்போலவும் தனுசனையிழந்த தாயைப்போலவும் கண்ணிழந்தவனைப்போலவும் கற்பழிந்தவளைப்போலவும் பரிதவித்து ஓபகவானே; எனக்கொருதரம் காட்சி மறைந்துபோகலாமா நான்சந்தேகத்தோடிருக்கலாமா - ஓராசனையும் தேடலாமா வுனதிடமன்றிமற்றொருவர்பால் நானுபதேசம் பெற்றுக்கொள்ளப் போமா இப்படியும்நீர்வின்னப்போமா, பகையாளியைப்போற்றுள்ளப்போமா மானிடருமென்னையாட்கொள்ளப்போமா ஓபரந்தாமா - ஆனபத்தாமா - பரசுராமா - ஸ்ரீராமா, சகந்தாமா-சுதாமா-மேகஸ்யாமா திரிவிக்கிரமா-புஜபலபராக்கிரமா - தேகிகோத்தமா புருஷோத்தமா-புண்ணியபுருஷா-புண்டரீகநயனா-[illegible]வென்றுதோத்திரம் செய்து கொண்டே [illegible] கண்ணீரொழுக அழுது புலம்பும் போது,

ஜின்ஞாபிபி-பகவா[illegible]த்து - கபீரை-மார்புடனணைத்து - அடா [illegible]மகனே-அழகானமுகனே உன்மகிமை மதி[illegible] விட்டேனே - உன்பக்தியைக்கண்டு [illegible]ட்டேனே - கோபத்துக்குட்பட்டேனே கெட்டேனே, அடாவென்புதல்வா - பக்திமுகல்வா-உன்னுடலிலே பகவானை தரிசித்தேன்; பாதங்களைப் பரிசித்தேன் மோக்ஷமார்க்கத்தையு யாசித்தேன், பின் புண்ணியபலசித்தேன், சகலபாக்கியமும்பெற்றேன்! பிரமஞானமும் கற்றேன், என்கிறபத்தவார்த்தைகளை

விண்டு- கபீரை எடுத்துக்கொண்டு-தீர்தமாய் நடந்து-வீட்டையடைந்து மனைவிக்குந்தெரிப்படுத்தி-பலதரம்புகழ்ந்து கபீருடைய பெருமையையும் கடவுள் காட்டின அருமையையும் உரைத்து - மனைவியுமனம் கரைந்து அனலிலிட்ட மெழுகுபோல் கரைந்துருகத் தொடங்கினள்,

அப்போது தமால் - ஆதிபகவனே-என்னிருகண்ணே ஆண்டவனைக்கண்டாயா-ஆனந்தங்கொண்டாயா நீ செய்தபாக்கியமேதோ நான்செய்தபாக்கியமேதோ நீ இழைத்த தவமேதோ-நானிழைத்த தவமேதோ-நீயிருந்த ஆசாரமேதோ- நானிருந்த ஆசாரமேதோ வென்று பற்பலவார்த்தைகளைப்புகன்று ஸ்ரீ கோர்த்தி அடா எங்கண்மணியே- கோமணியே, உன்தாய்க்கு தரிசனந்தந்த கடவுள் எனக்கு தரிசனந் தாராட்டாரா-நீவேண்டியழைத்தால் வாராட்டாரா பகவானையழைப்பிக்க உன்னாலாகாதா அழைப்பித்தா லென்குறைதவிரவாம் போகாதா அஞ்ஞானம் நீங்காதா மெய்ஞ்ஞானம் ஓங்காதா நான்மாத்திரம் கொடியபாவியானேனோ நரகத்துக்குள்ளாகும் ஆவியானேனோ ஓ, பகவானே நானென்ன குறைசெய்தேனோ ஓ-வாசுதேவா தேவாதிதேவா - ஆதிதேவா-மகாநுபாவா-மாதவா-யாதவா-ராகவா-கேசவா-வாசுதேவபுதல்வா - யாவர்க்கும் முதல்வா-வென்றனேகம் விதங்களாய்த் துதித்துக்கபீரைப் பகவானென்றே மதித்து ஸ்திரமாய் மனதிற்பதித்து-மகனென்று மென்மைத்தனத்தைச் சிதைத்து - மிகவும் வாஞ்சையாய்ப் பாதுகாத்துவந்தாள்.

இஞ்ஞாபிபீபோ-இத்தகபீரே - ஸ்ரீமந்நாராயணனென்றறியாய் நம்பி - நாடோறும் பூசித்துக்கொண்டேவந்தாள்.

கேட்டீர்களோ சித்தர்களே யென்று விசித்ரசாவதாரனை - நபாஜி சித்தர் பின்னுஞ் சொல்லத் தொடங்கினார்.

குருவாழ்க

இ - வது - கபீர்தாஸ் ராமாநந்தஸ்வாமி

களின் பணிவிடைக்காரர்களா

லடிப்பட்ட-அத்தியாயம்.

ஓ-சித்தர்களே ஜீவன்முக்தர்களே - இவ்விதமாகத் தமாலும் நீநூபியும் - கபீரைத் தங்களுயிரைப்போலவே-பாதுகாத்துவருகிறநாளில் ஒருநாள் கபீர்தாஸ்பகவான் - குருமுகத்தால் உண்மையை யறிந்துக்கொள்ளவென்று திருவாய்மலர்ந்தருளியதை நினைத்துக்கொண்டு சிந்திக்கத்தொடங்கினார்,

ஆசாரது இத்தாத்திரியில் - கணவனில்லாக் கன்னியும் - வத்தனைப்பணியாச் சென்னியும் - நிதைமணியா செத்தியும் - தெளிவில்லாத புத்தியும் - அன்பில்லாப் பக்தியும் - அடக்கமில்லாச் சக்தியும், வேதாகுணமில்லாத்தவமும்-சித்தசுத்தியில்லாச் ஜபமும், ஆதியில்லாதனுரும் - ஆசனமில்லாப்பாரும், ஞானமில்லாக் கல்வியும் - மானமில்லாச் செல்வமும் பக்தியில்லாப் பூசையும் - பணத்தின்மேல் மிகுவாசையும் போர்செய்யுமந்திரம் - புனிதமில்லா நாமம் - நீதியில்லா அரசும்-தீமுலோத்தார அரசம், பிரியமில்லா மோகமும் - இனியாதிருக்கு தேகமும் தர்மம்செய்யாக்கையும் - சாந்தமற்ற பணியாமெய்யும் ஜலமில்லா வேரியும் - சர்க்கரைச்சேர்க்கா வேரியும் - மயிலோத்மொழியும் மரியும் மனைவியும் காரியும் - விபசாரஞ்செய்யும் மங்கையும் - விட்டுத்திரியா கங்கையும் - என்றுந்தீராச் சஞ்சலமும் எளியோரைமோதும் அங்கையும், சஞ்சலமில்லாத் துறவும், சத்குருவுபதேசமில்லா அறமும், குண்டெனிமேயாத ஜீவிப்பதும்-குருவையனிதனெனப் பாவிப்பதும் கொடியோர்செய் சர்க்கமமும் - குருவுபதேசமில்லாச் சென்மமும், தாழ்வடைந்ததுபோல குருவுபதேசமில்லா காலமும் தாழ்வடைவேயல்லவா ஓ-தய்வமே-எனக்குற்ற சந்தேகங்கள் எப்போது நீங்கும் பிரமாணத்து மெக்காலத்திலேலொன்றும், என்று தனக்கிருக்கும் சங்கையை நிவர்த்திசெய்துக்கொள்ளும்பொருட்டு- ஆசானைத் தேடப் புறப்பட்டு காசிதேசமெல்லாந்திரிந்து அகப்படாமையால் முகக்கிரித்து ராமானந்தஸ்வாமிகளின் மேன்மையைக் கேள்விப்பட்டு-இனி சித்தாந்தத்துளேனெனச் சந்தோஷப்பட்டு ராமானந்தஸ்வாமிகளைக்குருகாசா னெனத்தீர்மானித்து - இவரே நாம் வணங்கத்தக்கவரெனத் தியானித்து அநேக மாணாக்கர் பணிபவராயும் - அருள்ஞானத்தை ஈனிபவராயும், அடியார்களையாட்கொள்ளும் ஆண்டவராயும் - அபிமானவிரதம் பூண்டவராயும் உயர்நிலையிடத்தில் இருந்தவராயும்-உபசாரணைச்செய்யத் தக்கவராயும் ஞானக்கொடியையேற்றவராயும் - காரியர் போகத்தைவிட்டவராயும் அகங்காரத்தைக்கொன்றவராயும் அபிமானத்தை வென்றவராயும் எனைத்தன்னுமாசையைக் கிழித்தவராயும் -இருளுக்கொடிழித்தவராயும் - பிரமதேகசில்விழித்தவராயும் பேதமையோரைப் பழித்தவராயும் மகாவாக்கிய



களந்திந்தவராயும் மர்மத்தையெல்லாந் தெரிந்தவராயும், விளங்காநின்ற ராமானந்தஸ்வாமிகளின் மடத்திற் பிரவேசித்து - ராமானந்தஸ்வாமிகளை இந்நீசித்து உபதேசம் பெற்றுக்கொள்ளவேண்டுமென்கிற எண்ணம் மிதி குருஸ்வாமிகளின் தரிசனத்தைக்கோரி - அடியார்கள் நெருக்கமாக உள்ளே போவதற்கு வொரிமாலைமட்டு மிருக்கும் கூடமத் தமிராமி - சமையக்கேட்டு நேரிமென்றே மாதி, ஸ்வாமிகளைக் காணப்போனோமேயென கொண்ட நானைக் கதிராவிலிருந்து - காணலமென விட்டுவடைந்து - மறுநாள் அதிகாலையிலெழுந்து அடியார்கள் வருவதற்குமுன்போகலாமென்று சற்றுநிமாய்நிற்கும்போதே மடத்துட் பிரவேசித்தார்.

அப்போது ராமானந்த ஸ்வாமிகளின் பணிவிடைக்காரர்களாகிய அந்தணர்கள் கபீரைப்பார்த்து - அடா துலுக்கப்பயலே இராத்திரியிலிருந்து இருட்டாலவந்தாய் நாங்கள் விழித்திருக்கிறோமென்று தெரியாய், இங்கே முடான்தி குருடியில்லையே - நீ நினைத்துவந்தது தொல்லையே - இனி உன்னைவேண்டாம் சீக்கிரம் வெளியேபோவென்று பதட்டித்துட னதட்டினார்கள்,

கபீர் - ஐயா பிராமணோத்தமர்களே உள்ளேவருவதற்குமுன்பே எனனென்றேன் விழித்தீர்கள் சாந்தகுணமுள்ள வேதாந்திகளாகிய உங்களுக்கு இவ்வளவு கோபமிருக்கலாமா சங்கதி தீர்த்துக்கொள்ளாமல் வெறுக்கலாமா அன்புடன் வந்தவனை மறுக்கலாமா வீணாய் கோபத்தைப் பெருக்கலாமா கடினவார்த்தைகளால் கறுக்கலாமாவென்று பரிவுடன் பலதரம் வந்தனம் செய்தார்.

அதற்குகந்த மறையோர் - கபீரைநோக்கி - அடபோடா முழுமூடா, உன் வின்னவார்த்தைகளிற்கு மடக்காது உன்னை விடுவோமா நாயைமடக்காதா என்று மிகவுங்கோபித்து- போவென்கிற வார்த்தையை உந்தரித்து - அதிகாலையில் கிச்சுறேய உன முகத்தைக்காட்டாதே - போகமலெங்களை வாட்டாதே-சட்டகல்வி செல்லமாட்டாதே - சொல்லும் கைகளை நீட்டாதே இனத்துத் தவினக்கு காட்வெளப்புறம் ஒனயாருக் காசாங்க விசாரணையும் கோசாபிக்குத்த் தாமும் விதணையும் - ராதுக்களுக்கு சமர்செய்யும் நீதி விபசாரிக்கு மென்மையாணபக்தியும் - கொடியனுக்கு கீர்மையுள்ளபுத்தியும் என் அதுபோல - குருசெய்யும் குணமேனத அ[illegible] ந்கபம்சத்திற் பிறந்த - துலுக்கனுவுனக்கு இவ்வளவு முறிக்கான வார்த்தைகளேன் அய்யாமல் வேலைக்கும் யுள்ள பிராமணர்களிடத்தில் வணக்கமென்னகாரியம் அடியார்கள் வருகிறவேளையுமாச்சுது நீவந்தும் வெகுநேரமாய்ப்போச்சுது விநாயேன் அன்பத்தைக் குள்ளாகிறையென்று கோபக்குறி காட்டினார்கள்.

அதற்கு - கபீர் ஓ-அந்தணர்களே - உங்களுக்கு பலதரம் வந்தனம் செய்கிறேன் - உங்கள்திருவையாய்விடுகிறேன், கோபஞ்செய்யாதீர்கள் - வாயில்வர்க்கையையாதீர்கள், அடியேனுக்கு கொடியேன் - ராமானந்தஸ்வாமிகளையே - ராமானந்தஸ்வாமிகளின் - சேதத்தைத் திருடவந்தேனென்று புண்ணியபுருடர்களாகிய நீங்களனைத்திருளே மிகவும் இறைந்தீர்களே மிகவும் அறைந்தீர்களே அடியேன் எனவேயாவது எனவுசெய்ததுண்டா அப்படி யாராவது சொன்னதுண்டா நீங்கள் கேள்விப்பட்டதுண்டா அல்லது வேறென்னகொண்டா, விப்பிரர்களாயிருந்தும் தப்புவார்த்தைகள் சொல்லலாமா என்னைக்கொல்லாமற் கொல்லலாமா அவமரியாதை பேசுவதும் - குப்பறுதும் - பாராமல் - குணத்தைக்கன்றுபோரமல் - குணவானென்றும் - குற்றமற்றவனென்றும் - செப்பலாமா - ஒருவர்சொன்னதும் மெய்ப்பலமா-நீங்களறியாத தொன்றுண்டா-அடியேன் செய்வதற்கு சேருண்டா ஆறுவல் - பெரியோர்கள் சொன்னசொன்னதும் பெரியோர்கள் பொறுக்கவேண்டுமே அடியேன் வெகுநாளாய் ஸ்வாமிகளின் திவ்விய திருவுருவைத் தரிசனம் செய்ய வேணுமென்கிற எண்ணங்கொண்டு தேறு காலையிலிருந்து மாலைமட்டும் காத்திருந்தும் அடியார்கள் நெருக்கத்தால் உள்ளே வருவதற்கு கூடாமல் - இந்நேரத்திலாவது போவதுவென்று வாடாமல் அதிகாலையில் சந்தடியில்லாமல் இருக்குமென்று வந்தேன் - வந்து ஸ்வாமிகளைக்காணாமல் போகேனோ ஆதலால் மகாநுபாவர்களே - நீங்கள் என்னையும் சேர்த்து மிகவும் சுகிர்தமாக்கி, கோரவேண்டிய இந்த சமயம் அடியேனுக்கு குரு தரிசனஞ்செய்யும்படியாய்ச் செய்தாயானால் வெகு சகிதமுண்டாகும் - பரிதாபமுடனே புகன்று - மிகவும் விநயப் பஞ்செய்துகொண்டார்.

அதற்குமறையோர்-கபீரைப்போன்ற-பக்தனைக்காட்டி - வெக்களிக்கொட்டி-கைத்து-பகைத்து, அடா தூடா-வடவேடா-மூடவன் கொம்புக்கேறுக் காசைபட்டாற் கிட்டுமா தென்னங்காயையும் பிடிக்கொட்டுமா வெட்டுமோ சிங்கள்தக்குட்டியானது புலியைமுட்டுமோ பழிபாவத்துக் கஞ்சாமற் சேகரித்தபொரு

னொருவனுக்கொட்டுமோ அதுபோல - உன்வார்த்தைகள் சுவாமிகள் முன்னடக்கவேகடக்காது - சுவாமிகள்தரிசினம் கிடைக்கவேகிடைக்காது, நீயெங்கேசுவாமிகளெங்கே மேட்டானமேட்டிகளும் நன்றாய்த்தேறினகோல்டிகளும் வெகுகாலாய்க்காத்திருக்கும் - வருவார்வருவாரென்று பார்த்திருக்கும் அவர்தரிசினை யகப்படவில்லை - நீநினைத்துவந்தது மிகவுந்தொல்லை நீயென்ன அவர் தரிசினம் பெறுகிறதென்ன ஜானுண்டு பயலாயிருக்கும் சுவடகல்விகளெல்லாம் பேசவந்தாய் - எங்களைக்காணவே கூசி கொந்தாய் சே-சே-ஓடிப்போவென்றடிக்கவந்தார்கள்.

அதற்கு கபீர்-ஓ-மாதவர்களே - பிரக்கியாதியர்களே, உங்களைக்கைகளா லடியேனடிபட என்னபாக்கியம் செய்தேன் ; ஏதுதவம்செய்தேன் எவ்வளவுயோக்கியனானேன் எவ்வளவு லொக்கியனானேனென்றுவணங்கி - இவங்கி ஓ-ஸ்வாமிகளே மகாவிஷ்ணுவின் தரிசனத்தைக்காணும் ஜாவபாலகரைப்போலவும் பரமேஸ்பருடைய காட்சியைப்பார்க்கும் நந்திகேஸ்பரைப்போலவும் - நாமோடும் ஸ்ரீ சத்குருஸ்வாமிகளின் தரிசனம் பெற்று - மோட்சமார்க்கம் கற்று கோப - லோபதாப-சோப-பாப-சாபரஹிதர்களாய் பிரமானந்தத்துக்குச் சகிதர்களாய் விளக்கமுற்றிருக்கும் நல்லவர்களே - தபத்தில் வல்லவர்களே ஸ்வாமிகளின் சேவையைக்கோரிய ஏழைபெருகிய கோழையேய எண்ணத்தை முன்னம் முடித்து - பின்புங்கள் கரங்களாலடித்து தூரத்திவிடக் கோருகிறேனென் றவர்கள் தாட்களில் விழ்ந்தாட்கொள்ள வேண்டுமென்று பிரார்த்தித்தார்,

அதற்கந்தக் கொடிய மறைக்கொடியோர் - கபீர் ஸ்வாமிகளின் சேவையாலுனக்கென்ன லாபம் வரும் என்ன சுகந்தரும் - யாதுநினைத்தால் ஸ்வாமிகளின் மாடசிமையான காட்சியைக்காணுய் - வாதுசெய்ய மிகுறுய் வுன்கருத்தை சொல்லியதென் றதட்டிக் கேட்டார்கள்,

அதற்குக் - கபீர் - ஓ - புண்ணிய புருஷர்களே அடியேன் ஸ்வாமிகளிட முபதேசம் பெற்றுக்கொள்ளதற் காத்திருக்கின்றேன் ஆதலால் நீங்களெல்லோருமிவ் வெளியேனைக்குறித்து அன்புடன் விரித்து ஸ்வாமிகளுக் குரைத்து மெழுகைப்போல விரகபத்தைக்களைந்து எனக் கனுக்கிரகம் செய்யும்படியாயக் கருணைகூரும்மென்று சிசாஷ்டாங்கமாய் வந்தனம் செய்தார்,

அதற் காரிவருனர் - தரித்திர விராஜபோஜனத்தையும் - கர்மிதேவாமிர்தத்தையும் - காமி சன்யாசத்தையும் - லோபி சொர்க்கத்தையும் - விபசாரிமோட்சத்தையும் - அஞ்ஞானி ஞானத்தையும் - மிலேச்சன் பிராம்மணத்துவத்தையும் - கோரினதைப்போ லிருக்கின்றது, நீ பசுவைக்கொல்லும் பாமனுயிருக்க உனக்கு ஸ்வாமிக ளுபதேசம் செய்வாரா அஞ்ஞானத்தைத் தொலைப்பாரா கருணைமழை பெய்வாரா பிரஷ்டராயவனை வாரா அடடா - செல்வத்தில் மிக்கபுவிராஜர்களும் கல்வியிற்செழித்த கவிராஜர்களும் தவத்திற்சிறந்த புனிதர்களும் தர்மத்திற்றழைத்த மனிதர்களும் வல்லமையுள் ளித்தர்களும் - மறுமையில்லாச் சுத்தர்களும் ஸ்வாமிகளிட முபதேசம் பெற்றுக்கொள்ள வேண்டுமென் றிரவுபகலா யலைவுறுச் அவர்கட்கே யனுக்கிரகஞ்செய்த தேசிகர் அதிக்கனுகிய வுனக்குபதேசஞ்செய்வாரா ஒருபோதும் செய்யமாட்டார் - இதோ அடியார்களும் வந்துவிட்டார்கள் அவர்களே யோர்வேளை தொட்டுப்போகிறாய் தொடு துக்கப்படப்போகிறாய் - சீக்கிரம் வெளியிற்-போ-போ-வென்றுரைத்து மிகவு மிரைத்து பேசத்தொடங்கினார்கள்.

அதற்கு-கபீர்-ஓ-வேள்வியாளர்களே - அடியார்கள் வந்தாலென்ன - நானொருபக்கமாய் நின்றிருந்து ஸ்வாமிகளின திருவுருவத்தைப்பார்த்துப் போய்விடுகின்றேனென் றொருபக்கமாய் ஒதுங்கினார்கள்.

அதற்கு வேதியர் - முனிவுடன் அடாபிரஷ்டப்பயலே - துஷ்டப்பயலே எட்டப்போடாவென் றுரைத்தால் மட்டிக்குரைத்தால் கிட்டவேயிருக்கிறாய் - ஒருவேளை யுன்னைத் தொட்டுக்கொண்டால் - பிரஷ்டப்பட்டுப் பின்னும் ஸ்நானஞ்செய்துவரவேண்டும்-பிராயச்சித்தம பெறவேண்டும், சொல்லுதலைகாற் சொல்லுதைக்கேளும் இல்லாவிட்டாற் கலக்கம் [illegible] றென்று வொருவழியாற் றன்னைத் தொடங்கினார்கள்.

அதற்கு கபீர்-ஓ-இருபிறப்பாளர்களே-மாட்டையோட்டுவதுபோல மனிதனுகிய என்னை - ஓட்டவந்தீர்கள் - ஆயாசப் படாதீர்கள் அடியார்களைத் தொடாமலொதுங்கியிருக்கிறேனென்றுவேனோ யென்னை தொட்டுக்கொண்டாலுங் கெட்டுப்போவதென்ன-நானும் ஸ்நானஞ்செய்து பரிசுத்தமாகவே வந்திருக்கிறேன் ஸ்வாமிகளிடம் செய்வதுங்களுக் கடாது அன்றி - மடம்-எல்லாருக்கும் பொதுவானவிடம்-நீங்களே உரியவர்களென்பது கூடாது - இனி யென்னைக் [illegible] மறுங்கள்ம



ட்டி விருங்கள் நீங்கள் செய்த சகாயம் போதும்போதுமென்றுரைத்து ஓர் சார்பில் நின்றிருந்தார்.

அப்போதந்த பொறுமையுள்ள பூசுரர்கள் மிகவும் வெகுண்டு - பெருங் கோபங்கொண்டு - தட்டைவார்த்தைகள்விண்டு, அடாமூர்க்கரயே - ஆசாரமில்லாதபேயே - உனக்கிவ்வளவு வாயேன், கல்மாட்டுக் கொருகுடு-நற்பெண்டிருக்கொரு வார்த்தையென்கிற பழமொழியறியாயோ ; எங்கள் வல்லமையைக்குறியாயோ வாயாலதட்டியும் போகாதமாட்டை-தடியாற்றட்டியோட்டவேண்டும் - தட்டியும் போகாதநாயை - அடித்தோட்டவேண்டும் அதுபோல மாட்டுக்குங்கீழ்மையான, எருமை மாட்டுக்கீனையானவனுதலாற் பலதரம் சொல்லியுங்கோலாற்றள்ளியும், போகாமலிருக்கின்றாய் திருடனுக்கு முரடனே குருவென்பது போலவும்-துஷ்டப்பிள்ளைக்கூபார் புத்திசொல்வாரென்பது போலவும்-தலையிற்பட்டாற் றெழுவாரென்பதைப்போலவும்-உன்னையித்தடியா லடித்தாலொழிய - போகமாட்டாயென்றோங்கியடிக்கவந்தார்கள்.

அதற்கு கபீர்ஓங்கின தண்டத்தைப்பறித்துக்கொண்டு-ஓ சீலகாருண்யமில்லாத் தியர்களே-மெய்ஞ்ஞானமில்லாப் பேயர்களே - நாய்போற்குலைக்கும் வாயர்களே-நன்று தீதறியா வசியாயர்களே - தேனுக்குதிகாரங்கொடுத்தால் காழிக்கொருதங் கொட்டுமென்னும் பழமொழிப்படி செய்தீர்கள்-ஆனல்-துஷ்டர்களை-சிக்ஷைசெய்வதே நியாயமென்றபடி - இந்தத்தடியாலடித்து உங்களுயிரைமுடித்து, அனைவரையும் கொன்றுவிடுவேன் ஒருகணத்தில் வென்றுவிடுவேன், மித்திரன் வரவைத்தெரிவித்த - தத்தத்திசைகளுக்கு முத்தமிட்ட பரிசுத்தனைப்போல - ஸ்வாமிகளின் பணிவிடைக்காரனென்று பணியநேரிட்டது-நீங்கள் செய்யுமக்கிரமம் மிகவுங்கெட்டது, என்று பலநிவாக்கியங்களைப்புகன்று தடியைத் தெரிவிலெறிந்துவிட்டு-ஸ்வாமிகளிருக்குந் திசையைநோக்கித் தெண்டனிட்டு-சத்குருநாதனுடைய வரவுக் கெதிர்பார்த்துக்கொண்டிருந்தார்.

அறுதொழிலாளர்-கோலைத்தெரிவி லெறிந்த கபீர் மேல்விழுந்து - துள்ளிக்குதித்தெழுந்து, உதட்டைமடித்தாத்தம்புறப்படக் கடித்து-தன்னையறியாமற்றடித்து-ஈன வார்த்தைகள்படித்து - அடிபடியென்றடித்து, முழங்கைகளாலிடித்து-தங்கள் வைராக்கியங்களை முடித்து அவையவங்களை நெருக்கப்பிடித்து, கசக்கி-நசக்கி தேகமெல்லாம் இளைக்கவும் - கிறக்கூடாமல் களைக்கவும் செய்துமடத்துக்குள் தங்காமலோட்டிவிட்டார்கள் தங்களுடைய பராக்கிரமங்களைக் காட்டிவிட்டார்கள்.

பின்பு கபீர்-இவர்களில் இஷ்டர்களென்றும்-நமக்கிஷ்டர்களென்றும், உன்னைப்போய் - மானநஷ்டமடைந்தோம் துஷ்டர்கள் கைகளாலிடிந்தோம், இறைவனுகிய நாமினி ஸ்வாமிகளைப்பார்ப்ப தரிதே-சந்தனமரத்தருகிற் சர்ப்பமும்-தாமரையின்பால்முட்களும் -தர்மங்களிடம் லோபியும்-சந்திரனிடங்களங்கமும்-புருஷருக்கு விவேகமும் - ஸ்ரீகளுக்குவிபசாரமும்-வாழைக்கோர் வன்குரங்கும்-இருப்பதைப்படிநஷ்டத்தைத் தருகின்றதோ அப்படியே-சத்குருநாதனிட மிம்முர்க்கரிருந்து-கஷ்டத்தைக் கொடுத்தார்களென்கிற பற்பலயோசனைகளோடுநின்றிருந்து-அனேகவடியார்களுள்ளே போகிறதைப் பார்த்து-அவர்களுக்குக் காங்களைச்சேர்த்து, தேகநோவைப்பாராமல் பணிவிடையாளர்களால் கைக்குஞ்சேராமல்-தொண்டர்கள் கூட்டத்தில் நுழைந்து உள்ளே வந்து விட்டோமெனத்தழைந்து, மடத்துட் பிரவேசித்து-குருசந்நிதானங்களைக்கோலித்து, சந்தோஷமுகத்துடன் ஸ்வாமிகளின் வரவுக்கெதிர்பார்த்துக்கொண்டிருந்தார்.

அதுதெரிந்த துவேஷமுள்ள தொழுகுலத்தோர் அதிக ரோஷத்துடன் - கபீருடைய - மெல்லியைப்பிடித்துத்தள்ளிசுகங்களாற் பிழிக்கிள்ளி-எண்டா குடிக்கிறாய் துள்ளி-எங்கட்குநீயொருகள்ளிறைக்க நீருள்ள முள்ளி-ஒடிக்கப்பாதுள்ளகள்ளி - எதிர்க்க நீயாவாயதெள்ளி - ஓடிப்போடாதொள்ளியென்று வெளியிலோடடி - வேணமட்டும்மாட்டி பராக்கிரமங்களைக்காட்டி-நம் சமர்த்தென்று பாராட்டி, சிறுகுருவியின்மேற் பிரமாஸ்திரம் போட்டதுபோலவும்-அம்மன்னைச்சூழ்ந்துகொண்ட [illegible]வரைப்போலவும்-அநுமானைச் சூழ்ந்துகொண்ட அவுணரைப் போலவும் இளையபெருமாளைச் சூழ்ந்துகொண்ட நாகபாசத்தைப் போலவும் சூழ்ந்து[illegible] டானுக்கோரடியாயடித்தோட்டிவிட்டார்கள்,

அப்போதுபரிசுத்தனை கபீர்-ஓ-சத்குருநாதனே-மெய்ஞ்ஞான போதனே, உமக்குபயம்-உமதுதரிசனஞ்செய்யவந்த - அடியேனை இந்தத்துஷ்டப்பிராமணர்களடித்தது கஷ்டப்படுத்துகிறார்கள் எனக்காருமில்லையா முறையோமுறையென்றோலமிட்டழத்தொடங்கினர்.

அவ்வோசையைக்கேட்ட ராமாநந்தஸ்வாமிகள் உடனேவெளியிலோடிவந்து-கபீரைப்பார்த்து சொக்கு ஐயோ இந்தச்சிறுமுகத்தையை உக்கிரம்வடிய யாரடா - அடித்தவர்கள் - யாரடாமடித்தவர்கள் என்ச்சீற்றத்துடன்கேட்டார்.

அதுகேட்டமறையோர் - ஓ ஸ்வாமி இவன் அதுக்கலம்ஸத்திற்பிறந்த - துக்கனை நீசன்-முடுக்கான பேச்சன் - பகலைவத்தின்னும்பறையன் - கபடநிறைந்தவன் அரியானைத்தாவிக்கும்வாயன்-அல்லாவைப்புலிப்போர்செயன், மேல்கிழாக்கும்விகடன் - விறுமர்செய்பக்கடன - கர்வமிகுந்தசடஞ் - களங்கமுள்ளபடன் தங்களிடமுபதேசம்பெற்றுக்கொள்ளவந்தானும் - ஆசாரியனின்றி சொந்தானும் நாங்கள் தேவரீருடைய மேன்மையைவிரித்தும்-பலவிதங்களா புனைத்து உனக்குபதேசஞ் செய்யமாட்டார் - தபவேஷந் தாமாட்டார், என்பதாயறைந்து - பலதரமியைந்து, வெளியிற் போகச்சொன்னால்-கேட்காமல்-ஸ்தானஞ்செய்து பரிசுத்தமாயிருக்கும் - எங்கள்மேல்விழுந்து-முட்டிக்கால்மேல் உட்கார்ந்தெழுந்து அவமரியாதைசெய்து-வாயில்வந்தபடிவைது, இந்தமடம் பொதுவானவிடம்-உங்களுக்கென்ன சொந்தம் - என்றனந்தம் தொந்தம் செய்தபடியால்-வைததுடியால், வெளியிற்றள்ளிவிட்டோம் - சனவார்த்தைக்கேட்கவு முட்பட்டோம், தேவரீருக்கிஷ்டமிருந்தால்-இந்தத்துஷ்டனை - நீச்சப்பிரஷ்டனை, சிஷ்யனுக்கிக்கொண்டு - அனுக்கிரகம் புரியுமையாவென்று விண்டு, மௌனமாய் நின்றார்கள்.

அவ்வசனங்களைக்கேட்ட ராமாநந்தஸ்வாமிகளுக்கு - முகங்கருகி - கோபம்பெருகி, கோணைக்கொல்லும் கொடியனுக்காகாறுபதேசஞ் செய்யவேண்டும்-சபாச நல்லவார்த்தையைச் சொன்னீர்கள் - பக்குவருக்கன்றி அபக்குவருக் குபதேசஞ் செய்யுமாசானும்-அநுக்கிரகம் பெற்றுக்கொள்ளு மாணுக்கனும் - இருவரும்கடைவதற்கோ ரிடையூறுண்டா-சமினிறைச்செய்ப்புசிப்போர் சொர்க்கமடைவதுண்டா, மந்திரமென்பதுஇன்றுக்கிறையா - உபதேசஞ் - செய்தவோரையா, அநுக்கிரகம்பெற்றுக்கொள்பவன் இகபரபோகவிராகனும் - மோகத்தின்மேலகிராகனும்-வேதமோதிய விவேகனும் சர்வசங்க பரித்தியாகனும்-ஆசான்மேன் மிகுமோகனும் - அஷ்டவிஸ்வரிய முன்னயோகனும் - சாந்தகுணசித்திரெதந்தவனும் - காமசாதிகளிறந்தவனும் - இருக்கவேண்டும் அப்படிக்கில்லா - அப்பசாநிநிறுத் பலித்த சொற்பக்குணமுடைய இந்தத்துச்சனுக்கா நானுபதேசிப்பேனிவனை நம்முடையமடத்துக்குள் விட்டவர்களையும்-உள்ளேவரப் பார்த்திருந்தவர்களையும், உதைக்கிறேன-பதைக்கச்சிதைக்கிறேன்-என்று சாந்தத்தைநீக்கி - கபீரைநோக்கி-அடா துடுக்கா-வெகுமுடுக்கா என்னிடம் மனுக்கிரகம் பெற்றுக்கொள்ளவும் மோட்சமார்க்கஞ் சுற்றுக்கொள்ளவும் வந்தாயா மடத்துள் நுழைந்தாயா, இதுதானுனக்குத்தகுதியான திட்டை, உனக்கிய எனக்குள்ள அபேட்சையென்று - சனவார்த்தைகளைப்புகன்று-தக்கனை மாறிமாறி விசி - கக்கியுண்டாய்-நீ-சீசீ-பென்று-மிகவும்-ஏசி - நீ-எனக்கொருதாசி-நீ-பெறுவாயென்றுச்சி-சமுசாரத்தைதோசி-வாராதவனைச் சேர்ப்பாறு வுபதேசி - சண்டாளனுக்குபைப்பாறு சன்யாசி - கோஹத்திக்காரனுவாறு பரதேசி-அநுத்பொருக்குமாகாசி புண்ணிய க்ஷேத்திரமல்லவாவாரணாசி- துக்கிரிடம்போய்கேசி-காசிகளிடம் போடாசி வித்தியாசாலையிற் பேரியாசி-எனக்குகந்த மாணுக்கன் நீயாவாயாயோசி - அவமரியாதைச்செய்ய வந்தாயோதோஷி அடா அற்பசந்தோஷி அந்தணர்களோடெதிர்த்த துவேஷி - அதுத்துவிடச்சொல்லட்டுமோ நாசி - எனப் பற்பலவார்த்தைகள்பேசி - பிராமணர்களை நோக்கி - இக்கணமே இவனை நீக்கிவிடுங்களென்றுரைத்து-மிகவுமிறைந்து மடத்துட் போகும்போது.

கபீர் - திடீரென்றோடி ராமாநந்த ஸ்வாமிகளை நாடி -சேவடிகளில் விழுந்து - முத்தமிட்டெழுந்து, ஆய்ந்தோரடித்த அடிகளைக்காட்டி - ஓ - பரமேட்டீ ஓ-கர்த்தனே பரிசுத்தனே - ஜீவன்முத்தனே-அநியாநித்தனே - அன்பர்தொழு மகத்தனே-முடிவான அர்த்தனே - அஞ்ஞான அனர்த்தனே - தொதபுத்தனே வல்லமையுள்ள சித்தனே - ஞானசித்தனே, ஆனந்தசொருபனே - சுயம்பிரகாச தீபனே - சதசீடருக்குபதேசிக்கும் ஸியாபனே - மூவுலகேத்தும் பிரதாபனே ஆசந்தலாபனே-அர்க்குணங்களை யகற்றுந்தாபனே-அருளுள்ளரூபனே - அகண்டமாகிய ஸ்ரூபனே, என்று பற்பலவிதங்களாய்த் தோத்திரஞ்செய்தேத்தி - கன்மலர்களைச்சாத்தி-யாருக்குமதிகக்கீர்த்தி-வகித்த சற்குருமூர்த்தி, பக்த்தி லகப்பட்டு-தொந்தரைக்குட்பட்டு சித்ராக்கினியாற் றகிக்கப்பட்டு இந்தவேளையில் விடைபட்டு எந்தையேயென்று - உத்தமனடைந்தால்-வந்தனைப் பாதுகாக்காமல் மந்தபுத்தியுடையோனென்-நிந்தைசெய்யலாகுமா இப்படியுமுண்டுடைய மனதுகோருமாவென்றுரைக்கும்போது.



ராமாநந்த ஸ்வாமிகள் - என்னடா தந்திரிக்காய்க்குக் கால்கைமுளைத்தாப்போல - பிஞ்சிலே பழுத்து ராகத்தையிழுத்து, அத்தனே-புத்தனே-முத்தனே-சித்தனே யென்றுளறுகிறாய்-வாயில்வந்தபடி குளறுகிறாய் நீ-யென்ன-உன்வயதென்ன உன்வர்ணமென்ன - உன் கர்மமென, மயிருள்ளவள் வாரிமுடிப்பதுபோலவும், வாயுள்ளவன் பாடுவதுபோலவும் - சண்டகல்வியைக் காட்டவாவந்தாய் - துஷ்டகைகளை நீட்டவாவந்தாய் வெகுநேரமாய்க் கூச்சமில்லாமற் பேசும் நீச்சப்பயலே இனி யமைக்கணத்தக்காது - ஓடிப்போடா-முழுமூடா குடிகேடா-வனவேடா, நீயா உபதேசம்பெற்றுக்கொள்ளுகிறவன்-குருவேயென்று விள்ளுகிறவன்-ஓ-வேதியர்களே இந்தத் துலுக்கனை அறிவில்லாத பேயை துஷ்டகுணமுள்ள சேயை - உதிரம்புகைக்கும் ஈயை அடித்துத் துரத்தி விடுங்களென்றுரைத்து மடத்துட் போய்விட்டார்,

உடனே மேற்குலத்தோர் - வல்லாள் வகுத்ததே வாய்க்காலென்னும் பழமொழிப்படி-கண்களையுருட்டி. இக்கிட மிரட்டி - புழுதிபடியப்புரட்டி-தங்காமல்விரட்டி, இந்தமடம் - பொதுவானவிடம் என்றுரைத்த வன்வாயைப்பிளந்து-மணிக்குடலெடுத்து - பருந்துகளுக்கு விருந்திடம்போஇதேரும்-இனியாவது பேசாமலோடிப்போவென்று - கூசாமல் வைத்துக்கொண்டிருந்தார்கள்.

அவமானப்பட்டோமே கபீரோ - அவதூதர்கள் எமதூதர்களைப்போல இந்த முப்புரி நூலோர்-நூலியென்றால் - கீர்த்திசாலியென்பவர்போ லிருக்கிறார்கள் அந்தோ ஸ்வாமிகளைத் தரிசித்தும் - பாதங்களைப் பணிந்தும், அன்பாய்த் தோத்திரஞ்செய்யாமற் போனேனே - வீணாய் துன்பத்திற்குள்ளானேனே; நாம்செய்த கர்மமென்னவோ - அல்லது நமது பக்தியின்னமை, நற்பதத்தைச் சார்ந்தோர்க்கும் - சாந்தோர்க்கும் - சந்தநெஞ்சும் பழமொழிப்படி நேரிட்டது, தேகமெல்லாம் ரத்தமயமிட்டது அடடா - இனி நாமென்னசெய்வோம் யாரை வைவோம், என்றறிவடைந்து-விட்டையடைந்து பரபுருஷனோடிய பாபஸ்திரீ காவலிலகப்பட்டதுபோலவும் - பதிவிரதைனென்று செப்பக்கேட்ட பதிவிரதையைப்போலவும் - யுத்தத்தி லபஜெயமடைந்த வீரனைப்போலவும் - மனையாள் விபசாரஞ்செய்தாளெனக் கேட்ட ரூனைப்போலவும் - துக்கம் மேலிட்டு கக்கரத்துக்குட்பட்டு தந்தைதாயுடன் பேசாமலிருக்கும் குமாரனைப்பார்த்து.

தமாஸ் - அட்டமகனே அழகானமகனே உனக்கே னிக்குறைவந்தது - அடிகளால் தேகம் நைந்தது யாருன்னை யிப்படியடித்தார்கள்-உயிர்நீக்கும்படிமடித்தார்கள், சீக்கிரஞ் சொல்லடா சொல்லடாவெனப் பலதாங்கேட்டும் - பேசாமலிருக்குந் தநயனை - வாரியெடுத்து மடிமேல் வைத்துக்கொண்டு - சரீரமுழுதும் காயமாயிருக்கக்கண்டு, ஓவென்றலறி-மிகவுங்கதறி உடலம்பதறி-வாய்மொழிகள்குதறி, அடா - என்னருமைமைந்தா-உயிரினுஞ்சொந்தா-யாரிடமடிபட்டு சொந்தாய் - எப்படிநடந்துவந்தாய், உன்னை யடித்தவர்களின் கழுத்தைத்தறுத்து-இப்போதே வாளுலகடையச் செய்கிறேன் - துஷ்டர் - அனேகர்களாய்க் - கொய்கிறேன காட்டடாவென்றுப்பரிக்கும்போது.

இஞ்ஜாபீபி-ஐயோவென்று புலம்பி-மகனைக் கண்ணீராலலம்பி - அடா யென்கண்மணியே - மோமணியே-உன்னை யென்னறியாமையாலிரண்டடி அடிக்க-உன்மேற் படாமல் - ஸ்ரீமந்நாராயணர்மேற் - பட்டதே மாயாரூபத்தை நீக்கிவிட்டதே, இப்போதிந்த அடிகளைப்படி பட்டது-நீ பேசாமலிருப்பது மிகவுங்கெட்டது, உன்னையாரிப்படி அலங்கோலஞ் செய்தார்களோ அவர்களை இக்கணங்காட்டுவா காட்டுவாவென் றிமுக்கத் தொடங்கினான்.

அதற்கு-கபீர் - ஓ - என்தாய் தந்தையே-சொல்லக் கேளுங்களோ ரிந்தையே நகைப்படாமல் லாபங்கிடைக்குமா கஷ்டமுதாம் ருபதேசங்கிடைக்குமா; கஷ்டப்படாமல் சுகமுண்டாகுமா கிஷ்டைசாதிக்காமல் நித்தியானந்த முண்டாகுமா அதுபோல - ராமாநந்தஸ்வாமிகளிட முபதேசம் பெற்றுக்கொள்ளப்போய்-அவருடைய எவனாள்ளா விச்சிஷ்டசை யடைந்தேனென்று கவின்றமாத்திரத்தில்.

தாய்தந்தை - அதிகத் துக்கரைச் சேர்த்துக்கொண்டு - துஷ்ணையாசத்தைகளை விண்டு, ராமாநந்தஸ்வாமிகளிடம் போகப் புறப்பட்டதையறிந்த,

கபீர் - தாய் தந்தையர்க்கும் வந்த வுறவானிகளுக்கும் வந்தனம்புரிந்து மிகவும்பரிந்து, ஓ - புண்ணியவான்களே, ராமாநந்த ஸ்வாமிகளின் பணிவிடைக்காரர் கைகளா லடிப்பட பௌக்குற்றபாக்கியமும்-தாவடைப்போதிற நிலாக்கியமும் - பகவான்செய்த ஆசீர்பாதவாக்கியமும் - இது காம்பரியந்தம் காவிருந்த யோக்கியமும், ராமாநந்த ஸ்வாமிகளால் பிரகாசிக்கவிருக்க - நீங்களே விரைமறுக்க வந்தீர்கள்-எனக்கே

விட்டுத்திர்கள் - விருதேன செய்திர்கள் - கோபாக்கினியில் வெந்திர்கள், ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டென்கிற பழமொழிப்படி செய்திர்களென் றுரைக்க.

அதுக்கு - அட-கபீர்-நீ-மறைமறு மதஸ்த்தரு பிருந்தும் பிராமணனிடமா யுபதேசம் பெற்றுக்கொள்ளப்போகிறாய் அடாதகாரியஞ் செய்தாற் படாதபாடு படவேண்டுமென்கிற பழமொழிப்படி யுனக்குநேரிட்டது. புறமதத்திற் பிரவேசிக்க வெண்ணங்கொண்ட வுன்னைக் கடவுளே தண்டித்தார். அதைநினையாமற் சண்டித்தார், மறையோர் மேலியாதொருகுற்றமுமில்லையே தேடிக்கொண்டாய் தொல்லை-உன தலைமேலென் போடாமற் போனார்கள் பெரியதல்ல - உன்னை யிரண்டுதுண்டாகவேன் வெட்டவில்லை-கூடைக்காமற்போனார்களே பல்லே - எங்கள் செவியாற் கேட்கவும் கேட்டதே இச்சொல்லை - நீமோட்சமடைகிறவனல்லை-பழிவிதைக் கடந்துபோவாயாக தன்னெல்லை-புலி யுசிக்குமா புல்லை, என்னும் வார்த்தைகளாடி - இவனுக்காகவேன் வந்தோமோடி, என்று தங்கடங்கள் வீடுபிடம்போய்ச் சேர்ந்தார்கள்,

பின்புதமாதும்-பிதாவும்-கபீரை ஆகாலனெசெய்து - ராமானந்த ஸ்வாமிகளை வைதுக்-கண்ணீர் விட்டழுது-கடவுளே யென்று தொழுது- எங்களுக்கும் வருமாபழுது - இனியெப்படி போகும்பொழுது, என்று புலம்பும் தாய் தந்தையரைப்பார்த்து கபீர் கரங்களைச் சேர்த்து-துக்கத்தையாற்றி-இனிய வார்த்தைகளாலேத்தி எனக்குக் கடவுள் துணையா யிருப்பாரெனப் போற்றி பற்பலவார்த்தைகளாலே யீற்றி, அன்னமுண்டு-தாய் தந்தையர்க்குத்தொண்டு- அன்பாய் செய்துக்கொண்டு உல்லாசமா விளையாடிக்கொண்டு இருந்தார்

கேட்பவர்களே - சித்தர்களேயென்று பின்னுஞ் சொல்லத்தொடங்கினர்.

## ஈ - வது - கபீர் ராமாநந்தஸ்வாமிகளி னாசீர்பாதம்பெற்ற அத்தியாயம்.

இப்படி கபீர் - சிலநாள்கழித்து-விருநாள்கழிவதைக் குறித்துத் தன்னைத்தானேபழித்து, ராமானந்தஸ்வாமிகளை நினைந்து-கண்ணீரால் நனைந்து-ஐயோ விருதநாட்கள் கழிந்து போகின்றதே முற்பிறவி லாசாக்கினியமு மகின்றதே, யாதொருவிதத்தையு மாசானின்றி பவிக்காதே ஆரியர்மேலுத்தமர்க்கு மனதுராவிக்காதே, ராமானந்த ஸ்வாமிகளை ஆசானெனத் தியானித்தபின் வேறுசாலைத்தேடக்கூடுமா மறவொருவர்பால் நாடக்கூடுமோ இப்படி செய்வதுத்தம புருஷர்க்கழகல்லவே நல்லோர்செய்யுங் காரியமல்லவே, தேகந் நீர்மேற்குமிழியாயிற்றே - விருதாநாட்கள் கழிந்துபோயிற்றே நாட்கள் கழிவதற் கவிவேகிகள் சந்தோஷமடைவார்கள்-விவேகிகள் பெருமூச்சுவிட்டழுவார்கள், மானிடப்பிறப்பெடுக்க - முற்பிறப்பி லென்னதவஞ்செய்தோமோ - பசுபட்சி - புழுபூச்சி - நாய்பேய் - நரிகரி அரிபரி-புழுபூண்டு-ஈயெறும்பு-மச்சம்மான்-மரை-மாடு முதலான பிறவிக்கடலைக் கடக்கும் மனுஷப்பிறப்பெடுத்து - நன்மார்க்கங்களையடுத்து, மங்கபுத்திரனுற்றக் கைதாய் - பெண்பிள்ளை - நாடு நகர் சொந்தமெனநினைந்து பந்தத்தில் நுழையலாகுமா இதனாற் பிறவிப்பிணிவெந்துபோகுமா எம்மார்க்கத்தா லின்பவெல்லையினுட்படலாம் - எவ்விதத்தா லந்நியாய குணங்களைவிடலாம், மோட்சமென்னும்-நகரிற் புகுத சரிதை-கிரியை யோகம்-ஞானமெனுஞ் சதுர் நெறிக ளிருக்கின்றனவே சரிதையைச் செய்பவரெனின் - எங்குமிருக்கும் கடவுளெனக்குள்ளும் புறமுமாயிருப்பாரல்லவோ இல்லையென்றறையும் மொழிகள் நல்லவோ தனக்குணாதியை யறியச் சற்குருவேண்டுமே, கிரியை யியற்றுவோமெனின் சகலபிராணிகட்கு மூட்டியுதவி உபசரிக்குங் கர்த்தனுக்கு நாமெவ்வித பூசைசெய்யவேண்டுமோ அதையுணர்த்தற்கு மாரியர்வேண்டுமே, யோகம்புரிவோமெனின் - விசுவாச நிசுவாசங்களையடக்கி - பிரமரந்திரத்தில்முடுக்கி - நாதத்தைக்கேட்டு-சோதியைத் தரிசிப்போமெனின் - அதுவும் வித்யாசமயந்தமாகவேயிருக்கின்றதே இதைச் சோதித்தறியவு மடிகள்வேண்டுமே, ஞானசாதனஞ் செய்வோமெனின் - தானே பிரம்மம் பிரமமே நானென்கிற அத்துவித பாவத்தையே யுணர்த்துமென்றதே-தான் பிரமமென்கிற சப்தார்த்தத்தின் மர்மந்தெரிதற்பொருட்டு ஞானகுருவேண்டுமே-கர்மகாண்டப்படி நடப்போர்க்கே முத்தியுண்டென்று சிலரும் பத்திமார்க்கத்திற் செல்பவர்க்கே பரமபதமுண்டென்றும் சிலரும்-ஞானநிஷ்டையைச் சாதிப்பவர்க்கே கைவல்யங்கிடைக்குமென்று சிலரும் கவில்கின்றனர்களே ஏதை மேன்மையானதென நினைவலா - மிதற்கும் - ஆரியர்வேண்டுமே, கர்மானுஷ்டானங்களைத் தவறாமற் செய்பவர்க்கு சத்தியலோகமும், தாசமார்க்கத்தில் நிற்ப



வர்க்கு வைகுந்தமும், சிவகோடித் தபஞ்செய்வோர்களுக்குக் கைலையும், அத்வைத பாவத்திலிருப்பவர்க்கு மோக்ஷமுங் கிடைக்குமென் றறையு மிப்பதவிகளிலெல்லாமுமேன்மையானதோ ஆனந்தமயமா யிருப்பதெதுவோ இதையுணர்தற்குத் தேசிகன்வேண்டுமே, குருவில்லாத வித்தையும் - கொழுநனில்லாத மங்கையும் அபலமென் றரைக்கின்றார்களே - இதற்கென்னசெய்யலாமென்கிற எண்ணமே மேலிட்டு-மிக துயரப்பட்டு முடிவான அர்த்தத்தைநாளைக்காலை நிற்போய்ராமானந்தஸ்வாமிகளைக் கேட்டறியலாமென யோசித்து - எப்போதிரவொழியுமென்றுசித்து-மனதா லிராமானந்தஸ்வாமிகளைப்பூசித்து - இவரே மேற்காரியமென விசுவாசித்து குருசந்நிதானங்களைக் கோஷித்து - உடனேமடத்தினருகிற் - பிரவேசித்து - ஸ்வாமிகளி னேவலாளரைப்பூசித்து - தன்னைத்தானேதூஷித்து - மடத்தினுள் வேதாந்தங்களையோதிக்கொண்டிருப்பதைத் கேட்டானந்தக் கண்ணீர்சொரிய நிற்குந்தறுவாயில் - ராமானந்தஸ்வாமிகள் சேவல்கூவும்வேளையில் பலமாணக்கருடன் கங்காஸ்நானஞ் செய்யப் புறப்பட்டதைக் கபீர்கண்டு-ஆனந்தங்கொண்டு ஸ்வாமிகளைச் சூழ்ந்திருப்போரைத் தாழ்ந்து-ஆரியர்கழல்களில் வீழ்ந்து இன்பவெள்ளத்திலாழ்ந்து, பலதரங்கும்பிட்டு-பண்புடன் முத்தமிட்டு-ஸ்வாமியென முறையிட்டு- துன்பத்திலிருந்து விடுபட்டு - ஸ்மரணைகெட்டு-காயத்தை யசைக்காமற் றன்னைமறந்திருந்தார்.

அப்போது - ராமானந்தஸ்வாமிகள் - தாழ்ந்தவன்பாரடா - பாதங்களைவிடடா - எழுந்திருடா-மிகவும் மூடா - தன்னையறியாக்குருடா - இரவில்வந்ததிருடா - சதஜீவியாய் வாழ்ந்திருடாவென் றாசீர்பாதஞ் செய்தார்.

அதுகேட்ட கபீர் - களிக்கடலிற் குளித்தவராய் ஓ-ஸ்வாமி இன்றைக்கல்லவோ உமதாசீர்வசனம் பெற்றேன்மோக்ஷமார்க்கங்கற்றேன் - பந்தபாசங்களற்றேன் பிரமானந்த வாழ்வைப்புற்றேன்-ஓ-பென் சற்குருநாதனே ஜெகன்னாதனே வேதனே-வேதாந்தனே-மெஞ்ஞானபோதனேபக்தவில்லவநாதனே லீலாவினோதனே கமலம்போன்றபாதனே-பரிசுத்தமான நீதனே-கவிதனே கிர்ச்சேதனே-கிஷ்குரோதனே - கிர்ப்பேதனே-கிர்வாதனே அரியாதிதனே-என்றுபற்பலவிதங்களாய்த் தோத்திரஞ் செய்யும்போது.

ராமானந்தஸ்வாமிகள் ஏவலாளரை நோக்கி இதப்பாலன் யார் நீங்க ளறிவீர்களாவென்று வினவ-மறையோர் கபீரென்றறிந்து - முகங்கரித்து மிகவுமெரித்து கோபம்விரித்து-ஓ-ஓ ஸ்வாமிகள்-முன் வந்திருந்த நீச்சப்பயலுக்குக்கூச்சமின்றி ஆசீர்பாதஞ் செய்தார் - கருணைமழைபெய்தார் தாமுடைய விரதத்தைக்கொய்தார் நாமெச்சும்பொருட் டங்காள்ளவதார் - இதற்கென்ன செய்யலாம் யாரைவையலாம் - இந்தத் துஷ்டப்பையற் பிரஷ்டர்களானோலும் கனிஷ்டராய்ப்போனோம் என்று தங்கடங்கள்வாயைத்திறந்து ஆவெனப்பறந்துபேயைப்போல் பிதற்றும்போது ஸ்வாமிகட்குச் சாந்தமிறைந்து - முனிவுபிறந்து-மிகவும்நிறைந்து-ஓசையாயிரைந்து-எட்டப்போடாவென்றறைந்து - கபீரைக் கன்னத்தி லறைந்து - அப்பிரே-கிசியில்வந்த இத்திருடனை தங்களைவிடாதே போடானை - கையை அடித்து - என்புகளையொடித்து ஓட்டிவிடுங்களென் றுரைத்து - ஸ்நானத்துக்கெழுந்தருளி.

தொழுகுலத்தோர் - கபீரைக்கயிற்றாற்பிணித்து வாயிற்றூசைத்திணித்து - அஸ்திகள்முறிய - அடித்து தங்கள்வைராக்கியத்தை முடித்து-இக்கள்வனைசூரியோதயமானதே இராஜன் பாலனுப்பலாமென்று - தொழுவதில்மாட்டிபராக்கிரமங்களைக்காட்டி ஸ்நானஞ்செய்யப்போனார்கள்.

அப்போது-கபீர்-தேகநோவுத் தாறமாட்டாமல் பகவானை நினைந்து - கண்ணீரால் நனைந்து ஓம்-ஹரிஹரி-நரஹரி - முராஹரி - அப்புஜாக்ஷரி - பத்மநாப பரமபுருஷா - பக்தவச்சலா - வேணுகோபாலா - தேவானுகூலா - ஆதிமூலா - சித்தசீலா - கேவிதையா தசரதபா - கௌசலைபுத்ரா முனிவர்கள்மித்ரா புண்ணியசரித்ரா ஆனந்தபாத்ரா மாயாவிலாசா வைகுண்டவாசா சுயம்பிரகாசா அன்பர்கள்நேசா துஷ்டிகேசா பாபவிநாசா ஓவிஷ்ணு-ஓபகவான்-ராமானந்தஸ்வாமிகட் கடியேன்மீ திவ்வளவு வெறுப்பேன் - அருவருப்பேன்-நானென்னகொடுமைசெய்தேன்-யாரைவைதேன்-விருதாட்களைக் கழிக்காவாருமா ஸ்வாமிகளுக்கு இவன்மேலிருக்கும் கோபம்போகுமா சகல சந்தேகங்களுந் தலையெடுக்காமற்சாகுமா - நானிவ்வளவிடருமனுக்குற்சாகமா இதெனக்குற்றயோகமா அனுபவிக்கவேண்டியபோகமா வென்றனந்தம் விதங்களாய்ப் பிரலாபித்து ஓ தெய்வமே யென்றழுதுதொழுது தலையெடுப்பதற்குமுன்.

தொண்டர்கள் சகாயனுள் விம்மெனவர்-கபீர் மஸ்தகத்தின்மேற் றமதங்கங்களைவைத் தாசிகள்கூடி கட்டுடையவிழ்த்துவாரி-மடிமேலேவைத்திக்கொண்டு - பயம் வேண்டாமென்று விண்டு - ஓ - கபீர்தாஸனே - எனக்குகந்த நேசனே - ராமானந்த ஸ்வாமிகளின் தொண்டர்களாகிய-பண்டர்கள்கையா லடிபட்டாயோ - தப்பியவிட்டாயோ - எனக்குமுறையிட்டாயோ-சிறைக்குடன்பட்டாயோவென்று - உகமெலாந்தடவி-கண்ணீர்துடைத்து - தோள்மேலேவைத்திக்கொண் டரைக்கணத்திற்-றமால்முன் விடுத்து - அன்னியாரும்-பார்க்காமல் மாயையாற்றடித்து-அந்தரத்தில் மறைந்தார்.

கபீர் - பகவானுவந்து தன்னிமித்தம்வந்து - அரிதானசேவைதந்து - செய்த உபகாரத்தையும்-விட்டுக் கொண்டு வந்துவிட்ட உபகாரத்தையும் நினைத்து கண்ணீராலக்கையை நனைத்து-ஓ-நாதமேநா-லீலா விநோதா என்றே டோர்வசனம் பேசலாகாதா பேசினுலெனக்குற்ற குறைகளெல்லாம் போகாதா பாவங்களெல்லாம் பஸ்மமாய் வெந்து நீறுகாதா சந்தேகக் கடலைக் காட்டாமற் சாகாதாவென்று புலம்புகிறதைக் கேட்ட.

தமால் - அடா வென்சுதனே அரியவற்புதனே பகவானிங்கு வந்தாரா பட்சமாய்ச் சேவைதந்தாரா ஆண்டவனைக்கண்டாயா ஆனந்தம்கொண்டாயா அரியையின்று பார்த்தாயா ஆயாசத்தைத்தீர்த்தாயா மாதவனைப் பணிந்தாயா மலரடிகளையணிந்தாயா அடியேன் பார்க்கலாகாதோ அடியேன்செய்த தீங்கேதோ மாயன் செய்யும் வகையேதோ வவிட்டேன் பாவத்தொகையேதோ.

தெரிந்தும் திருபம் ஆனுரோ இயங்கச்செய்தப் போனரோ அடியேன் பாவியானேனே - அவ்வமாகிப் போனேனே வந்துபார்க்காக் குறையேதோ - மகனே முன்செய்த குறையேதோ, சேயே நீசெய்த தவமேதோ நாயேன்செய்த அவமேதோ - கருணைக்கண்ணுற் பாரானோ கவலைகளெல்லாந் தீரானோ வென் - றழைத்தம்வாரத்தைகளாடி - பல சங்கீர்த்தனங்களைப்பாடி - மகனை வாரியெடுத்து-மார்போ டணைத்து-அங்கமெல்லாந் தழும்புகளாயிருக்கப்பார்த்து-ஆகமெல்லாம்வேர்த்து-அடா வென்பாலனே - அரிதான சீலனே - தேகமெல்லாங் காயமாயிருக்குங் காரணமேன் பேசாமலிருக்குங்கொள்கையேன் என்று பதைத்துக்கேட்டுந் தந்தைக் குண்மையுரைத்தால் முன்போல் விபரீதமுண்டாகுமென்றெண்ணி பேசாமலிருக்கும் - கபீரைப்பார்த்த,

நீஜ்வர்பிபி - அடிகளின் வடுவையும - பாசத்தால் பிணித்த குறியையுங்கண்டு-ஆயாசங்கொண்டு-அடா வென்மைந்தா - ஆருயிர்அஞ்சொந்தா - எங்களையே விருந்தாய் எவனிவ்வடிபட்டு நொந்தாய் - எப்படி நடந்துவந்தாய் - இடைனவா வேண்டுவந்தாய்-எங்களுக்கே னிடர் தந்தாய்-என்றலரும்போதும் போரப்பிள்ளையை கொஞ்சக்கிள்ளையை தமாலாதானைசெய்து - அடித்தவர்களை வைது - புறம்போகாமற் கைதுசெய்து வைத்திருந்தார்கள்.

கேட்டீர்களோ சித்தர்களேயென்று-காபாஜி சித்தர் சொல்லத்தொடங்கினர்.

## எ - வது - கபீர் ராமாநந்த ஸ்வாமிகளிட முபதேசம் பெற்றுக்கொண்ட அத்தியாயம்.

இப்படி. இலைகள் கழிய - தாய்தந்தையர் துக்கம் வொழிய-கர்மமெல்லாந் தன்னைவிட்டுக்கழிய-கபீருக் கானந்தக் கண்ணீரவழிய-பகவான் கருணைமழைபொழிய - அஞ்ஞானமடியோடும் வெந்தழிய வொருநாளிரவில் கபீர் விழித்து - மச்சப்புதவியை மாயக்கிழித்து ராமானந்த ஸ்வாமிகளிடமோர்மொழியாவது கேட்டுக்கொள்ளவேண்டு மிதற்கென்ன உபாயஞ்செய்யலாமென் றனந்தம்விதங்களாயோசித்து ஆதித்தனைப்போற் பிரகாசித்து - அறிவுள்ளவர்க்குரிய தொண்டாமுயற்சியுடையா ரிகட்டு யடைவதுண்டா - இகத்துவலுங்குந் தெய்வமே துணையல்லவா - தெய்வத்தை நம்பினோர்க்குத் தீங்கதுதாதல்லவா - இன்றைக்கிது நாள் பரியந்தமானபடி யாறுமாகட்டும் -அல்ல இவ்வுயிர் பிரிந்துபோனாலும் போகட்டும் - ஸ்வாமிகளின் மனம் கோபாக்கினியால் வெந்தாலும் வேகட்டும் - எவ்வளவுனதுத் தக்கொண்டு செத்தாலுஞ்சாகட்டும்-இக்கணமே ஸ்வாமிகளிடம்போ யவருள் வாக்கிலிருந் தோர்மொழி பிறப்பிக்கின்றதோ-அதையே பிரமோபதேசமாய்க் கொள்வோமென்று மடத்தினருகிற்சென் றல்லாசமடைந்து - உட்போவதற் கிடைந்து புறத்தில் நின்றபடி-ஸ்வாமிகளின் வாய்மொழியின்மேற் கவனம் வைத்துக்கொண்டு சேவல்கூவும்பரியந்தங் காத்திருந்து



மாரிபரோருரையும் பேசாமையா லினிஸ்வாமிகள் ஸ்நானத்துக் கெழுந்தருளுவார் நாம் கட்டத்தின்படி யடியிற் படுத்துக்கொள்வோம் தேசிகரதமதுதிருவடியை நமது சிரத்தின்மேல் வைத்துவிடுவார்-ஏதாவதோர் மொழியுஞ் சொல்லிவிடுவா ரின்றைக்குப் பெறும்படியானபாக்கிய மிதுவே யாமெனத்துணிந்து - கங்கைமணுருகிற் சென்று-மணிகர்ணிகை கட்டத்தின்படி யடியின்மேற் படுத்துக்கொண்டிருக்கையில்.

ராமானந்த ஸ்வாமிகள் ஸ்நானஞ்செய்யப் புறப்பட்டு - மணிகர்ணிகையினுரோ கதைத்தின்மே லிறங்குகையிற் கபீரவ ரிறங்குவதற்கு நேராய்ச் சயனித்துக்கொள்ள அடிகள்தெரியாமற் கபீர் மஸ்தகத்தின்மேல் மிதிபடியைவைத் தழுத்த மாயுண்டிவிட்டார் - கபீர் அந்தோவென்று கூக்குரலிட்டழத்தொடங்கினர் ஸ்வாமிகளறியாமற் குழந்தையை மிதியடியால் மிதித்துவிட்டோமேயென்று கபீரைத்தனதிருவன்தங்கள்ளாலுந் தடவி-ராம்-ராம்-ராம்-ராம்-என்றுரைத்து மற்றச் சோபானங்களிலிறங்கி பகீரதியில் ஸ்நானஞ்செய்து மடத்துட்பிரவேசித்தார்.

கபீர் - இன்றைக்கு நாம்செய்த பாக்கியமே-பாக்கியம் - நமது பெரியோர்செய்த சிலாக்கியமே சிலாக்கியம்-நாம் கோரிவந்ததை பகவானே முடித்தார்-அன்று மறையவனாய் வந்தருளியதையே இன்றைய தாண்டவனுமுரைத்தார-வேதமுடிவானதாரகமந்திரமிதுவேயாகும் இதனுலேயே சகலபாபங்களும்நசித்துப்போகும் எதையும் நம்பினுல்வேண்டும்-நம்பாதார்க்குக் கேடுண்டு பரமேசன் பார்வதிக்கும்-நாரதர் வால்மீகருக்கும்-வால்மீகர் பரத்துவாசருக்கும் - பராசர வேதவியாசருக்கும் - வியாசர் சுகப்பிரம்மரிஷிக்கும் - சொல்லிய மந்திரமிதுவேயல்லவா அன்றி - அநேக ரிஷீஸ்வரர்களெல்லா மிதைத் தியானித்தே பரமபத மடைந்தார்களல்லவா இதையன்றி மேலானவாக்கியமு முண்டாயிலில்லையெனச் சந்தோஷசாகரத் தமிழ்ந்தவராய்ச் சாளவியல் முழ்கி-சாவஸ்திரமுடன் வீட்டையடைந்து தாய் தந்தையர்க்கு வந்தனந் தந்து-ஓ-யென்னன்னையே அத்தனே - இன்னறக்கு ராமானந்த ஸ்வாமிகளிடமுபதேசம் பெற்றுக்கொண்டேன் - மோட்சமார்க்கம கற்றுக்கொண்டேன் - ஆதலா லின்று அவருடையமுத்திரையைதரித்துக்கொள்ளுகிறேன்-நீங்களுமணிந்துக்கொள்ளுங்களென றுரைத்து - பட்டுவஸ்திர மணிந்து ராமானந்த ஸ்வாமிகளின் திலகத்தை நெற்றியிற்றீட்டி ஆரியர் பாதங்களில் மனதைநாட்டி துளசிமாலைகளைப் புனைந்து - குருஸ்வாமிகளுக்கு பூமாலைகளையும்-பூசைக்குரிய வஸ்துக்களையு மேந்திக்கொண்டு-ஜெயராம் சீதாராமென்று தியானஞ் செய்துக்கொண்டே - மடத்தினுட் பிரவேசித்து-குருசங்கீர்த்தனங்களைக்கோஷித்து அடியார்களனைவருக்கும் பிரசாதடாங்கமாய்த்தெண்டனிட்டு - கோமானிருக்குங் கோயிலைநோக்கிக் கும்பிட்டு தொண்டர்களுடன் தானோர் தொண்டனுய்ச்சேர்ந்து - களிகூர்ந்து - ஸ்ரீராமநாமத்தை - ஜபமாலையால் ஜபித்துக்கொண்டிருப்பதைப்.

பார்த்த - தாசர் - ஆச்சரியமா யடா இதென்ன விபரீதமா யிருக்கின்றது துலுக்கன்-ஸ்வாமிகளின்-திலகமணிந்து - நம்முடனுக்கா வீற்றிருக்கின்று னிவனுக்காரிய ரனுக்கிரகஞ் செய்தாராக்கு மிதுதெரிந்துக்கொள்ளவேண்டுமென் றிறைவன் தொழும்பரை விளித்து கபீரிருக்குங் கோலத்தைக் காண்பிக்க அந்தணர் அடடா இந்தத் துலுக்கப்பயல் நம்மைப் பரிஹாசாக்க வேண்டுமென்கிற நிஷ்டைபூண்டிருக்கிறதுபோற் காண்கின்ற திக்களிப்பிட்ட இரண்டு துண்டமாய்க் கண்டித்தாலன்றி நமதிந்நடையில்வாராம லிராளென்றுப் பரிந்துக் கபீர்மேற் பாய்ந்து - அடா-நீச்சா-கோவைக்கொல்லும்மிலேச்சா அன்பர்கள் மத்தியிலின்புடன் வந்து - அசுசியாக்கி-விட்டாயே - நீகெட்டாயேயென்றுதோர் குட்டுகுட்டி திடுக்கிட மிரட்டி - எங்களையேனமா செய்யவந்தாய் ஸ்வாமிகளின் திலகத்தையேனணிந்தாய் - துளசி மணிகளையேன் புனைந்தாய் நீயெனசெய்ய நினைந்தாயென்று வற்புறுத்திக்கேட்கும்போது.

கபீர்-ஓ-பிராமணோத்தமர்களே - வீணையென்னையேனிழுத்து அடித்து அலங்கோலஞ்செய்கிறீர்கள் வேண்டாம் வேண்டாம் - இன்று வைகறையில் ஸ்வாமிகளெனக் கனுக்கிரகஞ் செய்தாட்கொண்டா ரிதினுங் கனுக்கைய மிருக்குமாயின் தேசிகரை வினவித் தெரிந்துக்கொள்ளுங்களென்று சாற்ற.

தொழுகுலத்தோர் கபீரை இழுத்துக்-கொண்டு போய்ஆரியர்முன் முன்னிறுத்தி-ஓ ஸ்வாமி-தேவரீரின்று காலையிலிந் நடுக்கனுக் குபதேசஞ் செய்தீராமே நிச்சயமா வென்று வினவ.

நிர்த்தன் மிகவுமுனிந்து-கபீர்மேல் - மிதியடியை வீசியெறிந்தாரப்பா துக்கம் - கபீர் லலாடத்திற்பட்டு திரம்பெருகச் செய்ததற்கு.

கபீரிடருறுமல் அனந்த - வாரியிலமிழ்ந்தவனு யாகிரிசுரை நோக்கி-ஓ வென்று ஆண்டவனே உமது பாவ விவ்வேளையேன் நெற்றியிற்பட - நானென்னநோன் பிழைத்தேனோ எனைப்போன்ற - பாக்கியமிவ்வன்பர் களி லியாரும் பெற்றிருக்கப் மாட்டார்களெனக்குற்ற சிலாக்கியமே சிலாக்கிய மிவ்வெளியேன்மீ திவ்வளவு கருணையின்று - வந்தகாரணமேதோ ஓ எனையனே மிகவுந்துய்யனே-அழகானவனையனே - ஆட்கொண்ட வெய்யனே-யீடளிக்குஞ் செய்யனே-கான்தொழு மீச னேபரமேசனே-ஜகதீசனே-குணவாசனே-மிகு நேச கிமலேசனே-என்று தோத்திரஞ் செய்யும்போது.

ராமனந்தஸ்வாமிகட்குச் சற்றே - மனமிரங்கி-அடா கும்பிடுங்கள்ளா-உனக்கு நானுபதேசஞ் செய்த தாகச் சொன்னயாமே எப்போதென்னிடத் துபதேச ம் பெற்றுக்கொண்டாய் சொல்லடாவென்று கேட்க.

கபீர் - ஓ ஸ்வாமி இன்று வைகறையில் தேவரீர் ஸ்நானஞ் செய்யப்போகையில் மணிகர்ணிகை கட்டத்தின் சோபானத்திற் படுத்திருந்த என்மத்தகத்தின் மேலும் ஸ்ரீபாதத்தை வைத்தழுத்தமாயுன்றி உப தேசிக்க வில்லயா ஸ்வாமிகட்குக் கவனமில்லையா இத ற்குள் மறந்து விட்டீரா வென்று-சிரசாஷ்டாங்கமாய் தெண்டனிட்டெழுந்து நின்று-தோத்திரஞ் செய்யும் பாடல்.

பகவன்துணை.

பூமாதினையாளும் புரந்தானுரனையாளும்
நாமாதுமையாளும் நசையோமெறநினமும்
ராமாவெனத்துதிப்பா ரன்தாநாயேற்கருள்செய்தென்
ஏமாதிகடவிர்த்தாட்கொண்ட தயவேதநியேனே. (க)
திமாரிபடிந்தோர் ஜெபஞ்செய்புந்திருநாமம்
தோமேமமுமேவற்றவிர் அறவோர்துதிநாமம்
ராமாவெனும்நாமம்புகைத நாயேற்கருள்செய்தென்
ஏமாதிகடவிர்த்தாட்கொண்ட தயவேதநியேனே. (உ)
சேமாதிகளில்லாதவ சீதன்மிகுகுரோதன்
மாமாயையிதழதும் வான்மீகமுனிநாதன்
ராமாவெனத்தேர்ந்தா னதநாயேற்கருள்செய்தென்
ஏமாதிகடவிர்த்தாட்கொண்ட தயவேதநியேனே. (ஈ)
ஆமார்கடல்சூழும் புவியண்டசராசரர்
மாமோகமுமருண்மாதவர் வாட்டங்களுநீத்த
சீமான்திருநாமத்தை நீயேற்கருள்செய்தென்
ஏமாதிகடவிர்த்தாட்கொண்ட தயவேதநியேனே. (ச)
காமாதிகளோங்கித் ககனத்தோர்க்கிடரீந்த
தாமோதியபன்றுறு தசகண்டனைவென்ற
காமோதரனுமத்தை நமியேற்கருள்செய்தென்
ஏமாதிகடவிர்த்தாட்கொண்ட தயவேதநியேனே. (ரு)
கோமேதமுநாமேதமுங் குரைமேதமுமுடிப்போர்
மாமேவிவதபமுஞ் செயலல்லோர்மிகல்லோர்
ராமாவெனவுரைப்போ ரனதநாயேற்கருள்செய்தென்
ஏமாதிகடவிர்த்தாட்கொண்ட தயவேதநியேனே. (சா)
போமேபவமரணம் பிணிபுரையும்மருட்டினையும்
போமேமனக்கோட்டம் புவிநாடப்பலவாட்டம்
ராமாவெனவுரைத்தா லனநாயேற்கருள்செய்தென்
ஏமாதிகடவிர்த்தாட்கொண்ட தயவேதநியேனே (எ)
பூமிநிவிற்குமா யுதவாயென்றபுகன்றே
தேமார்குமுதப்பாதமுஞ் ஜெயமீதியடியும்
ராமாவெனும்பொருளை கொடுநாயேற்கருள்செய்தெ
ஏமாதிகடவிர்த்தாட்கொண்ட தயவேதநியேனே. (அ)
பாமாலைகள்புனைசா னிகட்டப்படியடியில்
தாமேயடைந்தென் மத்தகமேற்றாட்களைவைத்தென்
ராமாவெனவுரைப்பாடியன நாயேற்கருள்செய்தென்
ஏமாதிகடவிர்த்தாட்கொண்ட தயவேதநியேனே (கூ)
பூமான்களுமவானோர்களு மறியும்பொருட்டாக
சீமாறுமதடிபாதகமென் சென்னியிற்றக்கி
நாமேகுருவெனக்காட்டியிந் நாயேற்கருள்செய்தென்
ஏமாதிகடவிர்த்தாட்கொண்ட தயவேதநியேனே. (௰)

என்றிவ்விதமாய்த்தோத்திரஞ்செய்துருகும் கபீர் மேல் ராமானந்தஸ்வாமிகள் மிகவுங்கருணைகூர்ந்து-அடாமோசஞ்செய்தாயே - நீ தானுபதேசிருந்தவன்-நீ செய்யவேண்டுமென்றே செய்தாயானலும் குற்றமில்லை - முடிந்துபோன கருமத்தைக்குறித்து யோசிப்ப தாற் பிரயோசனமில்லை - யென் றந்தணரை நோக்கி ஓ-சிஷர்களே இவன்சொல்வ துண்மையே யாதலாலின் றடனிவனை உமதுமொருவனுய்ச் சேர்த்துக்கொண்டு பாதுகாத்து வருவீர்களாகவெனத் திருவாய் மலர்ந்தருள.

மறையோர் குரோதங்கொண்டு ஒ-எங்களாண்டவனே தெரியாம லியாரோவென்று வழக்கமான வார்த்தையைச் சொன்னீரிதனு லிந்நீச னுமக்கு மாணாக்க னுய்விட்டானு பார்ப்பார் பறையனைச் சேர்த்துக்கொள்ளுவார்களா சிஷனென்றும் விள்ளுவார்களா இவ்வ



ன்னை யிவ்வுலகி லெங்கேயாவது நடந்த துண்டா நடப்பதுமுண்டா-இத்துடுக்கனைச் சேர்த்துக்கொள்வதால் நமக் கபகீர்த்தியுண்டாகுமேயன்றி புகழுண்டாகாவே யுண்டாகாதாகவி னிவனை நமது மடத்துக்குள் வாராமல் நீக்கிவைப்பதே யோக்கியமென்றுரைக்க-ஸ்வாமிகளு க்களிஷடப்படியே செய்யுங்களென்றுரைத்து.

கபீரைநோக்கி-அடா கள்வா குருசெய் தென்னிடத் தாரகமந்திரத்தைக்கேட்டுக்கொண்ட காரணத்தால் நீ-மறைவாயிருந்தலே நன்மை - இராவிட்டால் வருத் தின்மை - நானேயோ டிம்மார்க்கமாய் மறந்தும் வாதே ண்டாமென்றனுப்பிவிட்டு-சகலரையும்பார்த்து-ஓ-சீஷர் பிராமணர்களே-இவன் சிறுகுழந்தையாயிருந்தும்-பக் திவிசுவாசம்-பரிபூரணமாயிருப்பதுமன்றி-சதுர் வேத க்களையுணர்ந்து சதுர்முகனைப்போலவே பேசுகின்று னிவ்வளவு துன்பத்துக் குடன்பட் டென்னிடமனுக்கிரகஞ் செய்துக்கொண்டவர்களியாருமில்லை-இவன்முற் பிறப்பி லியாதோர் குற்றஞ் சற்றுசெய்திருப்பானதனுலேயே மிலேச்சர் வம்சத்திற் பிறந்தானுனலுங் குணமே சிரேஷ்ட மிழிவான குலத்தோரான வால்மீகர் முதலானவர்களும் மகாரிஷிகளாகவில்லையா இச்சிறுவனுடைய குணகுறி நடைநொடியாவினைகளை யோசிக்குமளவில் மிகவும் விந்தையாக விருக்கின்றதன்றி யோகவதாரப் புருஷனைப்போலத் தோன்றப்படுகின்ற திராக்ஷதர் குலத்தி லுற்பவித்த-விபீஷணன் பிரகலாதன் மாபலி முதலானோர்கள் மாபக்தர்களான தெல்லாமறிந்தது தானே - பகவானுடைய லீலையை யொருவராற் சொல்லக்கூடிய தல்லவென் றனந்தம் வார்த்தைகளாடி ஸ்ரீமந்நாராயணருடைய தியானத்தி லெழுந்தருளி யிருந்தார்.

பின்பு கபீர் - தன்வீட்டை யடைந்து-தாய்தந்தையர்க்கு நடந்தவர்த்தமானங்களை - நவின்று-சதாதமுந் தாரக மந்திரத்தைச் சிந்தனைஞ்செய்துக் கொண்டு-காலையிலெழுந்து சாதுவியிற்படிந்து-ராமானந்தஸ்வாமிகளின் திலகமணிந்து - துளபத்தாமங்களைப்பூண்டு - ஸ்ரீமந்நாராயணருடையதிவ்விய திருநாமங்களை யெல்லாஞ்சேர்த்துபலகீர்த்தனையாகப்பாடி பலருக்கும் விரித்துரைத்துக்கொண்டிருந்தார்.

கேட்டீர்களோ சித்தர்களேயென்று நாபாஜிசித்தர் பின்னுஞ் சொல்லத்தொடங்கினர்.

குருவாழ்க.

அ - வது - கபீர் துலுக்க
மதத்தைக் கண்டித்த
அத்தியாயம்.

இப்படிகபீரிருக்கையிற் றுலுக்கரெல்லாரொன்று பச்சேர்ந்து - தமாலியும் - ஜிஞ்ஞாபியையும் விளித்து நீங்கள் துலுக்காயிருந்தும்-இத்துக்களைப்போ - காரய ... ஸ்ரீராமாவென்று கூக்சலிட்டுக்கொண் டெங்கள் தெருவிலிருப்பது தகுதியல்ல இக்கணமிவ்விடத்தைவிட்டுப்போருங்கள் - இந்துக்கள் வீதியிற்சேருங்களென்க டு. கபீர்த்தனைநிறைத்தகேட்ட.

கபீர் துடுக்கரைநோக்கி-நீங்களுரைத்தால்நாங்கள் போவோமோ-ராம் - ரயீம் ஒன்றென்றறியாவுங்களுடன் வாதுசெய்வோமோவென.

துலுக்கருள்மிகவுங்கற்று.

காஜி கபீரைப்பார்த்து - காத்தைப் பிடித்திழுத்து ராம் - ரயீம்-ஒன்றென்பதெப்படி-ராமனென்பவன் தசரதனென்னு மோர்மனிதன புத்திரனுகும்-ரயீமனன்பது ஜனனமரணமில்லை நிருபமாகிய கடவுளாகும்-உண்மை உரியாவுன்னுடன் பேசுவதாலோர்-பயனுமில்லையென.

கபீர்-ஓ சற்றுமறிவில்லாக்காஜியே-நித்திய நிர்மல சொரூபமாகிய-பரப்பிரம்மத்தினம் ஸத்தைப் - பெற்று ... நட்டிக்குங்கர்த்தாவாகிய மகாவிஷ்ணுவு கு ... துஷ்டநிக்கிரகஞ் செய்யவேதேதா னதனிலுடனுதிய இராவணனைச்சம்ஹாரஞ்செய்ய-தசரதராஜனுக்குபுத்திரனு யவதரித்தா ரவரையா னிடனென் றெந்தமதிகொண்டறைந்தாயென.

காஜி-அடாபொய்சொன்னுலும்-பொருந்தச்சொல்லவேண்டு மப்படிக்கின்றி கடவுள் வேறு-உலகரானோருபிக்குங்கர்த்தா வேறென்று நீ யொருவன் - சொல்லவேகேட்டேனுல்வேதமேயில்லை இந்துமதத்திற் பிரவேசித்த உனக்குண்மை தெரியுமோ - நெரியப் போகின்ற தெட்டியுடன் சேர்ந்த இலவந்திப்பட்டது போ விந்துக்களுடன் சேர்ந்த நீரகத்துக்கே யாளாகவேண்டுமென.

கபீர்-என்வாயில்வந்தபடி பிதற்றுகிறீர்-நிருபமாகிய பரப்பிர்மமே ஆதிதெய்வமானாலும் - அதிலிருந்துண்டான பகவானாலேயே மானிடர்முதலான - சகலலோகங்களு முண்டாயிற்று ஆனதாலாதியிலிருந்து சகலருந் திரிமூர்த்திகள் ரூபமானவிக்கிரகங்களைப் பணிந்துக்கொண்டேவந்தார்கள் அதைமத்தியில் விக்கிரகித்த இப்ராகீம்முதலானவர்களுக்குக்கொடிய ஆக்கினை கடவுளிடைக்கும்படியாய்ச் செய்ததபத்தமோ, அன்றி ஆதியில் சிஷ்டிகர்த்தாவாகிய - பிரமதேவனாலுண்டாக்கப்பட்ட வேதங்களே மெய்யானதன்றி நவோத்தரத்திற் பிறந்த மஹம்மது என்னும் ஓர்மானிடனாலுண்டாக்கப்பட்ட வேதத்தைமெய்யென்று நம்பக்கூடுமோ இதுதெரியாமலேயென்னுடன்வமபுசெய்யக்கூடுமோவென.

காஜி-நிருபமான கடவுள்நினைத்தமாத்திரத்தில் - உண்டான இவ்வுலகத்தை ரூபமுள்ள பிர்மாவாற் செய்யப்பட்டதென துரைத்தவுன்மூடத்னதைப்படிதெளிவிப்பேனன்றிஎங்கள் சற்குருநாதனாகிய மஹம்மதுக்கு கடவுளுத்தாரப்படி - தேவதூதர்களால் - கொண்டுவந்து கொடுக்கப்பட்ட-வாக்கியங்களே - சத்தியவேதமாகு மதிலுற்றநாட்பார்த் தங்களுன்னைப்போன்ற அற்றர்களுக்குத் தெரியப்போகின்றதா வென்றுரைக்க.

கபீர் - கடவுளுக்கு நினைப்பிருந்தால் மறுப்புமுண்டே-இப்படி சங்கற்பவிகற்ப - முள்ளவர்க்கு-தேகமுமுண்டாயிருக்குமே-தேகத்துக்கோர்ரூபமுமுண்டே நிரூபத்துக்குரூபமேது நிர்ச்சங்கல்பத்துக்கு - சங்கல்பமேது நிர்விகற்பத்துக்கு விகற்பமேது நிர்ச்சலனத்துக்குச் சலனமுளதொழிலேது சலனமில்லாமற் - சகமுண்டாகுமா ரூபமில்லாமல் நினைப்புண்டாகுமோ சொல்வதாகாயத்திற்கப்பலோடுகிறதென்றும் அந்தரத்தில் மாங்களிருக்கிறதென்றும்-வெளிக்குச்சுமுண்டென்றும்-வளிக்குரூபமுண்டென்று- சொல்வதுபோலல்லவோ யிருக்கின்றதன்றி சங்கல்பவிகல்பமில்லா நிருவிகற்பமாகிய கடவுளுக்கு ரூபமில்லாமலிருக்க - தேவதூதர்களுக்கு வாக்கியங்களை - எவ்விதமாயெழுதிக்கொடுத்தார் - எள்ளுக்குளெண்ணெய்போலவும்பாலுக்குள்வெண்ணெய்போலவும் - எங்கும்பரிபூரணமாயிருக்கும்பரப்பிர்மம் எவ்விடத்திலிருந்துதூதர்களுக்குமஹம்மதிடம்போவென்று கட்டளையிட்டார், மஹம்மதிருக்குமிடத்திற்பரப்பிர்மமில்லாமற் போச்சுதா வடிவும் வாக்குமில்லாதவர் கொண்டுபோவென்றெப்படியறைந்தார்ஆகாயத்திலிருந் தனுப்பப்பூமியி லில்லாதவரோகடவுள் கருணையுடனே நபரித்திய வாக்கியங்களாலேவேதத்தில் ஜீவஹிம்ஸை செய்யும்படியான வாக்கியமிருக்குமோ இவ்வாக்கியங்களிற் சிலதை இப்ராகீமென்பவர்-குமாரரில் ஒருவனாகிய - இஸாக்கென்பவன் தள்ளக்கூடுமோ சத்தியவேத மல்லவென்று விள்ளக்கூடுமோ அதுக்கவும்மிலைத்துக்காதித்துணையான இப்ராகீமென்பவர்பலவாறுனிரித்துரைத்தும்-இஸாக்கென்பவன் சொந்தக் குமாரனாயிருந்தும்-பொய்வார்த்தைகளை லென்னைபேமாத்தவேண்டாமென்று தந்தையைபட்டினத்தைவிட்ட கற்றக்கூடுமோ ஓ காஜி-உலகத்தில்தங்கள்தங்கள் பேர்விளங்கும்பொருட்டு - ஓரோர்மதங்களையேற்படுத்தி-அதற்குத் தகுதியான வாக்கியங்களையுஞ் சேர்த்து-வேதமென்று - நாமமிட்டு-தன்னை சகலருந் தொழும்படியாயதில்வரைந்து - இதுவேசத்திய வேதமெனறும்-இதுவேதேவனுடைய - கட்டளையென்றுதப்பிதந்து-மானிடர்களை எந்தவழியாலும் நீற்காமல்கெடுத்தார்களன்றி-மோக்ஷமார்க்கத்தை கற்பிக்கவில்லை, இந்தமதபேதங்களால் மதமேவிருத்தியாகின்றதே யல்லாமல் சம்மதமான சாந்தகுணம் - பிறக்கப்போகிறதே யில்லை, மோக்ஷமடைபவன்-மானிடனைத்தொழுவானேன்-தொழுது அழுவானேன் ஜீவகாருண்யத்தைக் கைக்கொண்டு-கடவுளைநோக்கித் தவஞ்செய்யாமற் கொலைபாதகத்துக் குடபட்டு மாயையாற்பங்கப்பட்டு இதோகதிக்காளாகும் காரியங்களைச் செய்தாலண்டவனருளை யுகமுடிவிலுமடைதற்குக் கூடுமோ வென.

காஜி-சச்சிதானந்தக்கடவுளைவிடுத்து மும்மூர்த்திகளைத்தியானிப்பது மூடமல்லவாவென.

கபீர - மஹம்மதுயென்னும் ஓர் - மானிடனைப்பணிகிறதைவிட மும்மூர்த்திகளைப் பணிவது மூடமல்லவென.

காஜி - ரட்சகர்த்தனாகிய - விஷ்ணுதானேவந்து ராவணனைக் கொல்லலாகாதோ மானிடப் பிறப்பெடுக்குங் காரணமேதோவென.

கபீர - தேவர்மூவராற் சாகா வரம்பெற்றதற்காக மானிடனா யவதாரஞ்செய்ய நேரிட்டதென.

காஜி - ரட்சகன் சம்ஹாரஞ் செய்யக்கூடுமோவென.

கபீர் - ரட்சகனாகிய இராஜன் துஷ்டர்களை நிக்கிரகஞ் செய்கிறதைப்போல - துஷ்டனான இராவணனைக் கொல்லநேரிட்டதென.



காஜி -சிரேஷ்டமான இவ்வாக்கையின் மேன்மனனைக்குறைத்தணிவது மடமையல்லவாவென.

கபீர் - அனித்தியமான இச்சரீரமெத்தனைநாளிருந்தாலும் - மண்ணேயாய்ப்போகுமென்று பிதை நம்பாநிர்கவென்று மும்மைப்போலொத்தவர்க் கறிவுணர்த்து மடையாளமானது - மடமையைத் தவிர்க்குமேயல்லது மடமையைக்கொடுக்காதென.

காஜி - ஆனாலுங் கல்லைக் கும்பிடுவ தறிவீனமல்லவோவென.

கபீர் - எங்கும் - நிறைந்திருக்கும் பரப்பிரமம் கல்லிலுமிருக்கிறார் - இக்கடத்துள்ளு மிருக்கிறாரென்றும் - அபக்குவர்க்கு - ரூபமுள்ள திரிமூர்த்திகளை புறம்பில் ஊனக்கண்ணாற் பார்த்துப் பணியவும் பக்குவர்க்கு - நிருபமாகிய பரப்பிர்மத்தை அகத்தில்ஞானசட்சுவாலறிந்து தொழவும், விதித்திருப்ப தறிவீனமல்ல அவன் - உவன் - என்பவர்கள் செய்த அக்கிரமத்தைத் தேவர்கள் பொறுக்கமாட்டாமலவர்களைக் கண்டிக்கத் தேடுகையில் தடாகத்தில் மூழ்கிமிறந்த அவர்களின்காக்களைவைத்துப்பூசிக்குமானிடர்களே அறிவீனரென.

காஜி - உங்கள் வேதத்தில்-ஆதிமனிதனியாரென்றுரைக்கின்றதென.

கபீர் - பிர்மாவால் மனுவும்-மனுவால் மானிடருமுண்டாக்கப்பட்டாரென.

காஜி - அதற்கு திர்ஷ்டாந்தமேதென.

கபீர் - மனுவாலுண்டானதால் மானிடரென்றும் மானிடர்க்குரைத்த நீதிகளை மனுநீதியென்றும் சொல்லப்படுகிறதே திர்ஷ்டாந்தமென.

காஜி - கடவுளாலுண்டாக்கப்பட்ட - ஆதாமே ஆதிமனுஷனன்றி மனுவல்லவென.

கபீர்-கடவுளுக்கு ரூபமேயில்லையென்றுரைக்கும் நீ-கடவுள் ஆதாமைச் சிருஷ்டித்தாரென்பது சாஸ்திரவிரோதமாயிருக்கிறதன்றி அனேக சங்கைகட்கு மிடங்கொடுக்கிறது பூதத்தா லுண்டாக்கப்பட்டாவையே ஆதாரூபமென்றும் - அந்த ஆயத்துக்கு கடவுள் ஆவியை யூதினாரென்றும்-ஆதாம் கடவுள்கட்டளையை மீறினாரென்றும்-பூதம் - கடவுளுக்கு விரோதமாயிருக்கிறதென்றும் - தன் கட்டளையைக்கடந்த ஆதாமை வானுலகத்திருந்து தள்ளிவிட்டாரென்றும்-கடவுள்வாக்கியத்துக்கு பூதம் மாறுபட்டதென்று முரைக்குஞ் சொற்களெல்லாம குற்றமாகவும்-அபத்தமாகவுமேயிருக்கின்றது எப்படியென்றால்-கடவுளைத்தவிடத்தில் எந்நுருவாயிருந்தார் - ஆவியையெப்படி யூதினார்-எந்தவுலகத்திலிருந்து தள்ளினார் - எல்லாவல்லமையுள்ள கடவுளின் கட்டளையை மானிடன் தவிர்த்ததென்ன அற்பமான ஒருபூதம் - கடவுளையெதிர்த்ததென்ன அவருடைக்கு மாறுபட்டதென்ன திரிகாலங்களையு முணர்ந்த கடவுள் - பின்னடப்பதறியாமற் போனதென்ன பூதத்தை அழிக்காமலிருந்ததென்ன பூதத்தால் கெட்டவர்களுக்கெல்லாம் நரகத்தை யுண்டாக்கினதென்ன நிருபமாகியகடவு ளெவ்வுலகி லிருக்கிறார்-மோட்சமென்ப தெந்தலோகத்திலிருக்கின்றது நரக மெவ்வுலகிலிருக்கின்றதென்று மனேகவிதக்களுக் கிடமாயிருக்கின்றதென.

காஜி - ஓ-கபீர்-நீபேசுவதெல்லா மகடவிகடவார்த்தைகளாயிருக்கின்றதெப்படியெனின்-மோட்சமுநரகமுமில்லையென் றுரைக்கலாமோவென.

கபீர்-மறுஜென்ம மெடுக்காமற்போவதே மோட்சம்-ஜென்மமெடுப்பதே நரகமென.

காஜி-நகைத்து-ஓ-கபீர் - கறந்தபால் முலையிற்பிரவேசிக்குமா கடைவெண்ணெய் மோரிற்புகுமா கழிந்தநாள் பின்னும்வருமா காய்ந்த இரும்புண்ட நீர்க்குமா இறந்துபோய் பஞ்சபூதமயமாய்ப்போன பின்பிறக்கக்கூடுமா வென.

கபீர்-ஞானசிருஷ்டி-ஞானப்பிரளயம் - ஜீவசிருஷ்டி - ஜீவப்பிரளயம் - பிர்மசிருஷ்டி பிர்மப்பிரளயமென் [illegible]திருக்கநீர் வொன்றுமறிவில்லையென் றுரைக்கக்கூடு[illegible]வென.

காஜி - இந்த ஞானத்தின் விபரமேதென.

கபீர் - ஞானசிருஷ்டிப் பிரளயமாவது - நினைத்தது மறத்தலுமாம் தேகசிருஷ்டிப்பிரளயமாவது ஜாக்ராவஸ்தையுஞ் சுழுத்தியுமாம் தேகசிருஷ்டிப்பிரளயமாவது - ஜனனித்தலும் - மரித்தலுமாம் ஜீவசிருஷ்டிப்பிரளயமாவது - தேகத்திற் பிரவேசித்தலும் நீங்குதலுமாம பிர்மசிருஷ்டிப்பிரளயமாவது - அண்டாண்டங்களுண்டாதலும் ஒடுங்குதலுமாமென.

காஜி - நீ சொன்னதெல்லாஞ் சரியேயானாலும் ஒருவர் மரித்தபின் ஜென்மிக்கிறதென்பதுமாத்திரம் கூடவேகூடாதென.

கபீர்-ஜீவனுக்கு ஜனனமானமில்லை - தேகத்துக்கே ஜனனமரணமென.

காஜி - மரித்ததேகம் பின்னுஞ் செனிக்குமாவென.

கபீர்-மரித்ததேகமே ஜெனிக்குமென்பது கூடாது - வினையின்படியே ஜீவர்களுக்கு சரீரமுண்டாகுமென.

காஜி - சிவர்கள் செய்த நற்றீகர்மப்படி நிரையமாவதுமோக்கமாவதடையவேண்டியதே காரணமன்றி அடிக்கடி ஜெனிமித்தலென்பது கூடாதென.

கபீர் - மோட்சமடைந்தவர் கடாக்ஷ சுகத்திலிருக்கட்டும் - நரகத்தை யடைந்தவர்க்கு விமோசனமெப்போதென.

காஜி- எப்போதுந் துன்பத்தையே நுகரவேண்டுமென.

கபீர்-சற்றுதிங்கு செய்தார்க்கென்ன கெதியென

அவர்கட்கு மக்கதியேயென.

கபீர் - இப்படியுரைப்பது சாஸ்திர ஸித்தாந்தமாயுன்னுடைய யுக்தியோவென.

காஜி - எங்கள் வேதத்திலிப்படியே யுரைக்கின்றதென,

கபீர்-நகைத்து-இதுநல்ல நியாயமாயிருக்கின்றது சற்று வினைசெய்பவனுக்குத்தகுந்த தண்டனைவிதித்தாட்கொள்ளாம லெக்காலமும் நரகத்தில் வீழ்த்துவதென் றுரைக்கலாமோ - ஓ - காஜி - நான்சொல்லும் வார்த்தையைக்கேளும் - அதாவது - தேகத்தையன்றி வேறுநரகமில்லை விதேகத்தையன்றி வேறுமுக்தியில்லை நிச்சயமார்க்க மிதுவேயாமென.

காஜி-மரித்தபின் றுற்பவிப்பதற்குக் காரணத்தைக் காட்டுவாயோவென.

கபீர் - வுற்பவிக்கும்போதே குஷ்டவியாதி முதலான வியாதிகளுடன் பவமெடுப்பதே காரணமென.

காஜி - தாய்தந்தையின் சுக்லசுரோணித குற்றத்தால் வந்த குறையேயன்றி முன்செய்வினை யென்பது கூடாதென

கபீர - முன் யாதொரு தீங்குஞ்செய்யாச் சிசுவுக்கு - தாய்தந்தையரால் நூதனமா யேனிடர்வரும் - ரோயாளிகள் கர்ப்பத்தில் தங்கவேண்டியகாரணமேன் - அனேகங்கள் கெருக்குண்ட அங்ஙே பிதாவுக்கோர் பிள்ளையில்லாப் பிள்ளையைப் பிறப்பதேதெனென.

காஜி - இப்படி ஜனித்தல் ஈசுரேஸ்பரனுடைய செயலென.

கபீர் - யாதொருகுற்றமுஞ் செய்யாக்குழவியின் சிவர்களதிக பாவங்களைச் செய்வார்களென.

கபீர் - இப்படி ஒரு ஜீவனுக் கிடர்தந்தால் பல சிவர்கள் பாவஞ்செய்யாமலிருக்கிறார்களா கருணைநிதியான கடவுள் ஓர்கீர்த்தியஞ் செய்வாராகி லதுபழுதாகுமாதன்றி குற்றமில்லாதவனைத் தண்டிக்கும்-இராஜனையே தூஷிப்பதற் கிடமுண்டாயிருக்கின்றதேயென

காஜி - எங்கள் வேதத்தில் - அடிக்கடி ஜென்மிப்பதில்லை - கடைநாளில் - சகலரையும் கடவுளானவரெழுப்பி - பாவிகளையெல்லா மொருபக்கமும்-புண்ணியவான்களை யெல்லாமோர் பாலும் நிறுத்தி - நரகமோட்சங் கொடுப்பாரென் றுரைக்கின்றதேயென.

கபீர் - மனிதனு லேற்படுத்திய புஸ்தகத்திலிப்படியன்றி இனியெப்படித்தான்சொல்லும் - இம்படியே அனேகக் கட்டுக்கதைகளின் புஸ்தகங்களிற் சொல்லியிருக்கின்ற ததுகளை மெய்யான வேதமென் றுநம்பி-பிரஷ்டர்களானார்களென்றறைந்து - நல்லது - பாபிகளுக்கு நரகமும் புண்ணியவான்களுக்கு மோக்ஷமுமென்றுரைக்கு முங்கள் வேதத்தில்- ஜன்மித்தவுடன் றுவயதில் மரிக்கும் குழவிகளுக்கென்ன கெதியென்றுரைக்கின்றதென.

காஜி - அவர்களுக்கொன்று மில்லையென,

கபீர் - நரகமோக்ஷத்துக் குதவாச் சிறுகுடி யன்வான் செய்வாரோவென,

காஜி - சகல சிவர்களும் தங்களுக்கு மரணமுண்டென்றறியவும் - பயந்து நல்வழியில் நடக்கவும் அநித்திய வஸ்துக்களை - அபேட்சிக்காமலிருக்கவும் செயுஞ் சிறுசெயலென.

கபீர் - ஜநசர் - பிறக்கும்போதும் - இருக்கும் போதும் - இறக்கும்போதும்-துன்பமாயிற்றே, முன்



வினையே யில்லையெனின்-இப்படிக்குங்குழவி இவைகளைப் பிணிகளாற் றுன் படைந்து - மரிக்குமாயின் - காண்முன்னேயடைந்த துன்பநோதும் யார்பெற் கமற் றுகிறதென.

காஜி - இது ஈஸ்வரனுடைய லீலையா தலையால் மீறுஞ்சமத்தக் கூடா தென,

கபீர்-அப்படியானால் ஈசுரன் விளையாட்டை யனேகருக்குத் துன்பத்தைக் கொடுத்து லீலையென்றுரைப் போமென.

காஜி - குழந்தைகட்கு அபயிர்த்தியும் - கொடியவியாதியும் வருவதேனெனின் - தந்தைதாய் செய் கருமம் சந்ததிக்காமென் றுரைக்கக் கூடாதோவென.

கபீர் - முதுவல்காட்டி தாய்தந்தை செய்கர்மம் சந்ததிக்குண்டாகுமாயின்-பாபிகட்கு புண்ணியவானே றுற்பவிக்கிறான், புண்ணியவான்களுக்குத் துஷ்டனேன் ஜன்மிக்கிறான் பிரதிப்பக்ஷப் பிரமாணமாய் தகப்பனே வலாளனும் சுதன் தனகர்தனுமிருக்கும் காரணமேன், அவரவர்கள்செய் கர்ம மவரவர்களே அனுபவிக்கவேண்டுமன்றி ஒருவர்செய் கர்மதர்மம்-ஒருவரை யடையாது, ஒருவனுக்குச் செனமித்த-மைந்தர் நால்வரிலொருவன் ஞானியாகவும், ஒருவன் விவேகனுகவும், ஒருவன் மந்தபுத்தியுடையவனுகவும், ஒருவன் பிணியாளனுகவும்-இருக்குங்காரணமேன் ஒருவன்-தனசமபன்னனுகவும்-ஒருவன் தரித்திரனுகவும்-ஒருவன் பார்ப்பதற் கருவருப்புள்ள அங்கவீனனுகவும் - ஒருவன் அழகுள்ளவனுகவும்-மாறுபட்டிருந்தேன் ஓ-காஜீ-அவரவர்கள் முன்செய்வினைப்படியே நடக்கின்றதன்றிமற்றவன் செய்யும் லீலையல்ல, ஏகசொரூபனான கடவுளுக் கெப்போதும் பட்சபாதமில்லை - ஜீவர்கள் துன்பமடைதலவருடைய லீலையென்றுரைப்பது விவேகமேயாம, ஆதியில்-பிர்மாவானவர் மனுவைச்சிருஷ்டித்து அம்மனுவின் முன்னிலையில்மனுவரசையுண்டாக்க-மனு நிறப்படி நடப்பார்க்கும் மனுவிஜனனமில்லையென தும் மற்றவர்கட்கு மானிடச்சென்மமுங்கிடைக்கவில்லை அது முற்றிந்த வாக்கியப்படி-சிவர் கனுநிருணையனுசரித்து - ஏகாந்திகனனித்தியமென றரிந்து - நித்தியமானவைகளைத்தேடி உக்கிரமா தவத்தைநாடி அந்த போபரத்தால - ஞானக்கனா துனைகி-ஞானக்கனின் சேஷ்ண்டயமனைக்கி, பிர்மானந்தத்தை அநித்து - பெரியோர்களே சேவித்து, அவர்களருளால்-சுகவாரிதியிலாழ்ந்து தொடர்ப கர்சநுத்திரததைக்காலமுமேட்சமடைவார்கள், அநேகர் - மனுநீதியை கிக்ரமித்து விஷயாதிபோகங்களை இச்சித்து-நாகத்துவேஷங்களாற் கட்டுப்பட்டு - ஸ்ரீவகாருணய நதனை நோன்புகளைப் பாருகாக்காமல் விட்டு - அநித்திய மகாபாவமுடைய தேகத்தை மெய்யென்றிருமாந்து - அளக்கனுற துக்கையை வளர்க்க இதர ஜீவர்களை இம்சைசெய்து - அபபாவங்களால் பிடிக்கப்பட்டு - அபயிர்த்தியுடுக்களாகி - ஈஸ்வரமையோனியிற் றெனித்து - மாயாமோக சாகரத்தைக் கடந்தேதுவதற்கோர் துறைகாணமுடியாமல் மயங்கி தயங்கி - மானிடனாநாளையும் பெறுவதற்கரிதாகி குடி கள்ளக்கனி அந்தன்றமைந்து - சிறுகுடிகர்த்தவமிய சொர்க்கத்துக்கு மிடங்கொடுத்தார்கள். முக்கியமான சத்தியவசனமாவது-ஜீவர்களைநற் கொருவர்களோ அதையே ஈசுரன்வரன்கொடுக்க அதிபவாக்யமளித்தார். மனுஷஜென்மத்தைக் குருதியான - மோட்சவழியைக் கோரமாணிட சவிவேகத்தைத்தருமித்துவாடமடைந்து - அவித்யாசம்பந்தமுள்ள ஜீவர்களிச்சையின்படியே - விஷயாநந்த போகத்தையே விரும்புறுவும் - பிறகாதி ஜென்மங்களெடுக்குமபடியாய்ச் செய்தார்.

ஈசுரிஸ்பரனுடைய அருட்பிரசாதம்பெறுமல்லாயாவாமும்கையிற் சிக்கிச்சொக்கி - மனத்தை மனமே அடக்கிடுத்தனைபோல - மாதாதி பெண்களையே மேனமேறு மயேட்டித்து - மாயாத்தகாக் குலைகில்வீழ்த்து அக்காகரத்தி லாழ்ந்துமாயை முனைத்தலையாற்பீடிக்கப்பட்டாககோனயன்றி-அனைடவனுடைய பட்சபாதஞ் சற்றுமில்லையேயில்லை - ஒரு தந்தைக்குப்பிறந்தபிள்ளைகளி லொருவனைச் சைக்குறிசெல்வவும் - ஒருவனை எரர்க்கவும் - செய்த தந்தைக்கு மனமவருமா அப்படிபிள்ளைகளைச் சிட்சைசெய்து - இரக்ஷ்டமைக்கர்களுக் கிறைபமளிக்குந் தாதைப்போலவே - பரமேசுவரன் அவரவர்கள் கர்மதர்மங்க ளெவ்வண்ணமாயிருக்கின்றனவோ அவ்வண்ணமாக-தோகதிபோகங்களைக்கொடுக்கின்றார்-விசேஷமாக ஜீவர்களுக்கு ஜனனமரணதுன்பங்களைக் கொடுப்பாரன்றுபோதித்துப் பாரப்பிரென்றுசாற்று.

காஜி - தன்னைத்தாய் கூடுமேவென யெப்படியோ அப்படியே முடியுமென.

கபீர் - கல்லவேனையிற் கூடியபோது தாக்குட்டிக்கவும்-தியானனையிற்புணரும்போது தரிக்கவும் விசே

பேகாரமையாகும் - அதிசயப்படுவேன்பீரோ, நல்வினை
மேற்பிறப்பிற் செய்திருப்பவன் நல்லவேளையிலேயே
தரிப்பான் - தீவினை செய்திருப்பவன தீவினைசெய்திரு
ப்பவன் தீயபொழுதிலேயே கர்ப்பத்திற் றரிப்பானாவ
னாகல் - கர்மிகளுக்குப் பிந்நிதுவன் கர்மிபாகிவே யிரு
ப்பானென்னிலது தந்தைதாயின் குற்றமல்லவா அப்ப
டியிருக்க வென்றனைத் தண்டிப்பானேன் அப்படி தண்
டிக்கக்கூடாதாயின் - இந்தமைந்தனைப்பெற்ற அன்னை
யத்தனையுஞ் சிக்ஷைசெய்யக்கூடாதே தொனின் அவ
ர்களையின்ற தந்தைதாய்க் குற்றத்தால் வந்தவர்களாத
லா லவர்களையும் கோபிக்கலாகாது இதுகியிலவர்களையி
ன்ற மூதாதைகளையுந் தண்டிக்கக் கூடாமல் - இந்தத்
தண்டனையே யில்லாமற்போய் விடுமேயா [illegible]
சங்கைசெய்வாரோ வென்றுரைத்து - ஓ - காஜீ - அவ
வர்கள் முன் சென்மத்திற்செய்த நல்வினை தீவினையின்
காரணத்தை - தண்டிமைச்சுமப்பவர்களையும் - ஊர்
த்துச் செல்பவனையும் - இராஜ்ஜியஞ்செய்பவனையும் - ஏவ
லாளர்களாயிருப்பவர்களையும் காட்டிப்பிரமாணமாய்க்
கண்டு சந்தேகநிவர்த்தி செய்துக்கொள்ளும் அன்றி
பொதுவான கடவுளுக்கு - இராஜன் செய்த லமென்ன
மற்றவர்கள் செய்தகொடுமையென்ன பட்சபாதமுள்
ள எவ்வாறுக்கு பரிபூரணனென்றும் கருணாநிதியென்
றும் சொல்லக்கூடுமோ அகமுகமுள்ள ஞானிகட்கரு
பமாகவும் - பகிர்முகமுள்ள பக்தர்களுக்குருபமாகவும்,
தோன்றுபவனொருவனேயன்றி உபயமல்ல ஆதலால்
நீங்களும் - ரூபமுள்ளபகவானை அகந்தியக்கிநதமூதாவ
னுமிசைப்பெறுவீர்களென.

காஜீ - ரூபத்தைத்திகாமூலவனுக்கு ராவணவர்தீனா
கமென்றும் - கடவுளுக்கு ரூபமுண்டென்பவர்களுடை
ளே இரண்டுறண்டாக்கினேனென்றுசொல்கின்றோ
ததிற் சொல்லியிருக்கின்றதேதியென.

கபீர் - இப்பிராயிம் பயம் பருதம்பாதியாகமுள்
இவ்வுலகிலுள்ள சமஸ்தமாந்தர்களும் - மும்மூர்த்திக
ளின் சொரூபங்களைப் பணியவில்லையோவென.

காஜீ - அவ்வேதத்தாற் பணித்தார்கள் - இப்பிரா
யிம் பயபர் கடவுளைத்தரப்படி பயந்தித்து அதைத
கண்டித்து கடவுளையே தியானிக்கும்படிபாய்ச் செய்
தாரென.

கபீர் - அந்த இப்பிராயிம் - தந்தையானவர் விக்
கிரகங்களையே செய்து அதை விக்கிரயப்படுத்தி - அவ்
விக்கிரயங்களை அன்டன் பூஜிக்கும்படியாய்ப் போதி
த்துக்கொண்டிருந்தவருக்குப் பின்னையாய்ப்பிறந்த இப்
பிராயிம்பவன் - தந்தையனைம் நோக்கிக்கிரகபூஜையை
நிக்கிரசித்து - அப்படியன் இதன்னோர்களா வடிபட்டு
வேறுதேசத்துக்கோட்டிவிட்டு - அந்தேசத்திற்றிற
ந்த ஓர் பட்டினத்திற் பிறவேசித்து - தான் ரூபாம்
பலாயிருந்தபவித்தவனுயிருந்தும் - இராஜன் புத்திரி - தக
க்கும் புத்திரியென்னுரைக்கும் நீதியைதமுறந்து அந்த
நாக்கிறைவனுடைய மகளாகிய அஜராவென்பவளைக்
காவடமாய்க் கவர்ந்து கன்னவரும் நதேசத்திற் கோடி
அப்பட்டினத்தாரன்புநதியானவாஜாவனைத்தவன்
மீதிருக்கும் மோகத்தால் லவன் சொற்படி பூஜைசர்ப்பவ
ளாயிருக்கு - தன்னை நம்பிவந்த அஜராவென்பவளைக்
காட்டிக்கொண்டுபோய்விட்டு அப்பாவத்தாற் சூழப்
பட்டு - பின்பவ்வாஜராவிருக்குஞ் சவுக்கியத்தையாரித்
து - சாராவுக்குச்செய்துகொடுத்த சத்தியத்தைக்கடந்
து - ஆஜராவைக்கூட - தலையும் முகமும் - குதிமுக
மொட்டையடிக்கப்பட்டு - மேன்மைகெட்டு - ஆஜராவு
க்குப்பிறந்த இஸ்மாயிலொருவழியாகவும் - சாராவுக்கு
ப்பிறந்த இஸாக் ஒரு மார்க்கத்திற்செல்லவும் - பிரஷ்ட
த்வத்தையடைந்து - இரண்டுமதங்களாகப்பிரிந்து - கம
ருத்ராஜா முதலானவர்களாற் றாக்கப்பட்டு - நாட்டை
விட்டோட்டையடைந்து - இவாக்குரங்களிற்சென்று அங்
கிருக்கும் மிருகத்தாக்கியையானை - சொதாகர்களுக்குக் கு
த்தகையில் முக்கப்பட்டவன் பலர்முகத்தைமுழுக்கந்
தனிக்குத்தைப்போல - அனேகமாந்தர்களைக் கெடுத்து
நிவாகருவாயத்தோடிருப்பவர்களைத் தடுத்து - பாவம்ப
ரவச்செய்து - யுத்தவார்த்தைகளால் புத்தகங்களைச்சே
ர்த்து - குரானென்றும் சத்தியவேதமெனறும் பேரி
ட்டு.

இஸ்மாயில் - இஸாக் - என்னுமிருவரும் - எங்கள்
வேதமே சத்தியமென்று முன்கண்வேதம் சத்தியமென்
றுந் தர்க்கித்து - குதர்க்கவார்த்தைகளாடி - அம்மதத்
தை நிலைப்படுத்துவதற்குத் தங்களாலாகாமல் மரிக்கும்
போது தங்களையண்டினவர்களுக்குபதேசித்து - சகத்
திற்பிரவேசித்தார்கள், பின்பப்புத்தக்க ஏரண்டையும்
அதிலிருக்கதொருவிதமாகவே யிருக்கும் நீதியுன்
னோர் சமுத்திரத்திலேயழ்த்துவிட - அன்றுமுதல்வர்கனி
லேயே தர்க்கம்விழுந்து - உங்கள்வேதம் சமுத்திரத்
தி லெறியப்பட்டதென்றும் - உங்கள் வேதமே சமுத்
திரத்தில் மூழ்கிப்போச்சுதென்றும் - குதர்க்கங்களாடி
இந்நூக்களால் நீக்கப்பட்ட - நீச்சர் மிலேச்சரென்று
மிருவரும் - மதப்படி அவர்த்துமதத்திற் பிரவேசித்த



கூடாமல் - முன்மாதிரி - மிருகங்களைப்போல் பாலை
வனங்களி லலைந்துதிரிந்து இஸ்மாயிலைச்சார்ந்த நீச்சர்மா
த்திரம் - அஜராயிருந்த - இடத்தை முக்கியஸ்தானமா
க்கி - மக்காவென்றுபேரிட்டு - இருதிரிலுண்டான ம
றுமைதுவாலேற்படுத்திய புத்தகத்தை வேதமென்றும்
மஹம்மதுவே குருவென்றும் நம்பி - இப்பிராயிமுக்கு
ண்டான - ஆக்கினைக்குட்பட்டார்கள் நீங்களு மதுவே
வழியானீர்கள் - மற்ற - இஸாக்கைச்சார்ந்தவர்களா
கிய மிலேச்சர் நானே தெய்வமென்றுரைந்து கொடிய
ஆக்கினைக்குட்பட்ட ஏசுவென்னும் ஓர் மானிடனைக்
குருவென நம்பி அவனுடைய சரித்திரங்களையே வே
தமென் றுறுதிகொண்டலைகிறார்கள் இப்படி யிவையே
ண்டுங்காரணம் - விக்கிரகத்தை நிக்கிரகிக்க - இப்பிரா
யிமால் வந்ததாம், கலோகத்தில் வழிதப்பிப்பிச
கிறோர்க்கு - மதியிலுண்டான புத்தகங்களும் - வித்
தையிலும் புத்தியிலும் - சித்திவித்தையிலுஞ் சற்றுச்
சிறந்தவர்களும் - வேதங்களாகவும் - குருக்களாகவும்
இருக்கவேண்டியது முறைமையேயன்றி சற்றும்பிச
கில்லை, ஏனெனின் - மஹம்மதுவுக்கும் - ஏசுவுக்கும்
முன்னிருந்தவர்களுக்கெல்லாம் குருவாரோ வேதமே
தோ அதையுங்களாலறியக் கூடியதுமல்ல - சொன்னால்
நம்பத்தக்கதுமல்ல, முன்னமே குற்றவாளிகளென்றுசொ
ப்பட்டவர்கட்குப் போதிக்கவுங்கூடாது - சொன்னாலுக்
குக் கொலைசெய்தலைக் கூறினுற் குற்றமாகாதிருக்கு
மன்றி அறிவாளுக்கு ஆசாரத்தையு - விபசரிக்குசத்
தின் மேன்மையும் விரித்துரைத்தால் - கடப்பாதவேயி
ருப்பதன்றி - போதிப்பவர்க் காயாசமே பிரயோசன
மாகுமென்றுரைக்கக்கேட்ட.

அதுங்கரெல்லாம் மிகவும் ஆக்கிரமக்குரோதர்க
ளாய் கபீரை வெட்டடென்றுங் குத்தென்றுங் நெருக்கி
வரக்கண்ட.

கபீர - ஓஜ லுக்கரேமுன் புபிரகஸ்தனையொக்கும் - அரி
யே - இறைந்திருக்கிறானென்று சொல்லக்கேட்ட இரணிய
ன் இந்தத் தூணிலுமிருப்பானோவென் றறைந்தத்தூ
ணிலிருந்து வெளிப்பட்டபகவானை விறந்ததுபோலுங்க
ளுக்கும் நேரிடும்போலிருக்கிறதென.

அதுக்கர் - ஏதோ அந்த அரியையழைப்பியும் பா
ர்ப்போமென்று தற்களையுங்கட்டைகளையு மேந்திக்கொ
ண்டு நிற்க.

கபீர் - காஜியைநோக்கி - ஓ காஜீ - இவர்களெல்லா
முனக்கு சீக்கமானவராதலால் நீயொருவனேன்னை ரு
இவ்வந்து - பரீட்சைசெய்யவேண்டியமவருமுடையவரா
ளுற் - பரிசித்துப்பாரும் - ஏதோ [illegible] காட்டித்தாரும்
என்று ஓர்முனைப்பமணியைப் - பிரயாசித்தா ராது அதனி
ணிக்கவார்லயாயெறிந்து வாரிக்கண்டவுடனல்லாம்
மூலைக்கொருவராயோட்டமெடுத்து இனியிந்த நாட்டி
னிருக்கு மிடத்தில் நாமிருக்கவேகூடாதென்று தங்கட
ங்கள் வீடுகளைப்பிரித்துக்கொண்டு வேறிடம்போய் - த
மால் வீட்டைத்தனியாக்கி - கபீர் மகாமந்திரவாதியென
த்திர்மானித்து - கபீரைக் கண்டாற்பயந்து யோக்கு நடு
ங்கி ஒதுங்கி இருந்தார்கள்.

பின்புகபீர் - அனந்தமாய் ராமமந்திரத்தைத் - தி
யானஞ்செய்துக்கொண்டு - வீட்டைச்சூழ்ந்த நிலத்தில்
தானபுந்தோட்டமொன்றேற்படுத்தி காலங்கழித்துக்கொ
டிருந்தார்.

கோடிசகளோ சித்தர்களேயென்றுசாபஜிதித்தர்
பின்னுஞ்சொல்லலானார்.

## ரு - வது - கபீர்கோரக்கரைவென்ற அத்தியாயம்.

இவ்விதமாய் - கபீர் - சுவாசம் புராணவருகை [illegible]
அதற்றிற் செல்லுகையிலும் சாமகாமமென்றும் நா
மமந்திரத்தை மனனஞ் செய்துக்கொண்டு - ராமனைத்
த்யானிகளின் பணிவிடைக் [illegible] வ
ட்டமுற்றிருக்குங் காலத்தில்.

மச்சேந்திர நாதருடைய மாணாக்கனாகிய கோரக்
கநாத னென்பவன் - சத்திரநாதர் - சேதுநாதர் - ஆதிநா
தர் - அநாதிநாதர் - வகுளிநாதர் - மதங்கநாதர் - மச்சேந்தி
ரநாதர் - கடேந்திர நாதரென்னும் - நவமாருடன் - தானு
மொரு சித்தனென்கிற பேர்பெற்று - நவசித்தர்களென
னப்பட்ட - சூரியனுக்குமுன் - நக்ஷத்திரங்களுக்கிளையாய் - தப
சிகள் பிரகாசமடையாதவொவென்கிற அகந்தைகொண்டு
அணிமா - மகிமா - கரிமா - இலகிமா - பிராப்தி - பிராகாமியம்
ஈசத்துவம் - வசித்துவமென்னும் அஷ்டசித்திகளையு
மோர்விளையாடலாய் [illegible] அஷ்டசித்திகளையடைந்த

து காட்டினும் காட்டுது முசாவி-அநேகஷிஷியர்பார க்கே பெல்லாம் பகைப்படுத்தி-தனக்கு ஸேத்யமாக்கிக் கொண்டு-ஈறிலையடைந்து-ராமானந்த ஸ்வாமிகளின் பெண்மையைக் கெடுக்கிப்பட்டு - மடத்தினருகில் ெ சென்று மடத்தின் விருத்தியும்-அதிலிருக்கும் விஸ்தாரத்தையும்-வேதகோஷத்தையும் விக்ஷணசங்கீர்த்தனங்களையுங்கேட்டு டாசசரியரும் மாத்சரியமுங்கொண்டு, மடத்தின வாயில்லெதிரில் குலத்தைகட்டு-அதின் தனியில்-வஸ்திரத்தைவிரித்து-சிரதாமமான அவ்வஸ்திரத்தின்மேல் வீற்றிருந்து-அந்த ராமானந்தர்-ஆலயிலையோரிஷிடமைப்புசக்கரை யென்பதுபோலொன் றும் அறியா அந்தணர்களைச் சேர்த்துக்கொண்டு-ஆசாரியனென்றும் - பேர்பெற்று - மடத்திலுள்ளவைகளை செய்கிறாய்,உன்னுடைய தபோபலத்தை இப்போதே காண்பித்தாலொழிய இல்லாவிடில் நீயும்மடமுமுடன் பாழ்ப்போக்குவோம் - கறைபிடியாமையும் நீயும் னைக்கும் சாஸ்திரமுமே உன்னுடையதெய்வத்தையும்-நீ ஜெபிக்கும் மந்திரத்தின் கனத்தையுமறிய நீயல துன்ஷிஷர்களாவது வெளிப்பட்டென்னோடே வ குலத்தின்மேல் இருந்துக்கொண்டு ஜெபஞ்செய்பவர் கும்கள் இல்லாவிடில் வொமேனகத்தைத் தொருக்கொ ண்டு மிகவும் ஆக்ரோஷத்துடன் ஸ்டாசைவிட்டுக்கொ ண்டிருந்தனை இரைச்சலுடன் கூப்பிடுகிறதைக் கேட்ட.

ராமானந்த ஸ்வாமிகளின் சேவகனாகிய மனு போறும் மாணுக்கருமுதிகளோட தீப்தர்களை யெரித்து மாணுக்கருமுதிகளோட தீப்தர்களை யெரித்து யெரித் து அப்படி ஸ்வாமிகளைப்பேசிட்டமை பல துஷ்டரி ப்போதே எமலோகசிரைக்குக் கனுப்புவேனென்று நடங்காக்கோபத்தால்மிகும் - பாம்பைப்போனிரும் கர்ச்சிக்குஞ்சிங்கத்தைப்போலவும்-புலியைப்போலவும் பாய்ந்தமைலர்த்ததைநாடிக்கொண்டு மடத்திலிருந்து வெளிப்பட்டு-குலத்தின்மீதிருக்கும்-கோரக்கநாதனைப் பார்த்து-வேர்த்து-சிரித்து - கம்பித்து-அடங்கி ஒடுங்கி-பயந்து-வந்து ஸ்வாமி கிளிரியாசென்றுவிழுவ.

அதுகேட்ட கோரக்னமுனிவுடன்-அடடாபிரா மணப்பயல்களே-சாஜுவென்றுபேரெடுத்தவர்களுடன் வாதுசெய்து - தோற்றவர்களைச்சிறைச்சாலையிலடைத்துவைக்கும் கோரப்பற்றியுடைய விரக்ரமபராக்கிரமகோரக்கித்தனென்றறியீர்களோ உங்களாவியை க்கொள்ளைகொள்ளு மெமனைக்குறிபீர்களோ அந்த ராமானந்தனென்பவனெங்கே - ஒதுங்கிப்பதுங்கிக் கொண்டிருக்கிறு னவனென்றுன் வசர் செல்லுங் கள் றாடமைச் சற்றுமில்லுங்கனொத் தன்பெருங்குரலைத் திரத்தோனையுட னாட்டுப்பேசுது.

அந்தனர் புலியைப்பார்த்து லிகியமைடந்த பசுக் கூட்டத்தைப்போல் தெதி - அலக்கணுறப்பேரட்டமெடுத்து ராமானந்தஸ்வாமிகளையடுத்து-பாதகிரமங்களை வி தேத்து யாவரையும் வெளியிற்போகமற்றடுத்து ஓ ஸ்வாமி கோரக்கனென்னுமிராக்ஷதன் வந்துவிட்டான்-நமக்குத் தன்பத்தைத்தனுது விட்டான் - இனியென்னசெ ய்வாம் எவ்விடத்திற பதுங்குவாமென்று முழ்கிவிடுகின்ற தேதுமையில்.

ராமானந்த ஸ்வாமிகள் இடுகிடென நடுநடுங்கி குடலைக்கண்ட சர்ப்பத்தைப்போ - லடங்கி - தெளிமா வைக்கண்ட யானையைப்போலொடுங்கி அப்பா-அந்தக் கோரக்கன் பொல்லாதவனுயிற்றே - நம்முடைய பெருமையின் அடைமுடிந்துப்போயிற்றே யென்றுதி வருணைசேர்க்கி-ஓ ஷிப்பிர்களே-இப்போது சாம்செய்யு முபாயமென்ன - சாத்தும்பனென்னைக் - காப்பாற்றுங்களென்று வாயுலர்த்து காந்தமெரி-மனத்திடுக்கிட்டு இடுகிடுப்பேசாயில்லாதபடி திகழ்ந்துதொடங்கினர்.

அப்போது-வேதியர்-ஓ ஸ்வாமி - தேவரீரோ-சித்தால் சக்ஷைவிட்டு-கோக்கை யாக்களிபோற்றுனம்பேசம்போது-கைகளைவிட-வெல்ல வலவர்களாச வெல்ல-மேன்மை புன்னவர்களா இக்கணம் பின்மார்க்கமா யிவைகுமோட்ட மெடுப்பதே நன்மை-இவ்வாவிட்டாலவருக்கிவய வென்றுக்க.

அதற்கு - ராமானந்த ஸ்வாமிகள் ஓ-தொருமுனுத் தோதே - தபோபலமெதோதே - இந்தருணத்தில் உங்களுக்குள்ள திராணிகளைக்காட்டக்கூடாதோ மந்திரசக் சேட்டனைகளால் - மாட்டக்கூடாதோ மாரணமோகதத்தால் வாட்டக்கூடாதே கோரக்கனை இக்கணம்போவட்டக்கூடாதோவென்று வினவ.

அதற்குப் பாப்பார் - ஓஸ்வாமிக்கெல்லாக் தலைவருன உதாரனென்பவன் - வீட்டில் பெண்கெளுக்கு முன் பாக்கிரமங்களைக்காட்டி யுக்தமுனையில் ஓ ஸ்வாமுடைய ஆவராத்தைப் பார்த் தச்சமுற்றேட்டமெடுக்க கிளைத்ததுபோல - நீ சிறுகைவையைாமி வென்றுக்கு நாரையாகிரியமில்லை யென்றவனையு மவமதித் திருந்தேம் கோரக்கனுக்குப் பயந்திக்கிமாப்போடிப் பதுங்குகிறீர் வயிற்றை வளர்க்கவந்த எங்களைக் காட்டி



கொடுக்கிறீர் இனி பரைக்கனும் மிம்மடத்திலிருக்க மாட்டோமென் ரோடிப்போக எத்தனிக்கையில்.

ஸ்வாமிகள - ஓ ஷிப்பிரர்களே - நீங்களெல்லாம் மேனுக்குப் பக்தரென்று காட்டி - கல்லெரியாருந் தங்கமலோட்டி - தபத்தில் வல்லவர்களெனப் பாராட்டி - இதுகாறுமபரியந்தமென்னைச் சீராட்டி - இப்போ வெளுத்தபத்தினைக்காட்டி - வியாஜுத்தா லென்னை வாட்டி - வேட்டமெடுக்கவா நினைத்தீர்கள் யுத்தமுனையி விராஜனை விடுத்தோடிப்போகுமா இழிவான கேடிகளைப்போல என்னைக்கைவிட்டுக்கொடுத்தோட்டமெடுப்பது நீதியா தீக்கியாஇயா இப்படிசெய்வதா லினவரும் தீக்கைசெய்ய மாட்டார்களா மனைநடமாக்கி டமாக்கிவாட்டார்களா யுத்தமுனையிற் புறங்கொடுத்தோடுகிறதைப்பார்க்கினும் எதிர்த்து மரித்தல் புகழல்லவா அன்பமவருங்காலத்தில் அறவியாமைதைவிட துன்பத்தையே தாக்கல் தாய்மையல்லவா ஓ யெனக்குரிய அன்பர்களே - மிகவும் கண்பர்களே சாட்சிக்காரன் காலில்விழுகிறதைவிட சண்டைக்காரனைச் சமாதானஞ்செய்துகொள்ளல் சன்னைபற்றதுபோல இந்தக் கோரக்கனை ஜெயிக்க வல்லமையில்லை காயவருஞ் சாஹநதியாலோம-சாணமென்பவருக்கு மானமில்லையென்று சாஸ்திரமும் முறையிடுகின்றதே - நீங்களறியாததுமல்லவே ஓ மனுஷடியில்லாச் சிஷர்களே கொக்கினையான வேஷர்களே-ஓடிப்போதல்சன்மையல்ல நன்மையல்லவென்று மறுக்கவும்.

இவர்ப்போர் கேட்காமல்-போமையா-இம்மடத்துடன் ஈங்களெல்லோரும் - பஸ்மமாய்ப்போகுவங்கோலம் கேட்டது-உமக்கென்னகெட்டது - நீருமென்வதின் மொழியைக் கடக்காமல் - ஓடிப்போகு மெங்களைமடக்காமல - கூடவேவந்து விடும் - இன்னதுனாசாக்கை வெந்துவிடும் - வினுப் மாணகாலம் வந்துவிடும்-சமஸ்தமும பகையாளிக்குத் தந்துவிடும்-என்றதைத் திவாரத்துக்கொண்டே புறநிறுவிருந்து புறப்படும் சமஸ்ப் போல் - மடத்துப் பின்வழியாய்ப் புறப்பட்டு கரமாய்க்கமுள் சிதறுகேரட்டமெடுத்துத் தனியனாக்கி விட்டார்கள் அந்தணர்க்குள்ள அச்சத்தைக் காட்டிவிட்டார்கள்.

பின்பு-ராமானந்த ஸ்வாமிகள் பிரம்மாண்டமான மடத்திற் றனித்திருக்க வெருவலுற்று-ஆ-ஆ-ஆ பதனுக்குதவப் புத்திரனும் மித்திரனும் கட்டமுடியாக் களத்திரமும், கவந்தவரும் பகையாளிகளெனத் தீர்மானிப்பதுபோல - தன் மாணுக்களையெண்ணி - பலவாரேலாசிக்கபண்ணி-இனி கோரக்கநாதனைநண்ணி-பூ பெட்டியோமென்றெண்ணி - மடத்தைச் சூழ்ந்திருக்கும் மாந்தர்களைப்பார்த்து - தேகமெல்லாங் வேர்த்து-கைகளைச் சேர்த்து-கடவுளுக்குத் தோத்திரத்தைத் தாரைவார்த்து காத்தகேனாவென துதொழுதுகண்ணீர்பெருக அழுதனைக்கும் வாலாமாபழுது-யாருமில்லையாவழுது-என்றச்சப்பட்டு உணர்வுகெட்டு துக்கமேவிட்டு-சக்கசதுக்குட்பட்டு-கோரக்கனுக்குப் பயப்பட்டு-பலபல என்னையிட்டுக்கொண்டிருக்குந் தறுவாயில்.

கோரக்கர் வந்ததும்-ராமானந்தஸ்வாமிகள் பயந்ததும்-மாணுக்கரோடினதும் - ஸ்வாமிகள் வாடினதும பலவாறே நாடினதும்-பிரஜைக்கரைக் கூடினதுங்கேள்விப்பட்ட,

கபீர்-பட்டுநூற் பந்தன்மையுடன்-ராமானந்தஸ்வாமிகளைத்தேடி-காலடிபுட்டத்தில் படும்படியாயோடி-ஸ்வாமிகளைநாடி-கோரக்கனோ பவன்போடி - நீரேன் வைத்திரவாடி-உமக்காபாசம் வரச்செய்யும் ஓர்வர்களையும்-தேவர்களையும்-மூவர்களையும்-மற்றியவர்களையும்-வெல்லுவேன் எதிர்த்தாற்கொல்லுவேனென்றும் பரித்து - சிரித்து-அந்தணரைத் தூஷித்து-அரியனைப் பூஜித்து - ஆகிந்தனைப்போற்பிரயமித்து-கோரக்கன் மேற் துவேஷித்து-தேசிகர்பாதங்களிற்பணித்து-திவ்வியவட்டிகளை யணிந்து-சற்றே கோபந்தணிந்து-எழுந்து காங்களைக் கூப்பிக்கொண்டு நின்று - ஓ யென்னுடையனை - அனந்தத் தாண்டவனே-ஏனழுகிறீர்-பாரைத்தெழுகிறீர்-இந்தக் கோரக்கனென்பவ னெனக்கெம்மாத்திரம்-ஊனை நசித்திக்க அவனப்பனுமாகநாதாம் அடியேனுசொல்லும்வார்த்தை தந்திரம்-உமக்கெனில்லவிவ்வுத்திரம்-எனதுமேற் கருணையுடன் வையுங்கரம்-அவனகழுத்தைக் கொய்யத் தாரகாமமே ஆரம்-இப்போதே கொய்துவிடுவேன் னவன்சிரம் உமதருளா வடியேற்கிருக்கிற தவ்வளவு உரம்-நிவங்கைக்க எளித்தையா முப்புரம் - நீக்கினதாற் சேவானிவனெப்பு ரம் - கோரக்கனைத்தொல்லைச் சேதிப்பதரும் வரம்-தேவரீரழுதால் போகாதோ மறுபரம்-காற்றிறும் கலிப்பதுமுண்டோ அம்பரம்-என்றிது வார்த்தைகளாமெல்போது.

ராமானந்தஸ்வாமிகள்-அடடா நீயெனிக்கவேனையில்வந்து தொந்தரவுசெய்கிறாய்-ஆபாசம் சொம்பரம் என்றனைக்குப்-கோரக்க னொமாத்திமெயாக்கு

ஊழியிருந்து வெளிப்பட்டதேதனும் வம்புசெய்யப்போ றேம்-பாவாக்குமுன் பூனிதிருமா அரிமாவை யாவே வெல்லுமா செங்கோலுக்குமுன் சங்கிதஞ்செல்லுமா புலியை புறுவைகொல்லுமா அந்த கோரக்கன் எதிர் ஆரோபித்து - முகமகிழ்ந்து-கோபங்கிளம்பி-வந்திருக் கிறான் - அவனை நாமே சமாதானஞ்செய்யவேண்டும் எல்லோருமுப்பவேண்டும் - நல்ல தனத்தாற் பொல் லாங்குகெடாது - பக்தஜனப்பூர்வர்களைத்தமவராம்வரர் சாத்தம்மேனான ஆபரணமாகும்-உபாயத்தாலிறை கா ரியம் பராக்கிரமத்தாலாகாது-சாமானெபன்பவர்க்கு மா னமேயில்லை - அபயமென்பவ ரபயமடைவார்களாத லால் விவ்விடத்தி லியாதொரு சந்தடிசெய்யாமல் அன்னி ருப்பிடத்துக்குப்போ-எனெனில் எட்டியுடன்சேர்ந்த இலந்திப்பட்டதுபோல அனலுலெனக்கு மிடர்வரும் மனேழுந்துவோதுக்கு கசவோரப்பனம்போ வந்த விக்கதியில் மிகுந்த கோரக்கனமுன் காமோர் கூடமே பாகும்-ஙீ சந்தைக்குப்போனதுபோல-நீ-கோரக்கன் கன்முனை போகவேண்டாம்கும்பிடத்தகுந்தகுருவோடு வம்புசெய்யலாகாது - வந்தனஞ்செய்யத்தகுந்தவரை நிந்தைசெய்யப்போகாது - நீ கொடிய வம்பக்காரனுயி ருக்கின்றாய்-போயபுரியத் தெம்புள்ளவனு யிருக்கிறாய் எறும்புமிழ்ந்தாற் காயம்படாது-பாவேமிழ்ந்தால் மிக வும்படவரும், இறிவுள்ளவர்க்கு-சனமுமில்லை-மானமு மில்லை, அதுபோல் நீ இறிவுக்கும் அறிவுக்கும்-பயப் படாக் கடின நெஞ்சுடையவனுயிருக்கின்றாய்-இகைய றிந்தாலக்கோரக்கன்மடத்துடன் பஸ்பமாக்கிவிடுவான் தன்கொடியை நடுவான் - உன்வேலையைப்பார்த்துத் கொண்டு போவென்று திருவாய்மலர்ந்தருளும்போது

கபீர் - ஸ்வாமிகளின் திருவடிகளிற் சாஷ்டாங்கமாய் விழுந்து - பலநமஸ்காரஞ்செய்து-ஓஸ்வாமி தங்களு க்குப் பிரமை பிடித்தது போலக் காண்கிறது-இந்தக் கோரக்கனைச் சொற்பமாயெண்ணுமல் - சமானமாக நினைக்கலாமா பணியப்போமா இன்னஞ் சற்றுபொறுத்தி ல்-இக்கணமேயந்த வீரர் நிரிக்கவும் - கோரக்கனுடைய வன்றுக்கொப்பறிக்கவும்-சகலருடனே வாதுசெய்து அமரிக்கவும்-அவன்பக்கத்தையடியிலவாறு - பிரிக்கவும் அவனுக்கவமின்றே யுறிக்கவும் - அவன் திரானியைய ஒருமிக்க சங்கரிக்கவும் - எறும்புகளை வெல்லா மொருங்கேயழுத்திக்கவும் - பஸ்பமாய்ப்போக எரிக்கவும் தேவரீர் கடாக்ஷத்தைக்கேட்டால் வைக்கொத்தகவில் லவும் - அவனைத் துண்டந்துண்டமாய்த் துறிக்கவும் அவனேறும் தலைகுடையெடுக்குந்திறமிருக்கவும் செய யத்தக்கவனுடியேனிருக்கவும் - தேவரீரவனை முதற்பமா கவுந்தொற்பமாகவுமென்றுமல் விற்பனசாலியென்று குப்புறவிழப்போகிறீர் வேண்டாம்வேண்டாம் - அடி யேன் வார்த்தை சத்தியமென்று நம்பும்-என்னுடைய தோர்வமும்-என்றடிகளை வடிகளைத்தழுவி-கண்ணீ ராக்குழவி ஒ எனதையனே-யிகவும் அப்பனே-அபிவி னையையனே - அழகான வையனேனைத் தோத்திரம் புரியும்போது.

ராமானந்த ஸ்வாமிகள் கடுங்கோபமடைந்து தன் பம் மேவிட்டிடைந்து-அடா பெண்ணைக்கெடுக்கவந்த துரோகப்பயலே - நீயிவ்வேளை வெளியிலுத்தவந்தாய் எனக்கிடையேன் தந்தாய் - கோரக்கனுக்கிருக்குஞ் சாமா ர்த்தியத்தி லாயிரத்திலொருபங் கிவ்வுலகிலியார்க்கு மி ல்லவேயில்லை - சேடா யென்சொல்லை - நீயிங்குவந்த தேதொல்லை - உன்னை வேண்டிக்கொள்ளவில்லை-நீ யெ னக்குதவவேண்டியதில்லை-உன்தலையிற்போட்டுமோதல்ல உடைக்கிறேன்பாருன் பல்லை-நீ கர்மாயப் போகிறவனு க்காணவில்லை குருடனுற் சக்கு கூடமோவொல்லை, என்று-நகைத்துப் பேசிபுங்கேட்காத கபீரைப்பார்த் து - கண்களைச்சேர்த்து - அடப்பா வுனக்கு வந்தன மாவதுசெம்பிறே விவ்விடம்விட்டுப்போ - உன்னிரு ப்பிடத்தைச்சேரு - விருவென்றுடன் சண்டைசெய் யாதே - கழுத்தைக்கொய்யாதே - அந்தக் கோரக்கநீத் தன் அபோனிசம்பத்தன்-சகேறடெதிர்த்தவன்-கவி த்ர்கனிலும் மேலானவன் - அவடசித்திகளிலுந்தேர் ந்தவன் - என்றுரைக்கும்போது.

கபீர் - ராமனுந்த ஸ்வாமிகளைக்குறித்து - பலந மஸ்காரஞ்செய்து - பாதங்களின்மேல்விழுந்து-கோரக்கனைத் துக்கலாகரத்திலாழ்த்து-போகச்செய்கிறேன் இப்போ தே கண்டங்கண்டமாய்ச் செய்கிறேனென்று வெளிப் பட்டு - ஜனநெருக்கத்தைவிலக்கிட்டு - கோரக்கனருகே சென்று - எதிர்த்துநின்று - அடா கோரக்கா உன்னு டைய சாகடி வித்தைகளெல்லாம் - எனது சற்குரு சூறைய - ராமானந்தஸ்வாமிகளின் முன்செல்லாது சொந்தத்தை யாவவொல்லாது - நீ வந்தவேலை பொல் லாது - சீக்கிரமோடிப்போ நீல்லாது உன்னுடைய சித் துவித்தைகளைக் காட்டவாவந்தாய் - விஸ்வாமித்திரரை நீட்டவாவந்தாய் யாரைமிக்கே ஆட்டவந்தாய் மலகமா மூட்டவந்தாய் நீயென்னை உன்திராணியென்ன-என்னை யறியாயோ - வுன்னை வெல்லவிடனைக் குறியாயோ வென்றுரைக்கும்போது.



கோரக்கன் - அடா அவன் - பிதற்றுகிறவன் தபோசித்தெறுக்கல்லா மதியறியான கோரக்கனையதி வபோர என்னையெதிர்த்த யிவ்வுலகி லாரிருக்கிறது வாயோறுதற்குத்தாட்டாமலொளித்துப்பேசுவாரோன் பேரி பேசுவாரோன் சிக்கிர மென்முன் வருகிறாயா சாபம் பெறுகிறாயாவென் றிறைச்சலிட்டுப் பேசுங் கொள்க்கக்.

கபீர் கொக்கு - அடாமூடா - குருசேடா - நீயே யென்னைவிட்டுடுவாடா - நீயெனக்கொருசேடா நான் ராமானந்த ஸ்வாமிகளின் சேஷனுக்கும்-உன்னைப்போ ன்ற மூடர்களைக்கிழாக்கும் - எதிர்த்துப்பேசுவோரை பாழாக்கும், நெல்லப்போ தன்னித்தேய்க்கு-இவ்வுல கில்லாமல் நீக்கும், எமலோகத்திற்சேர்க்கும் - தப வெளின் அபாத்தைத்தீர்க்கும் - ராமானந்த ஸ்வாமிக ட்குச் சங்கைகளைச்சேர்க்கும் - உன்னைப்போர் கொகவாய்ப் பார்க்கும் - அபயமென்பவனைக்காக்கும் - கபீரென் பவனை நான் பிதற்றுகிறேனென்-என்றுரைக்கும்மொழி கள் காதாகக்கேளப்போற் செவியிற் புகுந்தமாத்திரத் தில் கோரக்கன் கோபித்தது பெரிக்குவிழுந்து-உத டைமடித்து - பற்களை நறநறவென்றடித்து-சனவார் த்தைகள் பகர்ந்து - இக்கலியைப் பஸ்பமாயெரித்து விடுகிறேனென்று - ஆர்ப்பரிக்கும்போது.

பிசாசுஜனங்களெல்லாம் கபீர்மேலெதிர்த்து விழுந்து அடா கபீர் - நான்கேட்ட குரங்குவனத்தை பெல்லா ங்கொடுத்தருளேபோல - பொசமாவதுறி இக்காரித்தைத் தை நாசமாக்கவா போகிறாய்-ஒளிந்துபேசுவானே ன்-காரங்களைவிசுவானேன் - எதிரில்நின்று தற்றகவியை க்காட்டடாவென்று தலைமேற்குட்டி - அதட்டி கோர க்கனதுக்கெதிரில் விடுத்தி இவன்தானுமுடன்அதி கப்பிரசங்கமாய்ப் பேசினவனென்றெட்ட.

கோரக்கன் - அடாஙீதானு - செய்தாயிவ்வளவு குறும்பு-சற்றே வன்பக்கமாய்த்திரும்பு - நீயெனக்கோர் துரும்பு - சகக்கத்திறியபெறும்பு - மெல்லும்கரும்பு பறக்குந்தகுரும்பு-மல்லிகைமின்ணுரும்பு நீயோலாவினைக் கிணையாவிரும்பு என்றாற்ற.

ஞ்சனைசெய்யவும் வாஞ்சிப்பார்களா அதுபோலஸ்ரீமந்நாராயணனை நாடின நான்-நாய்க்குஞ் சீழ்மையுள்ளபேயானவுன்னை ஆசிரிப்பேனு அன்றிப் பேரின்பத்தை அபேட்சித்தவன் சிற்றின்பத்தையும். அமிர்தத்தைக் கோறினவன் விஷத்தையும் பிரபுத்துவத்தை வாஞ்சித்தவன் - யாசகத்தையும் கோருவானு அதுபோல மோட்சமார்க்கத்தை விரும்பின நான்-நீகொடுக்கிறேனெனப்பகர்ந்த-அற்பபொருளுக் காசிப்பேனு போபோ பயித்தியம்பிடித்தபேயே - கடைகெட்ட நாயேயெனப்புகல.'

பேயானது - ஓ - மாதவனே என்மீது முனிவு கொள்ளவேண்டாம் உமக்கு ஸ்ரீமந்நாராயணன் சேவைதானேவேண்டும் அவன்சேவை உனக்குங் கிடைக்கும்படியாகச் செய்கிறேனென்பின் வாருமென்றழைக்க, அரியக்தன் இத்தினிவார்த்தையைப் பத்தினியும் - கற்பழிந்தவள் மாற்றத்தைக் கற்புள்ளவளும் அஞ்ஞானியின் மொழியைச் சுஞ்ஞானியும் பொய்யன் பேச்சை மெய்யனும் லோபியின் வாய்மையை தர்மியும் கோளன் நீதியைக் குணவானும் குரோதியினுடைய நியை அவிரோதியும் கேட்பானு அல்லது நம்புவானு அதுபோல - உன் - உரையைக் கேட்கவுமாட்டேன் நம்பவுமாட்டேன் வீணேயேன் வற்புறுத்திப்பேசுகின்றனை-உன்காரியத்தைப் பார்த்துக்கொண்டுபோ என்னை மதிக்கவேண்டாம்-வீணைவார்த்தைகள் விரிக்கவேண்டாம் நான் அரியைத் தேடப்போகவேண்டும் வீணாக பொழுதைப்போக்கிவிட்டேன் ஆயுளைவீணாக்கிவிட்டேன் துன்மார்க்கர் சேர்க்கை மிகவுங்கெட்டது சீசீ-என்னருகில் வாராதேயெனச்செப்ப.

அலகையானது - ஓ-பிராமணோத்தமரே சிறியகண்ணினால் பெரியமலையைப் பார்ப்பதும்-சிறிய ஒருஅக்கினிப்பொறியினால் மலையையொத்த பஞ்சமூட்டைகளை யெரிப்பதும்போல-அற்பமான வென்னால்-ஸ்ரீமந்நாராயணனைத் தரிசிப்பீர் - இதி லெள்ளளவுஞ் சந்தேகமிராது - நான் பலவாறுமக்குப்பகர்வதிற்பயனில்லை இக்கணமென் பின்வருவீரேல்-எங்களுக்கிறைவனாகிய வேதாளத்தினிடத்திற் கொண்டுபோகிறேன் - அவரா லுமக் கரிதரிசனங் கிடைக்குமென்றறைய.

துளசிதாசர் - ஓ - பூதமே நீயெனக்கு - நாராயணனைக்காட்டுவது அபத்தமேயாம் பேயைநாடினவன் நாய்க்குச் சமானமாகும் - நாய்க்குவேண்டியது-பலசயினா எதும்மைப்போல-உனக்கினையான - துஷ்டதேவதைகளைப் பூசித்துங் கனிஷ்ட-வன்றுக்கள் மேசிஷ்டமாகுமே பிரஷ்டர்களையேமாத்திப் பலிவை. பயேபட்சிப் பாயக-னனை மோசஞ்செய்ய நீ கேசித்தனுன்னை விசுவாசிப்பேனு ஸ்ரீமந்நாராயணனைக் காட்டு முபாயமுனக்குத் தெரிந்திருந்தால் - உனக்குற்றபேய்த்தனத்தை நீத்துக்கொள்ள மாட்டாயா பரமபதம்பெற மாட்டாய பயங்காவுருவுடனிருப்பாயா - அசுத்தவிடத்தில் வாசஞ்செய்வாயா - போபோவென.

பிசாசம் - ஓ - அந்தணரே அவரவர்கள் செய்தவினையை-அவரவர்களல்லவே அனுபவித்து நீக்கவேண்டும் - இராஜனரண்மனைக்குப் போகும் வழிதெரிந்திருந்தாலும் குற்றமுள்ளவன் போகக்கூடுமோ மோட்ச சாதன மறிந்திருந்தாலும் - விஷயா பேட்சையுள்ளவனதைச் சாதிக்கக்கூடுமோ சமஸ்த வியாயங்களிற் றெரிந்திருந்தாலும் திரவியவாஞ்சையுள்ளவன் கடுமிலைமையாய்த நீர்க்கக்கூடுமோ சகலநீதிகளறிந்தாலும் அநீதியுள்ளவன் நன்மார்க்கத்தில் நடக்கக்கூடுமோ வேதாந்தத்திற்றேர்ந்த நிபுணனாலும் சமுசாரத்திற் சஞ்சலமற்றிருக்கக்கூடுமோ கற்பின்மேன்மையை எவ்வளவு விஸ்தரித்துரைத்தாலும் - விபசாரி பதிவிரதாத தன்மையைக் காப்பாற்றக்கூடுமோ அதுபோலவே - எனக்கு - ஸ்ரீமந்நாராயணனைத் தரிசிக்கும்படியான - உபாயந் தெரிந்திருந்தாலும்-யான் முற்பிறப்பிற்செய்த குற்றத்தால் பகவானைச் சிந்திக்க நாணமாயிருக்கின்றது உம்மாலிப்போது . பரிசுத்தமாகினேன் - இனி மேலான பதவிக்கே போகின்றேனென.

துளசிதாசர் - ஓ - கிருத்திமமே-நீமுற்பிறப்பிற்செய்த குற்றமென்ன பேயானவண்ணமென்ன என்னால் நீ புனிதமான காரணமென்ன தெரியப்படுத்தென்று வினவ.

குணபாசி-ஓ-விப்பிரனே நானிந்தவீட்டிக்குடையவனாகிய-பிராமணனுடைய-மனையாளாகும் நானென் எவ்வர்ணசீலத்தில் அதிககாமக்குணமுடையவளாய்க் கணவனைச் சட்டைசெய்யாமல்-மோகத்தால்-கன்னுக்கினியபுருஷர்களைப் புணர்ந்து - பதிக்கும் பகவானுக்கும் பயப்படாமல் பதிவிரதைகட்குரிய நீதிக்குட்படாமல் - மாதுவினமாகுமென் றுணராமல் - பாபமனைத்தைச் செயிக்காமல் - அற்பமான விஷயானந்தத்தைக்கருதி - உழன்றுக்கொண்டிருந்தேனிதனால் என்கொழுனன் - அன்புடனென்னையழைத் தருகிலிருத்திக்கொண்டு - ஓ - பெண்ணே உன்னுடைய கொடியசெ

ய்கையானது - என்னை வெளியிற்போகாமலும் - ஒருவனுடன் பேசாமலும் செய்ததன்றிச் சகலரும் கெக்கலிகொட்டி நகைக்கும்படியாயு மாய்விட்டது - எல்லாவற்றிலும் விபசாரங்கெட்டது என்பீ.தனக்கு அன்பிருக்குமாயின் இனிமேலாவது நற்குண நற்செய்கையுடையவளாய்ப் பகவானுக்குப் பயந்து நயந்து இல்லறதர்மத்தை நடாத்து இன்றேல் என்வீட்டைவிட்டு உனக்கிஷ்டமானவிடத்திற்போயிரு - ஏனெனில் கர்லையிலெழுந்து விபசாரியின் வதனத்தைப்பார்ப்பவனுக்கு-வேசியின் குணம் சேருமென்றும் பதிவிரதபங்கமானவளிருக்கும்வீடு - பாத்தையர்வீட்டிலு மிழிவானதென்றும் கற்பழிந்தவளுடன் கூடியிருப்பவனுக்குக் கர்மம் பலிதமாகுமென்றும் வியசாரியின லப்பரம்பரையின் விர்த்தி நாசமடையுமென்றும் பதியை வஞ்சிப்பவள் பரம்பரைக்குக் குற்றமுண்டாகும் - என்றும் விபசாரிவேசைக்குக் கீழ்மையானவளென்றும் விபசாரியின்பால் கொலை-களவு-கள்-காமம்-பொய்-கிர்தை - வெறுப்பு-அருவருப்பு-சஞ்சலம்-வாது - சூது - தாரித்திரம் சேரய்-வஞ்சனை-நாணமின்மை-மூதேவி-முதலானவைகள் குடியாயிருக்குமென்றும் சாஸ்திரங்கள் முறையிடுகின்றன - அன்றி மானமில்லா மங்கையுடனிங்ஙனமாயிருந் தினமடைவதைப் பார்க்கிலும் - கானடைந்து - பக்தியானதால் ஞானியாகி மோனமாயிருப்பதே உத்தமமல்லவோ நீ யிம்மனையை விடுத்தேகுவையாகில் - நான் சகலபற்றுக்களுமற்ற நற்றுறவியெயாம் - இனி மானத்துடனில்லறஞ்செய்கின்றாயா னாத்துடன் பிறர்மனைக்கேகின்றாயாவெனக்கேட்கும் பதிக்கு வந்தனஞ்செய்து நானுரைத்தநாவறு இனியெனக்கு மதிவந்தது - பதிவிரதத்தன்மையைக் காக்கின்றேனென்றுசாற்ற என்மனனன்களித்து நீயின்றுடன் வீட்டைவிட் டென்னுடனேயைக்கடந்து பிறர்மபேசகோதே ஆடவர்முன்போகாதே நாணமின்றிப்பேசாதே என்னை யேசாதே தெருக்களிற்போய் நிற்காதே குதுவார்த்தைகள் கற்காதே எனப் பலநீதிகளுரைத்து தெய்வமும் - ஜலமும் - அரசனும் - ஆசானும்-மூன்று பிழைபொறுப்பதுபோல் - நானும்-உன் அர்த்தைத்தீர்க்க - பலநாள் கோபக்குறிகாட்டினேன் ஜாடைவார்த்தைகளால் வாட்டினேன் ஒருநாக்கிட்டுப் பல கடுஞ்சொற்களால் மாட்டினேன் இன்றைக்கு வாய்திறந்தென்னபிப்பிராயத்தை விலாடிட்டேனென் இனிமேற்குற்றஞ்செய்வாயாயின்-சற்றும்பொறுக்கமாட்டேனென்றுறுதிகூறி - என்னைப் புறம்போகாமலும் - ஆடவருடன் பேசாமலும் கட்டிட்டுஞ்செய் தன்புடன்வைத்துக்கொண்டிருக்குங்காலத்தில் நான் சிலநாள் என்மனுளன்போடிருந்த - நீதியிலிருந்து - பின்பு தவிர்ந்து-என் கொழுனன் - குட்சியினிமித்தம் - பிட்சைக்குப்போய் வருவதற்குள் - அதிகளவெனிக்கிஷ்டமான புருஷனை யழைப்பித்து - என்னிச்சையைநிறைவேற்றிக்கொண்டு என்னுயகன் வந்ததே வெகு நன்னடத்தையும்-ஒழுக்கமும் - அடக்கமுமுள்ளவளைப்போல வபிநயித்துப் பதிவிரதஞ்செய்துக்கொண்டிருக்கிறநாளில் ஒரு நாளில் நானும் என் கள்ள புருஷனும் கூடிக் குலாவிக்கொண்டிருக்கும் வேளையில் - என்காந்தன் வந்துபார்த்து மிகவும் வெகுண்டு - ஓ காமப்பேயே நீ பேயாய்ப்போகக்கடவதென்று ஜபித்து வாட்டத்துடன் காட்டை நோக்கிப்போகையில் - நான திதாரிதமாயோடி - என்கா தலைமறித்து பாதங்களில்விழுந்து - எனக்கிட்ட சாபநிவர்த்திக்கோருபாயஞ் செப்பாமல் - முனிவுடன்போகலாமோ யான்செய்ததீவினையால்-பாவியாய்ப் பைசாசமானேன் நிறைபத்துக் காளாய்ப்போனேன் - என்று முறையிட்டழும்போது-சாந்தகுணமுள்ளஎன் காவலன் கோபந்தணிந்து - ஐயோ கோபஞ் சண்டாளமென்றிற் பாபத்தாற் - சாபமிட்டேனே - ஆகெட்டேனே என்றுரைத்து - வியாகுலமடைந்து - ஓ - பெண்ணே உன்னுடைய தீமையே எனக்குக் கோபம் வரும்படி செய்தது - என் தபமெல்லாம் பாழாய்ப் போகச்செய்தது அடிபேதையே அறிவில்லாக்கோதையே நீ யிக்கங்கையிற் குதித் திறந்து - பேயுருவாகி - நமதுவீட்டிலிருக்கும் - பெருங்கல்லிற் றங்கியிருந்து-நல்லோர் பாதநீரில் ஸ்நானஞ்செய்து - பாத தரிசனத்துக்குப்பாத்திரமாய்ப் பனிரெண்டாண்டிருப்பாயாகில் - உனக்குற்றசாபம் நிவர்த்தியாகுமென்றுரைத்துக் காட்டைநாடிப்போகாமல் காட்டையடைந்து - வீட்டிற் பிரவேசித்து என் சாப நிவர்த்திக் கேதுசெய்யக் கருத்தைக்கொண்டார்.

நானோ - கல்விற்பட்டாற் போல்வாளென்பதுபோலவும்-கண்கெட்டபின் சூர்யநமஸ்காரஞ்செய்ய வாசம்பித்ததுபோலவும் என் பதியின்பதங்களையு மதியிற்பதித்துத் துதித்துக் கங்கையிற் குதித்துப்பேயுருவாகி இக்கல்லிற் பிரவேசித்து சாபநிவர்த்தியை - ஆசித்திருக்க - என்காவலன் இவ்வீட்டைச் சாதுக்களுக்குரிய பொதுமடமாக்கி - அநேக சாதுக்களைச்சேர்த்து-இக்கல்லின்மீது காலலம்புப்படியாகச் செய்தார் மகாத்மாவாகிய - நீர் - கூ0 - வருஷங்களாய் இக்கல்லிலிருந்த என்னைப் பனிரெண்டுவருஷமிங்கிருந்து - காலலம்பிப் பாதப்பரிசமும் . எனக்குக்கொடுத்ததால் எனக்குற்றசாப நிவர்த்தியாய்ப் புண்ணியலோகத்துப் போகின்றேன் இவ்வளவு உபகாரஞ்செய்த - உமக்கோர சகாயஞ்செய்



யாமற்போக மனம்வராமையால் யும்மைவருந்தி வேண்டின்னவரும்படி வேண்டுகிறேன் தடையில்லாமல் வாரும் ஐயாவென்றழைக்க.

துளசிதாசர் யோசிக்கின்றார் இதுபூதமாயிருந்தும் அநேக நீதிவாக்கியங்களுரைத்து நமக்கியாரால்வது பகவான் தரிசனங்கிடைத்தாற்போதும் - ஜன்மத்தினுலும் - அவயவப்பழுதினாலும் - ஒருவனை யிகழலாகாது குணத்தைப்பார்த்தே கிக்கிரகிக்க வேண்டும் - அன்றி தசரதமகாராஜனுக்குற்ற புத்திர அபாக்கியம்-ஓர் பூதமேந்திக்கொண்டுவந்த பிண்டத்தினாலல்லவோ நீங்கிற்றுவென்று - ஓ - மண்ணையே-வேதாளத்தினிடம் போகலாம்வாவென்றழைக்க உடனேஅக்குணங்கான தர்சனை யழைத்துக்கொண்டு வேதாளமிருக்குமோர் காட்டிற் பிரவேசித்து வேதாளத்தைத் தோத்திரஞ்செய்யவது-ஓ-குணபாசியே-என்னையேன் துதிக்கின்றாய் வுனக்குற்ற குறையேதென-பிரேதம் ஓ-ராஜபூதமே-என்னைப் பவித்திரமாக்கிய இவ் விப்பிரருக் குன்தரிசனந்தந்து ஸ்ரீமந்நாராயணனைத் தரிசிக்கும்படியான உபாயஞ்சொல்லவேண்டுமென.

அதற்கந்த - சோகு - என்னால் - அனுமாரைக்காட்டிக் கொடுக்கும்படியான சக்தியுண்டன்றி பகவானை தரிசிக்கும்படியான உபாயஞ்சொல்ல என்னாற்கூடாது இது மாருதியாலாகும் ஆனாலும் அவ்வாஞ்சனேயர் தரிசனம் - தபத்திற்சிறந்த-புண்யவானுக்கே கிடைக்கும் ஆதலால் அனுமாரைச் சேவிக்கும்படியான-தபம்-இவ் வேதியர் செய்திருக்கின்றாராவென சோகு-ஓ-இறைவனே இவர் பனிரெண்டாண்டாய் அரிதான தவஞ்செய்துக்கொண்டிருக்கிறார் நிதசநதியமென.

சோகு - அப்படியா வென்று - துளசிதாசர் முன் பிரசன்னமாய்ப் பணிந்து-ஓ-பூசுரரே - பெண்ணாசையாலேயும் பேயருக்கும் - மண்ணாசையா லுழலும் மாந்தருக்கும் பொன்னாசையாற்றிரியும் புருடருக்கும் - அஞ்சனைகுமாரன்-தரிசனங் கிடைக்கமாட்டா திம்மூன்றையு மொழித்தவரோவென.

துளசிதாசர் - ஓ மருளே மண்ணாசை - பெண்ணாசை - பொன்னாசை - உலகாசை - தேகாசை முதலானவைகளும் நீங்கி துவாதச வருஷங்களுக்கு மேலாயிற்றது இப்பனிரெண்டாண்டாய் - பகவானுசையே மெயிதாய் விட்டது இது அப்பகவானுக்கே தெரியுமென.

இதி-சந்தோஷத்துடன் - ஓ ஸ்வாமி இக்காசியில் அசியென்னும் வீதியில் - ஓர்புராணிகர் - வால்மீகரா லுண்டாக்கப்பட்ட - ராமாயணத்துக்கெல்லாம் நானார்த்தமே செய்துகொண்டுவருகிறார் - அவர் சொல்லும் வாக்கியங்கள் பரமானந்தத்தைத் தருதலால் - அதைச் சிரவணஞ்செய்ய - அனுமார் ஓர் பிராமணருபமாய்வருகிறார் - அவ்விடத்தில் - அனுமாரைத் தரிசிக்கலாமென.

துளசிதாசர் - நகைத்து நவவியாகரணபண்டிதராகியும் - அறுபத்துநான்கு சித்திகளில் வல்லவராகியும் வேதாந்தத்தெளிவில்நிபுணராகியும்விளங்காநின்ற-ஆஞ்சனேயர் - ஓர் மறையோன்சொல்லும்-ராமாயணத்தைக்கேட்கவருவாரா பித்தையான வார்த்தையைச் சொல்லவந்தாய் - பேயையாடினவன-நாய்க்குச்சமானமென்ற பழமொழியை நிலைநிறுத்தினையென்றனர்.

பூதாதிபன் வணங்கி ஓ - புண்ணியவானே எவ்விடத்திற் சாதுக்கள் கூடிப் பகவானுக்குப் பிரீதியான வசனங்களைப் பேசுகின்றார்களோ-அவ்விடத்தில் ஸ்ரீமந்நாராயணனே-மாறு ருபங்கொண்டு வந்திருப்பாரென்பது - பொய்யா மெய்யா காரணந்தெரியாமல் கோபிப்பதுசிதமா நானொருபோதும்பொய்சொல்லமாட்டேன் நீர் பகவானைத் தரிசிக்கும்பொருட்டுப் பூண்ட விரதம் உன்னுமிடத்தில் மிகவும் விந்தையாயிருக்கின்றது-அகத்தியமின்று மிரண்டுமூன்றுநாளிற் பகவானைத் தரிசிப்பீர் - பாதங்களைப் பரிசிப்பீர் என்றுரைத்தவாக்கியத்தைக்கேட்ட துளசிதாசர்-பகவானைத் தரிசித்ததுபோலவே புளகாங்கமடைந்து-மயிர்க்கூச்செறிந்து-ஆனந்தக்கண்ணீரைச்சொரிந்து - ஓ - வியந்தரமே-பலமறையோர் வருமிடத்தில்- அனுமாரைக் கண்டுபிடிப்பதெப்படியென அரிவழி-ஓ-மாதவனே அனுமார்-நாடோறும் - எல்லாப்பூசாரரும் - முன்வருவதும் பாராயணம் முடிந்தபின் எல்லோருக்கும் பின்போவதும் வழக்கம் அன்றி அநேகமந்திரம் - பலர் கேட்கப் பதாஞ்சொல்லுவதன்றி ஆனந்தமேலிட்டால் நடக்கும்போது-தங்கித்தங்கி நடப்பார் - இதுவே அவரைக் கண்டுபிடிக்கும் அடையாளமென்றுரைத்துத் துளசிதாசருக்கு வந்தனம்புரிந்து இரண்டு பேய்களும் மறைந்துவிட்டது கேட்டீர்களோ சித்தர்களேயென்று பின்னுஞ் சொல்லுவார்

பூதகிரண அத்தியாயம்

முற்றிற்று.

## எ - வது - துளசிதாஸருக்கு அனுமார்தரிசனந்தந்த அத்தியாயம்.

கேளுங்கள் சித்தர்களேயென்று நாஜிசித்தர், சொல்லுவார் ஆடைக்களிரண்டும் மறைந்தபின் - துளசிதாசர்-மாலைபரியந்தம் மாதவனைத் தேடித்திரிந்து-சூரியாஸ்தமாகும் தருணத்தில - பாராயணமாகும் வீட்டுக்கெதிரிலிருந்துகொண்டு அனுமார்வரவை யெதிர்பார்த்துக்கொண்டிருந்தார் - அத்துவாயில் - அனுமார் யதாப்பிரகாரம்-ஓர் விருத்தப் பிராமணன்போல் வேதாளஞ்சொன்ன குறிகளுடன்வர அவரைக்கண்ட துளசிதாசர் வேதாளமுரைத்தது மெய்யென்று நம்பி-அவ்வேதியனை வலம்வந்துபணிந்து - ஓ - ஸ்வாமி - நீ ரெவ்விதியிலிருக்கிறவரென்றுவினவ.

அனுமார்-மாறுத்தரஞ் சொல்லாது-பாராயணம் நடக்கும் வீட்டுக்குட்பிரவேசித்தார், துளசிதாஸர்-பாராயணமாகுமட்டுங் காத்திருந்து - எல்லா வேதியர்க்கும் பின்போகும் - அந்தணரை மறித்து ஓ ஸ்வாமி உம்மை நோக்கின் மிகவும் புண்ணியபுருஷராகத் தோன்றுகின்றது - ஆதலா லும்மிருப்பிடத்துக் கடியேனும்வருகிறேனென்றுவணங்க, ஆஞ்சனேயர்-என்னிருப்பிடம் வெகுதூரம்-அன்றி நான் தனித்திருக்கிறவன்-ஒருவனுடைய சங்கஞ்செய்வதே யில்லையென.

அரிதாஸ் - ஓ - மாதவனே-உமதிட மனுக்கிரகம் பெற்றுக்கொள்ளவாஞ்சித்தேனாதலாலென்னைக்கருணையுட னுமதாசிரமத்துக் கழைத்துக்கொண்டுபோமையாவென்றுவணங்க-

இராகவதூதன் - நானேழைப் பிராமணன்-எனக்கேன் வந்தனஞ்செய்கிறாயல்லாமல் - எனக்கோர்மந்திரமுந்தெரியாது - இப்புராணிகர் - மகாக்ஞானவான் அனேகருக் குபதேசமுஞ்செய்திரு ரவரையடுத்தாயானால் - உன்னிஷ்டப்படி நடக்குமென்றுரைத்து பிராமணக்கூட்டத்திற் புகுந்து மறைந்துபோனார்.

உடனே - அரிபக்தன் - மறையோர் கணத்திற்புகுந்து - ஒவ்வொருவராய்ப் பார்த்துக்கொண்டே நிற்க அந்தணர்களென்னடா மூடனாயிருக்கின்றாய் எல்லாரையும் - மதித்து - மதித்து - முகத்தைப்புரட்டி புரட்டிப் பார்த்துக்கொண்டே வருகிறாயென்று வாயில்வந்தபடி பேசத்தொடங்கினார்கள்.

துளசிதாசர் - அவருரைக்கு மின்மொழியினைக் காதிலேற்றுக் கேட்காமல் - எல்லாரையும் பார்த்தும் விருத்தரைக் காணமையால - அம்முதுமறையோனனுமாரே யாமென நிச்சயித்துக்கொண்டு மறுநாள் மாலையில் அனுமார் வரவையெதிர் பார்த்துக்கொண்டிருந்தார்.

அனுமார்-வழக்கப்படியேவந்து-துளசி தாசரைப் பார்த்து-அடா இவனின்றைக்கு மிவ்விடத்தி லென்னைப்போலக் காத்துக்கொண்டிருக்கிறானென்று வதனத்தைக்காட்டாமல் - அப்பக்கமாகத் திருப்பிக்கொண்டு அதிதுரிதமாய்ப் புராணிகர் வீட்டுக்குட் புகப்போகையில்.

துளசிதாசர் - இதோ நம்மைப்பார்க்காமல்-அதோ போகிற அந்தணரே-அனுமாரென்றவ ரருகிற்சென்று பாதங்களைப் பிடித்துக்கொண்டு - ஓ ஸ்வாமி நீர்நேற்று மோசஞ்செய்து - பிராமணக்கூட்டத்திற் புகுந்து மாயமாய்ப் போய்விட்டதுபோலின்றைக்குப் போகிறதைப் பார்க்கிறேனென் றசையாமல் நிறுத்திவிட்டார்.

அதற் காஞ்சனைபுதல்வன்-முனிவுகொண்டு அடா மூடா - புராணங்கேட்கப்போகும் என்னையேன் மறித்துவருத்துகிறாய் - என்னடிகளை விட்டுவிடு - நானுனக்குபதேசஞ்செய்ய எதாவதோர் மந்திரம்-இப்புராணிகரிடங் கற்றுக்கொண்டு வருகிறேனென.

அரிதாசர் - ஓ ஸ்வாமி நீர்யார் - எவ்விடத்திலிருக்கிறவர் - உமது பெயரென்ன - பகவானறிய - உண்மையைச் சொல்லுமையாவென்று வருந்திக்கேட்க.

அனுமார் - அடா இதென்ன வல்லடி வழக்காயிருக்கின்றது - நான் யாரானாலுனக்கென்ன, உனக்கெனக்கு மேதாவதோர் சம்பந்தமிருந்தாலல்லவோ இப்படிக் கேட்கவேண்டும் நடுக்கொளனைக்காரன்போ லிரண்டுநாளா யிவ்விடத்திலிருந்துகொண்டு தொந்திரவுசெய்கிறாய் - போவென் றடிலைவார்த்தைகளாட.

பாகவதன் - உம்முடைய எதார்த்தத்தை-நானறிந்துகொள்ளுகிற பரியந்தம் விடமாட்டேனென்று பலாத்காரஞ்செய்ய.



அனுமார் கோபித்தாக கால்களைத் திமிறிப்பிடுங்கிக்கொண்டு, மிகவும்பதைத்துத் தூரமாகக்குதித்து-மனங்கொதித்து - நான் புராணங்கேட்கப்போவதைத் தடுக்கிறாயா சலத்தைத்தொடுக்கிறாயா, என் விரதத்தைக் கெடுக்கிறாயா துன்பத்தைக்கொடுக்கிறாயா பலவந்தமாயடுக்கிறாயா இனி இப்படிசெய்வையாயின் வாயில்வந்தபடி திட்டிவிடுவேன்பற்களைத் தட்டிவிடுவேன்-தலைமேற்குட்டிவிடுவேன் துண்டாக வெட்டிவிடுவேன்-என்றுரைத்துப் புராணிகர் வீட்டுக்குட்போய்விட்டார்.

துளசிதாசர்-இவர் அனுமாரே யாமெனநிச்சயித்துக்கொண்டு பாராயணங்கேட்டுவரும்போது தொடர்ந்து உண்மையறிந்துக்கொள்ளலாமென் றாஞ்சனேயர்வரவைப் பார்த்துக்கொண்டிருக்க.

மாருதி - புராண பாராயணம் முடிந்தது - மறையோரெல்லாம் போனபின்பும்-வெகு நேரமிருந்து துளசிதாச னிருக்கின்றானோ இல்லையோ வென்றெட்டிப் பார்த்தார்.

பரமபாகவதன் - வாரும் ஸ்வாமி நான்வெகுநேரமா யுமதுவரவுக் கெதிர்நோக்குமிருக்கின்றேனென்று புராணிகர் வீட்டுக்குட் புகுந்தார்.

அனுமார்-ஓ-ஓ-இவன் குதர்க்க கள்ளனாயிருக்கின்றான் இவ்விடத்தி லென்னைவிபரீதஞ்செய்வானோவென வெளிப்பட்டு - மாயமாய் மறைந்தார்.

துளசிதாசர் - பலபக்கங்களிற் றேடிப்பார்த்துக் காணாக்குறையால் நல்லதாகட்டும் நாளைக்கு ஓர் மார்க்கமேற்படுத்திக்கொள்ளுகிறேனென்றுரைத்து தன்னிருப்பிடஞ்சேர்ந்து - மறுமாலையி லங்குவந்திருந்தார், அனுமார்-கோவழியிற்சென்றால் துளசிதாசர் வம்புசெய்வாரென்று மாயமாய்ப் புராணிகர் வீட்டிற்பிரவேசித்து ராமாயணத்தை அன்புடன்கேட்டுக்கொண்டிருந்தார்.

அரிபக்தன் - வெகுநேரங் காத்திருந்தும் விருத்தப்பிராமணர் - வரக்காணமையால் வியாகுலத்துடன் புராணிகர்வீட்டி லெட்டிப்பார்த்து முதுமறையோரிருக்கக்கண்டு - ஆனந்தங்கொண்டு - அவரருகிற் சென்று ஸ்வாமியெனப்புகன்று - வந்தனஞ்செய்து ஓ ஸ்வாமி நேற்றெந்தவழியாய்ப்போனீர் நீர் ரெவ்வழியாய்வந்தீர் கருணையுடன் சொல்லுமையாவெனப் பணிய.

அதற்கனுமார் அடடா இவனுன்னேயும் வந்துவிட்டானேயென்று, உடல்கொளித்து-முகஞ்சுளித்துக்கண்வெதிர்த்து - மனங்கொதித்து - மிகப்பதைத்துத் தலையசைத்து - முழங்கையாலிடித்து துளசிதாசருக்கு முஷ்டிகைக்காட்டித்-துளசிதாசரைப் பார்க்காமலும்-மாறுத்தரஞ்சொல்லாமலும்-கண்களைமூடிக்கொண்டு ஸ்ரீராமநாமத்தைப் பிரவணஞ்செய்துக்கொண்டிருந்தார்.

பாகவதன் அனுமார் காதருகிற் றலையைச் சாய்த்து ஓ-ஸ்வாமீ அடியேன்மீ திவ்வளவுவெறுப்பேன்-அருவருப்பேன் - சற்றே கண்களைத்திறந்து-மௌனவைத்துறந்து-சொல்லலாகாதோவென மாருதி பிரவணத்துக்கு விரோதம் வருகிறதெனக்குரோதங்கொண்டு-மௌனமாகவேயிருந்தார் துளசிதாசர் முன்போலவே பலதரங்கேட்டார்.

அனுமார் வெறுத்து - அடாமூடா நான் பக்தியுடன் ராமாயணத்தைக் கேட்கும்போது-முணுமுணுவென்றென்னமோ உளறிக்கொண்டிருக்கின்றாய் எட்டப்போயுட்காரும்பிள்ளாயென்றார் துளசிதாசர் வாரியே னெட்டப்போனால் - நீர்போட்டெனப் போய்விடுவீர் உம்மைவிட்டுப் பிரியாமல்-கிட்டவேயிருப்பேனென்றுரைத்தார்.

ஆஞ்சனேயர் - இதென்னடா சனியாயிருக்கின்றது கொள்ளப்போனவிடத்திற் பிள்ளையைப் பறிகொடுத்தாற்போல இக்கள்ளனிடம் மகப்பட்டுக்கொண்டு வெள்ளறிவனானேனென்ச் சள்ளென் றெழுந்து கிழ தள்ளியெழுந்து வேறிடத்திற்போயிருந்தார்.

அரிதாசர் சாயைப்போல் அங்கேவே தொடர்ந்து அவரருகில் வீற்றிருந்து ஓஐயனேமீ திவ்வளவுகோபமேனையாவென்று முன்போலவே எந்தவழியாக வந்திரெனக் கேட்கத்தொடங்கினார்.

இராகவதூதன் அடா இதென்ன கோரமாயிருக்கின்றது-நானெந்தவழியாய்வந்து வருகிறேன் எம்மார்க்கமாயாவது போகிறேன் இதைக்குறித்து நீயாரடா கேட்கிறவன் சிரவணத்தை யீட்டுகிறவன்-எட்டிக்கனியான மட்டிப்பயலே யென்றுரைத்து ராமாயணங்கேட்பதில் சித்தத்தை வைத்திருந்தார்.

அரிதாசர் - ஓ - ஸ்வாமீ இன்றைக்காவது-கருணைகூர்ந்து ஆட்கொள்ளும் - நேற்றைப்போல் - காற்றாய்

மறைந்துபோகவேண்டாமெனப் பலதரம் கெஞ்சத்தொடங்கினர்.

அனுமார் என்னடா முழுமூடனுயிருக்கின்றாய்-வஞ்சிப்பர்கள் கொஞ்சுவதுபோற் கெஞ்சுகிறாய்- அன்புடன் கேட்டு இன்பமடையும்வேளையில் தென்புடையவனைத் துன்பங்கொடுத்துக்கொண்டிருக்கிறாய் என்பு சன்மூடிய முன்போனவைசர்ப் பின்பாவது கேட்கட்டுமெனவெழுந்து வெளிவிடத்திலுட்கார்ந்தார்,

அரிதாசர்-கூடவேதொடர்ந்து - அவ்வருகிலுட்கார்ந்து ஓ-ஸ்வாமி கிருபாநிதி - முனிவுகொள்ளவேண்டாம் நீர் அனுமாரென்பதிற் சந்தேகமேயில்லை அடியேன் பனிரெண்டாண்டாகப் பகவானைக் காணும்பொருட்டவாக் கொண்டிருக்கிறேனாகலால் அப் பரதபரனுடைய தரிசனமெனக்குக்கிடைக்கும்படியாகக் கருணை கூறல்வேண்டுமென மிகவும் பிரார்த்தித்தார்.

அனுமார் - அடடா இதென்ன கர்மமாயிருக்கின்றது - இவனுக் கெத்தனைவிதங்களா யுரைத்தபோதிலும் கேட்காமல் சளசளவளவளவென் றேயாமலென்னென்னமோ பிதற்றிக்கொண்டிருக்கின்றான் ராமராம - இதற்குநானென்னசெய்வதுமென வாட்டமுற்றார்.

அரிபக்தன் - ஓ ஸ்வாமி இப்போது தாங்கள் துதித்த தெந்தமகானுபாவரையோ அவரையே யான்காணும்பொருட் டதிக அவாக்கொண்டிருக்கிறேனவருடைய தரிசன மெனக்குக் கிடைக்கும்படியாய்ச் செய்வீரோ வும்மை என்னுயுட்பரியந்தம் மறக்கவேமாட்டேனெனச் சத்தியஞ்செய்தார்.

அதற்காஞ்சனேயர் - அடப்பா உனக்கு வந்தனமாவதுசெய்கிறேன் சற்றுநேரம் பேசாமலிரு பாராயணமுடிந்தபின் கூசாமற் பலவார்த்தைகள் பேசலாமென்றார்.

துளசிதாசர் - வந்தனஞ்செய்து - ஓமகானுபாவா சத்தியகாவா நீரோ இராமாயணத்துக் காதிகாரணமாயிருந்தும் ஒருவர்சொல்லக்கேட்கவும் வேண்டுமோவென அவ்வாக்கியத்தைக்கேட்ட.

வாயுகுமாரன் பிரமித்து ஓ-ஓ - இவன் நமதுமர்மமெல்லா மறிந்த பிரமதேவனைப்போல் பேசுகின்றான் ஒருவேளை இச்சபையிலுள்ளோர்க்கு நா மனுமானெனத் தெரிந்தால் இவனைப்போலவே-நமக்கு வேஷடையுண்டாக்குவார்க ளிவனுக் கெவ்வித உபாயத்தாற் றப்பித்துக்கொள்ளலாமென்கிற யோசனைகளோடு கூடியிருந்து மறுமொழியுரைக்காமல் புராணம் முடிந்தபின் பிராமணர்கூட்டத்திற் புகுந்து மாயமாகமறைந்தருளினர்.

உடனே - அரிதாச னந்தணர்களைத்திற் புகுந்தோடி வாயிலின்மத்தியில் நின்றுக்கொண்டு ஒவ்வொருவருடைய வதனத்தையும் உன்னிப்பார்த்து நீரல்ல நீரல்லவென் றுரைக்கும்போது ஆதிவருணர் முனிவுகொண்டு தூஷணவார்த்தைகள் விண்டு இவனென்ன சங்கக்காரனைப்போல் தடுத்து எல்லாரையும் சோதனைசெய்துவிட்டுக்கொண்டிருக்கிறான் இவன் கன்னத்திலறைந்து மென்னியைப்பிடித்துத் தள்ளிவிடுங்கள் நகங்களாற் பிறாண்டிவிடுங்கள் - ஆருக்கோ நுகர்கொடுங்கள் பஸ்பமாய்ப்போக சாபமிடுங்கள்-நெருக்கிக் கட்டிக்கொண்டுபோய்க் குலத்தில் நடுங்கள் - என்றுரைக்கும்மொழிகளை அரிபக்தன் செவிகொடுத்து கேட்காமல் அனுமாரைக் காணவேண்டுமென்னு மவாவால் தீரமுள்ள வீரனுய் ஒருவரையனுமொருவரைவிடாமல - அனுமாரைநாடிக் - காணுமல்வாடி-விரைவாவோடி - பலபக்கங்களிற்றேடி - எல்லாருடைய கண்களையுமூடி-எத்திசைபோனாரோடி - எனப் பல வார்த்தைகளாடி-தன்னிருப்பிடம்வந்து - மிகவும்நொந்து துக்காக்கினியால் வெந்து நாளைக்குக் கட்டிப்பிடிக்கிறேனென்று வந்து மறுநாளந்திவேளையிற்போய் பார்த்துக்கொண்டிருந்தார் அப்போ தனுமார் எப்போதும்போல் புராணிகர் வீட்டுக்குள் வந்து ராமாயணத்தைக் கேட்டுக்கொண்டிருந்தார்.

துளசிதாசரோ புறத்தில் வெகுநேரம் காத்துக்கொண்டிருந்து பின்பு பாராயணசபையிற் புகுந்து விருத்த விப்பிரரைப்பார்த்துக் - கரங்களைச்சேர்த்து ஓ-மாயாவிநோதனே - உம்மைக் கண்டுபிடிக்க என்னாலாகுமோ உம்மாலன்றிப் பிறரால்என்றுயர்போகுமோ கருணைகூர்ந்து - இன்றையதினமாவது ஸ்ரீராமருடைய தரிசனம் அடியேன் பெறும்படியாகச் செய்யவேண்டுமெனக் கர்த்தனையென்றவர் தாள்களில்விழுந்து ஆட்கொளல் வேண்டுமெனத் தோத்திரஞ்செய்யத்தொடங்கினர்.

மாருதி அடாமட்டிப்பிராம்மணு கொடாக்கண்டனை விடாக்கண்டன் பிடித்தாற்போல என்பின்தொ



டர்ந்தாய் - ஸ்ரீராமர் வைகுந்தத்திலிருக்கின்றார் நீ-பலர்மீ தெரிபக்தியுடையவனு யிருப்பது மெய்யானால் வைகுந்தத்திற்போய்ப் பார்த்துவா இவ்விடத்தில் ஸ்ரீராமரெங்கிருக்கிறார் - உனக்குச் சமித்தியம் மேனிட்டுப் பமித்தியம்பிடித்திருக்கின்றது - இந்திர வயித்தியரிடத்திற்போ என்னருகில் வரவேண்டாம் - ஒருவார்த்தையும் பேசவேண்டாம்-எதிரிலும் நிற்கவேண்டாம் போ போ வென்றுரைக்க துளசிதாசர்-ஓ-என்சற்குருநாதனே மெய்ஞ்ஞானபோதனே-உமது கருணையினுல் வைகுந்தத்திற்குப்போய் ஸ்ரீமகாவிஷ்ணுவையும் பார்த்துவருவேன-இதுவோர் பெரியகாரியமா வைகுந்தம் கைலாயம்-கிஷ்கிந்தகிரி - இமயகிரி - முதலானதுகளைத் தாண்டிப்போய்ப் - பூமியிலாயிரம்யோசனைதூரம்பதிந்தும்-விண்ணில் ஆயிரம்யோசனைதூரமுயர்ந்தும்-மிகவும விசாலம்பொருந்தியுமிருக்கும்-சஞ்சீவிபர்வதத்தை ஓர் கரத்தில் தாங்கிக்கொண்டு ஓர்கணத்தில்வந்து-இராமலட்சுமணர்களைக் காத்த வீராதிவீரன் நீயல்லவா இப்பேர்க்கொத்த அதிசூரனுகிய உம்மை படைக்கலம் புகுந்த எனக்கோர் குறையுமுள்ளதோ வென்றுதாம் தாமெனக் குதித்துக் கூத்தாடினார்-பல சங்கீர்த்தனங்களைப்பாடினர் அப்போதஞ்சனைகுமாரன் அடடா ஏன் துள்ளிக்குதிக்கிறாய் வேண்டாம் வேண்டாம் நீசற்றசஷ்டகல்வியையும் புஷ்டிபலத்தையும் துஷ்டகுணத்தையும் பிரஸ்டத்தனத்தையும் என்னிடத்தானு காட்டவந்தாய் ஐம்பத்தைநீட்டவந்தாய் போதும்போதும் இனி இவ்விடத்திலிருந்தெழுந்து சட்டமாய் வெளியிற்போய் - உன்னைப்போன்றவர்களிட முன் பிரஷ்டத்தைக் காட்டென்று கடுகடுத்துரைக்க துளசிதாசர் - ஓ மாதவனே இனி உம்மைவிட் டென்னுயிருடன் பிரிவேனு நீர் மிகவும் - பூததயாளமுடையவராயிருந்தும் வெகுநாளாயலைந்து திரியும் - என்னை வெறுக்கலாமா அருளாளமனையைக் கருக்கலாமா அடத்தைப்பெருக்கலாமா எளியேன்செய்த அபசாரத்தை உபசாரமாகக் கொண்டு - எவ்விதமேனுமின்று - பகவானைக் காண்பித்தருளல்வேண்டு மென்னையனே - அறிவிலாமெய்யனே - அழகுள்ளகையனே-பொய்சொல்லாமெய்யனே மிகவுந் தூய்யனே - அஞ்சனைதேவி புதல்வனே - நல்லோர்மே லதிகமித்திரனே - வலிமையில் விரபத்திரனே - சகல சமயங்களுக்கு நீக்கு முத்தரனே எனப் பலவிதங்களாகத் தோத்திரஞ்செய்யத்தொடங்கினர், அதற்கிராமதூதனை ஏதேதுபக்திமிஞ்சிப்போய்விட்டது யாருரைக்கினுந் தடைபடாதுபோ லிருக்கின்றதே-இருக்கவிருக்க விண்ணுனவார்த்தைகள் புறப்படுகின்றதே இக்கமட்டும் வஞ்சியைப்போற் கொஞ்சிக் கொஞ்சிக் கெஞ்சினதுபோதும் போதுமெனப்புகன்று புராணிகர் சமீபத்தில் வெகு நெருக்கமானவிடத்திற்போய் வீற்றிருந்தார்.

அரிபக்தன்-ஓ ஓ-இவர்நேற்றைப்போலவே மோசஞ்செய்து காற்றுப்ப் பறந்தோடிப்போக யோசித்திருக்கிறதுபோற் றோன்றுகின்றதென்று கூடவேசென்று அவரருகில் நின்று-அன்பாய் மொழிகளைப்புகன்று நம்பிக்கையில்லாக் காரணத்தால் தன தங்கவஸ்திரத் தாலவரிடதுகையைக் கட்டத்தொடங்கினர் அதற்கனுமார்-ஓ-ஓ-மோசம்வந்தது-இதென்ன நாராயணனைப்பாராயணஞ்செய்புங்காலத்தில் திருடனைக் கட்டுவதுபோலென்னை யிம்முருடன் கட்டவந்தான்-யாருக்கு மிவ்வளவு துணியிருக்கலாகாது நானிஷ்டமாய்க் கேட்பதைத் தடைப்படுத்த வந்த கனிஷ்டனே - இதுபரிபக்தமுடையதாற் சாகாமற் றப்பியிருப்பதுன் நல லதிர்ஷ்டமே இனியாகிலு மென்கிட்டவராமலெட்டப்போடாவென் றப்படப்படைத கின்மேற்குட்டி - வாயில்வந்தபடி திட்டி மென்னியைப் பிடித்து வெட்டி - இழிவிழும்படி எட்டியுதைந்தார்.

அரிதாசர் பக்கத்திலிருந்த வேதியர்மேல் விழுந்து உடனேயெழுந்து - உடல்பூரித்து - மயிர்க்குச்செறிந்து அஞ்சலியஸ்தனாய் நின்றுகொண்டு - ஆஆ இனியிந்தார்த்தனுனேனென் றெழுந்தெழுந்து கூத்தாடி-விஷ்ணு சங்கீர்த்தனங்களைப்பாடி - அங்குமிங்குமாயோடி-அனுமாரைக்கொண்டாடி - இனியும்மை விடமாட்டேனெனநாடிப் பின்னு மவர்காத்தைச் சிரத்தையுடன் கட்டத்தொடங்கினர் அப்போ தருகுற்ற தொழுகுலத்தோர் துளசிதாசரைநோக்கி யடா விருத்தப்பிராமணனோடு போராடுகிறாய் வாயில்வந்தபடியாடுகிறாய் அங்குமிங்குமாயோடுகிறாய் வெறியைப்போற் கூத்தாடுகிறாய் - நீ நாயே பேயே நாளைபோடு இச்சபைக்குள்வரவேண்டாமென் றதட்டத்தொடங்கினார்கள் அதற்குத் துளசிதாசர் மாறுத்தரஞ்சொல்லாமல் அனுமார்கையைத் தன் வஸ்திரத்தாலிறுக்கிக் கட்டிக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு ஓ ஸ்வாமி இனி யோடிப்போவதைப் பார்க்கிறேனெனச் சந்தோஷ மேலிட்டாற் சிரித்தார் அஞ்சனேயர்-ஓ-ஓ-இவனை குதறிந்த கள்ளனாயிருக்கின்றான் நம்முடையருதை யாரோ இவனுக் குறைத்ததுபோற் காணுகின்ற இனி நம்மை யிவன் விடப் போகிறதில்லை சுகதேவனிடமு மாவனிடமு மகப்பட்டுக்கொண்டு ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவைப்போல் நாமிவனிடமாட்டிக்கொண்டோ மினிச் சாந்தமாகவேயிருந்து

த்துக்கொள்ளவேண்டுமென் றுன்னித் துளசிதாசரை நோக்கி-ஓ-பிராமணோத்தமா-பாராயணகாலத்திற் பேசினுற் றோஷம்வரும் - சீதாராமென்று தியானஞ்செய்துக்கொண்டு சந்தடிசெய்யாமலிரு-புராணம் முடியும்பரியந்தம் பொறு - பகவத் பாராயணமே சகலபாக்யமுந்தருங் கற்பகதரு சகலருக்கும் ஸ்ரீமந்நாராயணனே பரமகுருவென்றுரைத்துச் சிரவணத்தில் சித்தத்தைப் பக்தியுடன் வைத்திருந்தார்.

அரிதாஸர் ஓ ஸ்வாமி ஸ்ரீமந்நாராயணனை நீர்போகும்போது எனக்குந் தரிசனந் தரும்படியாகச்செய்கிறீரோவென வணங்க வாயுகுமாரன் இப்போதொன்றும் பேசாதேயெல்லாம்புராணமுடிந்தபின் பார்த்துக்கொள்ளலாமெனப் பரமபாகவதன் போகும்போது பார்த்துக்கொள்வோமென்பது சந்தேகவார்த்தையல்லவா நிச்சயமாய்ப் புராணமுடிந்தபின் ஸ்ரீபரமாத்மாவைக் காட்டுகிறேனெனச்சத்தியஞ்செய்தாலொழியனக்குத்திருப்தியாகாது ஆதலால் ஸ்ரீமந்நாராயணர்மேலாணையிடுமையாவெனப் பலாத்காரஞ்செய்ய அகத்திராகவனுதன் இதுகல்லவிகடசாமார்த்தியந்தான் கூடியமட்டும் இவன்கெட்டிக்காரன்தான் இருக்கவிருக்க ஆயாசத்தையேகொடுத்துக்கொண்டு வருகின்றான் இனி இவனிடம் பேசாமலிருப்பதே உத்தமமென்றோர் மொழியு மாடாமலிருந்தார் துளசிதாசர் வோர் சீதாபிராட்டியின் சோகநாசனே இப்படி பேசாமற் பாசாங்குசெய்துதானே எனைமோசஞ்செய்துக்கொண்டேவந்தீர் உம்முடைய வேஷத்தைநானறிந்துக்கொண்டேனினிநு வேஷமில்லாமல் குழிகேசனைக் காண்பித்தே நீர்போகவேண்டுமென்று மற்றுகரத்தையுங் கட்டத்தொடங்கினுர்.

ஆஞ்சனேயர் அதிகோபத்துடன் துளசிதாஸர்முகத்திற்காறியுமிழ்ந்து அடாவமகாதகாபஞ்சமாபாதகா உன்னைப்போற்பியுஞ்சுபவேயுமில்லை மட்டிச்சென்மத்தைநான் பார்த்ததேயில்லையெனவைது அந்தணர்களை நோக்கி ஒராமாயணத்தையத்தியந்த பக்தியுடன் கேட்கும் ஜனரோஇந்தமுருடன் இரண்டு மூனாநாளா இவ்விடத்திற்பலாத்காரமாகவந்து என்னைராமாயணத்தைக்கேட்கவிடாமற் றொந்திரவுசெய்கிறு னிவனையாருந்தண்டிக்கிறவர்களில்லையா கண்டிக்கிறவர்களில்லையா இவனுக்கென்னையன்றி யாருமகப்படவில்லையா நான்செய்துக்கொண்ட தொல்லையாவெனக் கூக்குரலிடத் தொடங்கினுர்.

அப்போதருகிலிருந்தமறையோர் துளசிதாஸனைப் பார்த்து காதைப்பிடித்து நீ இரண்டு மூன்று நாளாக இருந்தமறையோனை அலங்கோலஞ் செய்வதன்றிச் சிரவணத்தைப் பங்கப்படுத்திக்கொண்டு வருகின்றாய் உன்னை இவ்விடத்தில் மரியாதையுடனுறைந்தாலென்ன வேத்தவனையும் உன்னையும் இப்போதே வெளியிற்தள்ளிவிடுகிறோமெனப்புகல.

அப்போது புராணிகர் - ஆம் - ஆம் - இந்தப்பிராமணன் வெகு இடக்கனுகவே யிருக்கின்றானுதலா லிவனுடைய கெர்வத்தை நீங்களனைவோருங்கூடி யடித்து வெளியிற்றள்ளிவிடுவதே நன்மையென்றுரைக்கவே யிதுவுள்ள யாவரும் என்னசந்தடியென்று-இருவரையும் வெளியிற்றள்ள ஆரம்பித்தார்கள்.

அப்போ தனுமார் ஓபிராமணோத்தமர்களே விருத்தாப்பியமுள்ள - என்னை இந்தத் துஷ்டனிடத்திற் காட்டிக்கொடுப்ப தாங்களுங் கழகோவென் றம்மறையோர் கூட்டத்தில் நுழைந்து - அங்குமிங்குமாபோடத்தொடங்கினுர், துளசிதாசர் ஆஞ்சனேயர் கைகளிற் கட்டியிருக்கும் வஸ்திரத்தை விடாம லுறுதியாய்ப் பிடித்துக்கொண்டு கூடவே யோடத்தொடங்கினுர், அநுமார் துளசிதாசரைச் சோதிக்கவேண்டி - அதிவேகத்துடன் அந்தணர்களைக் கீழே தள்ளிக்கொண்டே பல பக்கங்களிலோடும்போது துளசிதாசருக்கு வீட்டின் சுவரும் - ஸ்தம்பங்களும் பூசார மஸ்தகங்களு மிடிபட்டு ஊத்திலும் சிரத்திலு மிரத்தம்புறப்பட்டுத் தட்டுகெட்டுத் தடுமாறிக்கொண்டே வஸ்திரத்தை விடாமல் கூடவேதொடர்ந்தார், அநுமார் புராணிகர் வீட்டில் வோவென்றுங் கூக்குரலுண்டாக்கி வெளிப்பட்டு வாயுவேகத்தைப் பார்க்கிலு மதிவேகமாயோடும்போது அரிதாசரவருடன் னோடுவதற்குக்கூடாமல் வஸ்திரத்தை விடாமற் கீழேவிழுந்து - தரையில தேகமெல்லா முராய்ந்து தேய்ந்து - வோய்ந்து சாய்ந்து ஸ்மானைகெட்டு ஒருபக்கத்தில் மூர்ச்சையாய் விழுந்துவிட்டார் உடனே மாருதி மாயமாய்மறைந்து துளசிதாசரடைந்த ஆயாசத்துக்கயர்ந்து - வைராக்கியத்தைக்குறித்து வியந்து-இனி தரிசனந்தரல்வேண்டுமென நயந்து-ஒருபக்கத்திலின்றிருந்தார், பின்பு - துளசிதாசர்-நெடுநேரம் மூர்ச்சையடைந்திருந்து - அநுமாரைக் காணவேண்டுமென்று மயோவாற்றெளிந்து ஆஞ்சனேயரைக் காணுமல் நொந்து-சோகம் மிகுந்து - இனியித்தேகத்தை வைத்திருப்பதிலும் மாணமாவதே உத்தமமெனத் துணிந்து-தரையிற் றலையைமோதிக்கொள்ளப் போனுர். உடனே கரு



ணாநிதியாகிய மாருதி - தனதிரு அஸ்தங்களால் துளசிதாசருடைய மஸ்தகத்தைத் தாங்கிக்கொண்டு அப்பா ஒப்பிலாபக்தனே - என்னைக்காணும்படியான யுக்தவேளைகருள்ள வழுக்கமான முருட்டுதநத்தைக் காண்பித்துனக் கதிகதுக்கத்தைக்கொடுத்தேன் இதைக்குறித்தென்மேல முனிவுகொள்ளாமல் க்ஷமிப்பாயென் றன்பானஉரையாடினுர்

அப்போது துளசிதாஸருக்குற்ற ஆயாசங்களெல்லாமகன்று- ஆனந்தமோங்கி திக்கென்றெழுந்து சேவடியிலவிழுந்து ஓமாதவனே கொடியேனுகியவடியேனுக்கும்முடைய தரிசனந்தந்தீரோ- ஆட்கொள்ளவுமுவந்தீரோ ஆ-ஆ - உம்முடையின்றுதரிசனஞ்செயயஎன்னபாக்கியஞ்செய்தேனே- எத்தவஞ் செய்தேனே-எவ்வளவு யோக்கியனுனேன் -எவ்வளவு சிலாக்கியனுனேன்-என்கிற பற்பலவுரைகள் பகரும்போது, அநுமா ரதிகசந்தோஷித்தாய்த் - துளசிதாசரைமார்புடனணைத்துக்கொண்டு - ஐயா துளசிதாசனே முகவிலாசனே என்னுலாகவேண்டிய காரியமென்னமோ தெரியச்சொல்லுமென, அரிதாசர் - ஓ - என்னாண்டவனே ஸ்ரீராமருடைய தரிசனமேயெனக்கு வேண்டியதென-அஞ்சனைதனயன் நீர் நெடுநாளாகத் தபஞ்செய்தும் பிரசன்னமாகப் பகவான் - நான் சொல்வதாற் றரிசனந் தருவாரோவெனப் பரமபாகவதன பகவான் தரிசனம்பார்க்கப் பாவியேனுடைய ஆவியிருந்தாற் பிரயோசனமேதென வாயுகுமாரன் பகவானனேகாவதாரங்களெடுத்தும் அரூபமாயிருக்கிறவாயிற்றே நிரூபமாயிருக்கிற பரமாத்மாவை எப்படி தரிசிக்கக்கூடுமென, அரிபக்தர் - பகவான் பக்தன் நினைத்தவண்ணமான ரூபத்துடன் தரிசனந் தருபவராதலால் - தேவரீருபதேசித்த ஸ்ரீராமர் - சீதாசமேதனுயக் கருடவாகனனுடனுய்ப் பாதசத்துருக்கனுடன் வந்து - காட்சிகொடுத்தாலொழிய என் தாட்சிகீயகாதென,

அநுமார்-திரேதாயுகத்தி லெடுத்த அவதாரத்தை இக்கலியுகத்தி லெப்படி காணக்கூடுமென, அரிதாசர் பிரகலாதனுக்காய நரசிங்கரூபமுடன் - ஓர் - தூணிலிருந்து வெளிப்பட்ட-பகவான் - ஸ்ரீராமாவதாரத்துடன் வருவது துர்லபமோ அன்றி மச்சகச்சவராகவாமனமாகவும் - மோகினியாகவும் மூலபல ராசத்துக்காக - அனேகராமாரகவும் - நாரதரைப் பங்கஞ்செய்ய பலகிருஷ்ணாகவும்-இன்னமனேக வடிவங்களாகவும் அவதாரஞ்செய்த மாயாவிலாசன் - அடியேன்கோரிய ரூபத்துடன் வருவதற்கோர் தடையுண்டோ சீக்கிரம் பகவானை வரவழையுமையாவென, அநுமார்-நினைத்த மாத்திரத்தில் கடாட்சனுகிய பகவான்பிரசன்னமாக லேசானவரோ வெனத் துளசிதாசர்-இக்கணம்-அந்தப் பரத்பரனுடைய தரிசனங்கிடைக்காவிடின் என்னுயிர் தரியாது உமக்கிது தெரியாதோவென ஆஞ்சனேயர் - துளசிதாசருடைய நிர்சித்துச்சிமெச்சி - ஓபுண்ணியவானே - நாளையத்தினம் - நீயிருக்கும்-தெருவில் பகவானை வரும்படியாகச்செய்கிறேன் - ஸ்ரீராமரைத் தரிசனஞ்செய்து - ஆனந்தமடையலாமென் றறைந்து மறைந்து தன்னிருப்பிடஞ்சேர்ந்தார் கேட்டீர்களோ சித்தர்களேயென்று - நாபாஜிசித்தர் பின்னுஞ் சொல்லத்தொடங்கினுர்.

## அநுமார்தரிசனவத்தியாயம்

முற்றிற்று

# ௮-வது - துளசிதாஸருக்கு

## ஸ்ரீராமர்தரிசனந்தந்த அத்தியாயம்.

கேளுங்கள் சித்தர்களே பிரமபட்டத்துக் கெதிர் நோக்கிக்கொண்டிருக்கும் ஆஞ்சனேயர் மறைந்தபின் துளசிதாசர் - ஆனந்தவாரியில் மூழ்கினவராய்த் தன்னிருப்பிடஞ்சேர்ந்து எப்போது சூரியோதயமாகும் பகவானெப்போது பிரசன்னமாவார் - பிரசன்னமானுலென்னவென்று துதிப்பேன் - யாருக்கிணையெனமதிப்பேன் - பகவானைப்பார்க்க - முற்பிறப்பிலென்ன தவஞ்செய்தேன் - எப்புண்ணியஞ்செய்தேன்-உண்மையாகமக்குப் பராத்பரனுடைய தரிசனங்கிடைக்குமா கருணையுடன் கடவுள் நம்முன்பிரசன்னமாவாரா காட்டைவிட்டுக் காட்டிற்சென்று தபோபலனைகவருஷங் கடவஞ்செய்யவும் தபோதனர்களுக்குந் தரிசனந்தாராப் பகவான் யாதொரு நற்கிரியையுஞ் செய்யாக் கொடியோனாகிய வடியேன் முன்வருவாரா ஆண்டவனைக்காணும்படியாகச் செய்யும் ஆஞ்சனேயர்க் கென்ன கைமாறுசெய்வேன் - அனுமாரையறிவித்த பூதத்துக்கென்னவுபகாரஞ்செய்யப்போகிறேன் -அனுமாருரைத்துப்போன வாக்கியம் மெய்யாகவிருக்குமா மிகவும் உத்தமராகிய ஆஞ்சனேயர் பொய்சொல்வாரா பிரம ருத்திராதிபருங் காணுதற்கரிய ஸ்ரீமந்நாராயணர் - அனுமாருரைக் குடன்படுவாரா என்கிற பற்பல வார்த்தைகளாடிக்கொண்டே இரவெல்லாம் நித்திரைசெய்யாமல்-தெருவில் வந்துபார்த்தும் விட்டுவுட் புகுவதுமாயிருந்தார்.

இவரிப்படியிருக்கச் சூரியோதய மானவுடன் அனுமார்-வைகுந்தத்திற் கெழுந்தருளி விரஜாநதியில் ஸ்நானஞ்செய்து ஜப தபங்களை முடித்துக்கொண்டு ஸ்ரீமந்நாராயணருடையபக்கலடைந்து வலம்வந்துபணிந்து - திவ்விய பாதாம்புயங்களிற் றனதிருநயனங்களையணிந்து - ஓ ஸ்வாமீ உமக்கத்யந்த பக்தராகிய-வால்மீகாவதாரமான துளசிதாசர் கோரிய - ஸ்ரீராமாவதாரத்துடன் இன்றையதினம் பிரசன்னமாயவரைரட்சிக்காமற்போனால்-உமது பக்தனுயிர்தரியானிது நிச்சயம் உமக்கில்லா அக்கரை எனக்கேதேனென்று பலபல விதங்களாகத் தோத்திரஞ்செய்யத்தொடங்கினர்.

அதற்கு ஸ்ரீமந்நாராயணர் - புன்னகை காட்டி ஓ ஆஞ்சனேயா பக்தன்படைக்க எட்டியுதைக்க உனக்கு மனமும் வந்ததோ வெகுநாளாகத் தவஞ்செய்தும் உனக்குள்ள முரட்டுத்தனம் இன்னம் நீங்காமலிருக்கின்றதே - யென்கிற பல பரிபாசவார்த்தைகளாட- அனுமார் வெட்கி-ஓ ஸ்வாமீ அடியேன்செய்த குற்றத்தைப் பொறுத்து - மகானுபாவராகிய- துளசிதாசருக்கு-உம்முடைய திவ்வியதரிசனந்தரச் சீக்கிரம் வாருமென்னையனே யென்றுவணங்க,

பகவான் பின்னுநகைத்து இலட்சுமியைநோக்கி ஓ-மாதரசே இந்த அனுமார் யாதொருகுற்றமுஞ்செய்



யாத துளசிதாசரை யுதைத்ததகாரண முனக்குத் தெரியுமா அதென்னவென்றால் - துளசிதாசர்முற்பிறப்பில் வால்மீகராமாயணத்தைஇருபத்துநான்காயிரம் சுலோகத்தில் முடித்திருந்தார். அவரையிந்த அனுமாரியட்டித் தப்பாடி-வால்மீக ராமாயணத்தை யாரும்பார்க்காமற் செய்தாரதையறிந்த வால்மீகரென்னிடம் முறையிட்டார் நானே இந்தஅனுமாரையழைத்து நீர்பாடியராமாயணத்திற் சுந்தரகாண்டத்தை யோதுங் கேட்போமென்றேன். இவர் தனதுதானே புகழ்ந்துக்கொண்டே வந்தார். அதற்குநான் நகைத்தேன், இவர்ஏன் ஸ்வாமி நகைக்கின்றீரென்றுபலதரங்கேட்டார் நானும்மைநீரே புகழ்ந்துக்கொள்வது நியாயமோவென்று கேட்டேன், அதற்கிவர் நாணமுற்று இவர்பாடிய ராமாயணத்தைச் சமுத்திரத்தி லெறிந்துவிட் டிவ்வால்மீக ரோர்காலத் திலெனக்கு மாறுக்கஞ்செய்யவேண்டுமென உன்னிஷ்டப்படியே இப்போது நேரிடத் துளசிதாசரை பலவிதங்களாகச் சோதித்து - மிகவும் பேசித்துத் - தன்கோபமு நீங்க உதைத்துத் தன்பகையை தீர்த்துக்கொண்டார், இது ஞாயமாவென்று குலுங்கக் கலகலவென நகைத்தருளினர், கூடவே இலட்சுமி கலீலென்று நகைத்தாளப்போது சபையிலுள்ள தேவரிஷிகள்யாவரும் பெருநகை புரிந்தார்கள்.

அதற்கனுமார் மிகவும் லச்சையடைந்து பகவானைப்பணிந்து ஓ என்னாண்டவனே தேவரீரே என்னைப் பரியாசஞ்செய்து மந்தகாசஞ்செய்தால் மற்றியார்தா மேளிஞ்செய்யமாட்டார்கள். ஆயினுங்குற்றமில்லை-தேவரீர் இத்தினம் துளசிதாசர்முன்பிரசன்னமாய் ரட்சித்தருளல வேண்டுமெனத் தொழுதார். பரந்தாமன் - எனக்கில்லா அக்கரை உமக்கேன் - நீரும்விடாதிருப்பீரோ - எனக்கிதேபோ தென்பக்தனுக்குத் தரிசனந்தருகிறேனென, அனுமார்-அடியேனின்றைக்குள்நக்குப் பகவான்தரிசனந்தருவாரெனத் துளசிதாசரிடத்திற்சொல்லி விட்டேனாகலால் என வசனம் பொய்யாமலுத்தியமின்று தரிசனந்தரல்வேண்டும் ஸ்வாமீயென்று பணிய, பகவான் - என்னபிப்பிராயந் தெரிந்துகொள்ளாமல் நீரேபடி வாக்குத்தத்தஞ்செய்தீரெனத் திருவாய்மலர்ந்தருளிப் பின்னுஞ்சொல்லுவார். ஓ-அஞ்சனைதனயா - அந்தத் துளசிதாசன் மிகவும் காமக்குரோ முடையவனன்றிக் கொடிய செய்கையுள்ளவன் ஆதலா லின்னம் பனிரண்டாண்டு தவஞ்செய்தாலொழிய என்னுடைய தரிசனந் தரமாட்டேன் போபோவென்றுரைக்க.

அதுகேட்ட இலட்சுமி அனுமாரைநோக்கி-ஓ-என்னரும் புதல்வனே - சிரஞ்சீவிகளில் முதல்வனே உன்னெண்ணப்படியே இன்று பரமபக்தனாகிய துளசிதாசனுக் கெங்கள் தரிசனந்தருகிறோம் இனியுன்னிருப்பிடத்துக்குப் போவென்றுரைப, அனுமார்-பகவானுக்கும் பார்க்கவிக்கும் வந்தனம்புரிந்து தன்னிருப்பிடஞ்சேர்ந்தார்.

பின்பு பகவானை இலக்குமி நோக்கி-ஸ்வாமி பனிரெண்டாண்டாய் நம்மைநோக்கித் தவஞ்செய்யும் துளசிதாசர்முன் இன்று அகத்தியம் பிரசன்னமாகவேண்டுமென வணங்கிச் சீதையுருவெடுத்து நின்றார். அப்போது - பக்தவச்சலனாகிய பகவான் - கபடநாடகதாரி - ஸ்ரீராமலட்சுமண பரதசத்துருக்கினவடிவெடுத்துக் கருடனை விளித்து அதன்மேலூர்ந்துக் கொண்டு துளசிதாசரிருக்கும் வீதியில் யாருக்கும்புலப்படாமலவந்தார், இதற்குமுனமே பகவானைத்தரிசிக்க ஆவல்கொண்டு வீதியில்வந்திருக்குந் துளசிதாசர்-இன்றைக் கவசியம் பகவானுடைய தரிசனங்கிடைக்கும் அந்தப் பராத்பரனுடைய அழகுசுந்தரமும் - கோதண்ட அஸ்தமும் பச்சைமேனியும் - கமலக் கண்களுங் கமலபாதமும்-பார்க்கும்படியான பாக்கியமேதோவென்று ஸ்ரீராமாவதாரத்தை வர்ணிக்கத்தொடங்கினர்.

எப்படியென்றால் ஓ தேவர்க்குமுதல்வா - தசரதன்புதல்வா - கோதண்டக்கையா - கோதிலாமெய்யா வசிஷ்டவிசுவாசா - விசுவாமித்ரநேசா - தாடகையையழித்தவா - அகலிகையையளித்தவா - ஜனகர்கண்ணா - சீதைமணவாளா - பரசுராமபங்கா-பரியமாவங்க தந்தைமொழிக்குகந்தவா-தாயுரைக்கு மகிழ்ந்தவா-மகுடம்புனைய மறுத்தவா - மரவுரிதரிக்கப் பொறுத்தவா கெஞ்சலையுருக நைந்தவா காந்தையுருகநொந்தவா-லட்சுமணனோடு நடந்தவா-நல்ல வயோத்தியைக்கடந்தவா நடந்தறியாத நாரணா - நற்குகன்போற்றும் பூரணா-விநதிதனையென்று விண்டவா - நதிகடந் தின்பங்கொண்டவா - பாதம்பணியுந் முன்னவா-பட்டணம்போவெனச்சொன்னவா - அத்திரிபோற்றமகிழ்ந்தவா - அகஸ்தியர்தம்மைப் புகழ்ந்தவா-காக்கையின்கண்ணைக் கழித்தவா - கவந்தனுயிரையழித்தவா-கன்னியிச்சிக்கப் பழித்தவா - காதூஷணர்தமை யொழித்தவா - மாரீசன்றனைக்கொன்றவா - வஞ்சிக்காயயர்ந்து நின்றவா-சடாயுவைக்கண்டு மூச்செறிந்தவா - சடாயுவாற் சகலமுமறிந்தவா-சவரியெச்சிலைத் தின்றவா-சுக்ரீவமைத்ரிகளைப் புகன்றவா - அனுமான்மேற் களிகூர்ந்தவா

அரிய இஷ்டிகையிற் சேர்ந்தவா - மரங்களேழையுந் துளைத்தவா-வாலியிழ்க்கிருந்த இளைத்தவா-அநுமான் றனக்குறைவிரித்தவா-அவனுவிலங் கையையெரித்தவா விபீஷணன்றனக்கருள் செய்தவா-மேலாமருண்மழை பெய்தவா-அசரிகமே லம்புகளெய்தவா-அவுனர் கிரங்கனைக்கொய்தவா-கும்பகர்ணனைக்கொன்றவா-கொடியமா பலங்களைவென்றவா-ராவணனைமாய்த்தவா-ரணக்களத் திற்சாய்த்தவா-அரிவையைப்பெற்றவா-ஆனந்தங்கொண்டவா-அயோத்தியையாண்டவா-அறநோன்பூண்டவா வென்று ஸ்ரீராமாவதாரத்தைவர்ணித்துக்கொண்டே-வீதியில்வருகிறவர் போகிறவர்களாகிய யாரையும் பார்க்காமல்-பகவானுடைய வரவையே நோக்கிக்கொண்டு-புளகாங்கத்துடன் அஞ்சலிபந்தராய்-ஜெயராம்ஸ்ரீராம் ஜெ ஜெராம் எனத் தியானஞ்செய்துக்கொண்டேயிருந்தார்

அப்போதுபகவான் துளசிதாஸருடைய பக்திக் கிரமமுற்றும் அவரைச்சோதிக்கவேண்டி அவர்முன் வரும்போது ஸ்ரீராமரூபத்தைமறைத்துக்கொண்டு பாகையும் நீண்ட அங்கியும் நீண்டதாடியும் கற்களின் தாவடங்களுமுள்ள துலுக்கரூபமானு ருடனே பரதசத்துருக்க லட்சுமணருமப்படியேயாய்விட்டார்கள் ; கருடனே அசுவமாய்விட்டது இலட்சுமியோ ஸ்ரீராமாவதாரத்தை வர்ணித்துக்கொண்டேயிருக்கும் துளசிதாஸனுக்கிரக்கமுற்றிப் பரமபாகவதனுக் கென்னவாமவிக்கலாமென்கி றயோசனையோடுங் கூடியிருந்தார், இப்படிச்சதுர்கோலம் துளசிதாஸன்முன் பகவான்நின்று இலட்சுமியைநோக்கி- ஓ!மாதாவே இந்தத் துளசிதாஸனுடைய மடமையை யறிந்துக்கொண்டாயா என்னைப் பார்க்காவிட்டாலும் உன்னைப்பார்க்கவாவதருகில்வாமற்போனனினி இவன்முன்னிற்கவே கூடாதென்றுரைத்து அந்தர்த்தானமானார்

துளசிதாஸர் தன்முன் வந்துநின்றவர்கள் யாரோ துலுக்கரெனத்திரமனித்துப்பாராமுகமாயிருக்கு பகவான் மாயையை யறியாமல் பகவான்வருவார் வருவாரென்றெதிர்பார்த்திருந்து-ஓஓ அநுமார் வாக்கியப்படி ஸ்ரீமந்நாராயணன் வாராமலிருக்குங்காரணமேதோ வென்று சமேலெனப் பாராயணச் சபையைமேவி அநுமாராகியவிருத்தப்பிராமணருடைய பாதங்களில் விழுந்து பலதரந்தாழ்ந்து- முறையோவென்றோலமிட்டழத்தொடங்கினர்

அவ் வழுகுரலோசையைக்கேட்ட சகலரும்- அச்சமுற்றவர்களா இதுவென்னவிபரீதமென்று பாராயணத்தைவிட்டு விருத்தப் பிராமணரை நோக்கி இதுவென்ன சுக்குரலென் றேசையாய்ப்பேசத்தொடங்கினர்கள்.

துளசிதாஸருடைய மகிமையைப் பலருக்கும் புலப்படக்காட்ட வெண்ணங்கொண்ட அநுமார் அப்பா துளசிதாஸா- பகவானை இன்று தரிசனஞ்செய்யவில்லையாவெனத்துளசிதாஸர்- காலையிலிருந்துமாலைவரையிற் காத்திருந்துங்கர்த்தன் வரவில்லையென வலக்கணுற அநுமார்- ஓ மோசம்போனையே அசுவத்தின்மீதூர்ந்து சீதாசமேதராகத் துலுக்கவேஷமாய்வந்து உன்முன்சற்றுநின்றுமறைந்தவர் பகவானல்லவோவென- துளசிதாஸர் ஐய்வாமி- எனக்கெப்படித்தெரியும் சுவரூபத்துடன்தரிசனந்தரப் பரந்தாமனுக்குப்பயமோ இப்படிமாறுவேஷமாய்வந்து மோசஞ்செய்தல்லோ சலாமோ பகவான்என்னெதிரில்வந்தும் தரிசனந்தந்தும் பார்க்காதபாவியானேனே- மோசம்போனேனே ஓ ஸ்வாமி-இதற்குநானென்னசெய்யட்டுமென் றோலமிட்டழத்தொடங்கினர். அப்போதநுமார்-ஓதுளசிதாஸா தொண்டராகிய துளசிதாஸரே நாளையத்தினம் உமதுமனையாள் கட்டியமடத்துக்குநானே பகவானை யழைத்துக்கொண்டுவருகிறேன்பயப்படவேண்டாமென்றுரைய- அரிபக்தர் சுதாங்மையான வார்த்தையாவென வணங்கஆஞ்சனேயர் ஓ அரிதாஸரே உம்மைப்போன்ற பக்திவ்யவிசிஷ்டியாருமில்லை நாளைக்கத்தியம்பகவானுடைய தரிசனங்கிடைக்கும் இதுசத்தியமென்றறைந்து சகலருக்குந்தன் சுவரூபத்தைக்காட்டி மாயமாகமறைந்தருளினர்.

அவ்வாச்சரிய வசனங்களைக்கேட்ட சகலரும் துளசிதாஸருடைய திருவடிகளிற் சாஷ்டாங்கமாகப்பணிந்து தங்களுடைய நயனங்களைப்பணிந்து நீர் மிகவுந் தன்யர் சொல்லுதற்கரிய கனயர் எனப் பற்பல விதங்களாகத் தோத்திரஞ்செய்துக்கொண்டேமமதாதேவியின் மடத்திற்பிரவேசித்து அநுமா ரறைந்து போன அற்புதவசனத்தை மமதாதேவிக்கும் காசியிலுள்ள இராஜன் முதலானவர்களுக்குந் தெரிவித்தார்கள்

அதுகேட்ட இராஜன் முதலானவர்களும்-மமதாதேவிமடத்திற்பகவான்வந்து துளசிதாஸருக்குதரிசனந்தருகிறாராம், நமக்கும்பகவானுடையதரிசனங்கிடைக்குமென் றுகாசிப்பட்டணமுழுதும் அலங்கரித்துவாழைகள்கட்டி-மலர்ப்பந்தல்போட்டு வீதிகளிற் றோரணங்கள்கட்டி சூர்யோதயமானவுடன் துளசிதாஸரையும் மமதாதேவியையும் தன்பட்டையின் மேலேற்றிக் கைகைக்



கூப்பிக்கொண்டுபோய் சகஸ்ரநாமஞ்செய்வித்து தங்கள்வந்திரா பயனங்களளித்து சகலபரிசன்னதிகளைப்பூஷிதமான வர்ணிக்கமேலேற்றி- ஜயகோஷஞ்செய்வித்து- இவரேநாராயணர் இவரே வேதபாராயணர் இவரே சித்தவிவரே பூதேவி யெனத் தோத்திரஞ்செய்து மேளதாளங்கள் தாம்தாமென முழங்கவும் தேவதாசிகள் நாட்டியமாடவும் சோபனம்பாடவும் மங்களார்த்திகளெடுக்கவும் கைலாருகொக்கவும் தூபதீபங்களைக்காட்டவும் வினோதமானவைகளையிட்டவுந்தேவர்க்கோதோஷடங்களோதவும் மடத்துட்பிரவேசித்து பீடங்களிலிருத்திப் பற்பலவிதங்களாகத் தோத்திரஞ்செய்துக்கொடிருக்க ஸ்ரீமகாவிஷ்ணுவையும் ஸ்ரீமகாலட்சுமியையுமகொண்டாடும் பரமபாகவதர்களைப் போலவேயிருந்து இவ்வாறு வைபவத்துடனிருக்க.

அநுமார்வைகுந்தத்திற்சென்று ஸ்ரீமந்நாராயணனை வலம்வந்துபணிந்து அகிலாண்டகோடிபிரமாண்ட நாயகா அநாதரட்சகா இப்படியும் பக்தர்களை மோசஞ்செய்யலாமோ அடியேன்சிதருட்கூர்ந்து துளசிதாஸருக்கிட்சணஞ் சேவைதந்து பாதுகாக்கவாருமென்வாயிலெனது தோத்திரஞ்செய்யக் கபடநாடகநியகர்த்தன் கோபித்தவர்போலப்போபோகாதேதும்அத்துளசிதாஸனிடம்போய்ப் பக்கமடைந்து வந்தது போதாமலின்னைக்குன்றுடன் வந்தருளவடைய வேண்டுமோ பக்குவபக்குவம் பார்கதைத்தேவையில்லையோ இன்று மயளிகொண்டுவருதற்கன் பரிசோதித்தபின்பே வருவேனென்சேவை தருவேனன்றி எனதுடைய தரிசனம் லேசில் கிடைக்குமோவென்று திருவாய்மலர்ந்தருள ஆஞ்சனேயர் வணங்கி ஓஸ்வாமி உம்முடையகட்டளைப்படி உம்முடையதிவ்யதிருநாமங்களை காவுகிற்பிரசித்தப்படுத்த அவதாரஞ்செய்தவருக்காயுமதுவிவ்விபசேவை கோரியிருக்கும்துளசிதாஸருக்குசேவைதராமற்பின்னிடைத்தால் தேவர்க்கெகுவர் சொல்லவல்லவருக்குமுள்ளதோ ஓ தெய்வமேனவர்க்கிய பொய்க்காமல் துளசிதாஸனைக் காப்பாற்றவாருமையாவென்று பற்பலவிதங்களாகத் தோத்திரஞ்செய்தார், பகவான் கூடவேகூடாதென் றமைத்துவிட்டார் அதற்குமாருதி துளசிதாஸரிருக்குந் திவிரத்துக்கும் பகவான்செய்யுந்தாமதத்துக்கும் மிகவு மாயாசமடைந்து மிகவுமிடைந்து பகவானைநோக்கி ஓ என்னுண்டவனே நீர்படித்தாமதஞ்செய்கிறீர் ஒவ்வவருக்குந்தத்தைஅடியேனெம்பெய்ந்தெடுத்துக்கொண்டுபோய்க்காசியில்வைத்துவிடுகிறேனெம்பெருமைக்குபபகையோடேனென்றுரைய, பகவானை நோக்கி இலட்சுமியைநோக்கி ஓமாதாவே இக்தஅநுமாருதைத்தருக்குடிய வார்த்தையைக்கேட்டாயோமுன்னம் இராவணன் கயிலையை அடியோடுபெயர்க்க வெண்ணங்கொண்டதைப்போலல்லவோ விருக்கின்றது இப்படிபக்தர்கள் பேசக்கூடுமோவென்று திருவாய்மலர்ந்தருள அதுகேட்ட இலட்சுமி பெருநகைபுரிந்து பகவானைவதனத்தைநோக்கி ஓ ஸ்வாமி இந்த வைகுந்தத்திலும் பக்தப்பத்திமகாசஞ்சீவிபர்வதத்தைப் பந்தைப்போல ஒருகரத்திலிருத்திக் கொண்டுவந்த சேவகன் இந்தப்பரமபதத்தைப்பேர்த்தெடுத்துக்கொண்டுபோவதொருபெரிதோ துளசிதாஸனுக்குப் பூணையுண்டுகாதிருக்குமோவென்றுசொல்லப் பகவானப்படியேசெய்யட்டும் நான் துளசிதாஸனிடம் வரவேமாட்டேனென்றுரைய அதுகேட்டஅநுமார் பக்தனைக் காப்பாற்றும்பொருட்டுமென் மந்தனையெரித்துபோனான் தசரதன் பிரிவுக்குப்படியாறுமாசட்டும் உயிர்விக்கும்போறுமயபேர் கட்டும் வெண்ணத்துணிவுற்றுப்பகவானை வலமவந்துவணங்கி ஓஸ்வாமி வைகுந்தத்தைப்பெயர்த்தெடுத்துக்கொண்டுபோகட்டுமோவென,

பகவான்கயிலையைப்பேர்த்தெடுக்கவிளைந்த சக்ரிவன் பரமசிவனால்பெருவிரலாலமர்த்தப்பட்டதைக் குறித்துப்பாவென்றுரைக்க அநுமார் பிரதக்ஷிணஞ்செய்யவிளைந்த அடியேனுக்கு மவிடையூறாது முந்தமையே யெனப்பணிந்து விசுவரூபமெடுத்து அண்டகோளத்தில் தன்சிரந்தாக்க நிமிர்ந்து வாலை வளர்த்தி பரமபதத்தைப்பேர்த்தெடுக்கத்தலைத்தபோது அண்டகடாகங்களெல்லாம் நடுங்கத்தொடங்கினபட்டன சப்தசமுத்திரங்களும் அல்லோல கல்லோலங்களாய்த் தன்னெல்லைகடந்தன. அப்போது ஸ்ரீமகாலட்சுமியுந்தேவிகளும் மிகுவென்ன விபரீதகாலங்கேட்டதென்று பரந்தாமனைப் பலபலவிதங்களாகத் தோத்திரஞ்செய்யத்தொடங்கினர்கள். அப்போது பகவான் அநுமாருடைய வைராக்கியத்தைக்குறித்து வியந்து-பயந்தவர்போல் வந்து-ஓ-அநுமானே என்ன விபரீதஞ்செய்ய நினைத்தாய் - பிரளயகாலருத்திரன் நீயோனாய்-இனி இந்த வைராக்கியம்வேண்டாம்-உன்னிஷ்டப்படி துளசிதாஸனிடம்போவோம் வாவென்றுரைக்க.

அநுமார் ஓ என்னுண்டவனே இக்கண மிப்பரமபதத்தை என்வாலினுலும் கைலாசவோரத்திலும் பேர்த்தெடுத்துக்கொண்டுபோய் வாசுறிமியில் வைத்துப் பின்புமக்குச் சாஷ்டாங்கமாக வர்த்தனஞ்செய்கிறேனென்றுவணங்க பகவான் இவன் முருட்டுதனம் கிப்படிச்செய்தாலுஞ்செய்வான்-நம்முடைய

ஆசீர்வசனமே உறுதித்துணையாயிருக்கின்றது - பக்தர் களை ஜெயிக்க நமனாலாகாது - ஓரிவனை விபரீதங்கள் செரிட்டாலும் கேரிமென் றனுமாருக்குப் பிரிய வச னங்களுரைத்து - மனதைக்கரைத்து-விசுவரூபத்தை நீங்கச்செய்து கருடவாகனருடராசப்பாதசத்துருக்கர் லட்சுமண சீதாசமேதராக முப்பத்துமுக்கோடிதேவர் கள் நாற்பத்தெண்ணுயிரம்ரிஷிகள் சித்தவித்தியாதரர் கருடசாந்திருவர்களும் புடைசூழ மேனகையூர்வசிமு தலான கன்னிகைகள்மனதைக் கரைத்து காட்டியமா டத் தும்புருநாரதர் முதலானவர்கள் வீணைமுதலான வாத்தியங்களை முழக்கத் தேவதுந்துமி நாம்தாமென் றொலிக்க அனுமார் முன்னேநடக்கப் பூமாரிபொழிய பொன்மாரிசொரியத் துளசிதாசரிருக்கும் மேடைக்கு க்ஷணியாக ஆகாயமார்க்கத்தி லிருந்திறங்கும்போது,

காசிதேசயிராஜன் முதலானவர்களும்-ஆ-ஆ-ஆச் சரியம்-ஆச்சரியம்-ஆனந்தம்-ஆனந்தம் - இந்தத்துளசி தாசர்-எத்தனைகாலங்களாகத் தபஞ்செய்தவரோ முற் பிறப்பிலெந்த முனிவராயிருந்தவரோ அல்லது இவ்வு லகை ஆட்கொள்ளவந்தவரோ வெனப் பற்பலவிதங்க ளாகத்துதிதுப் பகவானைப் பற்பல விதங்களாகத் துதித்து தோத்திரஞ்செய்யத்தொடங்கினார்கள்,

அப்போது - துளசிதாசர்-பகவான்வரும் விந்தை யைப்பார்த்து தேகம்வேர்த்து-ஆ-ஆ-என் னுண்டவன் இவ்வளவு வைபவத்துடன்வந்து தரிசனந்தர நானிழை த்த தவமேதோ எங்கள் பெரியோர்செய்த புண்ணிய மேதோ ஓ-ஓ-எத்திசையிலும் தேவர்கள்நிறைந்துவரு கிறார்களே நான்முன்நீமுன் னென்றநேகரிஷிக ளதிக துரிதமாகவருகிறார்களே இதோஅனுமாரும் வந்துவிட் டாரே அதோ பகவான் சீதாசமேதராகப் - பரதசத்து ருக்னலட்சுமணருடன் வருகிறாரோ எனப் புளகாங்கமாக மயிர்க்கூச்செறிந்து - உல்லாசத்தாற்-சிரித்து-அடிக்கடி வந்தனம்புரிந்து - மிகவும்பரிந்து - சந்தோஷம்விரித்து மெய்மறந்து - மலர்க்கைகூப்பி - ஆனந்தக்கண்ணீர்சல சலென்று - கண்ணமாகத் துதிப்பேனோ வென்று ஒன் றுந் தோன்றாதவராகத் தன்னைமறந்து - அசைவற்று நின்றிருந்தார்.

அப்போது பகவானங்கெழுந்தருளித் துளசிதாச ரை மார்புடனணைத்துக்கொண்டு வெருகஷ்டப்பட் டாயெனவிண்டு-ஓ-ஓப்பிலா வெவனப்பனே-உன்னைப் போன்ற பக்திமானாகியெத்திற் சிறந்தவர்க ளில்வுல கிலொருவரில்லை, உன்பக்திக்கு மிகவும் மெச்சினேன் ஆதலால் - சீக்கிரமுன் திருவாக்கைத்திறந்து - என்ன வரம்வேண்டுமோ கோரும் - ராமவதாரத்தைப்பாரும் உனக்குற்ற கவலைகளெல்லாந்தீரும், ஆனந்தம்மீறும் இதிவானருணங்கள்மாறும் - பக்திசெய்தது போதும் உடலாதியைத் தாரைவாரும் . மமதாதேவியும் நீரும் மோட்சலோகத்தைச் சேரும்-எதோ வும்முடையதிரு வஸ்தத்தைத் தாரும்-பூவுடன்கூடியதாரும் மேன்மை பெறுவதுபோ லெலலோரும் - உம்மாலென்னைத் தரி சித்தார்கள்பாரும் என்று பற்பலவார்த்தைகளாடிப் பரா தாதிகேசபரியந்தர் தன் திவ்விய அவயங்களாற் நட வினமாத்திரத்தில் - துளசிதாச ஞானந்தபாவசத்தனாய் பகவானைப் பலதரஞ்சூழ்ந்து - திவ்வியவடிகளில்வீழ் ந்து - பலதரந்தாழ்ந்து - ஓம் - அரி - ஹரி - நாஹரி முராரி - அம்புஜாட்சஹரி - மாதவா - யாதவா-நா கவா - கேசவா - வாசுதேவா-தேவதேவா-ஆதிதேவா மகாநுபாவா-ராவணமர்த்தனா - காளிங்கநிர்த்தனா - ஜ னார்த்தனா - பச்சைவர்ணு - கார்வண்ணு - கருடவா ஹனு - கோபியர்மோஹனு - சேஷசயனு-கமல நயனு நாராயனு - பரம்மபாராயனு - அம்புயசரணு-கௌஸ் துவாபரணு - ஓ - பகவான் - ஓ விஷ்ணு - ஓ - தெய்வ மே - இவ்வேழைக்குத்தா னுனது கருணைவந்ததோ இந்த வீனதொன்முன்வர மனம்பொருந்ததோ அனுமார் பலவ ந்தத்தால் வந்தீரோ - அல்லது நீரே சேவைதந்தீரோ ஆஞ்சனேயர்மொழிக் குட்பட்டீரோ - அல்லது நீரே புறப்பட்டீரோ - மாருதிக் கபயந்தங் கொடுத்தீரோ அதனால் ஸ்ரீராமவதாரமெடுத்தீரோ - நேற்றுவந்தும் தரிசனந்தராமற்போனகாரண மேதோ - யான்செய்த தீதோவென்று பலவார்த்தைகளாடி அன்பு மேவிட் டால் பின்னுந் தோத்திரஞ்செய்யத் தொடங்கினர்.

---

## இராமாயணச்சருக்கம்.

### விருத்தம்.

அத்துவிதானந்தமாதவா
 ஆதியுமந்தமில்லாதவா
கூத்தவதிலருள்யாதவா
 தோற்றமொரெக்காலிலாதவா
பத்திசற்றுமில்லாப்பாவியேன்
 பார்தனிலென்றவஞ்செய்தனன்
இத்தினஞ்சீதாசமேதனு
 யின்புடன்வந்தெனையாளவே. க



சத்தியதேவரீடேறவே
 தசரதனுர்குமைந்தரே
புத்திரனுகியமாயனே
 புண்ணியசோத்திமோயனே
புத்திசற்றில்லாதபாவியேன்
 பூமியிலென்றவஞ்செய்தனன்
இத்தினஞ்சீதாசமேதனு
 யின்புடன்வந்தெனையாளவே. ௨

தத்துவகௌசிகன்வாக்கினும்
 றடகைதன்னையழித்தவா
வித்தகனௌதமன்றேவியை
 மேவியசாபந்தவிர்த்தவா
சுதஜனகனைப்பார்த்தவா
 கொல்பவத்தென்றவஞ்செய்தனன்
இத்தினஞ்சீதாசமேதனு
 இன்புடன்வந்தனையாளவே. ௩

வத்தியஞ்செய்வில்முறித்தவா
 வைவதேகியைமணஞ்செய்தவா
மத்தபாசிராமன்றனுன்
 மந்தமழித்ததற்கொற்றவா
சித்தசன்மாலினிருந்திடேர்
 தியனென்மாதவஞ்செய்தனன்
இத்தினஞ்சீதாசமேதனு
 யின்புடன்வந்தனையாளவே. ௪

உத்தரவிந்தநற்கைகையி
 னேர்மொழியான்வனஞ்சேர்ந்தவா
மித்திரனுகுகன்றன்பான்
 மேவிவரமபலவிந்தவா
அத்திரிமேலருள்கூர்ந்தவா
 ஆதியிலென்றவஞ்செய்தனன்
இத்தினஞ்சீதாசமேதனு
 யின்புடன்வந்தனையாளவே. ௫

சித்திரகூடத்திலின்றவா
 தியவரக்கரைக்கொன்றவா
சித்திரமானபின்னேசென்றவா
 சீதையெங்கேதம்பியென்றவா
குத்திரவாலியைவென்றவா
 கோமுெயெனைன்றவஞ்செய்தனன்
இத்தினஞ்சீதாசமேதனு
 யின்புடன்வந்தனையாளவே, ௬

கைத்தலமீந்தசுக்ரீவனை
 நாகினிகாவென்றகாரணு
அத்திருமலங்கைக்கேகெனெ
 வாஞ்சனையற்கருணைமாறு
உத்திக்கனைசெய்தபூரணு
 உலகினிலென்றவஞ்செய்தனன்
இத்தினஞ்சீதாசமேதனு
 யின்புடன்வந்தனையாளவே ௭

புத்திவிபீஷணன்காவெனப்
 பொன்லங்கையாளென்றசீலனே
சித்தனலட்சுமணுலிந்திர
 சித்தனைச்கொல்லென்றமூலனே
முத்தியைவேண்டிடாப்பாவியேன்
 முற்பவத்தென்றவஞ்செய்தனன்
இத்தினஞ்சீதாசமேதனு
 யின்புடன்வந்தனையாளவே. ௮

பத்திபுள்ளரும்பகர்வனைப்
 பாரின்மேல்வீழ்த்தியநாதனே
யுத்தஞ்செய்மூலபலங்களை
 யோர்கணையால்வென்றநீதனே
குத்திரமேசெயும்பாவியேன்
 குத்தியிலென்றவஞ்செய்தனன்
இத்தினஞ்சீதாசமேதனு
 இன்புடன்வந்தனையாளவே. ௯

பத்துத்தலையனைப்பாரினிற்
 பாவைத்தாற்கொன்றவுதாரனே
எத்தனைமும்புகழ்தாயினை
 யெரிசிற்குளியென்றஆரனே
பத்திவிசியென்றவீரனே
 பாவியேனென்றவஞ்செய்தன்
இத்தினஞ்சீதாசமேதனு
 யின்புடன்வந்தனையாவே ௰

சத்துருக்கன்பரதன்றனைச்
 சபாசென்றமெச்சினைசார்ந்தினை
இத்தலமேத்தவயோத்தியை
 யாண்டாவிருலிவந்தினை
முத்தியளிக்குபவதாக்கனே
 நாடனெனன்றவஞ்செய்தனன்
இத்தினஞ்சீதாசமேதனு
 யின்புடன்வந்தனையாளவே ௰௧

பத்தர்களைக்காக்குமோமனே
பாபவிமோசனஸ்ரீராமனே
நித்தியநிர்மலராமனே
நிர்ப்பயந்தரும்பரந்தாமனே
எத்திசையும்புகழ்வ்யோமனே
யென்றவஞ்செய்தவன்சோமனே
இத்தினஞ்சீதாசமேதனை
யின்புடன்வந்தனையானவே கஉ

என்றிவ்விதமாகத்தோத்திரஞ்செய்தருளும் துளசிதாஸருடையமகத்தின்மேற்பகவான்றனதிருவுளம் புகளைவதுப்பத்தியில்மிகுந்தவித்தியையுடைய உத்தமனுமியனைக் கொத்தபக்தனே உன்பக்திப்பிரதாபத்துக்குவந்தேன் என்னவரம் வேண்டுமோ கேளுமென்று திருவாய்மலர்ந்தருளின பச்சைவர்ணனுடைய அச்சுதனுடைய உச்சித பாதங்களை உச்சியின் மேலேதரித்துக்கொண்டு ஞானஞுண்டவனே இவ்வுலகிலுள்ள ஜீவர்களுள் பாவியேனெப்போதுமுமை நினைக்கின்றேனே அப்போதேதன்தாயோகிய சீதாசமேதனையுவந்து தரிசனந்தரல்வேண்டுமென்றி எல்லாஜனங்களுக்குமேலான ஜனமுமியாதோ எல்லாப் பதவிகளிலும் மேலானபதவியாதோ எதனுடன் திருவடியைவேலில்லையடையலாமோ எந்தச்சாதனத்தாற் கொடிய விந்திரியசேஷ்டைகளை யொடுக்கிப்போமோ என்ன உபாயத்தால் மனோவேஷ்டைகளடங்கிப்போமோ நாரதர் நிர்விகல்பர்களெல்லாமனத்தில்லேயே யிருக்கின்றார்களோ அந்த நிலைபடியேயஜனங்களுக்கிரகஞ்செய்யும் ஸ்வாமீ யென்று துளசிதாசர் வணங்கும்போது பகவான் துளசிதாஸரைக்கருணையுடன்பார்த்துக்கரபுடனேசேர்த்து ஓடராமபாகவதனே முதலக்கரிய வேதாகமங்களை நீகவிர இப்பூதலத்திலதித மாசுவருண்டோ ஓர்ஞானபோதனே பற்றின்றிவனுக்குனே ரேதனைதரிற்சிறந்தபரந்த வானருக்குப்பாதுகத்தை வசிஷ்டசன்னிதையில்விரித்துரைத்தவால் மகரிஷிகளெல்லாம் வென்றதுரானதிருவடியைக்கொடுத்தமாத்திரத்தில்மனதுளசிதாஸருக்குப்பூர்வஞ்ஞானம்பிறந்து முற்பிறப்பிற்றான்வால்மீகரென்றறிந்து ஓ ஓ நாம் இவ்வுலகிலுள்ள மாக்கள்கட்டுப் பக்தியும் நிவன்றாக்கியும் போதிக்க அவதரித்துப் பூர்வஞ்ஞானம் மறந்து உலகிலுள்ளமானிடர்களுஞ்செய்யாக்கொடும்பாவமாகிய காமாந்தனாகக் குகைக்குட்பட்டு க்ஞானமிழந்துகெட்டு உலகத்தாலிக்கபடம்பெருத்தேனே யென்று பலவாறுகவன்னி பகவானைச்சும்மிருக்கும் நாரதரிஷிகளைப்பார்க்கநாணமடைந்து பகவான் முன்னிற்பதற்கிடைந்து ஸ்ரீமத்ராமபாதனைவணங்கித்துளித்து ஓ ஈர்த்தனே தங்களுடையபரிபூரணகடாக்ஷம் பெற்ற அடியேன்கொடியபெருநிக்காமவலையிற்சிக்கி அஞ்ஞானவிஷயாவெத்தத்திற்சொக்கி மெய்ஞ்ஞானத்தைமறந்து சின்னமாடதுனைதைதுறந்து உபாதிகளைச்சாதியம்மியறந்து துர்க்குணமுள்ள சிறைந்து மாயாநிலையில் மதுறைந்து சொல்லுதற்கரிய துன்பத்தாற்குறைந்து பாமரனைக் காணமென்னமோ தெரியச்சொல்லும் ஸ்வாமியென்றிரக்கதூரம் அதிதானைப்பவனுதானசெய்து ஓ பரமபாகவதசிகாமணி பரப்பிரமஞ்ஞானி நான்திரேதாயுகத்தில் ராமாவதாரமெடுத்து பூர்வஞ்ஞானமறந்து மிகவுமயர்ந்து வசிஷ்டராற்றெரிந்துசகலசந்தேகங்களுமிறந்து சங்கல்ப விகல்பங்களைத்துறந்து அனேககாளரக்ஷபுரிந்து காட்டிற் றருமத்தையும் காட்டிற்றவத்தையும் நிலைநிறுத்தி எதாஸ்தானமடைந்தேனுதலான் மாயாசம்பந்தமான ஜென்மமெடுப்பவர்கெல்லாம் தங்கமே பவித்திரமாகும் தீருமாயையின்சாமர்த்தியத்தாலேயே விஷயபோகத்தை யிச்சித்தவெரு அலவ்லைக்குள்ளானீர் காமத்தைவென்றவர்கள் திரியுகத்திலுமில்லையே நிலைப்பாராட்டிச் சஞ்சலப்படவேண்டாம்

ஏனெனில் இதோநிற்கும் நாரதருடைய சரிதையைக்கேட்டிரோவெருஆச்சரியப்படுவீர் ரகோனென்று ஒருதரயுகத்தில்இந்தயாழ் வல்லோன் உபாதிபிறுவ்கநாட்டைவிட்டுக் காட்டையடைந்து பரிஹன்று நெவியவருஷங்கள் தவஞ்செய்து காமாதிகளை வென்றேமெனக் கீர்த்திக்காட்டையடைந்து சொர்க்க லோகத்திற்சென்றுதவமேமேலானதெனப்புகன்றாசத்தியலோகம்போய்ச் சதுர்முகனை நோக்கி நாட்டி விருப்பதினும் காட்டிலிருப்பதே உத்தமமென்றறைந்து-காசிவியிற்சென்று பரமசிவனைப்பணிந்து - காமதகனஞ்செய்பவர்க்கு காடே நிவாஸ்தானமெனசவின்று - வைகுந்தமடைந்து - என்னைப் பணிந்தங்காகக் கதித்து-ஆனந்தமேலிட்டாற் குதித்து-ஓ-மாயாவினாசா-வைகுண்டவாசா - உம்முடைய மாயை - தவத்தினிருப்போரை யென்னசெய்யுமெனப்புகல - நான் - சமூகத்தி லிருக்குஞ் சனகசனந்தனரிருப்போர்க் கெப்படியென்றுகேட்க, இவர் எப்போதும் கனவிற் கழ்ந்திருப்போர் சாக்ரமசெப்பன சேஷைடையால் வேகவிடைவையடையமாட்டார்களென நான சாக்ரதசைக்கு ஜிதிநிலைமைப்போதும் மேவிநிருக்தவிதல்லவா வெனஇவர்களுக்குனமுன்னோர் சந்தமுஞ்சாமிநிதிலைமையிலேயே யிருப்பார்களென நான் நிவசாப்பிசெதிருக்கும்பொருட்டு ஓ நாரதமகரிஷியே-உம்மைப்போன்ற திவ்வியஞ்ஞானிக ளெவ்வுலகிலுண்டோ உம்மை



கர்மதகனஞ்செய்த கறைமிடற்றன்னவென்றோருரைக்கவேண்டுமெனத்துதிக்க-இவாகமடைந்து அடியேன்காட்டிற்றப்போய் தவஞ்செய்து நாள்கழிக்கிறேனென்று வணங்கிக் கானகத்தை நாடிச் சென்றார், அப்போது நான்-இவர் போகும்மார்க்கத்தில்-மாயையால் ஓர் பட்டணமுண்டாக்கி அந்நகரக் கிறைவனுக்கோர் அழகுள்ள கன்னியிருக்கவும்-அப்பெண்ணுக்கு சுயம்வரமடக்கவும் - ஐம்பத்தாறுதேசத் தரசர்களு மங்குவந்திருக்கவும் - அந்நங்கையின் ஜாதகத்தை சோதிஷப்பார்த்தெந்தமன்னனுக் கென்புத்திரி மாலையிடுவாளெனக் கேட்க வெதிர்பார்த்துத் தவஞ்செய்யப்போகும் இவரை மதித்துப்பலவந்தமா யழைத்துக்கொண்டுபோய்த் தன் புதல்வியையழைத் திவரெதிரில்நிறுத்தி-ஓ-மஹானுபாவா - இந்தப்பெண் ணெந்தேசத்தெந்தமாலையிடுவாளெனக் கேட்கவும் செய்ய-இந்த நாரதர்-கும்பிடப்போனதெய்வங் குறுக்கேவந்ததுபோற் களித்து அச்சுந்தரியையுற்றுப்பார்த்துப் பரிவுகொண்டு-பிரமித்து - ஸ்தம்பித்து - மனமுருகி - அன்புபெருகி-இவள் நரலோகப் பெண்ணல்லவென் றுன்னி - தான் மணஞ்செய்யநண்ணி-அரசனைநேசித்து-மிகவும் விசுவாசித்து ஓ - மகாராசனே இப்பெண்ணுக்குரிய ஆடவன்-தேவலோகத்திலிருந் திவ்வியோர் - முகூர்த்தத்துக்குள்வருகின்றான் உங்களுக்குத் தரிசனந்தருகின்றான் - அவனுக்கே உமதுகன்னிகையைக்கொடுத்து வதுவைசெய்விரென்றறைந்து - அம்மாதைநோக்கி - ஓ பெண்கள் நாயகமே-உனக் கெவ்விதபுருஷன்மே லிச்சையென்று வினவ அத்தங்கவன்னிகை-ஓ-முனிசிரேஷ்டரே எனக்கு மகாவிஷ்ணுவுக்கு நிகரானபுருஷன்மே லிச்சையென்றுவணங்க, இந்த யாழ்வல்லோன் - இப்போதுவரும் புருஷன் - மகாவிஷ்ணுவைப்போலவே -யிருப்பானென்றோதி - அந்நாட்டைக்கடந்து-காட்டையடைந்து-கன்னியென்னும் வன்னிதன் சென்னியைக் கொளுத்துவதால் காமச்சிந்தையால்நொந்து-நாணமிழந்து-ஓ-ஓ-இந்தருணத்தி லெந்தருபத்துடன் சென்றால் நம்மையப்பாது வாதுசெய்யாமல் மாலை சூட்டுவாள் - பாராட்டுவாள் இன்பத்தையூட்டுவாள்-களிமுகத்தைக்காட்டுவாள் ஆ-ஆ- அக்காந்தையின் முகவிலாசமே விலாசம் - இப்பேர்க்கொத்தவனுடைய நேசமேநேசம்-அவளுடைய கூந்தலே கூந்தல் - அவளைபணியும் ஏந்தலே யேந்தல் அவளுடைய ரூபமே ரூபம்-அவளா லிங்கன லாபமே லாபம் - அவளுடைய வசனமே வசனம்- அவளோதருக்கும் பஜனமே பஜனம் - அவளுடைய பார்வையே பார்வை - எனக்குக்கிடைத்தசேவையே சேவை-அவளுடைய நடையே நடை-இப்பேர்க்கொத்தவட் கேயுங் கொடையே கொடை-எனப் பற்பலவார்த்தைகளாடமாரன்செய்யுங் கோரத்தால் - தவஞ்செய்யப்போகுந்நேரத்தைவிட்டு - நொந்துருகுட்டு - பக்தவச்சலனாகிய என்னை நினைந்து-ஓ-பகவானே - இவ்வேளை வந்து உன்னுடைய ரூபத்தைத்தந்து பாதுகாக்காமற்போனால் காமாக்கினியாலெரிந்துபோவேனென்றறியாயோ ஓர் - கன்னிகையால் நாதன் மரணமடைந்தானென்னும்பழிக்கிலக்குமெனக்குறியாயோ உன்னுடையமாயையை வென்றவர்களுமுண்டோ - நான் சொல்லும் மொழியிற் பிசகுண்டோ - சீக்கிரம் வருவாய் உன்னுடையரூபத்தைத் தருவாயென்றுருகும்போது நான்தரிசனந்தந்த தென்சேவை பலத்தால் காமவிகாரம் நீங்குமென்று - அந்தர்த்தானமாகவே யிருந்து - ஓ - முனிசிரேஷ்டரே - நீ நிச்சித்தபடி என்னுருவைக் கொடுத்தேன் சீக்கிரம்போயும்முடைய இச்சையைநிறைவேற்றிக்கொள்ளுமென்றுரைக்க,

உடனே - இந்தமுனியர் - தனக்குப்பச்சைநிறமும் - பீதாம்பரமும் - கௌஸ்துபாபரணங்களு, மடைந்ததே-களிப்புற்றுப்பகலவனையும் புருகூதனையும்-தனக்குத் துவாரபாலகராகிய வாக்கினைத்தமாத்திரத்தில் உடனே அவர்களிருவரும் ஸ்ரீ வைகுந்தவாசலைக்காக்கும் துவாரபாலகரைப்போல் வடிவெடுத்திவர்பக்கலடைய உடனே-இந்தமகாத்மா வெகுஅவசரத்துடன் அப்பட்டணத்திற்பிரவேசிக்க அத்தருவாயில் தான் அவாக்கொண்ட வடிவழகி பூமாலையைக் கையிலேந்திக்கொண்டு விசாலமான சபாமண்டபத்தி லெழுந்தருளியிருக்கும் ஐம்பத்தாறுதேசத்தரையர்மையலகொள்ள மையதனில் நின்றுகொண்டிருப்பதைக்கண்ட இந்த யாழ்வல்லோன்-அதிக ஆவலாய் அவளருகிற்சென்று - ஆயிழைக்கன்னற் வரியனை வரவழைத்ததில் நீற்றிருந்து அடங்காக் காமவிகாரத்தா லவ்வரிவையைநோக்கி நாணத்தை நீக்கிப் பூதலம்போற்றும் ஓ-மாதரசே நீதவிர மனைக்காதரவிலாமையால் என்னை யிக்கணமே காப்பாய் கடைக்கண்ணாற்பார்ப்பாய் - என்னை உன் னிருகரங்களாலும் மார்பிற்சேர்ப்பாய் - என் மையலைத்தீர்ப்பாய் என்றின்புள்ள வார்த்தைக ளன்புடனுரைக்க - அதைகேட்ட - அம்மோகனங்கி - காருகவதனமுள்ள இவரைநோக்கிக் களிமெல மந்தகாசஞ்செய்து மன்னர்களருகிற்செல்ல இம்முனிநாதர் அவள்மேலிருக்கும்பேராசையால் அருகிற்சென்று-காரங்களைக்குவித்துநின்று ஓ-அழகுசுந்தரமே - ஆசைப்பெருக்கமே-உனக்குகந்த மனோளன் நானன்றி வேறொருவருண்டோ இல்லை இல்லை ஆதலா லன்புடனெனக்கே மாலையிட்டு மகிழ்வடையப்

கடவாயென் றவ்வஞ்சியைப் பற்பலவிதங்களாகக் கெ
ஞ்சிக் கெஞ்சிக்கொஞ்சிக் கொஞ்சி வேண்டியும் வேண்
டா அம்மங்கைமேலுள்ள வாஞ்சையாலும் மாரனெய்
யுங் கோரமான பத்திரத்தி னுபத்திரத்தாலும் - அவள்
மேல்விழுந்து ஆலிங்கனஞ்செய்து ஓ-பெண்ணே - என்
னிருகண்ணே - உன்னை வணங்கிறேனிப்போதே என்
னேயிணங்க வாவாவெனப் பலவந்தஞ்செய்ய அம்மாது
முனிந்து கடினவார்த்தைகளாடி - எட்டிப்போய் நிற்க
இவர் மோகாந்தகாரத்தாற் பின்னு மவளைப் பலவந்த
ஞ்செய்ய அக்கன்னி யிவர்க்ககப்படாமற் புறம்போக
இவரவள்பின்செல்ல - அவளச்சமுற்றுப் பலதிக்குக
ளிலுமோட-இவரவளைவிடாமற் றொடர்ந்தோட-முடி
விலப்பேதை ஓர் தடாகத்திற் குதிக்க, இவருமச்சாகிற்
குதிக்கப்போய் அவ்வாவியிற்றெரியும் - தன்னுடைய
சாயையைப்பார்த்து - ஆ - ஆ - நம்முடைய வதனம்
ருகத்தின் வத்திரமாயிருப்பதினாலல்லவா இம்மோகனு
ந்தி வெறுப்புற்றாள்.

இதுகாரியத்தை ஆயிரஞ்சோதியனும் - ஆயிரங்க
ண்ணனும் புலப்படுத்தாமற் றங்களுங் கெக்கலிகொ
ட்டி நகைத்துப் பங்கப்படுத்தினார்களல்லவா வென்று
மூளிவுகொண்டமாத்திரத்தில் கேணியும் - கன்னியும்
பட்டணமும் - இராஜ்களும் மாயமாய் மறைந்து கார
டவிபாவமாத்திரத்தில் - ஓ - ஓ - நம்மைப் பகவான்
பரிசோதித்தார், நம்முடைய திரமான மனதைப்பேதி
த்தார். இதுதெரியாமல் அவர்மாயைக்குட்பட்டு - தப
ஸிழகெட்டுச் சூரனுஞ் சுரேசனும் கெக்கலிகொட்டி
நகைக்கும்படியாக நேரிட்டதல்லவாவென வெகுண்டு
ஓ - கதிரவனே கரியவனே - நீங்களிருவரும்-வானரத்
தின்மேல் மோகமாகி - வானரங்களாகி-ஒருஸ்திரியைப்
புணர்ந்து - ஆயுள்பரியந்தம் பகையாளிகளாய்ப்போகக்
கடவீர்களெனச் சாபமிட்டார். அதுகேட்ட இந்திர
னும்-எம்பரியோனுங் கைகுவித்து-ஓ-மாதவனே-குற்ற
மில்லா எங்களுக்கு விபரீத சாபமிட்டீரே இச்சாபநிவ
ர்த்திக் கேதுவுரைத் தாட்கொள்ளுமையாவென்றுவண
ங்க, இந்த யாழ்வல்லோனுக்குச் சற்றே தயைபிறந்து
ஸ்ரீமந்நாராயணனுடைய தரிசனத்தா லுங்களுக்கிட்ட
சாபநிவர்த்தியாமென் றுரைத்தனுப்பிவிட்டு - அன்று
முதல் என்னைப்பிரியாமல் - என்றரிசன பரிசனபலத்
தால் க்ஷேமமாயிருக்கின்றாரெனத் திருவாய் மலர்
ந்து.

ஓ-அரிபக்தனே - ஜீவன்முக்தனே - எப்போர்க்
கொத்தவர்களும் மாயையை வெல்லவரிது - இந்த மா
யாவிசேஷத்தினாலேயே பூர்வஜன்மத்தி லுன்மனைவிக்
கு நீ நீதியுரைத்ததுபோ லிச்சென்மத்தி லுன்தேவி யு
னக்கு விவேகமுறைக்கநேரிட்டது - இப்படி மேல்கீழ்
கீழ்மேலாக்குவது மாயையின்சுபாவமாம்-இப்படிசெய்
வதே மாயையன்றி வேறே மாயையென்பதொன்றுண்
டோ அறிவுன்றி யூகிக்கின் சுத்தசூனியமாய்ப்போகும்
மாயையைக்கடக்கப் பிரமாதிதேவர்களாலுங் கூடாது
என்றறைந்த பகவான்றிருவடிகளில் துளசிதாசர்வண
ங்கி - ஓ - ஸ்வாமீ உம்மையன்றி மாயையென்பதுவே
றேயொன்றுண்டாயிருக்க வஸ்துவிரண்டா ஓபகவானே
சகலலோகங்களையுஞ் சிருஷ்டித்து உமது மாயையிலழு
த்தி வாட்டுகிறவரும் நீரே சகலஜீவர்களையும் காமக்கு
ரோ தங்களிற் பிரவேசிக்கச்செய்து பலவிதங்களா யா
ட்டுகிறவரும் நீரே விஷயானந்தந் துக்கமயமாயிருக்க
வும் மேனமேலு மின்பபோகமாகக்காட்டுகிறவரும் நீரே
ஸ்தம்பமுதல் சகல ஜீவராசிகளுக்கும்-எட்பிரமாணம்
பிசகின்றி அவரவர்கள் வினைபடி சுக துக்கங்களைப்
பூட்டுகிறவரும் நீரே சமுசாரமென்னும் நரகமேடை
யைவிட்டு வெளிப்படாமல் - ஞானக்கதவைப் பூட்டு
கிறவரும் நீரே பாபபுண்ணியமென்னும் சுமையைச் சு
மக்கு மாளாக்கி மாட்டைப்போ லோட்டுகிறவரும்நீரே
ஆட்டுக்கடாக்களைப்போல ஒருவரோடொருவ ரெதிர்த்
து யுத்தஞ்செய்திறக்கும்படியா மூட்டுகிறவரும் நீரே
பக்திபுடன்வேண்டிக்கொள்ளும் - பரமபாகவதர்களைச்
சீக்கிரம் பாதுகாக்காமல் என்னையன்றி காக்க வேறு
தெய்வமில்லை யென்கிறபெருமையை நீட்டுகிறவரும்
நீரே, பக்தர்களின் மனம்நோகச்செய்யும் மாபாவிகளி
ன் மனம நடுங்கக் கோரரூபங்களைக் காட்டுகிறவரும்
நீரே, உம்மின் அடியார்க்கோ ரிடையூறுவாராமற் பாரா
ட்டுகிறவரும நீரே நானென்னுமகந்தைக் சிகிச்சைசெ
ய்து மௌனமுற்றிருக்கும் பிரமஞானிகட் ககண்டா
னந்தத்தை யூட்டுகிறவரும நீரே என்று பற்பலவிதங்க
ளாகத் துதிக்கும் - துளசிதாஸரைப் பகவா னன்புட
ன்பார்த்து மார்புடன்சேர்த்து - அபடா பக்தசிகாமணி
பரபிரமக்ஞானி-நீயறியா மர்மமொன்றுண்டா மாயை
யென்னையன்றி வேறுண்டா நீ-மாமாமாவென்றுரைத்
து பாராபாதைபுணர்ந்த பரமசாதுவாச்சுதே - இனி
மேலான பிரமானந்த லாபத்தைப்பெற்றுச் சுகஜீவி
யாய் வாழக்கடவாயென் றாசீர்வாதஞ்செய்து இனி
நாம் போகிறோமெனப் புகலத் துளசிதாசர்-ஓ - தெய்
வமே - பிரமஞானம் - ஒருவர் போதிக்கப் பெற்றுக்
கொள்ளவேண்டுமென்று - வேதங்கள் முறையிடுகின்ற
தன்றி - சுயேச்சையா லறிதற்குக் கூடாமையான்-பிர
மஞானத்தை அடியேனுக் குபதேசித் தாட்கொள்



ளும் ஸ்வாமீயென்று பணிய. பகமான்-ஓ-அரிதாசரே
என்றுஞ் சிரஞ்சீவியாய் - அனேக சாதுக்களின சங்க
த்திலிருந்து தேர்ந்த - நவவியாகரண பண்டிதான-இந்
த அனுமாரிடம் பிரமோபதேசம் பெற்றுக்கொண்டு
ஆனந்தமாயிருவென்றறைய. துளசிதாசர் மகாபாக்கி
யமெனத் துதித்து - ஓ என்னாண்டவனே - சத்காலமு
நாள் கழிக்க தேவரீர்திருவிளையாடல்களி லெதைத்தா
னமாகச்செயது பாராயணஞ்செய்தால் புத்தியும் பத்தி
யும் - சித்தியும் - முத்தியு மெளிதிற்கிடைக்குமென்று
தொழப் பகவான - ஓ - பரமபாகவதனே ஜீவத்துவமா
ன தாஸத்வமுடையோர்க்குப் பக்தவிலாசமும் - ஆத்
மத்துவமான ஐக்யத்துவமுள்ளவர்க்குப் பிரமக்ஞானமு
முக்கியமாயிருக்கும்-ஆதலால் தாஸத்வமுள்ளவர்க் கா
னந்தம் வரச்செய்யும்-என் திருவிளையாடலாகிய-ஸ்ரீரா
மாயணத்த - முன்ஜென்மத்தில்-தேவபாஷையிற் செய்
ததுபோல்-இப்போது- இந்துஸ்தானிபாஷையிற்செய்து
துளசிராமாயணமெனப் பேரிட்டு அனேகம்பேரைப்
பாராயணஞ்செய்யும்படியாய்ச் செய்து என் பதவியை
யடையும்படியாகச் செய்யெனத்திருவாய்மலர்ந்து-பல
ஆசிகள்கூறி-அந்தர்த்தானமானார். தேவரிஷிகள்-ஜெய
விஜய பவாவெனறறைந்து - தங்கடங்க ளிருப்பிடஞ்
சேர்ந்தார்கள். கேட்டீர்களோ சித்தர்களேயென்று நா
பாஜிசித்தர் - பின்னுஞ் சொல்லத்தொடங்கினார்.

ஸ்ரீராமர் தரிசனத்தந்த

அத்தியாயம்

முற்றிற்று

## கூ - வது - ஞானோபதேச

## அத்தியாயம்.

கேளுங்கள்சித்தர்களே - ஸ்ரீமந்நாராயணன் - ம
றைந்தபின் துளசிதாஸர் அந்தமடத்தில் அனேகசாது
க்களுட னிருந்துக்கொண்டு பகவான்பேரிலனேககீர்
த்தனைகள் அஷ்டகங்கள் கவிகள்பாடி தேவபாஷையி
லுள்ள வால்மீக ராமாயணத்தை இந்துஸ்தானிபாஷை
யிற்செய்து துளசிராமாயணமெனப்பேரிட்டு வடதேச
த்தி லுள்ளவர்களெல்லாம் பாராயணஞ் செய்யமகிழ்ந்
து தாஸத்வமார்க்கத்திற் சிலநாள்கழித்துச்சாதுக்கள்ச
ங்கத்தாலும் பகவத்தியானத்தாலும் விஷயபோகநிக்ர
கத்தாலும் அன்னதான பலனாலும் வேதபாராயணத்
தாலும் தேகேந்திரியகாணசேஷ்டைகளைமாற்றவேண்
டிய பாவத்தாலும் தனவிற்சுரூபநிலையைப்பெறவேண்டு
மென்கிற வாஞ்சையாலும் காமகாண்ட பக்திகாண்டத்
திலும் க்ஞானகாண்டமே முக்கியமெனவேதத்தில்விதி
த்திருப்பதாலும் பிரமானந்தமன்றிக்கருவிகரணசேஷ்
டைக ளிறக்காதென்கிற தாற்பரியத்தாலும் அஞ்ஞான
குணங்கள்நீங்கப்பட்டு மெய்ஞ்ஞான குணங்களை மேவி
ட்டு ஓர்நாள்யோசிக்கின்றார் ஆ ஆ மேலான பிரமக்ஞா
னத்தை எனதுசத்குரு நாதராகிய அனுமாரிடம் அநு
க்கிரகம்பெற்றுக் கொள்ளெனப்பகவான் திருவாய்மல
ர்ந்தருளியிருந்தும் என்னஞ்ஞானபுத்தியினால்வெகுநா
ளாக மெய்ஞ்ஞானத்தை மறந்திருந்து விட்டேனே ஆ
கெட்டேனே என்றுவாட்டமடைந்து மிகவுமிடைந்து
ஸ்ரீமந்நாராயணனைப பலபலவிதங்களாகத் துதித்து தன
தசத்குருநாதனாகிய அனுமாரைச்சிந்தித்து வந்தித்து
ஓ ருத்ராவதாரா வாயு குமாரா அஞ்சனாதேவி தநயா
ஸ்ரீராகவதூதா சீதாசோகவினாச சுயம்பிரகாசா இரா
க்ஷஸகரா இலங்கையைக் கொளுத்தினசீலா சஞ்சீவி
யைத்தந்த அனுகூலா பக்தபரிபாலா விசுவ சொரூபா
க்ஞானதீபா ஸ்ரீராமலட்சுமணரைத்தாங்கினவா இரா
வணன்மார்பிலுள்ள ரத்தங்கள்வெளிப்படக் குத்துவா
ங்கினவா கடலைக்கால்வாயாகத் தாண்டினவா சீதாபிரா
ட்டியின்பாலோர் வரம்வேண்டினவா தசரதநயன் போ
ட்டமுத்துமாலையி லோரோர்முத்தாக் கடித்துப்பார்த்
து ராமரசமிலலையென் றெறிந்துவிட்டவா சீதாபிராட்
டியின்பால் ஞானார்த்தங்களறிந்துகொண்டகண்டான
ந்தத்துட்பட்டவா கதிரவன்பால்நவவியாகரணங்கள்கற்
றவா என்றுமழியாச் சிரஞ்சீவித்தன்மையைப்பெற்ற
வா சஞ்சீவிபர்வதத்தை யளித்தவா தானவரைக்கொ
ன்றுநகைத்தவா பாதசத்ருக்குஞாக்காத்தவா பம்பி
ரமத்தைத் தன்குளாரயர்ந்துபார்த்தவா அம்புருசாத
கர்வபங்கஞ்செய்தவா தொந்தங்களைந்தைதயுங்கொய்
தவா பிமனுடைதிர்த்தவனுக் கருள்தந்தவா சுதர்மன்
விட்டசுழல்பாணத்தாற் சுழலுமருச்சுனன் தேனரதிலு
த்திக்களிப்படைந்தவா அடியேனுக் கனுக்கிரகம்புரிந்
தவா அனுபோகமீனத்துக் தெரிந்தவாவென்று பற்ப
லவிதங்களாத் தோத்திரஞ்செய் தேத்தும்போது.

அதுதெரிந்தஅனுமாருடனே ஓ ஸ்ரீமந்நாராயணா
னுக்குமிகவு நேசனே சாதுக்கள்பால் மிகவுமவிசுவா
சனே ராமாயணத்தைநவநவமாய்விரித்துரைத்த விலா
சனே ஓ துளசிதாஸனே இதோ வந்தேனென்வந்தன் இ
துகாலபரியந்தஞ்சிந்திக்காம லிருந்ததற்கு னொந்தேன்

கொண்டேன் இப்போதென்னை நீவந்தருவந்தேனுவந்தேன் என்னுடையதரிசனமிதோ தந்தேன் தந்தேனென்றுரைத்துக்கொண்டேவந்து பிரசன்னமாக நின்றுபிரமானந்தம் விளங்கிய முகத்துடன் பலஞானிகள்வழங்கி அதிதங்களைப்போற் அலங்கரித்தும் ஆஞ்சனேயர் திருவடிகளிலந்தாஸன் ஸாஷ்டாங்கமாக வந்தனம்புரிந்து மிகவும்பரிந்து அத்தியந்தபக்தியுடன் அனுசரித்தண்டிப்போற்றிப் புகழ்ந்துபொங்கிப் பூரித்து மகிழ்ந்து ஓ என்சத்குருநாதனே மெய்ஞ்ஞான போதனே கமலம்போன்றபாதனே முத்தனந்தறந்த அவனானதனே அரிஷ்டவர்க்கத்தைவென்றநீதனே என்னையிப்போதேயாட்கொள்ளும் ஸ்வாமியென்று அஞ்சலியஸ்தனாய்நிற்கும்போது ஆஞ்சனேயர் துளசிதாஸனைப்பட்சமாய்பார்த்து மார்புடன்சேர்த்து ஓ அரிபக்தனே ஜீவன்முக்தனே என்னையேன்நினைத்தீர் என்மனதைஏன்கரைத்தீர் அபயமென்றே னுரைத்தீர் நெடுநாளாக நின்றிருந்தீன்மைக்கேன் விளித்தீர் சீக்கிரமுமக்குற்ற குறையைச்சொல்லும் அஞ்ஞானமனதைக்கொல்லும் காமாதிகளை வெல்லும் ஞானதிருஷ்டியில்நில்லும் ஜாக்ராவஸ்தையானவும் ஸ்வப்னசுஷுப்தியவஸ்தைகளான அல்லும் அற்ற ஆத்மாவைப்புல்லும் ஆனந்தமேடையிற் செல்லும் என்றிவ்விதமாச்சொல்லும்போது வாதராயன் புதல்வனைக்கல்வியிற்றெளிந்த முதல்வனைத்துளசிதாஸர் பணிந்து பாதங்களில்நயனங்களை யணிந்து ஓ ஸ்வாமி கருவிகளொன்றுமதாகியும் காதலெல்லாமடங்குவதாகியும் நாமென்பதற்றதாகியும் நானுமோரியல்புற்றதாகியும் இருளஞ்ஞானமில்லாதாகியும் அருள்மெய்ஞ்ஞானமுள்ளதாகியும் பிரபஞ்சசேஷ்டைகளில்லாதாகியும் பிரமமாத்திரமுள்ளதாகியும்-துன்பமெப்பொழுதுமில்லாததாகியும் இன்பமெப்பொழுதுமுள்ளதுமாய்த்துறைபாததாகியும்-என்றும் நிறைவானதாகியும்-ஆதியந்தரகிதமாகியும்-சோதி நிரயானந்த சகிதமாகியும்-அத்வைதமாகியும்-அற்புதமாகியும்-நித்யமாகியும்-சத்தியமாகியும்-நிஷ்களமாகியும்-புஷ்களமாகியும்எல்லாமாகியுமெல்லாமல்லாதாகியும் விலட்சணமாகியும் - சுலட்சணமாகியும் - நிர்விகாரமாகியும்-நிருபமாகியும்-சொரூபமாகியும் . யாதொருவஸ்துவுண்டோ-அந்தப்பரமபொருளை - அடியேனுக்கனுக்கிரகம்புரிந்தாட்கொள்ளுமையா வென்று தாட்களில் வீழ்ந்த அரிதாஸனை.

அனுமார் - அன்புடன்நோக்கி துன்பினைப் போக்கி - அப்பா ஞானப்பொக்கிஷமே - மெய்ப்பாவைப்பதக்கசமே - ஆயினும் - நீர்-முற்சென்மத்திலுமுறைத்த ராமாயணமே-நீர்கேட்ட மெய்ப்பொருளையறியும் ரூடமை இலையாராயினுண்டாகும் மோட்சம் எப்படியென்பாயேல் இக்காசியில் - நாராயணன் கதையான-ராமாயணத்தைப் பூராபமாய்ப் பாராயணஞ்செய்து தாதலம்புகழும் புராணியாகித தாதாசையும் பாரபரத்தையும் - காதலசெல்வியெனவிபோ லுணர்ந்த - உத்தவதாஸென்னும் பிரமஞானியானவர் ராமாயணத்துக்கெல்லாம் ஞானார்த்தஞ் செய்வதைக் கேள்விப்பட்டுப் பந்தபாசங்களிலிருந்து விடுபட்டு - நானென்னு மகங்காரங் கெட்டுச் சங்கல்பவிகல்பமுங் கெட்டு-அங்கமேலாசையும் விட்டு - அரியரஸ்மரணையும்விட்டு - தேகஸ்மானையிறந் - திக்குதேசாதிகளிறந்து - அனேகர்தறிபோற் சமாதியடைந்திருக்கிறார்கள் - நானுமப்படியே பிரமானந்தத்துள் மூழ்கி - பிரமைகளெல்லா மாழ்கித் தன்னைமறந்திருந்தவன் உன் தோத்திரமென்னும் வன்னியென செவியைக்கொளுத்த வெள்ளவாமற்றுள் விழித்தேனென்றுரைப.

துளசிதாஸர் ஆஞ்சனேயர் திருவடிகளில்தன்முடியடியையணங்கினனைபிணங்கியிருக்கும் நுணங்கினூற் குணங்கி உணங்கினேனென்னை பிணங்கியகுருவே எழிலலர்தருவே இன்பமா முருவே ஏகமாம் அருவே பரிமளமருவே பாக்கியத்திருவே பயனருள் தெருவே பண்பருள்சருவே தனியேகரான அந்தணரும் தேவரீருஞ்சிரவணஞ்செய்த ஞானராமாயணத்தை அடியேற்குபதேசித்தாட்கொள்ளும் ஸ்வாமியென்றுவணங்கியதுளசிதாஸனை அனுமார்மார்புடனணைத்து ஓ அரிதாஸனே சுவிசேஷனே காட்சியைக் கொடுக்கும் மாட்சிமையான நீட்சிக்குமுதுள விசாலாட்சிவீற்றிருக்குமிவ்வாரணாசியிலிருந்தால் விசேஷமென்று வசிஷ்டர் ஓர்பூசுரனுகவந்து உத்தவதாஸனெனப்பேர் பெற்று அத்தியாத்மராமாயணத்தைப்பாராயணஞ் செய்வதை நாட்டைவிட்டுக்காட்டிலிருக்குமகௌவுதற்கரியமாதவரெல்லாம் அந்தணர்களாகச் சிரவணஞ்செய்ய இக்காசியில் வந்ததையானறிந்து நானுமிங்கடைந்து - அத்யாத்மராமாயணத்தைச் சிரவணஞ்செய்து - சமஸ்தவாசனைகளையுங் கொய்து பரவசமானேன் - அதைச் சுருக்கமாக வுரைக்கின்றேனே கமனதுடன்கேட்டு முற்சாகமடைவீரெனச் சொல்லத்தொடங்கினார்.

எப்படியென்றால் - மோட்சமென்னு மயோத்தியில் பிரமமென்னுந் தசரதன்-ஞானசக்தி-இச்சாசக்தி கிரியாசக்தியென்னும் - மூன்றுமனைவியருடன் கூடி வாழ்கையில - ஞானசக்தியென்னும் - கௌசலையின் கர்ப்பத்தில் ஆத்மாவென்னும் ஸ்ரீராமன்பிறந்து அவ்



விபக்தமென்னும் பால்யத்தாற்றன்னை மறந்து அஞ்ஞானமயனெனசிவனை காணுகித் தேகேந்திரியாதிகளுக்குத் தோனுகிச் சிரவணமென்னும் வசிஷ்டனை யடைந்து மனனமென்னும் விசுவாமித்திரனைத் தொடர்ந்து வைராக்கியமென்னும் லட்சுமணனுடன் கடந்து பஞ்சபாதகமென்னும் பர்வதங்களைக் கடந்து ஆத்மா ராமனென்னும்பாமேட்டி ஞானமென்னும்பாணத்தைத்திட்டி ஆவரணமென்னுந்தாடகையை மாட்டி அடியோடுமிறந்து போகவாட்டி இச்சையென்னும் மாரீசனுக்குப்பயங்காட்டி என்னைநிரில்வந்தால் சாவாயென்றோட்டி விபசாரமென்னும் பாறையைமிதித்து ஆசாரமென்னு மகலிகையைத் துதித்து ஏகாந்தமென்னுமிதிலையிற் சேர்ந்து சாந்தமென்னுஞ் சனகனைச்சார்ந்து பொறுமையென்னுங்கார்முகத்தை யொடித்து ஆனந்தமென்னும் ஜானகியின் கைபிடித்து மதமென்னும் பரசுராமனையெதிர்த்து என்றும் மதமெழாமல் விதிர்த்து மோக்ஷமென்னுமயோத்தியிற்புகுந்து ஜீவன் நானல்லவென்று வந்து பிரமமென்னுந் தசரதனைக் கூட ஜீவத்வமறலென்னும் மகுடாபிஷேகத்தைக்காட்க் கிரியையென்னுங் கைகையினுடைய சலனமென்னுமேவல் வந்தடைய பிரமமென்னுந் தசரதனைப்பிரிந்து மோக்ஷமென்னுமயோத்தியைத்துறந்து வைராக்கியமென்னும் லட்சுமணனுடனே ஆனந்தமென்னும் வைதேகியுடனே சித்தமென்னுஞ் சாயுநதியைத் தாவிப் புத்தியென்னுங் குகன்றனைமேவி விஷேப மென்னும்வனத்திலுட்சென்று தபமென்னுஞ்சித்ரகூடத்தில் நின்று அகங்கார மென்னும் விராதனைக் கொன்று மனமென்னுங்காகாசுரனை வென்று சங்கல்பமென்னுங் கண்ணைக்கெடுத்துவிகல்பமென்னுங்கண்ணைக்கொடுத்து விரமென்னு மகஸ்தியனைக்கண்டு தீரமென்னு மஸ்திரம்பெற்றுக்கொண்டு காமமென்னுஞ் சூர்ப்பனகையைத்தண்டித்து ஆகாமியமென்னுங் கரதூஷணாதியரைக் கண்டித்து இச்சையென்னும் மாரீசனாலேயானந்தமென்னுஞ் சீதையைப்பிரிந்தாலே இராசதமென்னுமிராவணனடுத்து ஆனந்தமென்னுஞ் சீதையை யெடுத்து இன்பமென்னு மயோத்தியையு நக்கும துன்பமென்னும் லங்கையி லிருக்கும் அசுபவாசனையென்னுமிராக்கதர்மொய்க்க எண்ணமென்னும் அசோக வனத்தில்வைக்க ஆத்மாவென்னும் ஸ்ரீராமன்கண்டு இச்சையென்னும் மாரீசனைமுடித்து நிராசையென்னும்பூமியின்மேற்சாய்த்து எனவுரைக்குன்றம்முன்வாரமல மாய்த்து ஆனந்தமென்னுமையுவிபோல் வந்து இலலாம லாகாராமன் சொந்தவைராக்கியமென்னும் லட்சுமணனுடனய விஷேபமென்னுங்கானகத்திலலைந்து சிந்தனைஎன்னும் கவந்தனைக்கொன்று சந்தோஷமென்னுஞ் சவரியாற்சென்று நிதித்தியாசனமென்னு மனுமானைக்கூடி ஆனந்தமென்னுஞ்சீதையைப்பாடி ஜனனமென்னுஞ் சப்ததருக்களைக்கொய்து பயமென்னும்வாலியைமேலெய்து அபயமென்னுஞ் சுக்ரீவனைக்காதது சுபவாசனையென்னும் வானரங்களைச்சேர்த்து நிதித்தியாசனமென்னு மனுமானைத்தூண்டி மோஹமென்னுஞ்சமுத்திரத்தைத்தாண்டி லோபமென்னும் லங்கணியைத்தொலைத்து அசுபவாசனையென்னுமிராக்ஷதரைக்கலைத்து ஆனந்தமென்னுஞ் சீதையைகண்டு உல்லாசமென்னு மனுபூதிமேற்கொண்டு எண்ணமென்னு மசோகவனத்தை யழித்து அஞ்ஞானமென்னுமக்ஷயகுமாரனைக்கிழித்து சந்தேகமென்னு மட்சயனைக்கழித்து விபரீதமென்னுமிந்திரஜித்தனைப்பழித்து மயக்கமென்னும் பாசத்தைவெதிர்த்து இராசதமென்னுமிராவணனையெதிர்த்து மௌனமென்னு மக்கினியைப் பெருக்கித்துன்பமென்னும் லங்கையைக்கருக்கி மோஹமென்னும் வாரியைச்சுட்டி [illegible] மனையினைக்கட்டிச்சாத்விகமென்னும் விபீஷணனைக்கிட்டி இங்கே தாமஸமென்னுங் கும்பகர்ணனைவெட்டி இது இராசதமென்னுமிராவணனையதட்டி விபரீதமென்னு மிந்திரஜித்தனைமுட்டி மயக்கமென்னும் பாசத்தால்மயங்கி வைராக்கியமென்னும் லட்சுமணனுடனுமயங்கி நிதித்தியாசனமென்னு மனுமார்களிக்க நீடுகடையென்னுஞ் சஞ்சீவியையளிக்க வைராக்கியமென்னும் லட்சுமணர் களிக்க விபரீதமென்னுமிந்திரஜித்தனைச்சினைக்கச் சஞ்சிதமென்னு மூலபல மெதிர்க்க நிமென்னு மோஹனுந்திரம்வதைக்க அசுபவாசனையென்னு மிராக்ஷதர்முடிக்கச் சுபவாசனையென்னும்வானரங்கள்கெடுக்க ஆத்மாவென்னும் ஸ்ரீராமன்கடுத்துக் கெம்பீரமென்னுங் கோதண்டமெடுத்து இராசதமென்னு மிராவணனையடுத்து ஞானமென்னும் பாணத்தைத்தொடுத்து நானென்னுந் லங்கத்தையுடைத்துத தசேந்திரியங்களென்னுந் தசமஸ்தகங்களையுமடைத்து ஆனந்தமென்னுஞ் சீதையைக்கண்டு மௌனாக்கினியிற் குளியென்று விண்டு பிரமமென்னுந்தசரதனைநாடி ஆனந்தமென்னுஞ்சீதையைக்கூடிமோக்ஷமென்னுமயோத்தியிற்புகுந்து ஜீவத்வமறலென்னு மகுடாபிஷேகம்புனைந்து பிரமமென்னுந் தசரதனோடொன்றாகி மோக்ஷ மென்னுமயோத்திக்கு கோனாகிக் கேவல கைவல்ய பிரமானந்தசொரூப சாக்ஷாத்காரமாப்பிரகாசித்தாரென்று ஆஞ்சனேயர் பகர்ந்து சந்தோஷமேலிட்டா லானந்த கீர்த்தனஞ் செய்யத்தொடங்கினார்.

க்ஞான ராமாயணத்தைக்கேட்ட - துளசிதாஸர் தன்னைமறந்து - ஆனந்தத்தாண்டவஞ்செய்யத் தொடங்கினர் - அதைக்கேட்ட யாவரும் புகழ்ந்தார்கள், தேவர்கள் பூமாரிபொழிந்தார்கள் - மூவர்கள் கொண்டாடி மகிழ்ந்தார் - ரிஷிகளெல்லாம் மடத்தில் நிறைந்தார்கள் - சித்தர்களிதுவே மோக்ஷமார்க்கமென்றறைந்தார்கள் - சகலருந் துவிதபாவனையைத் துறந்தார்கள் மெய்மறைப்போற் கரைந்தார்கள்-பிரமத்திலிறந்தார்கள் பிரமஸ்வரூபமாயிருந்தார்கள்-தேவர்களெல்லா மங்கேயே கூடினார்கள்-ரம்பையாநடனமாடினார்கள்-தும்புருநாரதர்சங்கீதம்பாடினார்கள்-அனுமாரைக் கொண்டாடினார்கள். அப்போதுண்டாகிய - வேதகோஷ்டங்களிலும் சிவசங்கீர்த்தனங்களிலும் - விஷ்ணுசங்கீர்த்தனங்களிலும் - அனுமாருந் துளசிதாஸரும்-தங்களுடைய ஆனந்தநடனம் நீங்கிப் - பிரமானந்தமோங்கித் தேவரிஷிகளின் பாதங்களைத் தாங்கி - இன்பமேலீட்டாற்றேங்கி - வேதாந்தவார்த்தைகளாடி - நிர்க்குணகீர்த்தனங்களைப்பாடி ஆஞ்சநேயர்முதலானவர்களும் துளசிதாசரிடம் விடைபெற்றுநமஸ்கரித்து-தங்கள் தங்களிருப்பிடஞ்சேர்ந்தார்கள்.

கேட்டீர்களோ சித்தர்களே யென்று பின்னும் ஞானபாஷிசித்தர் சொல்லத்தொடங்கினர்.

ஞானோபதேச வத்தியாயம்

முற்றிற்று.

## ௧0. வது - துளசிதாஸர்மடத்திற்கு பகவான் காவலாயிருந்த அத்தியாயம்.

கேளுஞ் சித்தர்களே சற்சங்கத்துக்குரிய பக்தர்களே - ஆஞ்சனேயர் முதலானோர்கள் டங்கடங்க விருப்பிடஞ்சேர்ந்தபின்-காசிதேசத்திலுள்ள சகலரும் துளசிதாஸரை வணங்கி - இணங்கி ஓ ஸ்வாமி நீரே - எங்களுடைய சத்குருநாதன் - நீரே மெய்ஞ்ஞான போதன் நீரே சகலருந்தொழுஞ் ஜகநாதன்-நீரே சுந்த சாஸ்வித வினோதன் - நீரே எங்களுடைய பாபங்களைப் பரிகரிக்கும் நீதன் என்று தோத்திரஞ்செய் தேத்தும்போது துளசிதாசர் அனைவரையு மன்போடு முபசரித்து-அத்தியந்தபக்தியுடனுமனுசரித்து-மடத்திலிருக்குஞ்சாதுக்களைப்பார்த்து - காங்களைச்சேர்த்து-இன்றுமுதல் இம்மடத்திலிருக்கும் வஸ்துக்களை வேண்டினவர் களித்து நீங்களுங்களித்துப்-பகவத் பாராயணஞ் செய்துக்கொண் டின்புடனிருங்களெனத் திருவாய்மலர்ந்தருளி-வார்த்தையாடலுங் குறைந்து ஏகாந்தஸ்தான மடைந்து தானம்-நிதானம் - தியானம்-ஞானமென்னும் நான்கையுங்கடந்து-மௌனத்தைநாடிப்-பிரம நிஷ்டையைக்கூடிப்-பரமானந்தவாரியிற் படிந்திருந்தார். இங்ஙனஞ்சிலநாள்கழிவுற ஒருநாளிரவில் துளசிதாசர் மடத்தில் கெடுகோளாயிருந்த சாதுக்களில் - நால்வர்மேல்வருங்காரிய மறியாதவர்களாய் . மடத்திலிருக்குஞ் சிலவற்புதவஸ்துக்களைச் சொற்பமாயுள்ளது காவடமாகவெடுத்துக்கொண்டு நடுராத்திரியில் - பிறரறியாமல் மடத்திலிருந்து வெளிப்படுந் தறுவாயிலிதையறிந்த

பகவான் - ஸ்ரீராமலட்சுமணாய்வந்து சாதுக்களைத்தடுத்து-யாரடா நீங்கள்-துளசிதாசருடையசொத்துக்களை ஆசையால் மோசஞ்செய் தெடுத்துக்கொண்டு போகிறீர்கள் - நில்லுங்கள் - நில்லுங்கள் - காவற்காரர்களாகிய எங்களுக் குத்தரஞ்சொல்லுங்கள் சொல்லுங்களென் றதட்டினார்கள். அதற்கந்தப்புரை சாதுக்கள் இருட்டினால்-ஸ்ரீராமலட்சுமணரென் றறியாமல் யாரோ சேவகர் மறிக்கிறார்களெனப் பயந்து - நயந்து முன்விட்டகாலைப் பின்விட்டு - மடத்துட்பிரவேசித்து-சற்றுநேரம் யோசித்து மற்றோர்வழியாக வதிகபரபரப்போடு வெளிப்பட்டுப்போகும்போது அங்கேயும்-ஸ்ரீராமலட்சுமணர்வந்து மறித்துக் கொக்கரித்துக் காவடர்மேற்குதித்துத் துளசிதாசரைத்துதித்து அடா திருட்டுக்குருட்டுப்பிரட்டு - முரட்டுக் காவடரே-காருண்யமில்லாக்குரவரே என்னடாகொண்டுபோகிறீர்களென மிரட்டினார்கள். அதற்கத்தேனர்-ஒருபாலொதுங்கிப் பதுங்கி-மயங்கித்தயங்கி மடத்திலுள்வந்து-மிகவுங்கொர்ந்து சாதுக்களுக்குப் புலப்படா முன்னமே வெளிப்படவேண்டுமென்றுற் கருத்தால வேறுவழியாகச் சந்தடியின்றிவெளிப்பட்டு மெள்ளப்போகும்போது-அங்கேயும் ஸ்ரீராமலட்சுமணர் சந்தேகமின்றி-அவர்களருகிற் சென்று எதிரில்நின்று - மெதுவாய் அடா கள்ளப்பயல்களே மெள்ள எங்கேயடா போகிறீர்களெனத் தடுத்தார்கள் அப்போது பிதர்செய்த தப்பிதா-பிரமித்துக் கம்பித்து-ஸ்தம்பித்து - மர்மம் வெளிப்படும்போ லிருக்கின்றதேயென் றாசித்து - அச்சேவகரைநோக்கி - ஓ காவலரே நீங்களும் நாங்களுமிதைப் பாகித்துக்கொள்ளலாம வருவீர்களென்றுரைத்தார்கள். அதுகேட்ட ஸ்ரீராமலட்



சுமணர் - ஓ அந்தணர்களே இப்போது நாம்பாகித்துக் கொள்வது பணத்தையா பாபத்தையா - சொல்லுங்களென - மறையோர் பணத்தையும் பாபத்தையும் பாகித்துக்கொள்ளுவோமென ராமலட்சுமணர் எங்களுக்குப் பணம்மாத்திரங் கொடுத்தால் சம்மதமன்றிப் பாபத்தை யேற்றுக்கொள்ள சம்மதமில்லையெனப், பூசார் அப்படி சொன்னதையே பங்கிட்டுக்கொள்ளுமென, ராமலட்சுமணர் நீங்கள் விப்பிரர்களாயிருந்துந் தப்புக்காரியங்கள் செய்ததை நாங்கள் பிரதியட்சமா யறிந்திருந்தும் - தப்பித்துக் காத்தல்செய்ததில் பாதி நவர் வதால் பாபம்வந்தடையுமெ தனீங்க ளிதுகாலபரியந்தம் துளசிதாசருக்குச் சேவைசெய்த புண்ணியத்தையெல்லாந் தாரைவார்க்கின்றீர்களாவென, அதிவருணர் அப்படியேயாகட்டும் சீக்கிர மிவ்விடம் விட்டெப்புறப்பட்டுவாருங்களென, ஸ்ரீராமலட்சுமணர் நாங்கள் - இவ்வூராசன் கட்டளைப்படி-மஹானுபாவராகிய துளசிதாஸருடைய மடத்துக்குக் காவலாளராயிருக்கின்றோ மாதலாலிவ்விடம்விட்டு மூன்றுஞ்சாமம்வரையி லடிபெயர்த்து வைக்கமாட்டோம் - அன்றி நீங்களிவ்வின்பிலைந் துச்சமாக நினைத்துச் சொச்சருபமான பரமபதத்தை விச்சித்து - வெகுநாளாகத் துளசிதாசருடைய சேவை செய்து அபகரித்த வஸ்துக்க ளிவ்வளவுதானுமெனப் புரையோர் ஓ காவலரே விபசாரிக்கு நீதியுரைப்பது போலக் கள்வராகிய எங்களுக்கு முத்திவிவரணையைச் சொல்லவந்தீர்கள் - சாதுக்கள் விழித்துக்கொண்டால் மானம்போகும் - சீக்கிர மிவ்விடம்விட்டுநீங்கலாமென ராமலட்சுமணர் நீங்கள்கொண்டுவந்த வஸ்துக்களையெல்லாங்கொடுத்து - நீங்கள்செய்த புண்ணியத்தையெல்லா மெங்களுக்குத் தாரைவார்த்தாலன்றி உங்களைவிடமாட்டோமென, அதற்கு ஆசைமிக்க பூசார்-நீயங்களிருவீரும் உடுக்கொள்ளைக்காரர்களாய் வந்தீர்கள் பேராசையுள்ள நீங்க ளேவலாளரென்ப தபத்தம் எங்களைப்போன்ற வுயர்களுக்குப் பாகமே கொடுக்கலாகாது அப்படியிருக்க புண்ணியங் கொடுக்கக் கூடுமோவென, ஸ்ரீராமலட்சுமணர் பலவந்தமாகப் பாதங்கொடுப்போமென்று நீங்களேயுரைத்து எங்களைக் கள்வராகத்தீர்மானித்தீர்களிப் பங்கும்வேண்டாம்-பாபமும்வேண்டாம்-உத்தமோத்தமராகிய துளசிதாசருடையசொத்துக்களை அவருக்குக்கொடுப்பிக்குங்காரியமேஎங்களுக்குரியதென-முப்புரிநூலோர் அப்பப்பா இத்தருணத்திலெங்களைத் தப்பிக்காமல் சோரனை மெய்ப்பிப்பது தப்பிதமல்லவா எப்படியாகிலும் தப்பிப்பீர்களென வேண்டக் கோதண்ட அஸ்தர் - அப்பப்பா விபசாரிவிடமும் - கள்வரிடமும் - பொய் - கொலை - நிந்தை கோபம் - குரோதங் குடிகொண்டிருந்து மாதலாலிவ்வுலகில் சோரனைப்போன்ற கோஸ்தரியாருமில்லை-உங்களைவிட்டா லெங்களுக்குவரும் பெருந்தொல்லை-இனி நீங்களிருவரும்-இவ்வெல்லைகடந்துபோகவேண்டாமென்று மெங்கள்சொல்லைக் கடக்கவே வேண்டாமென்றுரைப்பப் பார்ப்பார்-ஓ-காவலரே எங்களைக் காட்டுமலுமாட்டாமலும் - இவ்வஸ்துக்களையும் - நாங்கள்செய்த எல்லாப்புண்ணியத்தையும் - கைக்கொண்டுவிட்டுவிடக் கிருபைகூருங்களெனத், தானவாசர் - விபசாரியையும் - சோரனையும் - விடக்கூடாதென வேதமுறையிடுகின்றதேயென.

வேதியர் நாங்கள விப்பிரர்களாதலால் எங்கள் தப்பிதம் பார்க்காமல் மன்னியுங்களெனப் பக்தபரிபாலனர் ஜாரஞ்செய்த அகலிகைமுதலான ஸதிகளும் சோரஞ்செய்த அஷ்டவசுக்களும் - சாபத்துக்குள்ளானார்களனவித் தப்பிப்போகவில்லையாதலால் - கள்வருக்குபசாரஞ்செய்பவர்கள் - நரகமடையவேண்டுமாதலாலுங்களை விடுவதற்கில்லையென்றுரைப்ப பூசார் …யாமலிருந்ததைத் தாராளேனும்-இனி எங்களை … கம் களவுசெய்யமாட்டோமென்றுவனைந்த தசரதபுத்திரர் விழியில்லாதான் வழியறியாததுபோலக் காலநியமமறியாதவர்களே தப்புவழியில் நடப்பார்கள் - நீங்கள் வேதாதிகளை வோதியிருந்தும்-அநீதிக்குட்பட்ட காரணத்தால் விடுவதில்லை-மடத்துக்குள் நடப்பித்த வேரக்கியமென முடிக்கின்றார்கள் அதனால் அச்சத்திலிருந்த அந்தணர்களபகரித்துவந்த அரியவஸ்துக்களை அவ்விடத்திலெறிந்து குடுகுடுவென மூலைக்கொருவரா யோட்டமெடுத்தார்கள். உடனே ஸ்ரீராமலட்சுமண பரதசத்துருக்குனானவர்கள் மின் நொடிடென்றோடி நால்வரையுங் கைப்பிடியாகப் பிடித்துக்கொண்டுவந்து - அவர்கள் கொண்டுவந்தபொருள்களை அவர்கள் மஸ்தகத்தின்மேலேற்றி அடா சோரவீராகத் திரம்பேசிக்கொண்டு மெள்ளப்போகாமல் துள்ளியோடி வெளிக்கூ…திகளோ எல்லாவற்றிலும் சனக்கொ…ளைக் குட்பட்டதால் அபகரித்தபொருளும் புண்ணியமனைத்துக் தத்தஞ்செய்ய வொப்பிக்கொண்டீர்கள் - நயமொழியின் விண்டீர்கள் - கொடியோராகிய உங்களுடைய புண்ணியமும்பாபமேயல்லவோ வென்றுரைத்துக் குடுமியைப்பிடித்துச்செட்டி மடத்துக்குட்டள்ளி - ஓ-கள்ளர் புகுந்தார்கள்-புகுந்தார்கள் யென்றுஞ்சையக் கூச்சலிட்டு மடத்திலுள்ள சகலரும் விழித்துக்கொள்ளும்படியாகச்செய்து மாயமாய் மறைந்தார்கள்.

உடனே - சாதுக்கள் வெளிப்பட்டோடிவந்து சாவடஞ்செய்த காவலரையும் தள்ளிக்கொண்டே மடத்துட்கொண்டுபோய்த் தீபவெளிச்சத்திற் பார்க்கையில் - தங்களிற் சோர்தவர்களாயிருக்கக்கண்டு பெருங்கோபங்கொண்டு - அடா விசுவாச துரோகிகளே - அவிவேகிகளே - இகபோகிகளே அன்பரோகிகளே - அற்பமோகிகளே - என்றடித்து வைது தவர்த்தசொத்தாத்களுடன் துளசிதாசரிடங்கொண்டுபோய்விடுத்தி-ஓ ஸ்வாமி இந்த மூடாத்மாக்கள் தங்களுக்குத்தேவையான பொருள்களைத்தேட்டெடுத்துக்கொண்டுபோகாமல் - வல்லுதல்செய்து போகும்போது காவலர்கள் கண்டுபிடித்து எங்களிடமொப்பித்துப் போய்விட்டார்கள் - இவர்களை உதயமானதே ஆசையளவிட மொப்பிக்கிறோமென்றுரைக்க,

துளசிதாசர் - சாதுக்கள்மேல் முனிந்து - அந்தக்கள்ளசாதுக்களைப் பணிந்து - ஓ - விப்பிரரே - இந்தச் சாதுக்கள் செய்த தப்பிதங்களை மன்னித்து என்மேல் கருணைகூர்ந்து - உங்களுக்கு இஷ்டமானதை எடுத்துக்கொண்டுபோங்கள் போகலாமென வணங்க, அதுகேட்ட சாதுக்கள் - ஓ - ஸ்வாமி தாங்கள் கள்வர்களாகிய எங்களைக் கொண்டுபோகத்துணிந்து இராத்திரியெல்லாம் பட்டபாடு - சொல்லமுடியாது - அதனை விலவந்தால் - எங்கள் நெஞ்சம்-பிளந்துபோகின்ற தென்றே வென்றழத்தொடங்கினர்கள் அதற்கவ் வரிதாசர் மிகவும் முனிவுகொண்டு - உமக்கிஷ்டமான தெடுத்துக்கொண்டுபோவதைத் தடுத் துங்களுக்குக்கஷ்டங்கொடுத்த துஷ்டர்கள் யாரென்றுர் பூசுரர்-ஓ-ஸ்வாமிகமது மடத்து வாசிகளிவர்களே காவலிருந்துகொண்டு துஷணைவார்த்தைகள்விண்டு புறம்போகாமற் றடைசெய்து - வெகுநேரமாகச் செய்துவைத்தனர் அதன்றிப் பல குழியக்கட்டி - சமுஷ்டிகளால் வெகுவாகவடி மாளச்செய்யாமல் - சனத்துக்குட்படச் செய்தார்களே தெந்தாம், அரிதாசர்வெகுண்டு - ஓ - பரமசாதுக்களே உங்களை வைததார் - கைதுசெய்ததார் - அவர்களைக் காணவேணுக விப்போதே - நிறைக்கட்டி - இரண்டுதடாகவெட்டி-யமபுரத்துக் கனுப்புகிறேனென்றுர் வாளையேந்திக்கொண்டு வெளியே புறப்பட்டார், உடனே கள்வர் நால்வரும் கெடுதடிகளையெடுத்துக்கொண்டு - திவட்டிகளுடன் புறப்பட்டு - மடத்து நான்குவாசலிலுமபார்த்து - காவலரைக்காணுமல்-இப்போ திருதவர்களெங்கேயோ மறைந்தார்களென்றுரைத்தவர்களைக் கைப்பிடியாகப் பிடிக்கவேணுமென்கிற துவேஷத்தாற் பலபக்கங்களிலுந் தேடலுற்றார்கள், துளசிதாசர் - காவலரைத்தேடும் - வேதபாரகரை விளித்து உங்களைத் தடுத்து-அடித்தவர்களின் மண்டை தெறப்புடைக்கிறேன் - சீக்கிரங் காட்டுமினென்று - ஆத்திரத்துடன் - அட்டகாசஞ்செய் தெருவிலிருந் தேர்ந்திருந் தார்மேற்குலத்தோர்-நாற்றிசையிலுந் தேடக்காணுமல் அரிதாசர் பக்கலடைந்து - காவலரைக் காணேமென்றுர்கள், பரமபாகவதன் - அந்தக்காவலர் - எவ்விதரூபமுடையவர்கள் என்ன ஆயுதத்தைப் பிடித்துக்கொண்டிருக்கிறவர்களென்று கேட்கும்போது.

இவ்வித ரூபமுடையவர்கள்தா னப்பாவென்று ஸ்ரீராமலட்சுமண பரதசத்துருக்னர் நால்வரும் - துளசிதாசர்முன்னின்று நாங்களே உம்முடைய அன்பர்களை மதித்தவர்களாதலால் எங்களை உமதுகவலைகளால் வெட்டிவிடுமென்றுரைத்துத் தங்கள்கையிலிருக்கும் அம்புவில்லுகளைக் கீழேவைத்துக் குனிந்து நின்றார்கள் அப்போது அரிதாசர் தன்கையிலிருந்த வாளைக் கீழெறிந்து அஞ்சலியஸ்தராய் நின்றுக்கொண்டு ஓம் அரி அரி முராரி காதரி அம்புஜாக்ஷஹரி மாதவா யாதவா ராகவா கேசவா ஸ்ரீராமா பரந்தாமா பத்மநாபா பரமசொரூபா காரவன்னு கமலக்கண்ணு அநாதரக்ஷகா அகிலாண்டகோடி பிரமாண்டநாயகா ராவணமர்த்தனு ஜக்ஞர் தகனுவெனப் பற்பலவிதங்களாகத் தோத்திரம்புரிந்து மிகவும்பரிந்து ஓ என்தெய்வமே நீயென்றறியாமற் போனேனே ஆசைவற்றவனுனேனே முனைதுணைக்குட்பட்டேனே இப்போதுமறந்து விட்டேனே கோபத்துக்குட்பட்டேனே ஆசைகெட்டேனே யென்றபற்பலவார்த்தைகள்புகன்று பாதங்கள்மேல்வீழ்ந்து ஓ வென்றோலமிட்டழுந் துளசிதாஸரை ஸ்ரீராமர்வாரியெடுத்து மார்புடனணைத்துக்கொண்டு ஓ மெய்ஞ்ஞானவிலாசனே எனக்குரியநேசனே சுபப்பிரகாசனே துளசிதாசனே சோமருணைநதா வென்னை மறந்துவிட்டாயா ஆனந்தமேனியிட்டா வென்னை மறந்துவிட்டாயா வென்று திருவாய்மலர்ந்தருள அதுகேட்டு துளசிதாசர் - ஓ - மெய்யுமே - நீயன்றிப் பேறுமென்பது வேறுண்டா உமது வட்சஸ்தலத்தில வீற்றிருக்கும் - சீதாபிராட்டியன்றி ஆனந்தமென்பது வேறொன்றுண்டா வேறுண்டெனப வர்க்கு மோட்சவீடுண்டா உண்மை நம்பினோர்க்குக் கேடுண்டா உம்மை வெட்டும்படியான வாளுண்டா உம்மைப்பிரிந்த காலுண்டா-ஓ-பகவானே-மகவானே அடியேனியற்றிய குற்றங்களை நற்றவமாகவும் அடியேன்செய்த தூஷணைகளைப் பூஷணமாகவும் கொண்டு என்னையாட்கொண்டு - உமக்குநந்த தொண்டுசெய்வ தேதுதவிர்ந்து - கருணைகூடுமென்று பலநாமங்களை



கும் அரிதாஸரைப் பகவான் கருணையுடன்நோக்கி ஓ பரமபாகவதனே பாபபிரம்மக்ஞானியே - உண்மையறியாமல் உமதுசொத்துக்களைக் களவுசெய் தக்கொண்டு பொருங் கள்வரை மதித்தோமேயல்லது வேறேரபகாரஞ்செய்யவில்லையே - ஓ - உபகார புருஷனே - நன்மைசெய்தவர்கட்குத் தின்மைசெய்வதுபோல எங்களை வாளால் வெட்டத்துணிந்து வரலாமோ நாங்க ளென்ப முறலாமோ - ஓ - சிவகாருண்யமுள்ள சீமானே-உமக்கிவ்வளவு கோபமிருக்கலாமோவென்றுகேட்க.

அரிபக்தன் - ஓ - அரிபரந்தாமா - ஸ்ரீரகுராமாவென்றுள்ளமுருகி - ஆனந்தக் கண்ணீர்பெருகப் பலதாஞ்சூழ்ந்து - பாதங்களிற்றாழ்ந்து-ஓ-ஸ்வாமீ-புண்டரீகாட்சா - பூர்ணமருள்ஜட்சா - அநேககோடிகாலந் தவஞ்செய்தாலுங் கிடைப்பதற்கரிதான உமது திவ்வியதரிசனத்தந்து திருவாயால்வைது - உத்தம அஸ்தங்களாலடித்து ஆட்கொண்ட - புனிதர்களான இந்தச்சத்தர்கள் அற்பமான சொத்துக்குரியவர்களாகமாட்டார்களோ - உம்முடைய அரிய தரிசனத்திலும் - இச்சொற்ப வஸ்துக்களுயர்ந்ததோ உமது திவ்வியகரங்களாலடிபட்ட இவ்விப்பிரர்கள்செய்த ஒப்பிலாமெய்த்தவமேதோ என்னைபனே நின்னுடைய திருவிளையாட்டைப் பிரமாதிதேவர்களாலுந் தெரிந்துகொள்ளக்கூடாதென்றால் - என்னாலறிந்துகொள்ளக்கூடுமோ இவ்வுத்தமர்களை அடித்த திவ்வியாஸ்தங்களா லென்னையோரடி அடிக்கலாகாதோ அடித்தாற் சகல கர்மங்களுமநீங்கிப்போகாதோ இவர்கள்செய்தபுண்ணியமேதோ நான்செய்த பாவமேதோ வென்றும் பற்பலவார்த்தைகளாடும் - பரமபாகவதனை ஸ்ரீமந்நாராயணன் அஸ்தமஸ்தகசையோகஞ்செய்து - கருணைமழைபெய்து-ஓ-துளசிதாஸரே இந்தப்பார்ப்பார் நெடுநாளாக உம்மைச்சேர்ந்து பின்னு முவகிப்பச்சார்ந்து - கர்மிகளாய்ப் போகாமற் றடுத்தோம் ஆட்கொள்ள கலந்தொடுத்தோம் அல்லாமல் - நல்லோரையடித்தவர்கள் போலவா நரகமடையலாமா ருக்மாங்கதன் பட்டணத்திலிருந்தவர்களெல்லாம் பரமபதமடையவில்லையா உமக்குத்தெரியாததுமொன்றுண்டா வென்றுரைக்க, துளசிதாஸர் - ஓ மாதவனே-அடியேனுகிய கொடியேன்மீது உமது கருணை இப்படியுமிருக்க காரியமற்றிய தபமேதோ என்னைபபோல் பாக்கியமுடையவர்களாரிவ்வுலகிலொருவருண்டோ - ஓ - தெய்வமே - அருபமாகியும்-ஆனந்தமாத்திரமாகியுமிருந்த பரப்பிரமமும் - அடியார்கள் நினைத்தவண்ணமான ரூபமெடுத் தாட்கொள்பவரும் நீரன்றி வேறொன்றுண்டா பாரில்லாமல நீருண்டா-உம்மையன்றி மெய்த்தெய்வமொன்றுண்டா-உன்போனச்சொல்வாருண்டா - அப்படியுரைத் தமதுமாயையை வெல்வாருண்டா - வெல்வதற் கொருவ ராதரவுண்டா ஓ-தேவாதிதேவா - வாசுதேவா-மகானுபாவா-வென்றுதித்துருகும்போது-பகவான்மிகவும்மகிழ்ந்து ஓ-என்னன்பனே - மேலானவின்பனே - இனிமேலுன் சொத்தை யாருக்காவது - கொடு - நாங்கள் தடைசெய்யமாட்டோமெனப் பகர்ந்து - அந்தர்த்தானமானார்கள்,

பின்பு - அரிதாஸர் - அரியின் திருக்கரங்களாலடிபட்ட சாதுக்களின் அடிகளிற்றாழ்ந்து - ஸ்ரீமந்நாராயணருடைய அஸ்தங்களாலடிபட்ட தனவான்களே-அரியினரிதான தரிசனம்பெற்ற தனவான்களே-ஆண்டவன் திருவாக்கா லேசக்கேட்கும்படியான உங்கள் செய்தவமேதோ உங்கள்மீ திவ்வளவு காருண்யம் பகவானுக்கு வந்தகாரணமேதோ ஓ-ஸ்வாமிகளே - பிரமாமிகளே-செகிரளாய்ப் பகவானைப்பார்க்காதிருந்த-இக்கொடியேனுக்கு அரியின் தரிசனந்தருவிக்கவும்-உமது தபோமகிமையைச் சகலருக்குந் தெரிவிக்கவும்-அறமான இச்சொத்துக்களைக் கவர்ந்தீர்களோ உங்களுடைய அற்புதமான தபத்தையறியாப் பாவியானேனே-தெரியாமையா லுங்களுக்குச் சேவைசெய்யாமற்போனேனே - இனிமேலாவதென்றுற் றெண்டு - அன்புடன் செய்வித்துக்கொண்டு - பேரின்ப மொழிகளை விண்டு முழுதுமென்னையாட்கொண்டு - கிருபைகூருங்களென விண்டு அவர்கள் காங்களைப் பிடித்துக்கொண்டு-மடத்தினுள் வாருங்களென்ன வேண்டிக்கொண்டு - மடாதிபதிகள் நீங்களேயெனப் பகர்ந்து - ஸ்ரீமந்நாராயணனைத்துதித்து - ஆனந்தமேலீட்டாற் குதித்துப் பிரமானந்தத்திற்சொக்கி - மோட்சவீட்டிற்புக்கி - தன்னைமறந்திருந்தார்.

கேட்டவர்களே சித்தர்களேயென்று - பின்னுஞ் சொல்லத்தொடங்கினர்.

பகவான் காவலாயிருந்த

அத்தியாயம்

முற்றிற்று.

## கக - வது - பகவான் துளசிதாஸரைச் சோதித்த அத்தியாயம்.

ஸ்ரீரஞ்சிதர்களே துளசிதாஸ ரிப்படியிருக்குங் காலத்திலோர்நாள் - மமதாதேவி அனேகசாதுக்களுக் கன்னமிட எண்ணங்கொண்டு சுத்த ஏகாதசியின் மறுநாளிரண்டாயிரம்-பிராமணர்களுக்குச் சந்தர்ப்பணஞ் செய்து - சகலரு மன்னம்புசிக்குந்தருவாயில் - பகவானோர்தனனாகி மடத்துட்பிரவேசித்து துளசிதாஸருக்கு வந்தனஞ்செய்து - ஓ - ஸ்வாமீ-ஏழைப்பிராமணனாகிய அடியேன் மிகவும் - பசியோடும் வந்திருக்கின்றேன் - அன்னமகப்படுமாவென்று கேட்க - உடனே மறையோர் குலமுறைவிசாரித்துப் பந்தியில்வைத்துக்கொண் டுண்ணப்போகையில்-மாயா மறையோன்-சகலரையுநோக்கி - ஓ - சாதுக்களே - நீங்களெல்லாம் மிகவும் புனிதர்களாயிருக்கின்றீர்கள் -நானோ மிகவும் பாவியாயிருக்கின்றேன - அதேதென்று கேட்பீரோ நான் பிரமக்ஞானியாகிய - வோர் பிப்பிரனை - அறிவீனத்தாற்கொன்று-அப்பிரமத்தியை மேற்கொண்டு அதுதீர இக்கங்கையில் ஸ்னானஞ்செய்து பசிவேதனை பொறுக்கமாட்டாமலிங்கடைந்தேனாதலா லடியேனுங் களுட னுண்ணும்படியாக வொப்புக்கொள்வீர்களோ அல்லது தள்ளிவிடுவீர்களோ உற்றதுசொன்னே னுற்றதுபொருந்துமென்கிறபடி உண்மையைச் சொல்லிவிட்டேனென் றுரைத்தமாத்திரத்தில - பூசுரரெல்லாமெழுந்து அம்மறையோன்மேல் விழுந்து - அடித்து இடித்து - அவமரியாதைசெய்து வெளியிற்போகும்படியாக விரைந்து பேசத்தொடங்கினார்கள்-

அதற்குத் துளசிதாஸர் சாதுக்களையமர்த்திவந்த வேதியனைப்பார்த்துக் - கரங்களைச்சேர்த்து ஓ - பிராமணோத்தமா-சீக்கிரஞ் ஜெயசீதாராமவென்று சொல்லும் உம்மையடைந்த பிரமத்திமுதலான மகாபாதகங்களெல்லாம நிவிர்த்தியாய்ப் பரிசுத்தமாவீரென்றுரைய.

அதற்கம் மாயாவேதியன் சற்றுநேரம் மௌனமுற்றிருந்து - ஐயா துளசிதாஸரே ஏழைகட்குநேசரே இப்போது நீருரைத்த வாக்கியத்தை என் வாக்கினுற் சொல்லவே மாட்டேன் - சொல்லவோ நாவெழாது ஏனென்பீரேல் - நானனேகவேதசாஸ்திரங்களைப் பாராயணஞ்செய்தேனதிலிந்த நாமமில்லவேயில்லை-அன்றி - இவ்வளவு சிக்கானவார்த்தையை இதுபரியந்தம் நான் கேட்டதேயில்லை - சொல்லலாமென்றால் தடமாட்டமாயிருக்கின்றது - இதற்கு நானென்னசெய்யட்டுமென் றாயாசமடைந்தவர்போ லபிநயித்திருந்தார்.

அதுகேட்ட சாதுப்பிராமணர்கள் - சகலரும் வெகு லேசாயுரைக்கும் - ஜெயசீதாராமென்னும் திவ்விய நாமத்தைக் கொம்பாவியான உன்னாக்கிற்சொல்வாயா பிரமத்தி சூழ்ந்த உனக்குச் சொல்லவும் வருமா-சொன்னாலும பயன்தருமா - சீக்கிரமிவ்விடம்விட்டு வெளியிற்போடா துஷ்டா - எங்களுடனுண்ணத்தகாத பிரஷ்டா - பஞ்சமர்களினுங் கனிஷ்டாவென்று வைததைக்கேட்ட,

துளசிதாசர் - சாதுக்கள்மேல் முனிவுகொண்டு அப்பூசுரனருகிற்சென்று-ஓ-பிராமணோத்தமா-வேதங்கள் புகழுந் தாரகமந்திரத்தை - யாருஞ்சொல்ல நீர் கேட்டதில்லையோ - அப்படி கேட்டிருக்காவிட்டால் அடியேன் னின்னமோர்தரஞ் சொல்லுகிறேன் கேளுமென்று - அவர் காதருகிற் றன்வாயைவைத்து-ஜெயசீதாராமென்று சொல்லுமையாவென்றார்.

அதுகேட்ட மாயாவேதியன் - ஜெயவென்பது நல்லவார்த்தையே-அதற்குப்பின் சொன்னமொழிகள் மிகவும் கெட்டதாயிருக்கின்றது-ஆதலாலதை நீரும் மற்றியாவரும் - நினைக்கவே கூடாதென் றுரைக்க.

துளசிதாஸர்-வியப்புறவராய் - ஓ - பிராமணோத்தமா - இக்காசியில்மரிக்கும் பரிசுத்தன்-வலதுகாதில் பரமசிவனு ருபதேசிக்கும் - திவ்விய திருநாமத்தை ஏன் நினைக்கக்கூடாதென்று மறுக்கிறீரென, விப்பிரன் மரித்தபிரேதத்தைச் சுமந்துகொண்டேகும்போதும் மரிக்கும்போதும் - ஓதும் இழிவான வார்த்தையைச் சுபமாக ஜீவித்திருக்குங்காலத்தில் - நினைக்கலாகுமா அமங்கலத்துக்குதவுவது சுமங்கலத்துக் குதவுமா-சீ-சீ இனி அவ்வார்த்தையைச் சொல்லவே வேண்டாமென.

துளசிதாஸர் - அநுதினம் பரமசிவனுதியோர் தியானிக்கும் திவ்விய நாமத்தை வெறுக்கலாமா - மற்றென்றால் பிரமத்திபாவம் நீங்குமா - சீக்கிரமித்திருமந்திரத்தைச் சொல்லுமையாவென-மறையோன் வேண்டாமென்கிறவன் கழுத்தில் லிங்கம்கட்டுவதுபோல-நான் மறுத்தும் - நீ ரிஷ்டித்துரைத்தால் என்மதி திரும்பமாட்டாது நான் சொல்லமாட்டேனென.



அரிதாஸ னச்சமுற்று நீசொந்த தெய்வத்தைத்தியானிக்கின்றீரெனப் பூசுரன் பரமசிவனைப்பஜிக்கிறேனென அரிபக்தன சிவபக்தராலும் விரும்பியனியாமல் திருநாமமனிற் திருக்குங் காரணமேனென ஆதிவருணன் என்னமோமறந்து குருவக்ர யிவைதெகெடுத்தவிட்டுவிட்டேன் முக்கியமாகசாவிகவரனையே தியானிக்கின்றேனென்ன பரமபாகவதன் சிவநாமமான அரா வென்றும் சக்திநாமமான உமாவெனவுஞ் சொல்லுமையாவென முப்புரிநூலோன் மிகவுஞ்சந்தோஷித்து அரா அரா உமா உமாவென்றுபலதரஞ்சொல்ல.

அரிபக்தன் ஆ ஊ என் பதைத்தி மற்றிரண்டக்ஷரங்களையும் கூட்டிச்சொல்லுமையாவென மேற்குலத்தோன் இதுவென்ன விபரீதம் உயிரெழுத்துக்களோடு சேர்ந்தி தீர்ச்சமான எழுத்துகளைக் கூட்டினதையே சொல்லும்படியுரைக்கிறீர் சீ சீ உயிரெழுத் தில்லாப் பேரை நான்கனவிலும்நினைக்க மாட்டேனென இனி சாதுக்கள் பொறுக்கமாட்டார்களென்று துளசிதாஸர் பகவானுடையதிருநாமத்தையுரைக்காவிட்டாலும்அன்புடன் கேட்டாற் போதுமெனப் பலதரமுரைத்து இனியுமுடைய பாவங்களெல்லாம் பஸ்மமாய்ப்போய்விட்டது திருநாமத்தைப் பிட்டமென்றறைந்து பலவந்தமாகப் பார்ப்பானைத் தன்னருகில்வீற்றிருக்கச்செய்து சகலரையு மன்னமுண்ணும்படி ஆக்ஞாபித்தார் அதற்குச்சாதுப் பிராமணர்கள் சம்மதிக்காமல் ஒருவரும் ஜெய சீதாராமெனச் சொல்லுவதாயும கேட்பதாயும - சகல பாபங்களுக்கும் மேலான பாபமாகிய பிரமத்திநீங்குமா இதுவேதா - அநேககால் ஜெபஞ்செய்யவேண்டும் - ஓமம்வளர்க்கவேண்டும - பிராயச்சித்தஞ்செய்யவேண்டும் - பிறகல்லவோ நம்முடனுண்ணவேண்டும் - அப்படிக்கிருக்க - இப்படிச்செய்வது-நியாயமல்லவென்று மறுக்க

துளசிதாஸர்-ஒருதரம் ராமாவென்றுரைத்தாலும் அல்லது கேட்டாலும் - சகல பாபங்களும் நிவாரணமாகுமெனச் சுருதிஸ்மிருதி இதிகாசங்களு முறையிடுகின்றன - இம்மறையோன் பலதரம் - ராமாவென்றுரைத்ததைக்கேட்டீரே - இன்னம் பிரமத்திபாவம் நீங்காமலிருக்கின்றதாவென, சாதுக்கள் யாரும் ஒருவனைக் கொல்லலாகாது கொன்றதற்குத் தகுதியான-பிராயச்சித்தஞ் செய்துக்கொள்வதனறி அனேககால் ஜெபஞ்செய்யவேண்டுமென்று வேதம் முறையிடுகின்றது அன்றி ஸ்திரீஹத்தி - சிசுஹத்தி - கோஹத்தி முதலான பாபங்களினுங் கொடிய பாவமல்லவா பிரமத்தியன்றி பதிவிரதை-தன்னையழித்த சிவன் முதற்தன்-பாமபத்தனுகிய இவர்களின் மனதையே நோகவைக்கலாகா அப்படியிருக்க-இவன் - பிரமத்தையுணர்ந்த பிராமணனைக்கொன்ற கொடியபாவியாயிற்றே இவனைத்தீண்டலாமா அன்னமுண்ண வேண்டலாமா அதிபாதகனுகிய இவனுடைய வாக்கில் - ராமா வென்கிற வாக்கியம் பிறப்புமோவென.

அரிதாஸர் - இம்மறையோன் - அரா அரா-உமா உமாவென்ப் பலதரமுறைத்ததை நீங்கள் கேட்கவில்லையோ - அரா உமா - வென்பதே-ராமாவென்னுந் தாரகமந்திரமாகும் - எப்படியென்றால் - தசரத மகாராஜனுக்குப்புதல்வனாய்ப்பிறந்த-ஸ்ரீமகாவிஷ்ணுவுக்கு-என்ன நாமகரணமிடலாமென யோசித்த வசிஷ்டர் - அரா வென்னும் - சிவநாமத்தையும் உமாவென்னும்-பார்வதியின் நாமத்தையும் - ஒன்றாகச்சேர்த்து - ராமாவென்ற நாமதேயமிட்டார்-அன்றி நீங்கள்-ராமநாமத்தின் மகிமையை யறிந்தவர்களாதலால்-வெகுநேரமாகவாது செய்யத்தொடங்கினீர்கள்-அன்பர்களா மனதில்ஸம்பவமாகிய ஸ்ரீராமருடைய நாமதேயத்தின்பலனை யுரைக்க-வெகுவிரியாகும் - அதேனெனின் - ரா - சகலபாபங்களையும் வெளிப்படுத்தும் - மா - வெளிப்பட்ட பாபங்கள் தன்னையடையாமல் நிக்கிரகிக்கும் ஆதலாலும் ரா - வென்றால் வாய்திறந்து - மா - என்றால் வாய் மூடுகிறதாம். ஓ சாதுக்களே - ரா - ஆதிசிவன்-மா-ஆதிசக்தி - ரா - பரப்பிரம்மம் - மா - சிற்சத்தி - ரா-ஆத்மா - மா - ஜீவன் - ராவென்றால்-பரப்பிரம்மத்தைதுதித்ததாகும் - மாவென்றால் மும்மூர்த்திகளை நினைத்ததாகும் - ராவென்றால் பாபங்கள் அகாது-ராமாவென்றால் எமன் நடுங்குவான் - ராமாவென்றால் எமபாசம் துளைக்கும் - ராமாவென்றால் நரகவேதனை நீங்கிப்போம்-ராமாவென்றால் குஷ்டமுதலான வியாதிகளகன்றுபோம் ராமாவென்றால் - வறுமை சிறுமைநீங்கி அஷ்டைசுவரியமு முண்டாகும் - ராமாவென்றால் - கோரிய யெண்ணங்களெல்லாம் பலிதமாகும் - ராமாவென்றால் பிரமத்திமுதலான சகலபாபங்களும நீங்கி மோட்சசாம்ராச்சியத்தையடையலாம் - ராமாவென்றால் ஆயுள்விர்த்தியாய்ச் சகலவித்தைகளுஞ் சம்பவிக்கும் - ராமாவென்பதே தாரகமந்திரம் - ராமாவென்பதே சகலகர்மங்களையு மோட்டும் உக்திரம்-ராமாவென்பதே-மோட்சமடையுமந்திரம் - ராமாவென்பதே - அண்டசராசரங்களி

ஆய் கிறைந்திருக்கும் க்ஷேத்ரம் - என்று சொல்லியும் அந்தச் சாதுக்களின் சந்தேகம் - நீங்காமையால் - பிரமத்திசெய்த பிராமணருக்கு வட்டித்திருக்கும் பத்திரத்தைத் - தன் கரங்களா லேந்திக்கொண்டு - ஓ - சாதுக்களே ராமவென்னுந் திருமந்திரத்தின்பலனை உங்களுக்குக் காட்டுகிறேன் வாருங்களென்று-ஸ்ரீ கைலாசவாசராகிய - விசுவநாதர் திருக்கோயிலிற் பிரவேசித்து-கல்லுருவான ரிஷபத்தின்முன் பத்திரத்தை வைத்துப் பலதரம் பரமசிவனைச்சூழ்ந்து - சிரசாஷ்டாங்கமாகத் தாழ்ந்து - ஓம் - அரகரா - மஹாதேவா - வாமதேவா நீலகண்டா - கிரணிமுதல்வா-சாம்பவா-சங்கரா-மசானவாஸா - கயிலாசவாசா - உமாபதி பசுபதி-திரிநேத்ரா திரிபுராந்தகா - சர்வேசுவரா - பரமேசுவரா - சர்வபராத்பரா சர்வபபஹாரா - காலகாலா திரிசூலா - ஆதி மூர்த்தி-கபாலமூர்த்தி-விஸ்வநாதா - பூதகணநாதா-சசிதரா சடாதரா-நந்திவாகனா - கங்கைமோகனா - தாண்டவா ஆண்டவாவென்று பற்பலவிதங்களாகத் துதித்து ஆனந்தமேலீட்டால் குதித்து லிங்கமூர்த்தியி னெதிரிலிருக்கும் - நந்திகேசுவரனைப்பணிந்து - அவரதுபதங்களிற் றனதிரு நயனங்களையணைத்து - ஓ நந்திகேசுவரா - ராவென்பது பரமசிவனும் - மாவென்பது ஆதிசத்தியுமாகி இந்தச் சத்தி சிவனே ஆதிமூலப்பொருளாகிய-ஸ்ரீமந்நாராயணராகி-ராமவென்று மோக்ஷசாதநமாகிறதே-பிரமத்திமுதலான மகாபாதகங்களெல்லாம் நிவாரணமாகுமென்பதுஞ் சத்தியமானால் - இந்தப்பத்திரத்திலுள்ள அன்னம் முதலான பதார்த்தங்களையும்புசித்து-இந்தச் சாதுக்களின் சந்தேகத்தைநீக்கி பிரமத்திசெய்த பிராமணனைக் கிருதார்த்தனாக்கி - ராமமந்திரத்தின் பலனை பலருமறியக்காட்டி - என்னையாட்கொள்வாயென்றுரைத்தமாத்திரத்தில்-கல்லுருவாயிருக்க ரிஷபமானது-எழுந்துநின்று - பலதரமுக்காரம்போட்டுப் - பிராமணருபமாயிருக்கும் பகவானைப்பார்த்து - முன்கால்களைச்சேர்த்து-வந்தனஞ்செய்து - அன்னம் முதலான சகலபதார்த்தங்களையுமுண்டு - பத்திரத்தையுமுட்கொண்டு-ரணம்போட்டு - ராமநாமமகிமையைப் பலருமறியக் காட்டி பழையபடி கல்லுருவானமாத்திரத்தில் தேவர்கள் பூமாரிபொழிந்தார்கள் தேவதுந்துபி தாம்தாமெனமுழங்கிற்று பின்பு துளசிதாஸர் நந்திகேசுவரனையும் பரமேசுவரனையுந்தொழுது இன்னமுமிவர்க்குண்டாயழுதுசொல்லுங்கள் சாதுக்களேயென்றுரைத்து க்கடினநெஞ்சத்தைக் களைந்து ஓசாதுபிராமணர்களே ராமனென்னும் ஓரக்ஷரத்திலேயே சகலபாபங்களும் நிவாரணமாகுமென்று இந்தரிஷபம் பகர்ந்து பத்திரத்தோடு சகலபதார்த்தங்களையுமுண்ட வித்தையைப்பார்த்தீர்களா உங்களுக்குற்ற மாச்சரியத்தை நீத்தீர்களா வெண்ணெய்யைவிட்டு நெய்யைத்தேடுவது போலவும் உள்ளங்கையைவிட்டு முழங்கையை நக்குவதைப்போலவும்ராமாவென்னுந் திவ்விய திருமந்திரத்தைநம்பாமல் ஓமம்வளர்க்கவேண்டும் பிராயச்சித்தஞ்செய்யவேண்டுமென்று வெகுநேரந்தர்க்கஞ்செய்தீர்களே பூசுரனை வாயில்வந்தபடி வைதீர்களே அடியேன்மொழியை நம்பாமற்போனீர்களே சந்தேகத்துக்குள்ளானீர்களே ராவென்று மோக்ஷத்தின் மகிமையே யிவ்வளவிருக்குமாயின் - ராமாவென்னு மீரக்ஷரத்தினாலெவ்வளவு மேன்மையை யடையலாகும் - ஜெயசீதாராமென் றன்போடு துதிப்பவர்பால் - பாபமெட்டிப்பார்க்கக்கூடுமோ ராமநாமத்தை நம்பினவர்களை எமன் பாசத்தாற்கட்டிப் பிடிக்கக்கூடுமோ வென்று பற்பல வார்த்தைகளாடி-ராமசங்கீர்த்தனம்பாடி - ஆனந்த நிர்த்தனஞ்செய்யத்தொடங்கினார்,

சாதுக்க ளாச்சரியப்பட்டுத் தங்களுக்குற்றமாச்சரியுங்கெட்டு - ஜெயசீதாராம்-ஜெய சீதாராமெனத்தோத்திரஞ்செய்துகொண்டே - இன்பநடனஞ் செய்தார்கள் இப்படி வெகுநேரந்தாண்டவம்புரிந்து - துளசிதாஸரைப்பணிந்து-ஓஸ்வாமி ராமநாமமகிமையையின்றையதின மறிந்தோம் பற்பல பாபங்களும் பஸ்மமாகுமெனத்தெரிந்தோம் இனியிப் பிராமணோத்தமருடன் அன்னம்புசிப்பதற்குவாருங்ஸ்வாமி யென்றழைத்துக்கொண்டுமடத்திற்பிரவேசித்து பிரமத்திசெய்தவந்தவேதியர்க்குவந்தனம்புரிந்து மிகவும்பணிந்து துளசிதாஸரைப் பகவானெனத்தீர்மானித்து அப்பூசுரர்க்கு ஓர்பந்திரம்போட்டுச் சகலபதார்த்தங்களையும் வட்டித்து தத்தங்கடங்கள் பந்திரங்களில்வீற்றிருந்து நமக்குச் சமானமானவர்களில்லை யென்றிறுமாப்படைந்து இது துளசிதாஸருடைய பிரசாதமென்று சந்தோஷத்துடன் தின்று சகலவினைகளையும் வென்று அடைக்காயிலைகளைமென்று ஒருவர்க்கொருவர் சந்தனம்பூசிவந்த அந்தணர்க்குசவ்வாதுபூசி விசிறியால்வீசித் துளசிதாஸரைக்கொண்டாடி விஷ்ணுசங்கீர்த்தனங்களைப்பாடிப்பிரமக்ஞானத்தைநாடிப்பரமானந்தத்தைத்தேடி அரிதாஸர்கீர்த்தியைக் கொண்டாடத்தமோடி நம்மாலாகாதெனவாய்மூடி அஞ்ஞானங்களைச்சாடி பிரமத்திமிரண்டறக்கூடி வினைகழித்ததற்குவாடி பிராணாந்த மேலீட்டாற்கூத்தாடி காம்செய்த தபமேதோடானுகோடி எலச்சங்கல்பவிகல்பமற்று சகசானந்தத்தையுற்று என்றுமடையாவின்பினைப்பெற்று நாமொன்பதுஞ்செற்று சித்திரதீபத்தைப் போலசைவற்றிருந்தார்கள்



அப்போது கபடநாடக சூஸ்திரவதாரியாகிய ஸ்ரீமந்நாராயணனும் சந்தோஷசாகரத்தில் மூழ்கினவராய்க்ஞானதிருஷ்டியால் நம்மையறிந்துகொள்ளுவார்களோ வென்கிற சந்தேகத்தால் சஞ்சலமனதோடுங்கூடி அடிக்கடி கண்களைத்திறந்து பார்ப்பதும் மூடுவதுமாயிருந்தார் இப்படி அந்திவேளைபரியந்தம் நித்திரையிலிருந்து பிறகுதெளிந்து சாதுக்க ளனைவோரும் சந்தியாவந்தனஞ் செய்யப்பாகீரதியையடைந்தார்கள்,

அத்தருவாயில் மமதாதேவி நாடோறுந்துளசிதாஸரைக் காலைமாலை பணிந்துப்போகும் வழக்கப்படிவந்து வந்தனந்தந்து அருகேநின்றிருக்கும் மாயாமறையோனையும் வணங்கினள் அந்தணர் மமதாதேவியின்மேல் மோகித்தவர்போலநடித்து பெருமூச்செறிந்து ஓ பெண்ணே என்னிருகண்ணே எனக்குண்டாகுற்ற ஆசையைத்தீர்த்து இப்போதே யெனைக்காத்து ரட்சிக்கவேண்டுமென்றுவியே மமதாதேவியே யென்றுரைத்துக்கொண்டே மூர்ச்சையாய் விழுந்துவிட்டார்

உடனே துளசிதாஸர் திக்கென்றெழுந்து அவரதுசேவடியில் விழுந்துமமதாதேவியினால் பன்னீரைவரவழைத்து உபசாரனை செய்தெழுப்பவே அப்பூசுரன் ஓ அரிதாஸரே இந்த மங்கையின்மே லெனக்கிச்சையாய் விட்டது காமவிகாரங்கெட்டது இவளியாருடைய மனைவியாயிருந்த போதிலுக் நீர் கருணைகூர்ந்தெனக்கிணங்கும்படியாச் செய்யவேண்டுமெனமிகவும் பரிதாபத்துடன் பன்முறைவேண்டிக்கொண்டார் துளசிதாஸர் சாதுக்களறிந்தா லிவருடன் வாதுசெய்வார்களெனச்சுற்றுப்பக்கமும்பார்த்து யாருமில்லாமையாற் காதகளைச்சேர்த்து ஓ-பிராமணோத்தமா சந்தடிசெய்யாதே - சாதுக்களறிந்தால் விபரீதத்துக் கிடமாகும் - உமதுயிர் பிரிந்துபோகும் - ஜாமாத்திரியானபின்-இம்மங்கையையுமக் கிணங்கச்செய்கிறேன்-அவசரப்படாமல் பொறுத்திருமையாவென் றுபசரித்தார் அவ்வேதியர் சற்றுநேரமிருந்து-சந்தியாவந்தனஞ்செய்யப்போன சாதுக்களெல்லாம் வந்ததே - துளசிதாஸரைப்பார்த்துக் காதகளைச்சேர்த்து - ஓ - ஐயா பேதமிலந்த பிரம்மக்ஞானியே-கோபமில்லாஞானியே-எனக்கோ காமவிகாரம் மேலிட்டது-அந்தத்தையெல்லாஞ்சுட்டது-இனியென்றற்பொறுக்கக்கூடாது இப்போது வந்தமாதிருக்கும்விட்டது - நீயிந் சொல்லுமையாவென்றார், துளசிதாஸர் - சாதுக்களறிந்துக்கொள்ளப்போகிறார்களென்று கண்ணுனுங் கையாலுஞ் சாடைகாட்டி-மௌனமாயிருக்கும்படி வேண்டிக்கொண்டார்,

விப்பிரன் - ஐயோ மன்மதனையெரித்த மகாதேவனும் கங்கையின்மேல் மோகமாகித் தயக்கமுற்றுசென்றுவெனனுற் பொறுக்கக்கூடுமோ, இதுதெரிந்த நீரென்னையிப்படி வெறுக்கக்கூடுமோ அந்த மமதாதேவி - எங்கே போனாள் - எனக்கு மோகமுண்டாக்கி எங்கேமறைந்தாள் - எங்கே பறந்தாள் - எனக்குவந்த காமயிச்சை துக்கனுக்கு வரலாகாதா துன்பந்தரலாகாதா வென்றுபாபாப்போநிம் வெறிகொண்ட மர்க்கடம்போலவும் சொறிபுற்ற சுனைக்களைப்போலவும் - ஆசியக்கூத்தனைப்போலவும் - கோளன் காக்கைப்போலவும்-குதமிலாக்குடுவையைப்போலவும் - பித்தனைப்போலவும் - சித்திரியைப்போலவும் - பதைபதைத்து அங்கு மிங்குமாயோடி மமதாதேவியைத் தேடத்தொடங்கினார். சாதுக்கள் அந்தணன்மேல் முனிவுகொண்டு - தூஷணைவார்த்தைகள்விண்டு - அடா மூர்க்கா - துன்மார்க்கா-உண்டவீட்டில் ரெண்டகஞ்செய்யும் கண்டகனாகிய உன்னையிப்போதே துண்டந்துண்டமாக் கண்டங்கண்டமாகவெட்டிப் பலியிடுகிறோம் பாரென்று தள்ளிக்-கீழே தள்ளி - நகங்களாற்பிறாண்டி கிள்ளி - அடா தொள்ளியெனத் தாறுமாறுஞ்செய்யத்தொடங்கினார்கள். துளசிதாஸர் - சாதுக்கள்மேல் மிகவும்வெகுண்டு - பெருங்கோபங்கொண்டு-அவ்வந்தணனை யழைத்துக்கொண்டு தன் மனைவியாலிருந்த மமதாதேவியிடஞ் சொல்வதற் கிடைந்து-மௌனமாய்நின்றார், மமதாதேவி மறுனை வணங்கி-ப்பதிவார்த்தைக்கிணங்கி - ஓ - ஸ்வாமீ இப்பிராமணோத்தமரை என்பாலழைத்துக்கொண்டு வந்ததின மதிவேறுதலா னுமதபிப்பிராயத்தைப் புலப்படுத்துமையாவென்று பணிந்துநின்றாள், அரிதாஸர் - ஓ மமதாதேவியே - இவர்சொந்த ஆவியே என்னுடைய அன்புனக்குத் தெரியவேயிருக்குமானால் - நீ நல்லகுலஸ்திரீயானால் - பதியின்வார்த்தையைக் கடவாப் பதிவிரதையானால் - மோக்ஷார்த்தம் வேண்டியிருக்குமானால - இந்த அந்தணருடைய அவாநிற்கும்படிக் கூடிக்குலாவியிருப்பாயாக வென்றுரைத்தார். மமதாதேவி பனிமொண்டாகப் பக்ஷமாப் பேசாதிருந் திப்போது பக்ஷமாப்பேசும் பதிலையத்துதித்து - ஓ - என்னுருவலனே - உமக்குரிய வஸ்துவை - ஒருவருக்குத் தானஞ்செய்தால் மறுப்பவருமுண்டோ மனைவி-பதிக்குவேறுமாதுண்டோ உமதிஷ்டப்படி நடந்துகொள்ள எனக்கோர் தடையுமிராது - ஒமென்றும் பரமசிவன் பார்வதியை - இராவணனுக்களிக்க-அபத்தினி மறுத்துரைத்ததுண்டா ஆனால் - மடத்திலிருக்கும் சாதுப்பிராமணர்களால் இவ்விப்பிராருக் கோரிடையூறு வாராமல் பாதுகாக்கவேண்டிய பாரமுமதாகுமென் றுறைத்து

வேதியர் பாதங்களில் வந்தனஞ்செய்து-ஓ-ஸ்வாமிகளே நாமி ஐயமின்றிசையோகஞ்செய்யச் சீக்கிரம் வாருமென்றழைத்தாள், அப்போது - சாதுக்களாலுக்கோர் தடியெடுத்துக்கொண்டு - அந்த மாயா பிராமணர்மேல் விழுந்து - அடா பாமதுரோகி அடா உன்மத்தரோகி பதிபிரவார்த்தையைக்கடவா மிப்பத்தினியையா பெண்டாளப்போகின்றாய்-சீ-சீ-சாயேஅறிவில்லாப்பேயே சீக்கிரம் இம்மடத்தைவிட்டோடிப்போ - இல்லாவிட்டாலுன் தலைமண்டையையுடைத்து-மூளையிதறப்புடைத்துக் கொன்றுவிடுவோம்-ஒருகணத்தில் வெளியேவிடுவோமென் றார்ப்பரித்து - அட்டகாசஞ் செய்து-தடிகளைச்சுழற்றி வெதிக்தார்கள். துளசிதாஸர் - அந்தண்டங்களைக் காத்தால்மறித்து - சாதுக்கள்மேல் மிகவும் முனிவுகொண்டு - ஓர்-தடியையெடுத்துக்கொண்டு-ஓ-சாதுக்களே - உங்களுடைய பிராணனமீ துங்களுக்கு ஆவாயிருக்குமாயின் - இக்கணமே இவ்விடம் விட்டுப்பேர்த்து - வோடிப்போய்க் களிகூர்ந்து - சிவனைக்காப் பாற்றிக்கொள்ளுங்கள் இல்லாவிடி லெவ்வாருக் கினையாருங்களென்றதட்டிச்-சாதுக்கள்மேல் குதித்துமிதித்து - வதைக்கத்தேடுனென் றார்ப்பரித்தார், சாதுப்பிராமணர்கள் - ஓ ஸ்வாமீ - உமதுகைவாள லெங்களை வெட்டினாலும் - இந்தத்துஷ்டனைமாத்திரம் - மமதாதேவியினருகில் போகவிடமாட்டோமென்-றம்மறையோன் குடுமியைப் பிடித்திழுத்து - முழங்கைகளை விடித்துப் பற்களாற் கடித்துத் - தண்டங்களாலடித்து-மூர்ச்சையாய் விழும்படிசெய்தார்கள்.

பிரம்மக்ஞானத்தனக்கு லாபிபவனதிகம் அவனினும்-அ ப்பாரம்பொருளை விரும்புபவனதிகம் அவனினும்-அகண் டானந்தத்தைப் - தன்னை யிகனுளென் றறியாமல்-சா க்ஷாத்காரத்தை யடைந்திருப்பவனதிகம், அவனினும் அரியதிருஷ்டியையுமேவிந் திருக்கேதபநிகளிறந்து பே ய்பிடித்தவனைபோலவும் செவிருப்பதுபோலவு மிருக்கு ம்-சகளஜ்ஞானிகளைத் தேடிக் கண்டுபிடித்து - அன்னை ஞானிறுட்டிக்-குற்றேவல்செய்பவ னதிகமாகும் ஓ இ ராஜனே - இப்பேர்க்கொத்த மேலான லாபத்தைவிடுத் து - அன்பத்தைபடுத்து - அரிதான ஆயுளைக்கெடுத் துக் - கர்மமென்னும் பெருமூட்டைகளை யெடுத்துப பசனையப்போலிருக்கும் மானிடர்கள் - காலனெமன்வர் தடுத்தால் என்னசெய்வார்களோவாசைவைவார்களோ யானறிகிலேன் ஓ-வேந்தனே - எந்தவேளையிருந்தாலு மொருநாளில் ழிந்துபோகும இத்தேகத்தைப் பொய் யெனத்தீர்மானித்து மெய்வாழ்வுக்குடன்படாமலரை நிமை யின்காலம்போக்கலாமோ மண்ணினுற் செய்த பாண்டம் உடைந்தும் மண்ணே இருந்தும் மண்ணே யானதுபோலப் பாமபக்தியும் ஜீவன்முக்தியு மடையா தவர்களினுக்கை இருந்தும் பிரேதமே மரித்தும் பிரே தமேயல்லவோ ஆ-ஆ-மந்தமதியோர்க் கெந்தவிதம யு ரைத்தாலும் - அந்தகன் சூரியனைக்காணாமல் - ஒன்றுந் தோணாமல் அந்தகாரமே நிறைந்திருப்பதாகக் காண்ப துபோலப்-பந்தத்துக்குளாகப்பட்டு - வெகுநொந்த னாக்குட்பட்டிருக்கிறார்களே மதபேதவாதிகள்-வாது களாடி வேதைக்குட்பட்டுத் தாங்கற்ற கல்வியாலோர் பயனடையாமல்-சம்மதத்துக்குட்படாமல் உங்கள் வே தம் பொய்யென்றும் - எங்கள்வேதம் மெய்யென்றும் உங்கள்தெய்வம் அசத்தியமென்றும் - எங்கள்தெய்வம் சத்தியமென்றும் ஆஷணவார்த்தைகள்விண்டு-மதாபி மான மேற்கொண்டு-சம்மதத்துக் குட்படாமல்-தன்னை யறியாமல் - தனக்குளிருக்கும் - ஆனந்தத்தையு மனு பவிக்காமல் - உத்தமர்களைப்பழித்து - வீணுய்காலைக் கழித்து - எமன் வருங்காலத்தில் தர்தங்களைக்காட்டிச் சூழ்ந்திருப்போரையுங்வாட்டிச் - சொல்லொணுத்துய ரத்தைப்பூட்டி நரகப்பட்டணத்துக்கு மேட்டான மேட் டிகளாகிறது கன்மையோ தனக்குள்மெய்ப்பொருளைத் தேடாமல்-தெரிவிப்பவர்பாலு மோடாமல்-பகவத்பத் தியை நாடாமல் பரமபாகவதர்களையுங் கூடாமல் - வி ணைய்த் தர்க்கதர்க்கங்களால் காலங் கழிக்கலாகு மோ இத்து லகமமதைதபிரித்துப் போகுமோ க்ஷணப ங்கமான இவ்வங்கத்தைத் தங்கத்தைப்போ லெண்ண லாமோ பாபகர்மங்களைப் பண்ணலாமோ ஓ-அரசனே மதபேதகர்க்குச் சதுர்வேதமும் - சந்தையேயாகும் சமதமுள்ள சாதுக்களுக்கு ஓர் மொழியே போதும் முடிவு-எழுவகைத் தோற்றங்களான சராசரங்களெத் தனையுமிருந்தாலும்-ஓர்காலத்தில் பூமியிலடங்கிப்போ கும் பூமியோ சூரியோஷ்ணத்தாற்கண்ணையறியப் பிர சண்ட வாயுவாற்றாசாகி - வருணபகவானுல் - ஜலம யமாய்ப்போகும், ஜலமோ-அக்கினியால் வற்றிப்போகும் அக்கினியோ வாயுவா லிக்ஸாமற்போகும், வாயுவோ ஆகாயத்தி லடங்கிப்போகும் ஆகாயமோ இருண்மயமா னமாயையி லடங்கிப்போகும் - மாயையோ தன்சாமர் த்தியங்கெட்டுச் சூரியனைக்கண்டபனியைப்போலவும் சுழற்காற்றிலகப்பட்ட இலவம் பஞ்சுபோலவும் அக் னியில் வீழ்ந்த சருகைப்போலவும் - சத்ருசூன்யமாய்ப் பிரமத்திலில்லாமற் போகுமானுல் - மெய்த்தைகையை ஓர் பொருளை மதித்தமடைக் கிருக்கலாமோ ஓ-பூபதி-மா யை யில்லாதவியோங்கியும் - பரப்பிரமம் பதி-ஆதிமத் தியாந்த ரஹிதமாய் - நாமரூபவிகாரரஹிதமாய் - அகண் டானந்தமயமாய் - சித்தசுத்த புத்தமுக்தமாய்-நிர்குண புஷ்கள நிராமயமாய் - நிர்பேத நிர்பேத - நிராவரண மாய் - என்றுமுள்ளபடியேயிருக்கும், ஆதலால் தனக் குள்ளிப்போது மந்தலட்சணத்தீதாடிருக்கும்பரமாத்மா வையுஞ் - சத்குருவாலறிந்து - கூடஸ்தபிரமத்தையே-சு சாதிக விஜாதிக ஸ்வகதபேதாதிதமென்றும்-அகண்ட பரிபூரணஸ்வரூபியென்றும் - சுத்தக்ஞானாத்தவஸ்து வென்றும்-தேவரும் மற்றவரும் - மேலாமும் ஆதி தெய்வமென்றும்-முக்தரும் பக்தரும் சித்தரும் வணங் கும் பரம்பொருளென்றும் - சித்விலாச சின்மய சுய ம்பிரகாச தேஜோமயமென்றும் - நித்யநிரஞ்ஜனாநந்த போதமென்றும்-இதையடைந்தவர்களுக்கே ஜனனம ரணதுக்கமாம்பரம்பரையொழியுமென்றும் - சகலபாபகர்ம ங்கள் விமோசனமாகுமென்றும் - நரக வேதனையில்லை யென்றும் - மோட்சானந்தங்கிடைக்குமென்றும்-சொ ல்லப்படும், இதிற் சந்தேகமேயில்லை-சந்தேகமுள்ளோ ர்க்கனவற்றதொல்லை ஓ-இராஜனே-இத்தப்பிரமக்ஞானம் லேசிலடைவதற்குச் சத்குருகிருபையும் - இஷ்டதேவ தையின்வரப்பிரசாதமும் அவசியம்வேண்டும் இன்றேல் நிஷ்பிரயோசனமாய் முடியும் ஆதலால் - இன்றுடன் தெய்வபக்தியும் சத்குருசிரத்தையும் சாதுக்கள்சேவை யும் செய்து சுகமுற்றிருப்பாயாகவென்றுரைத்து - அப் பாதஷாவிடத்தில் விடைபெற்றுக்கொண்டு-மதுரா பி ருந்தாவனம் முதலான புண்ணியக்ஷேத்திரங்களிற் சஞ் சரித்து ஆனந்தமேலீட்டாற் றன்னைமறந்து சகளஞா னத்தாற் பூர்த்தியடைந்து ஆருடஞானியாய்ச் சிறப் புற்றிருந்தனர். அப்பாதஷாவோ அன்றுமுதல் பகவத் பக்தியில் விசேஷித்துப் பிரமக்ஞான நிஷ்டையையும்



சாதித்துக்கொண் டானந்தமாயிருந்தார். கேட்டீர்க ளோ சித்தர்களே-பின்னும் துளசிதாஸரால் அநேக விசித்திரங்கள் நடந்ததுண்டு அவையனைத்தும் பக்தவி ஜயத்தின் மத்தியி லெங்கேவரும் கேட்டுச் சந்தோஷம டையலாமென் றுரைத்துப் பின்னுஞ்சொல்லுவார்.

இந்தத்துளசிதாஸருடைய சரித்திரத்தை அன்பு டன் பாராயணஞ்செய்தவர்களுக்கும் - சிரவணஞ்செய் பவர்களுக்கும்-பகவத் பக்தியும் - நிஷ்காமியமும்-பிர மக்ஞானமும் - அகண்டானந்தமும் - அஷ்டயிசுவரிய மும் - தீர்க்காயுசும் - சோவத்ரவாழ்வும் - சத்தியமா கச்சித்திக்கும் - ஓ - சித்தர்களே - நானெஉத்தவ அவ தாரமான நாமதேவர் சரித்திரத்தைச் சொல்லுவேன் அது வெகு உச்சிதமாயிருக்கும் - இனி உங்களுடைய ஸ்தானத்துக் கெழுந்தருளி நாளை அதிகாலையில் வாரு ங்களென் றுகயாபித்து - ஈபாஜிசித்தர் பிரமாணந்தத் திற் பதிந்திருந்தார். உத்தவசித்தா முதலானவர்களும் தங்கடங்க ளிருப்பிடஞ்சேர்ந்து-யோகநிஷ்டைகளிலே மூழ்ந்தருளிக் களிகூர்ந்திருந்தார்கள்.

துளசிதாஸர் திருவடிகளே சரணம்.

## நாலாயிரப் பிரபந்தத் திருவாய்மொழியில் விஷ்ணுபக்தர்வாக்கியம்.

நின்றவொன்றையுணர்ந்தேனுக்
கதனுணர்மையதுவனுவென்
ஜென்றுமொருவர்க்குணரலாகா
துணர்ந்துமேலுங்காண்பரிது
சென்றுசென்றுபரம்பரமா
யாதுமின்றித்தேர்ந்தாறு
நன்றுதீதென்றறிவதாய்
நன்றாய்ஞானங்கடந்தே
நன்றாய்ஞானங்கடந்துபல
நல்லிந்திரியமெல்லாமீர்த்த
தொன்றாய்க்கிடந்தவரும்பெரும்பா
மூலப்பில்தனையுணர்ந்துணர்ந்து
சென்றங்கின்பதுன்பங்கள்
செற்றுக்களைந்துபசையற்றால்
அன்றேயப்போதேவீடு
அதுவேவீடுவீடாமே.

## சிவபக்தர் வாக்கியம்

அஞ்செலென்றகரதலமுங்கணபணகங்கணமும்
அரைக்கிசைந்தபுலியுடையுமம்புலிச்செஞ்சடையும்
நஞ்சையுண்டமணிமிடறுமுன்னூலுமார்பும்
நலந்திகழ்வெண்ணீற்றொளியுமழிமானுமழுவும்
கஞ்சமலர்ச்சேவடியுங்கருணைபொழிமுகமும்
காமனையன்றெரித்ததிருக்கண்களொருமூன்றும்
பஞ்சடிசிற்றிடைமடக்கொடியொப்பனைபாகனுமாய்
பால்வண்ணனுளத்திருக்கப்பயமுண்டோவெமக்கே.

## என்றுரைத்த பதிக்கவர் சதியுரைத்த வாக்கியம்.

ஆக்கையென்னும் புழுக்கூட்டைப்பயினைத்தனையா ப்பொருளை, அருளொளியைப் பராபரத்துக் கப்புரமா மறிவை, நீக்கமற மயிருமேனைக்கு மிடமற "விவ்வுலகை நிறைந்து நின்ற பெருவெளியை நினைவிலெழுஞ்சுட ரைப், பாக்கியங்கள்செய் தலைநர்தவக்குறைகண்முடி த்த, பழவடியார்க்கருளுதவும் பசுந்துணைக்கற்பகத்தை வாக்குமன விகற்பத்துக் களவுபடாவொன்றை மாசற்ற பெருவெளியை மனவெளியிலடைப்பாம்.

கூ - வது - துளசிதாஸர்
அத்தியாயம்
முற்றிற்று

உ

கடவுள் துணை

ஸ்ரீமகாபக்தவிஜயம்

நான்காவது

# நாமதேவர்சரித்திரம்

பகவான் துதி

விருத்தம்.

பாண்டவர்க்காத் தூதுசென்ற பத்மநாபா பரந்தாமா
நீண்டவுலக முழுதுண்ட நெடியமாலே யுனையன்பா
வேண்டிடா மனுலகியலை வேண்டுஞ் சிறியநாயேனை
ஆண்டுகொள்வா யச்சுதனே அடியேனுன்ற னடைக்கலமே

நாமதேவர் துதி

விருத்தம்.

அன்னைவயிற்றிற் பிறக்காதோ னரியைக்கனமு மறக்காதோன்
அன்னமாதுக் குண்பித்தோ னரியவருத்தந் தருவித்தோன
சொர்ன்னஞ்செய்நற் பலதந்தோன் காபிக்கன்றுக்குயிர்தந்தோன்
உன்னற்கரிய நாமதேவ னுபயவடிக டமைத்தொழுவாம்.

## க—வது. நாமதேவர் உற்பத்தி அத்தியாயம்.

பிர்மாந்திரத்தில் - சுவாசத்தையேற்றிக் - காலபயத்தை மாற்றித் - தேகமனவாதைகளில்லாச் சித்தர்கள் - காலையிலெழுந்து-நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு - புராதனசித்தரான - நாபாஜி சித்தருடைய ஸ்தானத்தையடைந்து - அவருடைய தாட்டாமரைகட்கு வந்தனைத்தந்து-ஓ-ஸ்வாமி-உத்தவாவதாரமான நாமதேவருடைய திவ்வியசரித்திரத்தைக் கிருபைகூர்ந்தருளுமையா வென்று வணங்க - நாபாஜி சித்தர் களிகூர்ந்து - ஓ - சித்தர்களே.

அண்டர்கள்மகிழும் - தொண்டர்கள் திகழும்-இந்திரன்புகழும் - சந்திரன்தவழும் - சுந்தரமான சந்திரபாகாநதிக்கருகான - எண்டிசைபோற்றும் - விண்டுவீற்றிருக்கும் - பண்டரபுரத்திலிருப்பவர் - புண்டரம்-நெற்றியிற் றரிப்பவர் - சுபகுணத்திற் சிறந்தவர்-மெய்ப்பணிதன்னில் நிறைந்தவர்-தப்புகளெல்லாந்துறந்தவர் இப்புவியாசை யிறந்தவர் -.கைப்புன் எண்ணம் மறந்தவர் - செப்பரும்பக்தியி லுறைந்தவர் - ஒப்பிலா வின்பிற்கறைந்தவர் - அப்புளகுணத்திற் குறைந்தவர்-எப்பொழுதுமரியின்பதத்தில் மறைந்தவர்-தைப்பவர்குலத்திற் பிறந்தவர.

ஆகிய - ராமராமவென்னும் வாக்குள்ள - நாம்தேவட்டியென்பவர்-மனைவிசாரங்களை மாய்த்தகுணபாயியென்னும்-மங்கையுடன் - இங்கிதமாக - இல்வாழ்க்கையிலிருந்து - செல்வாக்குகளைந்து - அனுதினம் நனவிலுங் கனவிலும் - அன்பாயின்பாய் -அயனே-மாயனே - நேயனே - உபாயனே - சகாயனே - என்றறையும் - சுஜனரோடுங்கூடிப் பஜனை பற்பலபாடிப்-பண்டரபுரத்திலிருக்கும் - விண்டுவுக்கு நாடோறுந் தப்பாமல் - நைவேத்தியங்கொண்டுபோய் - நைவேத்தியஞ்செய்து - அந்நாள மனைக்கேய்து-தையல் வேலைவிடாமல் - வேறுவேலையைத் தொடாமல்-எண்ணங்களுக்குத் தன்மனதைக்கொடாமல - கோபத்துக் குட்படாமல் - வீண்தொழில்செய்துகொடாமல்-கலத்தில் நாள்களைக்கழித்துப் பஜனைசெய்யாதவர்களைப் பழித்து - லோபமுஞ் சற்றுமில்லாம லழித்துப் பகவானைபக்தியிற் செழித்து - வாழ்கிறகாலத்தில் - தனக்கு அறுபதுவயதாயும் - தன்மனைவிக் கைம்பதுவயதாயு-பிள்ளையிலாமையாற்-தன்னிபோல்வளர்ந்தோமேயென்று திப்பதியும் - துக்கம்மேவிட்டு - கக்கசத்துக்குட்பட்டு பாலனுக்கா வழுது - பாண்டுரங்கனைத் தொழுது நாடோறும் - நாம்தேவட்டி - அதிகாலையி லெழுந்து-சந்திரபாகாநதியிற்போய் - ஸ்நானஞ்செய்து-சாவல்திரத்தன் - கோயிலை - நூற்றெட்டுதரம் - அங்கம்பிரதட்சிணஞ்செய்து - பண்டரிநாதனைப் பணிந்து-ஓ-என்னுடையவனே ருக்மணீமனோகரனே - எனக்கோர் மைந்தன்பிறக்க வரந்தந்தருளுமையா வென்று தோத்திரஞ்செய்துக்கொண்டேவந்தார்.

இவர் மனைவியாகிய - குணபாயி-தன்கொழுனன் நித்திரைவிட்டெழுந்து போவதற்கு முன்பேஸ்நானஞ் செய்திருந்து - அவர் ஆலயத்திற்குவருவதற்குள் தான் பண்டரிநாதன் கோயிலுக்குப்போய ஓ-பண்டரிநாதா பாண்டவர்தூதா எனக்குநற் பிள்ளைகலியைத் தீர்க்கலாகாதோ வென்றுதொழுது கண்ணீர்விட்டழுது தன் வீட்டில் வந்திருப்பாள்.

இப்படி - சிலநாள்கழிய - ஒருநாளிரவில் குணபாயின் சொப்பனத்தில் - பகவான் - நரங்கனாய்வந்து தரிசனந்தந்து-ஓ-குணபாயி-நீ பொழுதுவிடிந்தவுடனே பிள்ளையைப் பெறுவாயென்றுரைத்து மறைந்தார் உடனே குணபாயிநித்திரைவிட்டெழுந்து-தன்பதியின்பதங்களில்விழுந்து-ஓ ஸ்வாமிபாரோ - ஓர் பிராமணர்-என்கனவில்வந்து - நீஜுரியோதயமனாதே-குழந்தையைப் பெறுவாயென் றுரைத்து மறைந்துபோனார்-அவர்வாக்கியப்படி - நான் பிள்ளையைப்பெறுவேனோ வென்றாள்.

அதுகேட்ட நாம்தேவட்டி-குதூகலித்து-அடி பெண்ணே-என்னிருகண்ணே - பத்துமாதஞ் சுமக்கலவோ புத்திரனைப் பெறவேண்டும் அப்படியிருந்தாலும் - நரைத்தகிழவியாய்ப்போன நீ - எப்படிபிள்ளையைப்பெறுவாய் - உனக்குற்ற தனயனாசையின் நினைவே கனவாய்வந்தது - கனவிற்கண்டதே மெய்யாயிருக்கக் கனவிற்கண்டது மெய்யாயிருக்குமா ஓர் வேளை நீ கண்டசொப்பனம் மெய்யாயிருந்தால்-பகவானுன்னால் நமக்கிரங்கிருந்தாவது குழந்தையாகப்பிறக்கவேண்டும் கிழவியான நீ யினிக் குழவியைப் பெறுவதற்கிச்சையாயிருப்பது வெட்கைக்கிடமல்லவோ வென.

அதற்குக் குணபாயி - நாணமடைந்து மறுத்துப் பேசுவதற்கிடைந்து - நாடோறும்போவதுபோல் ஆலயத்திற்குச்சென்று - பகவான்முன்னின்று-ஓ-பாண்டுரங்கா ஸ்ரீரங்கா என்கனவில்வந்த - அந்தணர் நீரோ-மறந்தியாரோ - யாராயிருந்தபோதைக்கும்-எனக்குற்ற பிள்ளைகலியை - இதுதினந்தீர்த்தருளவேண்டுமென் றிரந்திக் கவர்ந்துதித்துப் பகவான்திருத்தாட்களை மனதிற் பதித்து மைந்தனாசை திருமென்றுமதித்துச் சந்தோஷத்தோடாற் குதித்து வீட்டில்வந்திருந்தாள் நாம்தேவட்டியென்பவர் - அதிகாலையில் நாடோறும் போவதுபோல் ஸ்நானஞ்செய்யச் - சந்திரபாகாநதியை நோக்கிப்போகையில் பகவானுர் விருத்தப்பிராமணராயவரருகிற் சென்று ஐயாநாம்தேவட்டியாரே உமக்கினறையதினம் மைந்தன்பிறந்தானென்று கேட்டார். அது கேட்ட நாம்தேவட்டி நகைத்துத் திகைத்து ஓ நமதுமனைவி நம்முடன் இராத்திரி பேசியமொழிகளை இவர்கேட்டிருந்ததுபோற் றோன்றுகின்றது நாமும் நம்மனைவியும் விருத்தாப்பியமேவிட்டும் குழந்தையாசையாற் குளறி

ப்பேசினேமே - இவருக் குத்தரஞ்சொல்லக் கூசினே மேயென்று யோசித்துக்கொண்டிருந்தார்.

அப்போது மாயாமறையோன் தாம்ஸெட்டியின் காதைப்பிடித்துக்கொண்டு ஐயா அரிபக்தரே நான் சொன்ன வார்த்தையுமக்குக் கேட்கவில்லையோ உமது காதுசெவிடோ இப்படிக் காதுசெவிடான கரைத்தவிழவனுக்கும் - பிள்ளையாசை கொள்ளையாயிருக்கின்றது கேட்டார்களோ ஜனங்களேயென்று பலருங்கேட்கப பலதரமூரக்கக் கூவிச் சொல்லத்தொடங்கினர் அதனல் தாமஸெட்டி கோபித்துக் கையைத்திமிறிப் பிடுங்கிக்கொண்டு அந்தணரைநோக்கி ஏனையா பரியாசஞ்செய்கின்றீர் தள்ளாத கிழவனுகிய வெனக்குப் பிள்ளையென்னவிருக்குமா உமது வேலையைப் பார்த்துக்கொண்டு போகாமல் பிரயோசனமில்லா மொழிகளைப் பேசுகின்றீர் விணுபேசுகின்றீர் சுமக்குத் தனதகாரியமென.

விப்பிரர் - ஓ - ஐயா பகவத்பக்தரே பிறரியாக் கூப்பதோ - உண்மையா யிப்போதுதான் மகனையின்று நான்பார்த்தேயறிந்தேன் - உன்னைச்சொன்னல வெள்ளறிவனெல்லன்று விருமாவெனப்பதுபோல - நிச்சயத்தைச்சொன்னல் குச்சிதங்கொள்ளுகிறீர் துஷ்டவார்த்தைகள் கின்னுகிறீர் எனவாக்கியத்தைப் பரிசோதிக்கவ் சீக்கிரம் வீட்டுக்குவாரும்-புத்திரனைப் பாரும் - பத்திரமாய்க்காரும் எனக்கு தட்சிணைதாரும் என்று பிறகுமவர் கையைப்பிடித்திழுக்கத் தொடங்கினர்.

தாம்ஸெட்டி முனிவுடன் சிராமரையா வெருகேரமாக என்னைமறித்து வருத்துகின்றீர் - பொய்மொழிபுகன்றீர் - பருவகாலங்கடந்த விருத்தைகர்ப்பமெப்படி யுறுவாள் சுதனை யெப்படிப்பெறுவாள் மூத்தோன் - குமரனைப்பெற்றதை யாராவ திவ்வுலகில் பார்த்ததுண்டா கேள்விப்பட்டதுண்டா ஒருநாளுமதிழுகையில்லா நிப்படி ஏனனஞ்செய்பலாமா மோடனம்பண்ணலாமாவென,

மாயாமறையோன்-ஓ-ஓ-என்னே நீர் நாடோறும் பார்த்துக்கொண்டிருந்தும்-கங்கனைச்சேர்த்துக்கொண்டிருந்தும்-இன்றைக்குத்தான் நூதனமாயறிந்தவர்போல் நீர்யாரென்று கேட்கின்றீர் நெடுகொன் மீனேகத்தை மீட்கின்றீர்-ஓ-ஓ-காதுசெவிடானதுங் கண்ணுங்குருடோ - அல்லது முருடோ - இப்படி கண்கெட்ட குருடனுக்குங் காயொசையிருக்கலாமா சுதன் வாஞ்சையைப் பெருக்கலாமாவென்றுரைக்கத் தாம்ஸெட்டி அந்தணரையுற்றுநோக்கிச் சாந்தத்தைநீக்கி-ஏனையாகுருடன்திருடன்-முருடன்-காடன - என் றேசுகிறீர்-பேசாதெல்லாம் பேசுகிறீர் - அப்படி என்பெண்சாதி பிள்ளையைப்பெற்றதும் நீரிப்படிப்பேசக்கூடுமோ பேசியேசக்கூடுமோ வெகுநேரமாக விடவார்த்தைகள் கூடாதென்று சொல்லிக்கொண்டு - குடுகுடு திடுதிடுவென் றங்குமிக்குமா யுலாவிக்கொண்டு - பலர்முன் என்னைத்தூற்றுகிறீர் ஏமாற்றுகிறீர் இச்சகம்பேசிப் பிட்சையெடுத்துண்ணும் அச்சகுணத்தைக்காட்டாமல் வச்சையெய்வதுவிட்டு - இட்சணமே யும்மிடஞ்சேருமென்று கடுகடுத்துரைத்தனர்.

வேதியரென்னைப் போமென்றிசைத்த தாம ஸெட்டியாரே - நீர் நாடோறுக்கப்பாமல என் குட்டியிறைபப் பிட்சையிலேதும் நிச்சயமே-இனிமேலுன்றனசொத்தைமைந்தன் என்றனுக்குப் பிச்சையிடுவதும் நிச்சயமே ஓ-உத்திதனே பிறந்தமைந்தனுக் கென்ன நாமகரணமிடப்போகிறீர் பெயரிடும்போ தென்னை மறந்துவிடப் போகிறீர் வேளுரநதனைத்தொடப்போகிறீர்-தொட்டுத்தூக்கப்படப்போகிறீர் தூக்கப்பட்டுக் கடப்போகிறீர் ஜாக்கிரதை ஜாக்கிரதையென்றுசொல்ல, தாமஸெட்டி இதென்ன சனியனாயிருக்கின்றது - பேயிச பிராமணப் பேய் பிரம்மராட்சசப்பேயென் றனைபதுபோல அதிகாலையிலிருந்து கூடவேதொடர்ந்தார் - சூழ்ந்த கொடியைப்போலப்படர்ந்தார் ஸ்நானஞ்செய்யப் போகாமலடர்ந்தார்-என்று-தாமறுன்னவர்க்குக் கோப மதிகமென்றுரைப்பதுபோலஸ்வாமியென்று பூஷித்ததுபோய் காயேபேயேயென்று தூஷிக்கத்தொடங்கினர்,

வேஷதாரிவேதியன் துவேஷங்கொண்டது போல தாம்ஸெட்டியின் மார்புடன் தன்மார்பகத்தைச் சேர்த்துக் - குடுமையைப்பிடித்திழுத்து - மீசையைமுறுக்கிக் கோபத்தைப்பெருக்கி - அடா கசதையினுள்ள சூதிரக்களைக்-காலையிலிருந்து மாலையாகும் தைக்குங்கடபயா அறிவில்லாமடையா - நான் சுபத்தைச்சொல்லவந்தால் விபத்தென்று நினைத்து - மென்மேலுங்கனைத்து சாந்தமே வேதாந்தமென்று வாசித்ததுபோய் - பிராமணேமமதேவதாவென்று விசுவாசித்ததுபோய்ப் பூஷிப்பதைவிட்டு - வாயில்வந்தபடி-தூஷிக்கிறாயா அந்தண புகழும் - சந்திரன்தவழும் இந்தச் சந்நிதியாகநதியுதய உனக்கு மைந்தனுசை எந்தநேரமுமில்லையா பாசபந்தனே சொல்லடாவென்று தாம்ஸெட்டியின் கன்னத்திலறைந்து - மிகவுமிறைந்து பேசத்தொடங்கினர்.



தாம்ஸெட்டி - இதென்னகர்மம் - நாம் சங்கடமாயிருக்கின்றது - பிரமிக்கும்படி நமது மர்மமெல்லாம் நாதுபோறிய மேலுமேலும் பேசுகின்றான் ஒண்டியாயிருந்தால்-கண்டகோரியால் கண்டங்கண்டமாகக்-துண்டந்துண்டமாகக் - கண்டித்துவிடுவேன் - சூரியோதயமாய் வெகுநேரமாய்விட்டது - பகவானுக்கு நைவேத்தியஞ்செய்யத் தடங்கலாய்விட்டது - நன்மையின்மையுங்கெட்டது-இப்பிராமணனாகாத்திய மிகவுங்கெட்டது என்று-கோபங்குதித்து மிகவுங்கொதித்துப்-பற்களைநறநறெனக்கடித்து - அதரத்தை மடித்து - உதிரம்புறப்படக்கடித்து - மிகவுந்துடித்து-சனமொழிகளைப் படித்து மாக்கினையை ஒடித்து - வோங்கி வோடிவாங்கப்போனர். கபடநாடகமாடும் ஐயன் ஓ-ஜனங்களே-எனக்குறிய இனங்களே - இந்தவிருத்தன் மிகவும் பருத்த மரத்தின் கிளையைமுறித்து - நான்வருந்தமுற அடித்தானே பார்த்தீர்களா பார்த்தீர்களா வெனக் கூக்குரலிட்டுக் கோபமேலிட்டுத் தாம்ஸெட்டியைக் கீழேதள்ளி - நகங்களாற் கிள்ளி - மேனமேலுங் குத்தத்தொடங்கினர்

தாம்ஸெட்டி - அதிககோபதிப்தருய - மீசைகள் படபடென்று துடிக்கக் - கண்களில் நெருப்புப்பொறிகள்பறக்க - மகாவுக்ரங்கொண்டு - வேதியர் - முகத்திலும் - மார்பகத்திலும்-கைமுஷ்டியிற்குத்தி அவ்விருத்தப்பிராமணரைக் கீழேதள்ளி வெற்றியடையவேண்டுமென்கிற எண்ணத்தால் - தன்பலங்கொண்டமட்டும் போர்செய்துபுரட்டபார்த்தும் - தன்னுலாகாமல் பற்களாற்கடித்து-நகங்களாற்கீறித்-தட்டுக்கெட்டுத்தடுமாறி மிகவும் வோறி மெதுவாகத் தப்பித்துக்கொண்டு ஆற்றின்பக்கமா வோடத்தொடங்கினர்.

மாயாவிலாசன் தாம்ஸெட்டியை விடாமற்றொடர்ந்து பிடிக்கழுத்தைப்பிடித்து நெட்டிக்கொண்டே தலையிற் குட்டிக்கொண்டே ஆற்றிற குப்புறவிழும்படியதட்டிக்கொண்டே - வாயில்வந்தபடி திட்டிக்கொண்டே வந்தனர்,

தாம்ஸெட்டி - நதியில - தலைகீழாய்விழுந்து-திக்குமுக்கிட்டு சோர்ந்து-துக்காக்கினியில்வெந்து இன்று நமக்குப் பொல்லாக்காலமாதலால் - இந்த முரட்டுப் பிராமணன் நம்மைத் தரையிற்புரட்டித் தன்பலங்கொண்டமட்டு மடித்துவிட்டான் - வைராக்கியத்தை முடித்துவிட்டான்-வல்லடி வழக்கு சொல்லடிமாயி யென்றபடியின்று பித்தனிடங் கஷ்டப்பட்டோம் - நதியிலிறங்கிவந்து தொந்தரைசெய்தாலுஞ் செய்வானென்று தூரமாகச் சென்று - அந்தணனுக்குப் புலப்படாமல் நின்று அதிசீக்கிரமாய் ஸ்நானஞ்செய்யத் தொடங்கினர்.

அப்போது - பகவான் - தாம்ஸெட்டி யடைந்த வேதனையைத்தீர்க்கவும்-மைந்தன் வாஞ்சையைப்போக்கவும் உத்தவரைநினைத்தார், உடனே உத்தவர்-பாமபதத்தைவிட்டுப் - பகவான் பக்கலடைந்து - பற்பலவிதங்களாகத் துதித்து-என்னையழைப்பித்த காரணமேதோ திருவாய்மலர்ந்தருளும் ஸ்வாமியென்று வணங்கினின்றார்,

பகவான் - உத்தவரைநோக்கி - ஓ - உத்தவனே இதோ நமக்குநேரே - அதோ ஸ்நானஞ்செய்யும் - உத்மர் - தன் வீட்டுக்குப்போவதற்குள்-அவருடைய சதியின் கற்பத்திறந்து - ரிஷியின் டத்தைப்போல இவ்வுலகினுள்ளோ ரியாவரும் - ஆச்சரியப்படும்படியாய்ப் பிறந்து - மாந்தர்களுக் கென்பக்திப் பிரதாபத்தைவிரித்துரைப்பாயாகவென்று திருவாய் மலர்ந்தருளினர்.

அவ் வாக்கியத்தைக்கேட்ட உத்தவர் திடுக்கிட்டு ஓ-என்னுடையனே உனது பரிபூரண கடாட்சம்பெற்ற அடியேனை - நரகத்தையடையச் செய்யலாமோ உதராக்கினி - காமாக்கினி - கோபாக்கினியென்னும் திரியாக்கினியும் - புகைத்தெரிந்து - மலம்-ஜலம் - வழும்பு முதலானவைகளுஞ் சேர்ந்து புழுக்கள் நெளிந்து-துர்க்கந்தமான - சரோணிதம் - வழிந்து மசகைக்கொழுவாற்றழைந்து - இருக்கும்-கர்ப்பக்குழியையன்றி-வேறுநரகமொன்றுண்டோ ஜன்மமில்லா மலிருப்பதன்றி வேறுமோட்சமொன்றுண்டோ கருப்பைக்குள் கட்டுப்பட்டுப்பெருமூச்செறிவதும் நெருக்கதழியில் தலைகீழாய்த்தள்ளாடிக்கொண்டுவருவதும்-பிரசூதவாயுவேகத்தை செப்ய அயர்ந்துழுவதும் - மாயையென்னும் நீரில் மூழ்கியிருப்பதும் - சொல்லக்கூடாத துன்பமல்லவோ [illegible] பமே நரகமல்லவோ தேவரீருக்கு அடியேன் விரித்துச்சொல்லவோ எமதண்டனையும்-நரகக்குழியும்-கர்ப்பத்திலிருப்பதேயன்றி வேறேயெவ்விடத்திலாவது-எமதண்டனையும் - நரகக்குழியுமிருக்கின்றதோ ஓ-ஈசனே யவேமே மோட்சமடைந்த நான் - நரகத்தையடைந்து தாட்டுபடையலாகுமோ அடியேன்-நரகமடைய மனந்தாம் தேவரீர் கிருபைசெய்திருக்கின்றதோ இப்படி - அதிக கம்பிக்கைபோய்மிருந்த என்னைப் பாழ்நரகில் தள்ளலாமோ அடியேன்துன்பங்கொள்ளலாமோ நாகலோகமே

ன்பது - இக்கலோகமன்றி-வைகுண்டமேவென்றுரைத்தருளும்.

உத்தவரைப் பகவான் கருணையுடன்பார்த்து மார்புடன்சேர்த்து-ஓ-எனதன்பனே - உன்னைப்போன்றவர்களாலேயே - என்னுடைய திருநாமத்தின் மகிமை இவ்வுலகில் விளங்குமன்றி - மற்றவர்களால் முடியாதாதலால் சிக்கிரம் குழந்தையாகித் தாம்சேட்டியின்வீட்டுக்குச்செல்லுமென்றதைய, உத்தவர்-ஓ-ஸ்வாமி உமதாக்கினைப்படியே யானுஞ்செய்து - ஜலத்தில் மிதந்துக்கொண்டுபோய்த்-தாம்சேட்டிக்குத்தனயனாகின்றேன் - ஆனால் அடியேனிப்போது எடுக்கும் ஆக்கையைவிட்டும்-பரமபதத்தையடையும்பரியந்தம் - உமது பக்தி நிறைந்திருக்கவேண்டும் என்னுடன்கூடித் தேவரீர் காலமுழுமையு மிருக்கவேண்டும் தரிக்கும் - அநுகாம லிருக்கவேண்டும் நான் இளைத்தபோதெல்லா முமது காட்சிகொடுக்கவேண்டும், தாழ்ச்சி தவிர்க்கவேண்டும் - என்கிற வாக்கேட்டுக்கொண்டார்.

பகவான்-ஓ-உத்தவா-நீ கேட்ட வாக்களெல்லாக் கொடுத்தன்றி - உனக்குத் தோழனாகவும் - பணியாளாகவு மிருக்கிறேன் - சீக்கிரம் குழந்தையுருவாகிப் போவென்று - திருவாய்மலர்ந்தார். உத்தவர்-மகாபாக்கியமென்று - அழகுள்ள குழவியாய் ஓர் பெண்டகப்பெட்டியிலமர்ந்து சந்திரபாகாநதியில் மிதந்துக்கொண்டே-காகாவென்கிற சப்தத்துடன் அழுதுக்கொண்டே-தாம்சேட்டியினருகில்வந்தார். தாம்சேட்டி குழந்தையைக்கண்டதே கொப்பென்றெழுந்து வாரியெடுத்து-மார்புடனணைத்துச்-செப்புதற்கரிய ஒப்பிலாமணியாகிய என்னப்பனே இச்சலத்தில் எப்படி மிதந்துவந்தாய் எனக்கேதுன்னிடசேவைதந்தாய் - என் றமமகனை எடுத்துக்கொண்டு - தன்வீட்டைநோக்கி ஓடத்தொடங்கினர், அப்போது - பகவான் தாமசேட்டியின் பின்தொடர்ந்தோடி - அடாதிருடா - அடா குருடா குழந்[illegible] எனதுடா - நீ விபரீதத்தைமென்னுடன்செய்ததில் வின்வாதடாவாதடா-என்பக்தி மிகவுஞ்சூடா குடா - குழந்தையையெங்கேகொண்டுபோகிறாயோதடா ஓதடா - அப்பா இவ்வளவு அதிசயமாயோடுதற்குனக்கெங்கிருந்து வந்ததுபலம் - இக்குழவிக்காகத்தானே வெகுநாளாக் கோயிலே வந்தாய்வலம் - இச்சத்தனுனுனக்கென்னடா வரும் நலம் - இம்மதலையாற்றுனே ஈட்டமுமுன்குலம் - மகபேறில்லாமையாற்றுனே யடைந்திருந்தாய் சஞ்சலம் என் றுரைத்துக்கொண்டே காற்றைப்போல் - அதிவேகமாயோடும் - தாம்சேட்டியின் முன்னோடிமறித்து - அடாதையப்படாரா - இச்சதன் யார்பெற்றபாலன் - எவர்பெற்றசிலன் - என்ன திருவிளையாடல் செய்யவந்தகோலன் - எப்போர்க்குமெத்தவர்க்கனுகூலன் குழந்தையைத்தாரும் பார்ப்போமென்று - பலவந்தமாகப்பிடிக்கத்தொடங்கினர்.

பகவானுடைய மாயையா லக்குழவியின்மேலதிக ஆவல்கொண்ட தாம்சேட்டிக்குத்-தாபமும்கோபமும் சோபமும் - லோபமும்மேலிட்டு அப்பிராமணனோத்தமருடன் வாதாடப் பின்னிட்டு ஓ-ஸ்வாமி நீர் மேலானவருண்டு - ஆதலாற்செய்கிறேன்சரணம்-ஓடி வருவதால் சோருமுமதுசரணம் - இப்போதென்னை மடக்காதந்நுணம் - மறிக்காதுமக்குவரும்மரணம் - நீ எனக்கோர் திரணம்-சாக்ஷமாய்வந்தாற் றருவேனேனாபரணம் ஆதலாலென்னைத் தடைசெய்யாதீர் செய்யாதீர்-வாயில வந்தபடி வையாதீர்வையாதீர் - என் றுரைத்துக்கொண்டே குழந்தையைக் கொடுக்காமல் - அங்கு மிங்குமாயோடத்தொடங்கினர்.

* மாயாப்பிராமணர் - தாம்சேட்டியின் மடியைப்பிடித்திழுத்துக்கொண்டு - அசையாமல்நிறுத்தி-மிகவும்வருத்தி அடா தாம்சேட்டி குழந்தையேதுசொல்லு - இடமறிந்[illegible]இல்லு-என்செய்கிறாய்மல்லு நீயெனக்கோர்புல்லு [illegible]க்க ஒருவாரடிச்சொல்லு - உனக்கென்னோடுகடக்கின்றாய்பல்லு கோபத்தாலென்னைக் கொன்றாலுங்கொல்லு-இத்தர்ப்பையே உன்னைக்கொல்லுமல்லது உன்னைப்புடைக்க என்காருக்குமேயே பெரியகல்லு - உன்பலமுதக் கிதமும் பகர்கென்று இப்பாலனுக்காகவா நாடோறு மல்லும்பகலும் - பண்டரிநாதனுக்கு [illegible]தவேதியஞ்செய்துக்கொண்டுவந்தாய்-அடா மோட்ச[illegible]த்தின் குட்சமான மார்க்கமறியாமூர்க்கனாயே - அவிவே[illegible]ப்பேயே - உனக்குமவரயேனென்று தான்முனைகை [illegible] காரவெனக் கூக்குரலிட்டமுத தாம்சேட்டி பயந்தொழு - அவர்மீதிருக்கும் பேரன்பால் மார்புடன் மார்பைச்சேர்த்துப் - பலதிக்குகளி லீர்த்து - அங்கம்[illegible]யர்த்துந் - தாம்சேட்டி தோர்ந்துபோகும்படியாயு மனங்கொதித்து வேகும்படியாயும்-பகவானுக்குமுறையிட்டு நோகும்படியாயும - சின்னுமினை யாகும்படியாயும்-குடுமியைப்பிடித்துப் - பலமாயிழுத்து-முழங்கைகளாலிடித்து - வீட்டுக்குப்போகாமற் றடுத்தார்-வியாகுச்சலத்தைத்தந்தார். அதனால் தாம்சேட்டிக்குங்கோபமதிகமுண்டு - பெருமூச்சுகள்வாங்கிச் - சண்டைசெய்யப் பின்தாங்கி-என்ன செய்யலாமென்றேங்கி-கைகால்களை அடிக்கடியுதறி - அங்கமெல்லாம்பதறி-வாய்



தமொழுக்கதறி - அந்தணர்முகத்தி லெச்சிலைநகறிவிழும்படியாய்ப்பேசி - மிகவும்பேசி - அடாலச்சைகெட்டப் பிச்சையெடுத் துழலும் பேயனே - துர்மொழிகள் பேசும் வாயனே-கலியாணப்பந்தலில் காடியைவிட்டோட்டினதுபோலவும் - யானைமிழலைப்பார்க்கத் தவளைகலக்கினதுபோலவும் - எனக் கிம்சைதரவந்தாய் - வாதாடினொந்தாய் - என்று அவதிகளைப் பின்னும் சந்தோஷமாய்விட்டுக்குவாரும் என்னவேண்டுமோ கேளும்-கேளினதெரிப்பேன் பாரும் கொடுக்காவிட்டால் செய்வீர்தாகுமாறும் வறக்காடியதுபோறும்-சற்றே நொமைகூறும் என்கிறமொழிகளால் பூஜிக்கும்போது - மாயாப்பிராமணன்-அடாபோடா குடிகேடா முழுமுடா வலவேடா எனக்குத் தேவையான இக்குழந்தையே வாக்குக்கொடுத்தபடியா லிக்குழவியை யிழந்ததையேயென்று கதனைக்கொடுக்கும்படி வம்புக்குகின்று - மெய்யன் வீதிட்டமுதத் தாம்சேட்டியைப் பிழைதன்னிப் பாபாவென்று பலபக்கங்களி லிழுக்கத் தொடங்கினர்,

தாம்சேட்டி-தனயனுக்குக் காயம்படாமல் மார்பில் சேர்த்துக்கொண்டு - இதுவென்ன கோரமென்று விண்டு - சோகம்பிடித்து - மிகவும்நொந்து-தனதிஷ்டதெய்வமாகியபண்டரிநாதனை நினைந்து கண்ணீர்சொரிந்து - ஓ பண்டரிநாதா அண்டர்கள்நாதா தொண்டர்கள்காதா - புண்டரீகபாதா - பாண்டவர்தூதா ருக்மணீமேதா - லீலாவினோதா வேதாதிதா ஓ-மதுசூதா-தானுமதிடம் குசேலனைப்போல் பார்வைபும்-விபீஷணனைப்போல் சிரஞ்சீவித்தன்மையும் - அநுமாரைப்போல் பிரமபட்டமும் துருவனைப்போ லழியாப்பதமும் அர்ச்சுனனைப்போல் படைத்துணையும் - பிரகலாதனைப்போலநரசிங்கனையும்குசுமாங்கதனைப்போல வைகுந்த்துப்பிரவேசமும் அம்பரீஷனைப்போல் பக்தவத்சல[illegible]வும் தேவர்களைப்போல அமிர்தத்தையும்-விதுரனைப்போல் தன்னுடன் விருந்துண்ணவும் பாமகிலேனையைப்போல் பிரமத்தியையீக்கவும் - பூர்வஜினைப்போல்மானபங்கத்தைக்காக்கவும் - இலட்சுமியைப்போலுமது வட்சஸ்தலத்திற் சேர்க்கவும் நாரதரைப்போ லுமது [illegible]டியவர்களையும் இந்திரனைப்போல் பதாபிராம்மநோடு போர்செய்யவும்-முசுகுந்தனைப்போல் நீண்ட ஆயுளையும் வாலியைப்போல யுத்தஞ்செய்யச்சமார்த்தியமும் உத்தவரைப்போல பேரின்பத்தையும் - குசேலனைப்போல் சிற்றின்பத்தையும் - அநுசூயையைப்போல் தவக்கும புத்திரனாகவும் தேவகியைப்போலப் பிரமக்ஞானம் போதிக்கவும் - துர்வாசரைப்போல் கடினபணிவிடைக்காரனாகவும் - துரோபதையைப்போல் பல வஸ்திரங்கள்தரவும் சுக்ரீவனைப்போல் முதலையைச் சம்ஹாரஞ்செய்யவும்-உமதிடம் நானிச்சிக்கவில்லையே - நானிச்சித்த குழந்தையைத்தானே ஓ-எம்பெருமானே - தந்தையின்மடியை யிச்சித்த தனுகூலப்படாத துருவனுக்கழியாப் பதமளித்தபகவானே முழுவுலகையாண்டிருந்த மாபலிக்கு மோட்சவுலகையளித்த பகவானே ஐசுவரியத்தைக்கோரிய குசேலனுக் கடிமையாய்ப்போக என்னைக்கொண்ட அச்சுதனே - எச்சிலைக்கொடுத்த சபரிக்குச்சொச்சமான மோட்சங்கொடுத்த உச்சிதனே பத்மநாபா - பரமசொரூபா-பார்த்தமா-திராமபா பேசுவர ஜகதீசுவர பரிபூரண சர்வகாரண வெங்கடரமண சங்கடஹரண சகஸ்ரநாமாலங்காரமா ஓ பகவான் [illegible] தெய்வமேயென்று தோத்திரஞ்செய்ததைதுபோது பக்தவச்சலனாகிய பகவான் தாமசேட்டிசெய்யுந் தோத்திரத்தினால் தனக் காத்திரமடங்கி ஆனந்தமேலிட்டு அவனைக்கெட்டிச் சிருங்கார போ லகைவந்து நின்றிருந்தார். அத்தருணத்தில் தாமசேட்டி- தான் முன்னையேந்திக்கொண்டுவந்தப்பிட்டத்திறப்பிம்படியாய்-அதிகபாரப்போய் தவிட்டை நோக்கிறத்தொடங்கினர் உடனே பகவான்-கண்களைத்திறந்து- தாம்சேட்டியைக்கண்டு பதறுதாயனேட்டிதன்வீட்டின்முழுமை கருணைகில்லாதுப்போய்மதித்துக்கொக்கரித்து-வாயிலில்நின்று வீட்டிக்குட் போ[illegible]மல்வருந்தி-மென்னியைப்பிடித்திழுத்து-[illegible] பிள்ளையைப்பிடுங்கிக்கொண்டு-அடாசனமே [illegible] தவஞ்செய்துபெற்றபாலனைக் கதிர்வடிவேலனை-கேட்டு[illegible]கொண்டு வந்தாய்-எனக்கெனிடத்தாய்-[illegible] மக்களைவிபுடிப்பிடிவாக்களாயிற்றே உன்தனுக்குக்குழந்தையேது-செய்யவேண்டாம்வீணவாது என்றோசைசெய்யப்போசத் தொடங்கினர்.

அப்போது குறுபாயிவெளியில்வந்து-சகலமும்மணாளுற் கேட்டறிந்து-அந்தணர்மேற்-சீறிவிழுந்து-இதுகலை அநுமவிகடமென்றுரைத்து-ஓ அந்தணரே-அதவாசினன் தேசாப்பனத்தில்வர்துரைத்தவண்ணமன்றுருக்கப்பட்ட மதலையை- யார்வாங்கிக்கொள்ளுதேவனா விருத்தனைப்பிடித்துத்தன்னுதேவனென் னுடையகைகொண்டுவின்றுருவன்-போபோமேலிட்டுத் துன்றுகிறவன்என்று-இவன் சிறுமுவும் விடாமலடுக்கத் தொடங்கினள்.

அதற்கு மாயாமறையோன் ஓ பெண்பிள்ளையே உனடக்கிறேன் பாருன்பங்கே யிக்கணமே நினைத்த விதந்தையானயின்-உனதுதேன் மகவாசை-வீட்டிலுட்

பேர பசாசேயென்று வாயில்வந்தபடி பேசத்தொடங்
கினர். அதுகேட்ட குணபாயி - அடாலச்சைகெட்டுப்
பிச்சைடுத்துக் குட்டியை சிறப்பும் துச்சகுணத்தை
யாகாட்டினாய் வின்ஜம்பத்தையாநீட்டினாய்-ஐயையோ
என்குழந்தை பசியால் பதறுகிறது குளிரானதறுகிற
து உன் போராட்டத்தாற் கதறுகிறது - வாதுசெய்யநீ
யெங்கிருந்துவந்தாய் - எங்களுக்கேனிடர்தந்தாய் எங்
கள்சாபத்தாலென்வெந்தாய் ஓ பேடிவந்தேன் நொந்
தாயென்று இரைச்சலிட்டுப் பேசும்போது வழியிற்
போகும் பலருங்கூடி வழக்கைத்தீர்க்கமாட்டாமல்வாடி
பாயாமறைபோனுடன்வாதாடி-இவர் பேசுவதும் நம
க்குத்தெரியாமோடியென்று தங்கடங்களதுவலை நாடி
பின்னிடைந்தார்கள் அப்போது பார்த்பான் குணபாயி
ன் பாபங்களெல்லாம் பஸ்பமாய்ப்பரிசுத்தமாகும்பொ
ருட்டு எட்டியுதைத்து தாம்சேட்டியைக் கைமுஷ்டியி
ற் சிதைத்துத் தனது திருக்கோயிலை நோக்கி வோடத்
தொடங்கினர், சதிபதிகள் - கூடவே தொடர்ந்தோடி
ஆலயத்தின் சந்நிதானத்தில் எங்கள்குழந்தை வுங்கள்
குழந்தையென்றுபோராடும்போது-மாயாவிலாசனும்ப
ண்டரிநாதன்-காண்மூளையைக்கசக்கி முற்பிறப்பின்நில
மையையும் பிரமஞான நிலையையும் மறக்கும்படியா
ய்ப் பூமியில் தொப்பென்றுபோட்டு மாயமாய் மறைந்
தார் உடனே - குணபாயி காகாவென்று - கூக்குரலிட்
டழும் மகவைவாரியெடுத்து - ஸ்தன்னியத்தைக்கொ
டுத்துத் தன்னை மறந்துநின்றாள் உடனே பகவ[ன]ரு
ளால் குணபாயின் கொங்கைகளில் -பால்பெரு[கி]வழி
ந்தது - அதனால் சதிபதிகளிருவரும் தாங்கள் பெற்ற த
னயனைப்போல மோகித்து வீட்டிற்சென்று நிவடிதா
ங்கினதெனப்புகன்று - சீராட்டி ஆலங்கா[ரம்]டி பக்தர்க
ளுக்குமேட்டி - இவனென்று பாராட்டிப் பாலூட்டித்
திலகம் நெற்றியிற்றீட்டிப் பல ஆபரணங்களையுஞ்சூட்
டி வைய குலத்தை விழக்காட்டிப்-பாலன்றருதில்மனதை
காட்டி - வேறுவினைவுகளைவோட்டி விருத்திக்கதவுகளை
ப்பூட்டித் - தையற்காரனுகிய தாம்ஸேட்டி - லோபக்
குணத்தைவாட்டிக்-கேட்போருக்கு கிடைத்த காத்தை
நீட்டிக் - காண்மூளையை யருமையாகக் காப்பாற்றிப் ப
ண்டரிநாதனைப் போற்றுக் கடவுளை காதலனைத் தந்தா
ரென் றெங்குந்தூற்றித் - தன்னாமையென்பதைமாற்
றிப் பக்துவர்க்கங்களைக்கூப்பிட்டுப் - பட்சத்துடன்வி
ருந்திட்டு - மறைபவரைக்கும்பிட்டு - மதலைக்கு நாம
தேவென்று பேரிட்டு - அருமையாகவளர்த்து - ஆனந்
தமாய்க்களித்து - அதிதிகட்கனேகத் திரவியமளித்து
அருங்கொழுந்துபோற் றளிர்த்து-அகமும் பலர்ந்து-இ
ன்புற்றிருந்தார்கள்.

கேட்டீர்களோ சித்தர்களேயென்று நாபாஜி சித்
தர் பின்னுஞ் சொல்லத் தொடங்கினர்.

உற்பத்தி அத்தியாயம்

முற்றிற்று.

## உ - வது - நாமதேவர் பகவானுக்
## கன்னமூட்டிய
## அத்தியாயம்.

வாருங்கள் விநோதமான கதையை மனோகரமா
க் கேட்கும் மஹாநுபாவர்களே ஸ்திரமான ஜீவர்க
ளே இவ்வித அன்புடன் - சதிபதிகள் மனமொத்துத்
தனயனைப் பாதுகாக்கும்நாளில் நாம்தேவ் நான்காம்
வயதைக்கடந்து, ஐந்தாம்வயதை யடைந்து - பிள்ளை
களுடன் துள்ளி விளையாடிக்கொண்டிருக்கும் நாளில்
ஓர் நாள் - தன்மனைவியைநோக்கித் தாம்ஸேட்டிசொ
ல்லுகின்றார் ஓ பெண்ணே இன்றையதினம் நானொன்
அ[...]ஜனிருக்கு ஊருக்குப்போய் மாலைக்குமுன் வருகி
ன்றேன் - சீக்கிரம் - சகல பதார்த்தங்களையுஞ்செய்து
நமது மைந்தனிடங் கொடுத்தனுப்பிப்பண்டரிநாதனுக்
கு நைவேத்தியஞ்செய்து வரும்படித்திட்டஞ்செய்தனு
ப்புவாயென் றுரைத்து நாம் தேவைப்பார்த்து அப்பா
ஒப்பிலாமகனே இன்றுனது அழகானகைகளால் பாண்
டுரங்கனுக்குப் பூமாலைகளைச்சாத்திப் - பத்மநாபா-பரம
சொரூபா வென்றேத்தி - நைவேத்தியஞ்செய்து எங்க
ளுக்குற்ற பந்தபாசங்களைக்கொய்து பத்திரமாய் வீடு
வந்துசேர்ந்து-பின்பு விளையாடலாற் களிகூர்ந்து இரு
ப்பாயாக வென்றுரைத்துத் - தன் தம்பிரிநாக[...]
ரைநோக்கிப்போனார்.

பின்பு குணபாயி , நாடோறும்போல் பகவானுக்
கனுப்பும் வஸ்துக்களனைத்தையும்-ஓர் தட்டில்வைத்து
நாம் தேவுக்கு நீராட்டிப் - பூசூட்டிப் - பட்டுவஸ்திரம்
புனைந்து இத்தோன்றப் பாலசுப்பிரமண்யனேயெனறு
நினைந்து நைவேத்தியங்கொடுத்து அப்பா மகனே அழ
கானமுகனே - பண்டரிநாதனுடைய திவ்விய சந்நிதா
னத்துக்குப்போய் நைவேத்தியஞ்செய்து உன்தாதை
யோதினபடி-வழியிலெங்குந் தங்காமல் யாரையுந் தீண்
டாமல் பாண்டுரங்கா ஸ்ரீரங்காவென்னுந் திவ்விய திரு
நாமத்தைத் தியானஞ்செய்துக்கொண்டே பண்டரிநா
தனுடைய திவ்விய சந்நிதானத்துக்குப்போய் நைவே



த்தியஞ்செய்து அதிசீக்கிரமாய் வீட்டுக்கு வாருமப்பா
வென்றனுப்பினாள் நாம்தேவ் அதிகசந்தோஷித்தனாய்
நைவேத்தியத் தட்டையேந்திக்கொண்டு பாண்டுரங்கா
ஸ்ரீரங்காவென்று பஜனைசெய்துக்கொண்டு - வீதியில்வ
ந்து-அங்கு பந்தாடிக்கொண்டிருக்கும்-பாலரைக்கண்டு
ஆனந்தங்கொண்டு - அசைவற்றுநின்றார் பாலர் விளை
யாடும் பந்தானது தவறி நைவேத்[திய]தட்டின்மேல்விழு
ந்தது - அதனால் நாம்தேவ் பந்தாடும்பாலரை முனிவு
டன்நோக்கிச் சாந்தத்தைநீக்கி அடா துஷ்டப்பயல்க
ளேநைவேத்தியத்தட்டின்மேல்பந்தையெறிந்தீர்களே
தெய்வபக்தி யுங்களுக்கில்லையா மூடாத்மாக்களேயென்
றுவைதார். அம்மொழியைக்கேட்ட சிறுவர் - நாமதே
வைச் சூழ்ந்துக்கொண்டு அடாநாமா-சாப்பாட்டுராமா
கந்தைகளையும் - பொந்தைகளையும் - தைக்கும் தையற்
காரரும் - நைவேத்தியஞ்செய்வதுண்டோ - அடாபந்தி
யிற்சிறந்தகொண்டா - நைவேத்தியங்கொண்டுபோகு
முனக்கு விளையாட்டின்மேல் கியாபகமேன்-டீ குருதே
ரமா இவருகின்றதேன் - அசுத்தமில்லாமல் பரிசுத்தத்
தோடும் - ஒதுங்கிப்போயிருந்தால் பந்தேன்விழும்-என்
றுரைத்து - நைவேத்தியத்தைத் தீண்டிப் - பந்தையெ
டுத்துக்கொண்டார்கள் - அதனால் - நாம்தேவ் முனிவு
கொண்டு - தூஷண வார்த்தைகள் விண்டு - நைவேத்
திய மகுத்தமாகப் பந்தைப்போட்டதல்லாமல் தையற்
காரரும் நைவேத்தியஞ் செய்கிறார்களாவென்று விகட
வார்த்தையுரைத்தீர்கள்-பகவானுக்கு நைவேத்தியஞ்
செய்யாமனுஷனும் பசுவுக்கொப்பான-உங்களைப்போ
லெங்களையும் நினைத்துக்கொண்டீர்களோ வென்றறை
யச், சிறார் ஒருவரைப்பார்த் தொருவர் நகைத்து நாம
தேவைப்பகைத்து - அடாநாமா உன்னைப்போன்ற பக்
தர்கள் இவ்வூரிலியாருமில்லை - நீ பண்டரிநாதனை விட்
டொருநாளும் புசித்தவனல்லை - மொட்டைப்பையனு
ருந்தும் - வெகு கெட்டவனாயிருக்கின்றாய் எங்கள்
கைமுட்டியால் உன்தலை பிளக்கக் குட்டிவிடுவோம்-ப
ற்களைத்தட்டிவிடுவோம் சண்டைக்குவாடாவென்று-அ
ண்டத்தனஞ்செய்யத்தொடங்கினார்கள்.

நாமதேவ் - நைவேத்தியத்தட்டைத் தெருத் தி
ண்ணையில்வைத்து - அதிககோபதீப்தனாயெதிர்த்துபொ
ரித்து - சண்டைசெய்பவன் யாரடா வென்று - பலர்கூ
டத்தில்புகுந்து - முனிவுமிருந்து - அடித்தும்இடித்தும்
குத்தியும் எத்தியும் - மிதித்தும் குதித்தும் - தட்டியும்
முட்டியும் - விழுந்தும் எழுந்தும் - பன்னியும் - தோள்
களைத்தட்டியும் - கொக்கரித் ததட்டியும் - யானைத்திர
ளிற பிரவேசித்த சிங்கக்குட்டியைப்போல் - சிறார்முறி
ந்தோட யுத்தஞ்செய்தார். அதுதெரிந்த குணபாயிவெ
குண்டு நாமதேவிடஞ்சென்று - அடா நாம்தேவ் - பக
வானுக்கு நைவேத்தியஞ்செய்துவரச்சொன்னால்-தெரு
த்திண்ணையில் தட்டைவைத்துப் போர்செய்துக்கொண்
டாயிருக்கின்றாய் - இனி அந்த நைவேத்தியம் பகவானு
க்கேறுமா அனேகநாளாச் செய்துவந்த விரதத்தைக்
கெடுத்தாயே - எங்கள் வாக்கைத் தடுத்தாயே - துன்ப
த்தைக்கெடுத்தாயே - ஆசாரத்தைவிடுத்தாயே - வீண்
சண்டைதொடுத்தாயே-என்னைப்பார்த்தேகட்டையெ
டுத்தயே - அடா நாயே- அறிவில்லாப்பேயே - என்று
ரைத்துக்கொண்டே-சமீபத்தில்வரும் முன் நாம்தேவ்
பயந்து - இதோ நைவேத்தியஞ் செய்துவருகிறேனெ
ன்று - சந்நிதானத்தைநோக்கி ஓடும்போது குணபாயி
அடாதுஷ்டா - அடாபிரஷ்டா - பலால் தீண்டப்பட்
ட நைவேத்தியத்தையா பகவானிடங் கொண்டுபோகி
றாய் - வேண்டாம்வேண்டாமென்று - மறுக்கவுங்கேட்
காமல் அதிசீக்கிரமாய் ஆலயத்திற பிரவேசித்துச்-சந்த
னபுஷ்பங்களாற்பூசித்துப்-பாண்டுரங்கா-ஸ்ரீரங்காவென்
றுகோஷித்து - வினயமாய் விசுவாசித்து - பண்டபலா
திகளைப்படைத்து - முகநவ் காயையுடைத்துத் தூப
தீபங்களைக்காட்டிஎங்களிஷ்டதெய்வமாகிய பரமேட்டி
உமது வலதுகையை நீட்டி நைவேத்தியமுட்கொள்ளு
மென்று பாராட்டிப் பகவான் பதத்தில் மனதைநாட்டி
த் தன்கரத்தாலோர் பிடியனமெடுத்தூட்டி உண்ணு
[...]ண்ணனைப்பார்த்து இரண்டல் தங்களையுஞ் சேர்த்து
ஓ பா[...]ண்டுரங்கா இந்த நைவேத்தியம் சுத்தமாய் விட்ட
தன்றே [...] உண்ணுமலிருக்கின்றீர் வேறு நைவேத்தியத்
துக்குப்[...]ஆனால் என்தாயார் வாயிலவந்தபடி வைவாள்
சித்திரவ[...]தசெயவாள் ஆதலால் அடியேன்மீ தருட்கூ
ர்ந்து ஓர்பி[...]டயன்னமாவ தாட்கொள்ளவேண்டும் ஸ்வா
மீயென்று [...] பன்முறை கெஞ்சிக் கெஞ்சிக் கொஞ்சும
போது-

பக்[த]வச்சலனாகிய பகவான் சற்றும் அசையாதி
ருந்தார் [நா]ம்தேவ் விக்கிரகத்தின் காதருகிற் றன்வாயை
வைத்து ஓ பண்டரிநாதா பாண்டவர்தூதா நாவிலைச்
கும்மொ[ழி] கேட்கவில்லையோ உம்முடையகாதுசெவி
டோ ஓர்பிடி யன்னமுண்ணும்படி பலதரஞ் சொல்லச்
சொல்[லி] அசையாக் கல்லைப்போலிருக்கின்றீர் நீர் சகல
சாதியாருக்கும் பொதுவானவராயிற்றே யாரு கொண்டு
வந்தாலும் பேதமின்றிப் புசிக்கவேண்டுமென்றோ நீர்
உண்டாக்கின ஜீவர்களன்றி மற்றெந்த ஜீவர்களிந்த
நைவேத்தியத்தை தீண்டிக்கொண்டார்கள் உமக்குச்
சாதிபேதமுண்டா அதாவது சொல்லலாகாதா பேசவா

பிள்ளையா என்னால் வந்ததல்லவா - அல்லது நாங்
குசிநீர - வேளைதப்பிப்போய்விட்டதா புசித்து வயி
று நிறைந்துவிட்டதா - நைவேத்தியங்கெட்டதா என்
னைகள் கெட்டதா - உள்ளபடி. கள்ளமின்றிச் சொல்ல
லாகாதோ என்றுன் சாப்பிடலாகாதோ இவ்வளவு வன்
னம் போதாதோ நீர் நினைத்திருக்குந் தூதோ-செவ
ஸ்திர மொழிகள் பலவுரைத்துப் பகவானைசையாதிரு
க்கும்போது - இதென்னடா வருவதெல்லாம் வம்பா
யிருக்கின்றது - எனக்கோ மிகவும் பசியாயிருக்கின்றது
இந்தத் தெய்வமோ முட்டுத்தெய்வமாயிருக்கின்றது பெ
ன்று ஓ-ஸ்வாமி நீரென்றுன் ஜன்னமசிருக்கத் திரு
டனு - எனக்குக் கோபம் வந்தபின் உன்னை முருடனு
னைவேத்தியம்வைத்திருப்ப தறிகாக்குருடனு-என்னை
பேமாத்திப்போசப் பறக்குங் கருடனு ஓ-முட்டுத்தெ
ய்வமே-நல்லதனத்தாற்சாப்பிடு-இல்லாவிட்டால் என்
முட்டுத்தனத்தையுங் காண்பிப்பேன்-உனக்குநைவே
த்தியஞ் சொண்டுவந்தாலதோ-சனர்சங்காவடிபட்
டும் புழுதியில் விழுந்ததைப்பட்டும் - அலக்கோலப்பட்
டும் - சாணணிந்துக்கொண்டிருக்கும் இவ்விலையுயர்ந்தப
ட்டும்- சின்னுபின்னமாகக் கிழிந்து நோமாய்ப்போகு
தென்றோ டோடியும்வந்துகால்கள்நோகின்றது-இதோ
பொழுதும்போகின்றது - நான் வெகுநோமாய் வருந்தி
யழைக்கின்றேனே - கெஞ்சிக்கெஞ்சி மிகவு மழைக்கி
றேனே - சீக்கிரமெழுந்தவருவாய் உன்னுடைய அரிய
சேவைதருவாய் - உன்னையாகாதா வொருவாய் [illegible]
டாலென் துதிபெறுவாய் இன்றேலெனக்கு வரு[illegible]
பம் - உண்டாதுனக்குவரும் லாபம்-இப்படி செய்தால்
பெறுவாயென்சாபம் - அசையாதிருப்பது ஏனோ உன்
பிரதாபம் - ஏனடியாச் சிறுபிள்ளை - நிருநனுதி நப்
பது வெகுசன்னை - வலியவுட்டுவது முனைந்துகொன்
னை - வம்புசெய்யும் நீதானு ஆண்பிள்ளை உன்னுடைய
அறிவெல்லாம்வெள்ளை - பலதரஞ்சொல்லி நீயாவாயா
பின்னை ஓ-பாண்டுரங்கா-எத்தனைதரந்தான் கெஞ்சவே
ன் எளியேன் முன்னுண்டாலல்லவோ கொஞ்சுவேன்
உன் பக்தியில் மிஞ்சுவேன் - மெய்த்தெய்வமென் றஞ்
சுவேன் - என்னும் பற்பல பட்சமான வார்த்தைகள்
பகர்ந்தும் பரந்தாமன் எதாப்பிரகாரமிருக்கவே ஆயாசம
டைந்து மிகவுமிடைந்து ஆ-ஆ நம்முடையபிதா அனு
தினம் நைவேத்தியஞ்செய்து வருவாரோ-பகவான் சே
ஷமென்றுதருவாரோ - அவர்கொண்டுவர உண்டு அண்
டோத்தம் விண்டுவாகிய இப்பண்டரிநாதன் கண்கொ
ண்டுவந்ததைத் தீண்டாமல் வேண்டாமென்பதைக் கா
ட்டினரோ - முட்டுத்தெய்வமென்பதை நிலைநாட்டினு
ரோ - பர்தனல்லவென்று நீக்கிவிட்டாரோ என்னப்பா
விபாக்கிவிட்டாரோ - இனி யிவ்வாக்கைபோடிருக்கலா
மா வைராக்கியத்தைச் சுருக்கலாமாவென்று பாண்டுர
ங்கனைப் பணிந்து-பாதங்களிற் றன் திருநயனங்களை
ணிந்து ஓ-பண்டரிநாதா - நீ இக்கணமுண்டாலன்று
இன்றேலென்னுயிர் பிரியலாகாது - உனக்கபகீர்த்தி
வாய்ச்சுது-நீயே தேடிக்கொள்ளலாச்சுது-இக்கட்சணம்
என்தலையை உன்பாதங்களின்மே லடிப்பேன் என்று
பிரமாடிப்பேன் - வைராக்கியத்தைமுடிப்பேன் பிரம
ராட்சசனு யுன்னைப் பிடிப்பேன் - ஊரிலுள்ளோர்யாவு
மடிப்பேன் - உன் சன்னிதானத்துக் கெபாருவராமற்
கெடிப்பேன்-அப்பா உனக்கிவ்வளவு சுடுப்பேன்யென்
று - பாண்டுரங்கனைப் பக்தர்போற்று துங்களைப்-பரி
பமாவங்களைப்-பலகரம் அஞ்சலிதங்செய்து திருட்டுத்
தெய்வமேயென வைது - கண்ணீர்விட்டழுது - கடவு
ளேயென்று தொழுது - இதோபோக்குதே பொழுது
உன்னால் வந்ததே பழுது-என்று பகவான் பாதங்களின்
மேற் றன் தலையை மோதிக்கொள்ளப்போனர்.

உடனே பகவான் - சிதுருபமாய் நின்று அடா
என்னப்பனே யெனப்புகன்று-நாமதேவ் மந்தகத்தைக்
க் கதிசிரு அங்கங்களாற் றழுவிக்கொண்டு-அப்பா நா
ம்தேவ் - உன்பக்திப்பிரதாபத்தைச் சோதிக்கவேண்டி
இவ்வளவு தாமதஞ்செய்தேன் இதைக்குறித்துக் கோ
பஞ்செய்யாதே வாயில்வந்தபடி வையாதே-அடா என்
கண்மணியே சிகாமணியே - மகிமாமணியே-மாசிலா
அணியே தேகமெல்லாம் புழுதியாயிருக்கின்றதே
அதிதூரிதமாய்வந்தாற் பாதங்கணோகின்றது நைவேத்
திய மெடுத்துக்கொண்டுவந்தால் கைகள் நோகின்றதோ
சிறுபிள்ளை யடுத்த அடிகளால் அங்கமெல்லாம் நோகின்ற
தோவென்று பற்பலபட்சமான வார்த்தைகளாடித்தன்
கரத்தால் புழுதியைத் துடைத்துப் பதா[illegible]
க்கம்தட்டித் - தன்மீதிருக்கும் பீதாம்பரத்தை யவி
த்துக்கொள்ளச்செய்து - நாமதேவ் தரித்துக்கொண்டி
ருந்த பீதாம்பரத்தைத் தானணிந்துக்கொண்டு- அப்பா
நாமதேவ் உனக்கதிக பசியாயிருக்கின்றதோ வெகுநே
ரமானதால் களையாயிருக்கின்றதோ வென்று அன்னத்
தைப் பிசைந்தூட்டி - உன்னுடைய திவ்விய அஸ்தத்தா
லெனக் கன்னமூட்டப்பாவென்று திருவாயைத்திறந்
தார் நாமதேவ் - துன்பத்திலிருந்து பேர்ந்து கிர்தார்த்
தனுனேனெனத் தேர்ந்து - பகவானுடனொன்றுய்ச்
சேர்ந்து - மிகவுங் களிகூர்ந்து லவாயிந்து நாமதேவரு
ட்ட நாமதேவருக்குப் பகவானூட்டச் சகல பதார்த்த
ங்களையும்புசித்தபின் - ஸ்ரீமத்ராயனர் - நாம தேவரு
க்குச் சந்தனுதிகளைப் பூசி-அடைக்காயிலையை யொன்று



கொடுத்து - அப்பா நாமதேவ் நீவந்து வெகுநேரமாய்
விட்டது - சீக்கிரம் வீட்டுக்குப்போய் - நாளைநைவேத்
தியங்கொண்டுவாவென் றுரைத்து - மாயமாய்மறைந்து
கல்லுருவாயிருந்தார்,

பின்பு நாமதேவ் - சந்தோஷமடைந்து - மெது
வாய் நடந்து - வீட்டிற்குட்புகுந்து - தாயைப்புகழ்ந்து
வெறுந்தட்டைக்கொடுத்து - அம்மா இன்றைக்கு நோ
மானதைக்குறித்தும் பகவான் மிகவும்வெறுத்து நை
வேத்தியமுண்ணுமல் மறுத்துச் - சற்றுநோம்பொறுத்
துச் - சகலபதார்த்தங்களையு முண்டார்-ஆனந்தங்கொ
ண்டார் - அன்பான மொழிகள் விண்டார்.

ஆதலால் - என்மேற் கோபங்கொள்ளாதே-து
ஷ்டவார்த்தைகள் விள்ளாதேயென்று - கவிட்டினுட்
கார்ந்துக்கொண்டு - அடைக்காயிலையை மென்றுக்கொ
ண்டு - பகவானணிந்த பீதாம்பரத்தைப்பார்த்துக்கொ
ண்டு பகவானகொடுத்தபீதாம்பரத்தைப்பாருமம்மாவெ
னவிண்டு-சந்தோஷமேலிட்டா லடிக்கடிநகைத்துக்கொ
ண்டுமிருந்தார். குனுபாயீ - வெறுந்தட்டைக் கொண்
டு வந்ததையும் - பகவானணிந்துக்கொண்டிருந்த பீதா
ம்பரமணிந்துக்கொண்டிருப்பதையும்-பூமாலைகளணி
ந்துக்கொண்டிருப்பதையும் பார்த்துக் கோபமேலிட்டு
அடா நாமதேவ் - பழவர்க்கமெங்கே நைவேத்தியமெ
ங்கே நீயணிந்துக்கொண்டுபோன பீதாம்பர மெங்கே
உண்மையைச் சீக்கிரஞ்சொல்லடாவென்று கோபக்கு
றிகாட்டினுள் நாமதேவ் ஓ-என்னம்மணி-உன்மையாப்
பகவானே சகலபதார்த்தங்களையு முட்கொண்டார் பசி
மிகுதியால் நானு மிரண்டொருபிடி யன்னம் புசித்
தேன் - எனக்கினி யன்னம் வேண்டியதில்லை யென்று
வயிறு நிறைந்திருக்கதைப்பாரென்று - வயிற்றைக்
காட்டினர். குனுபாயீ - அடாதுஷ்டப்பயலே - பகவா
னென்னை நைவேத்தியமுண்பதென்ன-சாணுண்டு பயலே
நீயிதுநிறையப்புசித்து எல்லாவற்றையும் ஸ்வாமியு
அருந்தினாரென்று-அபத்தமபேசுகின்றுயா இப்போதே
அசத்தியம்பேச வாயடித்தாயா வென்று அருகிலிருந்த
ஓர் கோலையெடுத்து வீசியடிக்கான் நாமதேவ் இத்த
னைநாள் - வம்பாயிருக்கின்றது நான் மெய்சொன்னால்
பொய்யென நெறித்து விழுகின்றாள் - அபாயம் கெட்
டதப்பா லழுகின்றாள் - என்று தெருவிலோடிவந்து நி
ன்று-என் னுயிர்போனாலும் அசத்தியம் பேசேனென்ப
புகன்று - அத்தமூட்டுத்தெய்வம்-வெகுநேர மழைத்தெ
ய்து-நைவேத்தியமுட்கொண்டு என்னை வேண்டிய புசி
க்கச்சொன்னது பகவான வாக்கியத்தைத்தள்ளக்கூடா
தென்று இரண்டொருவா யருந்திவிட்டேன் அபசாரத்
த்துக்குட்பட்டேன் வீட்டிலிருக்கும் பதார்த்தங்களை
யெல்லாம் நீ புசிக்கலாகாதா? விருந்தையாயிருந்து சக
லமுந்தெரிந்தும் உண்மையறியாமல் ஆலோசனை யறி
யாமல் மிகவுங் கோபித்து உன்வார்த்தையையே ஸ்தா
பித்து உரக்கப்பேசுகிறாய் வாயில்வந்தபடி பேசுகிறாய்
கோலையெடுத் தென்மேல் வீசுகிறாயென்று கடுங்கூறு
ப்பேசினர் குனுபாயீ அடாதுஷ்டா அடாபிரஷ்டா உன்த
தையாரட்டும் உன்னை யிரண்டுதுண்டமாக் கண்டிக்கச்
செய்கிறேன் கண்டங்கண்டமாகக்கொய்கிறேனென்று
ரைத்துக்கொண்டே பகவானுக்குவேறுநைவேத்தியந்
செய்துகொண்டிருந்தாள். நாமதேவ் இதென்னகர்மமா
யிருக்கின்றது - இன்றைக்கெல்லாம் - வியாகுலத்திலே
யே பொழுதுபோயுமின்னம் இராமலிருக்கின்றது-இனி
அத்தமிழுவன் வந்தால் - என்னசெய்வேனே என்றெ
ண்ணைத்தேர்க்கூடிப் புறத் திண்ணையிலே யம்போவனை
வந்துநின்றிருந்தார். இப்படி நிற்குந்தருணத்தில - நாம
சேட்டிவந்து தெருவில்நிற்கும்-நாம தேவையெதிர்ந்து
யார்புடனையுந்து அடா எனதுமைக் குழந்தாய் சம
தாண்டவனுதிய-பண்டரிநாதனுக்கு நைவேத்தியம் ப
டைத்துவந்தாயா உன் தாய்க்குச் சந்தோஷந் தந்தாயா
யென்றுகேட்க நாமதேவ்-நைவேத்தியஞ்செய்தவகைதெ
னைனுரைக்கத் தாமசேட்டி. உன் திவ்விய அஸ்தங்க
ளால் பாண்டுரங்கனுக்குப்பூசைசெய்ய ஏகாதெனன்ன
[illegible]
மைந்தாளாகிக்கொண்டு - வீட்டுக்குட்போனார் குனு
பாயி [illegible] திருட்டுப்பயலே வீட்டைவிட்டு இன்றி
துஷ்டனே வெட்டிவிடவேண்டுமென் றுரைப்பது நாம
சேட்டியின்னியைப்பார்த்து ஓ பெண்ணே - கான்பிறந்த
மூன்றுஜாமத்துக்குள் உனக்குவெறுப்பு வரும்படியான
காரியமென்ன செய்தான் யானைவைதான் சீக்கிரஞ்சொ
ல்வாயென் றுகோபக்குறிகாட்டக் குனுபாயி நாமதேவ்
நைவேத்தியத் தட்டை விதிவிற்கொண்டுபோய்வைத்தது
தம் சிறுநுமன் பேர்புகிந்தும மந்திரானந்துக்குமே
ல பலவாறுதிட்டப்பட்ட நைவேத்தியத்தைச் சகிதா
னத்துக்கொண்டு போனதும் முன்னூஞ்சாமத்தில்
வெறுந்தட்டைக் கொண்டுவந்ததும் பகவானருந்தினு
ரென்றுரைத்ததும் - பகவா னணிந்திருந்த பீதாம்பர
த்தை [illegible] தான் தரித்துக்கொண்டு வந்ததும் முதலான ச
மாசாரங்களையெல்லாம் சொல்லிமுடித்தாள் அவ்வாறனை
ஸதிகேட்ட தாமசேட்டி கோபித்தெழுந்-அடா நா
மதேவ் [illegible] இவ்வளவு இரண்டுதுண்டமாக வெட்டிவிட
தெந்தேனென் றுர்ப்பித்தார்.

அதனால் நாம்தேவ் பயந்து தெருவீதியிலோட்டமெடுத்தார், தாம்ஸெட்டி தொடர்ந்தோடி அடாது செய்பவனாக விளையும்பயிர் முளையிற் தெரியுமென்கிற பழமொழிப்படி சிறுபோழ்திலேயே பொய்புரைகளையும் கற்றுக்கொண்டிருக்கின்ற நீ பெரியவனானால் வெகு துன்மார்க்க காரியங்கள் செய்வாய்-ஆதலா லினியுன்னை உயிருடன் வைத்திருந்தால் - என் குலத்துக்குப் பழுதுவந்துசேரிடும் பாபம்மீறிடும்-என்றுரைத்துக்கொண்டே பிடிக்கவந்தார். நாம்தேவ் இவனும் அக்கிழவியைப் போன்றவனே யாதலால் அகப்படாமலோடிப்போவதே நம்மையென்று நமக்கு யாருந்துணையில்லையென்று பண்டரிநாதனை தியானஞ்செய்துக்கொண்டே பல பக்கங்களிலோடி மிகவும் வாடிப் பாண்டுரங்கன் சந்நிதானத்தைநாடி ஆலயத்தினுட்போய்ப் பண்டரிநாதனை ஆலிங்கனஞ்செய்து பின்பக்கத்தி லொளித்துக்கொண்டார், தாம்ஸெட்டி கூடவேதொடர்ந்து - ஆலயத்திற் பிரவேசித்து பகவான்பின் பதுங்கியிருக்கும் நாம் தேவின் காதைப்பிடித்துக்கொண்டு தூஷணவார்த்தைகள் கூறி அடா நாம்தேவ் நைவேத்தியமென்னசெய்தாய் தெய்வசன்னிதானத்தில் அசத்தியம் பேசாதேயென்று வற்புறுத்திக்கேட்டார் நாமதேவர் சத்தியமா இப்பண்டரிநாதனே நைவேத்திய மருந்தினரென்றார் தாம்ஸெட்டி நல்லது பகவானணிந்த பீதாம்பரத்தை நீயென்தரித்துக்கொண்டாயென்றார் நாமதேவர் பகவானே என்னையணிந்துக்கொள்ளச் சொன்னதால் நான் தரித்துக்கொண்டேனென்றார் தாம்ஸெட்டி அதிசயித்துப் பகவானுக் கின்னமோர்தரம் என்முன் நைவேத்தியத்தை யூட்டுகின்றாயா வென்றார் நாமதேவர் ஒரு தரமன்றிப் பலதரம் பாண்டுரங்கனுக்கு நீர் பார்த்திருக்க அன்னத்தையூட்டுகிறேன் உமக்குப் புலப்படக் காட்டுகிறேன் நைவேத்தியத்தைக் கொண்டுவாருமென்றார் தாம்ஸெட்டி நல்லதாகட்டும் உன்னை யிப்போதே பரீட்சித்துச் சிட்சைசெய்கிறேன் என்னுடன்வாவென்று வீட்டுக்கழைத்துக்கொண்டுபோய்நைவேத்தியமோர் திக்கொலுவைத்து பகவான்முன்வைத்து அடா நாமதேவா சீக்கிரம் பகவானை நைவேத்திய முண்ணும்படியாகச்செய் இல்லாவிட்டால் உன் கால்வாரிப் பூமியிலறைந்து பகவானுக்குப் பலியிடுகிறேனென்று புலியைப்போலக் கர்ச்சித்து அடங்காக் கோபத்துடன் வாயினின்மத்தியில் நின்றார் நாமதேவர் பகவான் பாதங்களிலும் சிரத்திலும் புஷ்பங்களைச்சொரிந்து தூபதீபங்களைக்காட்டி நைவேத்தியத்தைத் திறந்து ஓ பாண்டுரங்கா ஸ்ரீரங்கா முன்போற்றுமசம்செய்யாமல் என் கழுத்தைக் கொய்யாமல் யாருந்தீண்டாப்பரிசுத்தமான இந்நைவேத்தியத்தைச் சீக்கிரம்புசியுமையா அண்டரேத்துந் தூய்யாவென்று தோத்திரஞ்செய்தார் பகவான் முன்போலவே அசையாதிருந்தார் நாமதேவர் ஓ ஓ இந்த முரட்டுத்தெய்வம் மத்தியானத்தைப்போலவே உன்றும் கோபித்துக்கொண்டு இருக்குமோவென்கிற பீதிமேலிட்டு ஓ பண்டரிநாதா புண்டரிகபாதா எம்பிரான்முன்னிலையிலுண்டு என்னை மெய்யனுக்கவேண்டுமென்றி பொய்யனுக்குவது உமக்குத் தர்மமல்ல நான் பலதரஞ்சொலல நீ அறியாதவரல்ல இதோசிறகிருசென்னைக் கொல்லவென்று ஓர் பிடியன்னமெடுத்துப் பாண்டுரங்கன்வாயில் வைத்தார் மாயாவிலாசனுகிய பகவான் அசையாக் கல்லுருவாயிருந்தார்.

நாமதேவர் கோபித்து ஓ முரட்டுத்தெய்வமே நீ மெய்த்தெய்வமாயிருந்தாலல்லவோ திருட்டு புரட்டுகளுமில்லாமலிருக்கும் பொய்த்தெய்வமானதால் என்னைப் பொய்யனுக்கிவிட்டாய் நீ கெட்டாயென்று தூஷித்தார் அவ்வசனங்களைக்கேட்ட தாம்ஸெட்டிக்குச் சாந்தமிறந்து கோபம்பிறந்து அடா திருட்டுப்பயலே பகவானை மரியாதையில்லாமல் திருடன்-முருடன்-யென்று பிதற்றுகின்றாய்- அசத்தியமுரைக்கும் வாயா - நீதின்றாய் தின்று பகவானே தின்றானென்று - பொய்மொழிகளைப் புகன்று - பயப்படாமல் நின்று துன்மார்க்கமொழிகள் பேசுகின்றாயா வென்று கோபமேலிட்டால் அடிக்கிறேன் உதைக்கிறேனென்றருகில்வந்தார் நாமதேவர்நடுங்கிப் பூனைபோலொடுங்கிஓபகவானேஎன்வசனம்பொய்க்காமல் சீக்கிரம் நைவேத்திய மருந்துகின்றாயா இல்லையாவென்று தனதலையைப் பகவான்பாதத்தில் மோதிக்கொள்ளப்போனார் உடனே பகவான் சிசுருபமாய்நின்று நாமதேவர் சிரத்தைத் தன்கரத்தாற்பிடித்துக்கொண்டு ஓ என்னருமைப்பாலனே பக்தியிற்சிறந்தசீலனே சகலருக்கும் மனுகூலனே சகல லட்சணங்களும் வாய்ந்த கோலனே உன்பக்திப்பிரதாபத்தை யுன் தாதையறியாமல்வேதனைசெய்ததை அறிந்தானோ உன் தாய் கோலாலடிக்கவந்தாளோ இதனால நீ மனக்குறைந்து நொந்தாயோ ஆதரிப்பாரியாருமில்லாமலென்போலோடிவந்தாயோ இனி சந்தோஷமாய் உன் திருக்கரத்தால் முன்போலவே எனக் கன்னமூட்டுவாயென்று வாய்திறந்து நாமதேவர் ஊட்ட வுண்டு தானும் நாமதேவருக்கூட்டி நாமதேவர் பிரதாபத்தைத் தாம்ஸெட்டி பிரதியட்சமா யறியக்காட்டி-ஜோதிசுவரூபமாகிய பாமேட்டி கல்லுருவாயிருந்தார்.

அவ்வாச்சரியத்தைப் பார்த்த தாம்ஸெட்டி தனக்கிருந்த மாச்சரியத்தை நீக்கிப்பக்தவச்சலனுகிய பண்டரிநாதனை நோக்கி - ஓ-பாண்டுரங்கா - ஸ்ரீரங்கா - கார்வண்ணு-கமலக்கண்ணு-கருடவாகனு - கோபியர் லோலனு - வாமனு - கிருஷ்ணு - மதுசூதனு - பரிபூரணு சர்வகாரணு - ராட்சசமர்த்தனு காளிங்கநிர்த்தனு ஓ-ஜனார்த்தனு உம்மையித்தப்பாவியேன் கண்ணாரப்பார்க்க என்னபாக்கியஞ்செய்தேனோ எந்தவுஞ் செய்தேனோ உமதருமைப்பக்தனுகிய இந்த நாமதேவனுரைத்தவாக்கியத்தை - எனைசுத்தாகப் பொய்யென்றுநினைந்தேனே - சொல்லவுந் தகாததேவ-வாயில்வந்தபடி வைதேனே - மனக்குறையச்செய்தேனே அபசாரத்துக்குள்ளானேனே - மஹாபாவியாய்ப்போனேனே என்று பற்பலவிதங்களையுரைத்து ஓ-வென் றலறியழத்தொடங்கினர்.

பகவான் அசரீரியாய் - ஓ - தாம்ஸெட்டி - இன்றுடனிந்த நாமதேவனை-நானாப் பாவித்து - அன்புடன் சேவித்து - வருவாயாகவென்று திருவாய் மலர்ந்தருளினார். அவ்வாக்கியத்தைக்கேட்ட தாம்ஸெட்டி-பகவானைப் பலபலவிதங்களாகத் தோத்திரஞ்செய்தேத்தி - நாமதேவருக்குச் சிரசாஷ்டாங்கமாக வந்தனஞ்செய்து அப்பா நாமதேவா உன்வசனத்தை மெய்யென்று நம்பாமல் - பொய்யென்றெண்ணிப் பொல்லா அபசாரத்துக்குட்பட்டேன் நொந்துகெட்டேன்-ஞானிபதறிய அபசாரத்தை உபசாரமாகக்கொண்டு - என்னையாட்கொள்வேண்டுமென்னப்பனேயென்று - வாரியெடுத்து மார்புடனணைத்துப்-புத்திரன்மேலேந்திக்கொண்டு வீட்டையடைந்து - குணபாயிக்குச் சகலமுஞ் சவிஸ்தாரமாயுரைத்து-அவ்வுத்தமியின் மனதைப்புங்கரைத்து-சதிபதிகளிருவரும் நாமதேவனைப்பகவானென்றே நிர்மாணித்து அத்தியந்தபக்தியுடன் விசுவாசித்து அன்றுமுதல் நாமதேவரிடத்தில் நைவேத்தியத்தை அனுப்பிக்கொண்டிருந்தார்கள் நாமதேவர் நாடோறும் நைவேத்தியங்கொண்டுபோய் நாமதேவர்க்கூட்டி - பகவானூட்டத் தானுண்டு அகமகிழ்ந்தார்கள்,

கேட்டீர்களோ சித்தர்களேயென்று பின்னும் ஸ பராஜித்தர் சொல்லத்தொடங்கினர்.

நாமதேவர் பகவானுக்கன்னமூட்டிய

அத்தியாயம்

முற்றிற்று.



## ௬-வது - நாமதேவருக்குப் பகவான் விவாகஞ்செய்த அத்தியாயம்.

வாருங்கள் சித்தர்களே-நாமதேவரைச் சிறுபிள்ளையிருவருந்துதிசெய்துக்கொண்டன்புடன் பாலகர்க்குள் காலத்தில் அபிமானமான் நாம்சேட்டியின் கனவிலடைந்து பகவான் இனவயதையடைந்து விவாகஞ் செய்யாமலிருப்பது சரியல்ல சீக்கிரம் நாமதேவருக்கு உமதருகில் வசிக்கும் ராஜபாயென்னுங் கன்னிகையை மணம்புரிந்தின்பமடையுமென்று திருவாய்மலர்ந்து மாயமாய்மறைந்தார் உடனே தாம்ஸெட்டி விழித்து தன்மனைவியையெழுப்பி ஓ பெண்ணே பகவானென் கனவில்வந்து தரிசனந்தந்து ராஜபாயென்னும் மங்கையைப்பேசி-நாமதேவருக்கு விவாகஞ்செய்யும்படியாகத் திருவாய்மலர்ந்தருளினார்-ராஜபா யென்னுங்கன்னி யாருடையமகள் உனக்குத்தெரியுமாவென்று கேட்டார்; குணபாய் ராஜபாயென்பவள் நமதுகுலப்பெண்தான் தனவந்தாதிபதியின்மகளாயிருப்பதால் நமதுமைந்தனுக்குக் கிடைப்பதரிதென் றுரைத்தாள், தாம்ஸெட்டி பகவானே சொற்பனஞ் சாதித்தபின் நாமப்பெண்ணை அவசியங் கேட்கவேண்டுமென்று அதிகாலையிலெழுந்துசெய்யவேண்டிய நியமங்களெல்லாஞ்செய்து முடித்தபின் ராஜபாயின் தந்தையிடம்போய்த் தன் கருத்தைத்தெரிவித்தார், அவன்நிச்சய தாம்பூலத்துக்காக ஆயிரம்பொன்னுகும் தன்னிடம் பேசலாமென்றுரைத்தான் தாம்ஸெட்டி அவ்வசனத்தைக் கேட்டதே மனங்கூசி விவாகஞ்செய்யமனம்மோகி-வீட்டையடைந்து வியாகுலத்தாலிடைந்து - மனைவியையழைத்து - நாம் இதுவரை உழைத்துப் பொருள்சேர்த்தாலும் - ஆயிரம்பொன்சேரப்போகிறதில்லை - இனி யென்னசெய்யலாம் - மகனுக்கு மணமெப்படிசெய்யலாம் திரவியத்துக்காக யாரைப் போய் யாசிப்போம் - எவரைப்போய் கேட்போம் - பகவானையே பூஜிப்போம் - பின்நல்லதுயோசிப்போம் என்று பகவான் சன்னிதானத்துக்குப்போய் ஓ-பாண்டுரங்கா - ஸ்ரீரங்கா தேவரீர் கிருபையினுற் கிடைத்த மைந்தனுக்குத் தாங்க ளென் கனவில்வந் துரைத்த பெண்ணை - மணஞ்செய்யப் பணமில்லாமையால் தடைபட்டது - லட்சாதிபதியின் சம்பந்தம்வாய்க்குமோ-இதற்கு நானென்னசெய்வேன் கர்த்தனேயென்று - விட்-

டையடைத்து சதிபதி பகவானை யோசனைபோலேகூடி ருக்மணியுடன் தனதிரு ஞாமமாயிடம் திரவியக்குறைபா லென்னையிட்டுக்கொண்டு-நித்திரைசெய்யாமல் கதவை மூடிக்கொண்டு - பகவான் கீர்த்தியைப் புகழ்ந்துக்கொண்டு-பணமில்லாதவர்கள் நடைப்பிணமேயென் றுவைத்துக்கொண்டு இருந்தார்கள் இப்படி. இவர்கள் நித்திரைசெய்யாமல் - தோத்திரஞ் செய்துக்கொண்டிருக்கத்தோத்திரப்பிரியனாகிய பகவானுக்கு வெகுசந்தோஷமாயிருந்தது - ஏகாதசி நாமதேவர் விவாகத்துக்கு நடையில்லாமல் பொன்செங்கல்லுகளைக் கொண்டுவந்து தாம்ஸெட்டி வீட்டில் போடுவதற்காய்வந்த பகவான் வீட்டில் தடையால் வெளியிலிருந்தபடி ஓர் பொன்செங்கல்லை வாசலிலெறிந்தார்.

விழித்திருந்த தாம்ஸெட்டி - யாரடா என்றுதாழ்ப்பாளிலிருந்து கேட்டவன்-அடாமடையா கடையாவென்றுரைத்தார், பகவான் மடையாகடையாவென்றுஞ் சம்மதிதான் - இடையா கொடையாவென்றுஞ் சம்மதிதானென்று மற்றோர்கல்லை வீட்டின்மேற் போட்டார், தாம்ஸெட்டி கோபங்கொண்டு - அடாதிருடா-அடாமுருடா - துடைப்பைக்கட்டைக்குட் பட்டுக் குருசக்கட்டிடனதுபோல் - பிறர்வீட்டில் கல்லெறியும் துஷ்டனாகிய உன்னைத் தருமத்திற்கிறந்த கொடையாளனென்றுரைக்கப் போமாவென்றார். பகவான்-சொக்கிரித்துக் கெக்கரித்து அடா தாம்ஸெட்டி - அடா திருடா - அடா - முருடா - அடா-கிம்புருடா-அடா புண்ணியபுருடாவென்றும் - என்னைச் சொல்லலாமென்று மற்றொருசெங்கல்லைக் கதவிற்படும்படியாய் விசிறியெறிந்தார் - உடனே தாம்ஸெட்டி - ஓர் - தண்டத்தையெடுத்துக்கொண்டு - அரணைத்திறந்து வெளிப்பட்டு அடா கிம்புருஷா-அடா புண்ணியபுருஷா சற்றேநில்லுநில்லுவென்றுரப்பரித்தார். பகவான் ஓர் பொன்செங்கல்லைத் தடிமேல் வீசியெறிந்து மற்றோர்கல்லை வீட்டினுள் வீசியெறிந்தார். குறுபாயி - அடாதுஷ்டா அஞ்சாதேயென்று வையு-சுடுசுடுவென்று கடுக்கவிட்டாள் பகவான் கூக்குவெனக் கூச்சலிட்டதால் இரண்டுகல்லைப் போட்டேனென்று-இரண்டு கனகக்கற்களைப்போட்டார் தாம்ஸெட்டி - ஆச்சரியத்துக்கோர்தனு பெரிதாய்விழுந்து-இக்கனகக்கல்லை - அந்தப் பண்டாரிதானறியக் கொடுவிடுகிறேனென்று ஜெயவிட்டல் ஜெயவிட்டலென் றுரைத்துக்கொண்டே, தெரு வீதியில் வந்தார். பட்டபோதன் பக்தவத்ஸலோடி மாயமாய்மறைந்தார்.

ஸ்ரீ நாமதேவர் ஞானேஸ்வரரோடு யாத்திரை போய் அக்பர்பாதுஷாவால் சொல்லப்பட்ட பசுவின் கன்றையெழுப்பினதும் மாவாடிதேசத்தில் ஓர் நதிப் பிரவாகத்தை யுண்டாக்கினதும் நாகேஸ்வர் கோயிலை மேற் குமுகமாகத் திருப்பினதும் ஆகாயத்திலிருந்து கொடிகள்வர நாகேஸ்வர் கோயிலில் காட்டியதும் யாத்திரைசெய்து பண்டாபுரத்தையடைய ஸ்ரீபாண்டுரங்கன் விருந்துசெய்ததும் இலோபாவினிடம் பிரம்மோபதேசம் பெற்றுக்கொண்டதும் பரிசாபகவத்தானை ஆட்கொள்ள அவனிடமிருந்த பரிசவேதியை நதியிலெறிந்து அவன்செய்தபலவந்தத்தால்சந்த்ரபாகநதியில் மூழ்கிஞாதன் முதலானவர்களும் களிக்க அளவற்ற பரிசவேதிகளைக் கொடுத்ததும் முதலான அத்தியாயங்களின் வரும் பக்தர்களின் சரித்திரங்களின் தொடர்ந்தார்த்தமாய்வரும் அதை அங்கங்கே இரண்டாம் புஸ்தகத்திற்காணலாம் சுபம்.

அகிலாண்டகோடி பிரம்மாண்டநாயகனே ஆதியந்தரகிதனே தக்கையின்மடியில் வீற்றிருப்பதற்கு அபாக்கியனான அருவனுக்கு அழியாப் பதமளித்தது போலவே ஒரு சரித்திரமே செய்வதற்குத்திறமையில்லா அபாத்திரனாகிய அடியேனுக்கு - இச்சரித்திரங்களும் செய்யும்படியான வாமளிகை உனது தாட்டாமரைகட்கும் உனது வட்சஸ்தலத்தில் வீற்றிருக்கும் சீதேவியின் கமலபதங்களுக்கும் உனது பக்தர்களின் பாதபத்மங்களுக்கும் அனேகம் வந்தனஞ்செய்யும் தவளனுதாவனாகிய வேங்கடதாஸனது மந்தமதியை எந்த விதத்திலாவது - இருத்தி - உனது - சொந்தபக்தர்களது விசித்திரமான சரித்திரங்களை முழுதும் முடித்திட்டுக்கொள்வது உமது பாரமாகும் ஸ்ரீமந்நாராயணனது திருவடிகளே சரணம்.

நாமதேவர் திருவருட்கழலிணைதுணை.

விருத்தம்,

வித்தைதந்து புத்திதந்து விக்கினங்கள்நீக்கும் வேழ மாமுகவனது விமலபதம்வாழ்க, பத்தாறு மனோரதத் துக்கனுகூலமாகும், பகவான்றன் திருவடிகள் பல்லாண்டுவாழ்க, சத்துவத்தை யளித்தடியார் நிச்சைநிறைவேற்றும் சங்கரன்றன் ஞானமலர்கண்களுந்தம்வாழ்க, உத்தமர்கள் சரிதைகளை புவிப்படனேசெய்ய உதவியாயிருக்கு மனுமுகனடிகள்வாழ்க.

நாமதேவர் சரித்திரம்

முற்றிற்று.

உ

கடவுள் துணை

# ஸ்ரீமகாபக்தவிஜயம்



ஐந்தாவது

# ஞானேசுவரர் சரித்திரம்

பகவான்துதி

விருத்தம்

தவமார் முனிவர் சுரரேத்துஞ் சடையோன் முகநா லுடையோனும்
தவமோங் கிதனை மறந்தோருஞ் சகநாதாவுன் மாயக்கூத்
தெவர்தா னறிந்தார் நானறிய வெந்தாய்கநா யகமேநான்
அவமா காதா னச்சுதனே அடியேனுன்றனடைக்கலமே.

ஞானேசுவரர் துதி

வேறு

விருத்தம்.

மச்சகச்ச பவரா க வாமன நரிஸக
உச்சித பாசுராம வயபிரா கவகோவிந்தா
சொச்சகுண் டலனுமான ஸ்வாமியோ ருருவாய்வந்த
சச்சிதா னந்தஞானே சுவரன் சரண் டலைமேற்கொள்வாம்.

## க—வது-ஞானேசுவரர் தந்தையாகிய விடோபாவின் யாத்திரை

### அத்தியாயம்

ஆத்மாமாத்திரமாயிருக்கும் - அணிமா மகத்து வமீயும், மஹிமா தன்னுக்கை கண்டிதயின்றிக் கண்டிப் புள்ளவஸ்துவை புருவ வல்லமையைவிக்கும் கரிமா, இல குத்துலக்கொடுக்கும், இலகிமா - வேண்டுவன வளிக்கும், பிராத்தி - இறையுடனிருக்கும் பிராகாமியம்- ஆட்சியுடனிருத்தல், ஈசத்துவம் - எல்லாவற்றையுந் தன்வ



மாக்கும், வசித்துவைகைன்றும் - அஷ்ட சித்திபால் விசிஷ்டமடைந்திருக்கும் உத்தவசித்தர் முதலானவர்களும் - சேவல் கூவுமுன்னெழுந்து-சந்திரபாகாநதியில் ஸ்நானஞ்செய்து ஜபதபங்களை முடித்துக்கொண்டு விரிஞ்சாவதாரனை - நாபாஜிசித்தரிடம்போய் - அவரை வலம்வந்து பணிந்து - ஓ மாசிலாமணியே - குருசிகாமணியே - மும்மூர்த்திகளும் - ஆதிசத்தியுமவதாரஞ்செய்த சரிதையை நாங்கள் கேட்டு-இன்படையத் தாங்களன்புடன் அனுக்கிரகம்புரியுமென்று துதிக்கப் - பிபாஜிசித்தரின் சேஷராகிய நாபாஜிசித்தர் சந்தோஷசித்தராய் - உத்தவசித்தர் முதலானவர்களை நோக்கி-ஓ-யோகீசுவரர்களே - பக்தர்கள்-அல்லது-ஜீவன்முக்தர்கள் - திருவிளையாடல்களாகிய - திவ்யசரித்திரங்களை அன்புடன் சொல்பவர்களும்-இன்புடன்கேட்பவர்களும் - சேவகாருண்யம் - சாந்தம் - சம்பாவம், சரசங்கம் - உபாதி - சருணத்தியாணம் - சித்குணத்தியானம் - பிரமக்ஞானம்-அகண்டாகாரத் தோணமுமடைவதன்றி - லேசில்-சித்திபுத்திகளுஞ் சித்திக்கப்பெற்று முத்திமார்க்கங் கற்றுத் தாட்சிகளற்று மாட்சிமையுற்றுப் பிரமானந்த மடைவார்களாதலால் - பக்த முக்தர் சரித்திரங்களுக்கிணையான பொருளொன்றுடன் றுரைத்தல் கூடாது . எப்படியென்றால் - இந்தப் பக்தவிஜயமானது அஞ்ஞானவிருளை நீக்கி - மெய்ஞ்ஞான தேஜஸைக் கொடுத்தலால் ஞானசூரியனென்றும், சாந்தமென்னுந் தெளிந்ததை நிறைத்துத் தாவேஷமென்னுமக் அக்கினியைத் தணித்தலால் - தண்சுடரொன்றும், சிந்தனைகளென மனதைக்கெடுத்து - அரிஷட்வர்க்கங்களைத் தகித்தலால் - அக்கினியென்றும் - அறிவில்லாதவர்க்கு மெய்யறிவுண்டாக்கலால்-இரண்டுகட்பமென்றும் பாபகர்மங்களாகிய விருக்ஷத் தறிக்கவிந்தலால் - வனமாளியென்றும் [illegible] - அகங்காரச்செந்நிலை நாசஞ்செய்வதால்-கிடாரட்சனென்றும், பகிர்முகன்கிடயாதிரிமாதர்களிலமிழ்ந்து மயக்கமுற்றிருக்கும் ஜீவனை அந்தர்முகப் பேரின்பானுபூதியிற் சேர்த்திருக்கும்படியாச்செய்தலால் [illegible] நிற்றிப்படுமென்றது - பேரின்பபரித முட்டுதலால் சதாசிவனென்றும் நான் - நீ யென்னுமிதென்றும் விகற்பத்தை நீத்துநிர்ச்சலனமாயிருத்துவதால் பரப்பிரம்மமென்றும் சொல்லலாம் அன்றியிந்தக்குருநேசுவரர்சரித்திரத்தைச் சொல்பவர் கேட்பவர்க்குற்ற பாக்கியத்தினளவையே னென்றுரைக்கக் கூடியதல்லவென்று லக்குரானே கவசர் சரித்திரத்தின மாட்சிமையை யென்றுரைக்கப் போமோ ஓ-சித்தர்களே - இச்சரித்திரத்தை அத்தியந்தபக்தியோடும் - கேட்பீராகவென் றெச்சரித்துப் பகவான் திவ்விய திருநாமங்களை யுச்சரித்துச் சொல்லத் தொடங்கினர்.

எப்படியென்றால் - ஓ - புனிதர்களே - வேதாதிகள்புகழும் - கோதாவரி நதிக்கணித்தாகிய - மாபோதகர் பாவும் - அபேகாமென்னு மூரில - மகாவிந்த நாதனைத் துதிக்கும் - கோவிந்தபண்டிதனென்பவர் - சௌருபவிசாரணைசெய்த - கிருபாயென்னும்-மனைவியோடு சமதமாதிகளை விடாமல்-சஞ்சலத் துக்குட்படாமல் கரணீகப்பிராமணராதலால்-இராஜனிடம் கணக்கெழுதும் உத்தியோகத்தி லிருந்துகொண்டு - அன்னதானஞ் செய்துக்கொண்டு லோபிகளைபபோல் றபாபிகளில்லை யெனவின்றி உத்தமர்களுடன் தொண்டு - செய்வதே விரதமாகக்கொண்டு - தனக் கெல்லாச் சம்பத்திருந்தும் புத்திரசம்பத்தில்லாக் குறையால் - தானும் - மனைவியும் - தனது குலதெய்வமாகிய பகவானைத்தோத்திரஞ் செய்துக்கொண்டு வருகிறகாலத்தில் கடவுளருளால்-ஞானகுழந்தை பிறந்தது - அக்காலமுளைய அன்பாய்ப்பாராட்டி - இன்பாய்ச் சீராட்டி - விடோபாவைத் தியானஞ்செய்ததினுற்பவித்த மைந்தனுக்கு விடோபாவென்று நாமதேயமிட்டு - ஐயதுமுதிர்ந்தபின் உபநயனஞ்செய்து - சகல வித்தியாப்பியாசமுஞ் செய்வித்துப் பாலியதசையிருந்து கௌமாரதசை யடைந்ததே கலியாணஞ்செய்யயோசிக்கும்-தாய்தந்தையரைவிடோபாவணங்கி-ஓ-என் தாய் தந்தையே - விவாகஞ்செய்ய யோசித்ததை நீத்து-யாத்திரைசெய்து வரும்படியாக்கிருபைகூர்ந்தெனக்குத் தோத்திரஞ்செய்ய-அவனையுமப்புனும் [illegible]-ஓ- என்னருமைப் புதல்வனே - சொல்லதற்கரிய சீலனே - சம்சாரவிச்சையில்லாதவர்களும் - தந்தைதாயில்லாதவர்களும் செய்யத்தகாப் பாவஞ்செய்தவர்களும் - சஞ்சல மனமுடையவர்களும்-அவசியம் செய்யவேண்டிய யாத்திரையை நீயுஞ் செய்யநினைத்தது - வெகு ஆச்சரியம் தாய் தந்தையாகிய எங்களைப்பிரிந்துபோக உனக்குத் துணிவுவந்ததோ யாது காரணத்தா லிங்கிருக்க உன்மனம் பொருந்தாத சமுகமாயிருந்துகொண்டு மனஞ்செய்துகொண்டு - நல்லறமான இல்லறத்தி லிருந்துக்கொண்டிருந்தால் எங்களை யழைத்துக்கொண்டு யாத்திரைசெய்வித்து எங்களைப் புனிதராக்குமப்பாவென்று பகர்ந்த தந்தைதாயைப் பணிந்து விடோபா சொல்லுகிறார்.

ஓ மாதாபிதாவே-இவ்வாக்கைப்பு நாக்கையென்றும் - ஆணவமென்றும், [illegible] மென்றும், [illegible] மென்றும், இந்த

வைபோ னீர்மேற் குமிழியென்றும் சூரியனைமறைத்த மேகமென்றும் ஆயுளை வின்னுனியைவிட்ட அம்பென்றும் விஷையாபோகங் காற்றென்றும் பிராணனேஜுவிருட்சமேறுற்ற பட்சியென்றும் வெட்டவெளியில் வைத்த விளக்கென்றும், மனதே சஞ்சலமிறைந்த குடமென்றும், சன்மகாராத்தி யமிழ்த்தும் வடமென்றும் விவேகமே மின்மினிப்பி ஜொளியென்றும் வெளிப்பி ஆழவு ளிலென்றும் பற்பலதரமொருவர்க் கொருவருரைத்துக் கொண்டிருக்கு நீங்கள் சமசாரியானபின் யத்தினை பேரைமென்றொக்குரைத்த வழகோ அமாவாசை திதியிலிருட்டோர் நிரணமாயிறுமகணிதவிசாலமான அவிவேக விருளாற் சூழப்பட்டுத் தொன்றுதொட்டு பவசாகரத்து டேட்டு மெய்ஞ்ஞானகிலகெட்டுத்-தட்டு கெட்டு - தமோத்திக்கொண்டிருக்கும்-ஏழ்மையாள-கோழையேன் - சம்சாரத்துக்குட்படுவேனு வைதயவளையுந் தொடுவேனு அந்தோ இல்லறமென்னுந் தொலைவில கப்பட்டோர்க் கல்லவன்றிச் சொல்லச் சகுமணோடு ஓ-அன்புள்ள அன்னையே இன்புடனவளர்த்து எந்தைகோ சம்சாரமெனனும் சாகரத்தில் மூழ்கினவன் சுகதுக்கமென்னுந் திரைகளா லலைக்கணுற்றழிவதே யல்லது மோட்சமடையுங் குதுமகரித்ரிக்கும் சாட்சினிவரு பமாயிருக்கும்-மாட்சிமைபொருந்திய குருஸ்வாமிகட் கேவல்செய்யக்கூடுமோ இக்கூடினும் - ஞானசாஸ்திர மிகாச் சந்தேகமறத் தெளியக்கூடுமோ இதைவந்தாலும் தெளிந்தபடி நிர்ச்சலனமாய் இருக்கக்கூடுமோ இருந்தாலும் - அஹங்காரவேசமேனிட்டுத் தன்னைமறக்கும்-கனவிற் சுழுப்திநிலையை யடையக்கூடுமோ இதையடைந்தால்-நிரஸ்தாசிரமத்துக் குதவமாட்டேவாறு இவ்வளவு அரிதான சகலானந்தானுபூதியை யடைந்தவர்போல் பேசும் வாசாஞ்ஞானிக ளடையும் பயன் - வார்த்தை மாத்திரமன்றிப் பரமார்த்தத்தை யடையக்கூடுமோவென்கிற பலவார்த்தைகளாடி ஓ மாதாபிதாக்களே வைராக்கியமில்லாதவனுடைய - சாஸ்திரவிசாரணையும் ஞானமில்லாதவனுடைய விவேகமும், விதவஸ்திரீயின்யௌவனமும், பலமில்லாதவன் தேகபுஷ்டியும் பதிவிரதத்தன்மையில்லாதவளுடைய அலங்காரமும்-சற்கருமஞ்செய்யாமற்கழியுமாயுள்காலமும்-விபசாரி யிருக்கும் ஆசாரமும் பக்தியில்லாத பூசையும் குருவிந்தனைசெய்யும் தியானமும் சஞ்சலமனதுடையவன் செய்யுஞ்ஜபமும்-பிரயோஜனமில்லாததுபோல எவ்வளவுகாலத்தில் மோட்சமார்க்கத்தைத்தேடாத புருஷனும் பயனடையான். ஆதலால் எனக்குவதுவையாகுமுன்னமே பல தேசங்களிற் றிரிந்து - ஜலஸ்தல பரிசன தரிசனஞ்செய்து - உத்தமனிடம் - ஞானசாஸ்திரார்த்தங்க ளறிந்துக்கொண்டு இரண்டோராண்டில் வந்து - உங்களிஷ்டப்படி நடக்கக்கொள்ளுகிறேனென்றுரைத்து வணங்கும் - தனயனைத் தாயுந்தந்தையும் பல ஆசிகள்கூறி ஓ-எங்களரும் பாலனே - விரத சீலனே - சன்மார்க்கத்திற் செல்பவனைத் தடுப்பவர்க்கும் - ஈவதை விலக்குபவர்க்கும் - செல்லெனுசு அன்புண்டென்று - வேதமுறைமுதிகிரிப்பவனைத் தடுக்கமாட்டோம் ஆராலும் ஒணுகொள் - யாத்திரைசெய்து - உன் அழகானமுகத்தை யாங்கள்கண்டு களிப்படையும்படி யாவளக்களித்துச் சுகமாய்ப் போய்வாருமப்பாவென் றநுமதிகொடுத்தனர் - விடோபா சந்தோஷவாரியிலே மூழ்கினவனாய்த் தேவரீர் ஞானத்தவன்னையே ஞானக்கிருஷ்ண வருகிறேனென் றறைந்துவிடைபெற்றுக்கொண்டு துவாரகை - மசுரதீர்த்தம் - பிண்டாரகம் சுதாம்புரி - ருக்மணியம்மையாருக்கு வதுனைவாசஸ்தானமாகிய மூலமாதவம் - ஸ்ரீ கிருஷ்ணர் சமாப்தி - விடமாகிய பாலுகாதீர்த்தம் - பிரபாஸ்தீர்த்தம் - முசுகுந்தனிருஷி அனந்தர்செய்த ஸ்தாபனமாகிய சோமநாதம் - தவளபுரி - சப்தசிருங்கி - அருணை-வருணை மகாலேசுவரம் - திரியம்பகநாதம் - குசாவர்த்தம்-கங்காதுவாரம் - பிரமகிரி பர்வதம்-பீமாசங்கரம் - முதலான ஸ்தலங்களுக்குச்சென்று-சக்ரதீர்த்தத்துக்குவந்து ஸ்நானஞ்செய்து - ஜபதபங்களை முடித்துக்கொண்டு அத்தீர்த்தத்துக்குச் சமீபமாகிய அலங்காவதியிற்செல்லுகையில் அவ்வூரிலிருக்கும்-சிதோபந்து-என்னும் மறையோன் நாடோறும் சக்கரதீர்த்தத்துக்குப்போய் - ஸ்நானஞ்செய்து கர்மானுஷ்டானங்களைமுடித்துக்கொண்டு அங்குவந்த-யாத்திரை பிராமணர்களைத் தன்வீட்டுக்கு டையவர்களை அழைத்துக்கொண்டுபோய்-அன்ன முபித் தனுப்பும் வழக்கப்படி அன்றும் பூக்கோத்தேடிக் காணமல்வாடி-விடோபாவைக்கண்டு-ஆனந்தங்கொண்டு-அழகுசாதாஅடக்கனுக்கத்துவிட்டு-அவரைத் தன் இல்லறத்துக் கழைத்துக்கொண்டுபோய் அன்ன முபித்து வேத ரகசியங்களைப் பேசிக்கொண்டானந்தமாயிருந்தார்கள்.

கேட்டீர்களோ சித்தர்களேயென்று நாபாஜி சித்தர் பின்னுஞ்சொல்லுவார்.

கேளுஞ்சித்தர்களே இப்பால்-சிதோபந்துவிடோபாவைநோக்கி-ஓ பரமபக்தனே எளியேன்மேற்றயைசெய்து இரண்டொருதினமிருந்து போமப்பாவென்று தன்வீட்டிலே நித்திரைசெய்யும்படியாயுரைத்து - வெகுநேரம் வேதாந்த வார்த்தைகளாடித் தெளிந்தவனெனக் கொண்டாடி ஸ்ரோத்திரியானதால் அனந்தர்செய்யும்படியாய்ப் புகன்று-தானுங் கண்வளர்ந்தார், அப்போது



பகவான் சிதோபந்து சொப்பனத்தில்வந்து ஓ உத்தமனே இப்போ துன்னருகில் படுத்திருக்கும் விடோபாவுக்கு உன் புத்திரியை நாளையதினமே மன்றல்செய்து மகிழ்ச்சியடையக் கடவாயென்று திருவாய் மலர்ந்து மறைந்தார். உடனே-சிதோபந்து விழித்து-இதென்ன விந்தையாயிருக்கின்றது - இப்புண்ணியனைப் போன்றவனுக்கே - நமது கன்னிகையை மணஞ்செய்யவேண்டுமென்று நினைத்த நினைவே இப்படிக் கனவாய்வந்ததோ அல்லது-பகவான் சங்கல்பமோ இப்படி இருக்கின்றதோவெனப் பலவிதங்களா யோசித்துக்கொண்டிருந்து - மூன்றுஞ்சாமத்தினிறுதியில் - விடோபாவையெழுப்பி-அப்பா வுனக்கென்னருங்கன்னியைக் கொடுத்து மன்றல்செய்யும்படியாய்ப - பகவானென்கனவில்வந்துரைத்தார். அதலால்-பகவான் வாக்கியத்தைத்தள்ளமல் யாதொருமொழியும் விள்ளாமல் - என்புதல்வியைக் கலியாணஞ்செய்துக்கொண்டுகளிப்புடனிருப்பாயாகவென அவ்வசனத்தைக்கேட்ட விடோபா இதென்ன இதென்ன இடைமுவெட்டப்போய் பூதம் புறப்பட்டாற்போலவும் - பிள்ளைவரத்துக்குப்போய் புருஷனைப் பறிகொடுத்தாற்போலவு மிருக்கின்றது, தந்தைசொன்மிக்க மந்திரமில்லையென் றறிந்திருந்தும் - தந்தை வாக்கியத்தைத் தள்ளிப் பலதேசங்களிற் றிரிந்துவந்து - இந்தபிராமண குலைதந்தபடி பந்தத்தில் அழையலாகுமாவென் றுனைந்து பின்னைக்கிச் சிதோபந்துவை வணங்கி - இனைய்ஞானியே - என் குலம் கோத்திரமறியாதவராயிருந்தும்-இப்படிப்பேசலாமா முன்னம் கனிகையரிருவர் சகோதர வைத[illegible] கோட்டு மகாரிஷிகூட்டிக்காட்டைவிடுக்கவும் கா[illegible]ட யமிக்கவும் - செய்ய - அக்காட்டிடன் - ஏந்தல் தன் - கன்னியிருவரை அவர்க்கு மணம்புரியச் செய்வித்ததுபோல எனக் கன்பாயன்னமூட்டி - இன்பந்தைக்காட்டி - இப்போதத்தி லமிழ்த்த யோசித்தீர் இதற்காகத்தானு இப்படி விசுவாசித்தீர் இனி யிவ்வார்த்தை என்னுடன் சொல்லாமலிருக்க மிகவு மும்மை வேண்டுகிறேனெனச் சிதோபந்து-விடோபாவினிடம்பவார்த்தைகளாடிக் கோத்திரமுதலானதும் விசாரித்துத் தன்னினத்திற் சேர்ந்தவனாயிருக்கக் களிப்புற்று அப்பா விடோபா - நீயே யென்புதல்விக்குத்த மணாளன் - இப்படி கூட்டுவைத்ததே குருகடாட்சமாயிருக்கின்றதென்று தன்மனைவியை விளித்து-ஓ-பெண்ணே நமது மருமகனைக்கண்டாயாவி ஆனந்தங்கொண்டாயாவென் றுகளிப்பின் மிகுதியால்பற்பலவார்த்தைகளாட அதுகேட்டவிடோபா இதென்ன திருடப்போய்க்குருடனானதுபோலவும்பரமபக்தனுகப்போய்ப்பைசாசத்தாற் பிடிக்கப்பட்டதுபோலவு மிருக்கின்றது-ஓ-ஐயாபிராமணோத்தமரோநான் சன்னியாசியாயிருக்கவெனக்குமணஞ் செய்யநினைக்கலாமா ஒருவர்விரதத்தைக்கெடுக்கலாமோ எடுக்காப்பார வெடுக்கலாமா-வேண்டாமென்பவர்க்குப் பெண்கொடுக்கலாமா-ஒருவர்யாத்திரையைத்தடுக்கலாமாவெனச்சிதோபந்து - அப்பா மருமகனே-அழகிலுமுகனே - இராஜன்வார்த்தையைத் தடுத்தாலும் மாதாபிதாக்கள் வார்த்தையைத் தடுக்கலாகாது - மாதாபிதாக்கள் வாக்கைத்தடுத்தாலுங்குருவாக்கைத்தடுக்கலாகாது ஆரியர்வாக்கைத்தடுத்தாலும் - தெய்வவாக்கியத்தைத் தடுக்கலாகாது - ஆதலால் தெய்வவாக்கின்படி செய்ய நினைத்த என் மொழியைத்தடுக்காமல் விவாகத்தைக் கெடுக்காமல் இன்றைக்கே விவாகஞ்செய்துகொண்டு நீரு முமது மனைவியும் - இஷ்டமான ஸ்தல துலதரிசன பரிசனத்துக்குப்போகலாம் சீக்கிரம் எழுந்திரும்-ஸ்நானஞ்செய்யும்-திவ்யமான வஸ்த்ராபரணங்க ளணிந்துக் கொள்ளுமெனவிடோபா-இதென்னகுளிக்கப்போய்ச் சேறுபூசிக்கொண்டதுபோலவும்-கும்பிட்டதுருத்த குருவோடு வம்புசெய்வதுபோலவு மிருக்கின்றது என்றெண்ணிச் சிதோபந்துவைப்பார்த்து ஓ-ஐயா உமக்குச்சொற்பனஞ்சாதிக்க பகவான் - என்கனவில்வந்துரைக்கமாட்டாரா திவ்யதரிசனந்தரமாட்டாரோவெனச் சிதோபந்து அகத்தியம் பகவான் உன்கனவிலும் வந்துரைப்பார் - ஆனால் இன்றிராத்திரிக் கிங்கேயே நித்திரைசெய்யுமென்றுரைத்துக் குளிப்போதயமானதே-சக்கரதீர்த்தத்திற் சென்று ஸ்நானஞ்செய்து-ஜெபதபங்களை முடித்துக்கொண்டு - வீட்டையடைந்து - போஜனஞ்செய்து நல்வார்த்தைகளாடிப் பகவான் கீர்த்தனைகளைப் பாடி நாமோத்திரியானபின் கண்வளர்ந்தார்கள்-இரண்டாஞ்சாமத்தில் - பகவான் விடோபாவின் கனவிலடைந்து அப்பா விடோபா இந்த சிதோபந்து புதல்வியாகிய பதிவிரதைகளில் முதல்வியை - விவாகஞ்செய்துக்கொண்டு சுகமா யிருவென் றறைந்து மறைந்தார்.

உடனே விடோபா விழித்து ஓ-ஓ மோசம் வந்தது-நமது ஜென்மாயுசுக்கு மணஞ்செய்யலாகாதென்கிற வைராக்கியத்தைக் கடவுளே கெடுப்பதுபோற் காண்கின்றது - அன்றித் தாய்தந்தைய ரறியாமல்-நாமே மன்றல் செய்துகொண்டால் - மாதாபிதாவின் மனம்நோகும் - இதனால் நரகத்தை யடைவதற்கேதுவாகும் அல்லாமல் சொர்க்கத்திற்சென்றவன் - நரகத்தையும்-சுகத்திலிருப்பவன் - துக்கத்தையும் - அமிர்தமபுசிப்பவன் விஷத்தையும் - இராஜரீகஞ்செய்பவன்-யாசிக்கவும் சமபாவமுள்ளவன்-ஆசிரியனை நிந்திக்கவும் - நித்தியவஸ்துவையடைந்தவன் - அனித்தியப்பொருளையும், காசெ

ணமத்தி னருமையறிந்தவன் - விஜயன்சுழிக்கவும் - பரி
மளாதிகளைப் பூசிக்கொள்பவன் - மலத்தையணிந்துக்
கொள்ளவும் - சமாதிநிஷ்டா சாதனஞ்செய்ய விருப்ப
முள்ளவன் - சஞ்சலவியாபாரத்திற் குட்படவும்-யாஞ்
சிப்பதை வாஞ்சியான் அதுபோலவே சன்னியாசியாக
வெண்ணங்கொண்ட நாம் சம்சாரத்துக்குட்படலாமா
மணபரியந்தம் பேய்கொண்டாலும் - கொள்ளலாம்
பெண்கொள்ளலாகாதென்று பழமொழியிருப்பதன்றி
சப்தத்தால் அசுணைப்பட்சியும-ஸபரிசத்தால் யானையும
ரூபத்தால் விட்டிற்பூச்சியும் ரசத்தால் மீனும் - கந்த
த்தால் வண்டும்-இவ்வொருவிஷயமிருந்தே மரணமடை
கிறதென்றும்-இந்தஐந்துவிஷயங்களுங்கூடி ஒருருவாய்
வந்து - மயக்கத்தை - மாந்தரை வாட்டும் - மாதர்கள்
தோதகத்துள்ளகப்பட்டவன் விடுபடுவது ஜென்மாந்தர
ங்களிலுங் கூடாதென்றும் - சாஸ்திரங்களில்முறையிடு
கின்றது அப்படியாயிருந்தும் தப்பிதத்துக்குட்பட்டபின்த
னம்வேண்டும்-தனம்வேண்டும்-மனைவேண்டும்-மக்கள்
வேண்டும் - பந்துக்கள்வேண்டும் - பலவிஷயங்கள்வே
ண்டும் - இதுதெரிந்தும்குழியில் விழுவேனு இதற்கு
ஊர்தெழுவேனு வென்று பலவிதங்களா யோசித்து
இனி பொழுது விடியுமாயின் விபரீதம் விளையும்
என்று கள்ளனைப்போலவும் - விபசாரியைப்போலவும்
மெல்லநடந்து தெருவீதியிற் போனர், அத்தருவாயில்
பிதாபக்து புத்திரியாகிய ருக்மாபாயி - நல்ல விவேக
ஞான புருஷனையே பணம்புரியவேண்டுமென் றெண்ணி
நாளைப் பார்க்கவிலை ஸ்தோத்திரஞ் செய்துகொ
ண்டிருந்தபடியே தனக்கு மணவாளன் கிடைத்த
தற்கு நாம்செய்த பாக்கியமே பாக்கியம் - நாமடைந்த
சிலாக்கியமே சிலாக்கியம் - இனி எப்போது பொழுது
விடியும் - விவாகமெப்போதுமுடியும் - இவருடனெப
போது பேசுவோம் - சந்தோஷிகளை யெப்போது பூசு
வோமென்கிறவெண்ணங்களாற்பீடிக்கப்பட்டுத் தூங்கு
வாமல் விழித்துக்கொண்டிருந்து விடோபா சந்தடியி
ன்றி வெளியிற்போகிறதைக்கண்டு-சந்தேகங்கொண்டு
இவருடைய மனைவியென்று நாமும் நமது தாய்தந்தை
எப்போது தீர்ப்புசெய்தார்களோ அப்போதே இவருக்
கு நாம் மனைவியானேம் அப்படியிருக்க இப்படி நம்மை
மோசஞ்செய்து துவேஷங்கொண்டு போகிறதுபோற்கா
ண்கின்றது - சன்யாசி பயணம் தின்னைவிட்டா லாச்
சுது என்கிற துவிபாய்மொழியா நாம்செய்த புண்ணிய
பலத்தாற் கிடைத்த புருஷோத்தமனைவிழுத்த லதிவினை
மல்லவா பகவான் நமது தந்தையின் கனவிலுரைத்த
வண்ணம் - இவருடைய சொற்பனத்திலுஞ் சாதித்தி
ருப்பார் இதனாலேயே இவர்மனம் வேறுபட்டுப்போகி
ன்றார் ஒருவேளை பகவான் இவர்சொர்ப்பனத்தில் வந்
துரைக்காவிட்டாலும் இவர் மனம்வேண்டாமென்றும
றுத்தாலும் இவரே பதி-நானே சதியென் றெப்போதெ
ண்ணங்கொண்டேனே அப்போதே என் கற்பழிந்தது
யாரால் கற்புக் கழிவுவந்ததோ அவரே கணவனாகும்
கணவனுக்கைக்கியமான காந்தை கணவனைப் பிரிந்திருப்
பது முண்டாவென்கிற பலவெண்ணங்களோடு மவர்
பின்தொடர்ந்துகற்புள்ள பெண்களுக்குரிய நாணம்
மடம்-முதலான குணங்களாற் சிறப்பித்தோங்கிய உத்த
மியாதலால் விடோபாவை மறிப்பதற்கும் கூப்பிடுவத
ற்குங்கூடாமல் அதிசீக்கிரமாயோடி அவரைப் பதை
ருகுழ்ந்து பாதங்களில்வீழ்ந்து ஓ-ஸ்வாமி எங்கே கள்
ளனைப்போல் மெள்ளப்போகிறீர் - இங்கிருக்க உமக்கி
ஷ்டமில்லாதிருந்தால் - தாங்கள்நாடியதேசத்துக்கு நா
மிருவரும் போகலாம் - என் தந்தையிடம் - உத்திரவு
பெற்றுக்கொள்ளுமையா வென விடோபா ருக்மாபா
யின் சௌந்தரியத்தைக்கண்டு பிரமைகொண்டு-நீயா
ரென்றுவினவ ருக்மாபாயி ஸ்வாமி-என்னையே உமக்
கு வதுவைசெய் என்பிதா பேசி உம்மைத் தன்னருகில்
சயனிக்கச்செய்து - தன்னைமறந்து தூங்குகின்றார்-அவ
ரறியாமல்-நீர் போவதைக் தும்மைமறுத்து - வீட்டுக்க
ழைத்துக்கொண்டு போகவந்தேன் - இருபைகூர்ந்து
மனைக்குள் வாரும் ஸ்வாமியென அவ்வசனத்தைக் கே
ட்ட விடோபா திடுக்கிட்டு ஸ்மரணைகெட்டு அறிவழிந்
து-உடனே தெளிந்து ஓ-மாதரசே தந்தை-தாய் ஒருவ
னுக்கு விவாகஞ்செய்யும் பரியந்தம் மாதா பிதாவேதெ
ய்வமென்றும் தனித்தோர் புருஷரோ டியைந்தபி
ருப்பதே விரதமென்றும் - அயல் விடவிடாம லிருப்ப
தே அழகென்றும் - கற்பைக்காத்தலே தபமென்றும்
பெண்களுக்கு லட்சணஞ்சொல்வார்கள்,

அப்படியிருக்க - நீ யிப்படி செய்யலாமா வழிப்
போக்கனுகிய என்னை இந்த நிசாத்திரியில் தனித்துவ
ந்து மறுக்கலாமா இப்படி வேசையுஞ்செய்யாள் இ
போர்க்கொத்த அவலட்சணகுணமுடைய உன்னையான்
விவாகஞ்செய்துகொண்டபின் நரகடைய வேறொ
பாவமுஞ் செய்யவேண்டுமோ எப்போது தனித்து ஒரு
புருஷனுடன் பேசத்துணிந்தாளோ அப்போதே வி...
ரியாளென்று பெரியோர்கள் சொல்லுகின்றார்கள் அந்த
க்குணமுள்ளவிடத்திற் பிரத்தியட்சமாய்க் கண்ட பின்
உன் முகத்திலும் விழிக்கலாமா இப்போர்க்கொத்த அப
சாரிகளின் முகத்தில் விழித்தலன்றி வேறோர் தோஷ
முஞ்செய்யவேண்டுமோ சீ-சீ-போபோவென்கிற கடின
வார்த்தைகளுரைத்துப்போக - ருக்மாபாயி விடோபா



வைமறுத்துப் - பாதங்களிற்பணிந்து ஓ - என்பிராண
நாயகா - பிராணபிநேகா-எப்போது என் தாய்தந்தை
உமக்கு விவாகஞ்செய்யநினைத்து உம்முடன் பேசினர்
களோ எப்போது பகவான் கனவில் வந்துரைத்தாரோ
எப்போது நானுஉம்மைக்கணவனென்று பாவித்தேனே
அப்போதே விவாகமாய்விட்டது எல்லாவற்றிற்கும்
மனமனமே காரணமன்றி இன்மனம்மணமாகுமா நா
னுபோறிய விவாகஞ்செய்தாற்றான் சதி புருஷர்கள்
உமக்கு என்தாய்தந்தையிடஞ்சொல்லப் போக மனமி
ல்லாவிட்டாலும - நானினி உம்மைப் பிரிந்திருப்பதில்
லை - இது சத்தியமாகும் - ஒருவேளை நீர் பலவந்தமா
யென்னைத் தள்ளிப்போவதென்னுயிரை உமக்காப்ப
ணஞ்செய்வேன் இதற்குதடையில்லையென அவ்வாக்
கியங்கேட்ட விடோபா ஆ-ஆண்டவனே - இதென்ன
வல்லடிவழக்காயிருக்கின்றது ஓ-பெண்ணே உலகத்தில்
அநேகருக்குப் பெண்கொடுக்க தாய்தந்தையர்யோசிப்
பார்கள் பலரை - விசுவாசிப்பார்கள் அவர்களுக்கெல்
லாம் அப்பெண் மனைவியாவாளா நிச்சயதாம்பூல முத
லான சடங்குகள் நடந்தும் விவாகந் தவிர்ந்துபோகிறதி
ல்லையா ஈதுனக்குத் தெரியாததொல்லையா நீ தெரியா
மையினு லிப்படிப்பேசினை இதை யாராவதறிந்தால்
நிந்தைக்கிடமாகும் சீக்கிரம் வீட்டுக்குப்போய்ச் சுக
தோஷமாயிரு நான்நாடோடிமனிதன் அன்றி எனக்கு
சம்சாரவிச்சையில்லை வழிகள் கடக்கக்கூடாது தன்
னைவில்லை சன்யாசியான என்னை மணஞ்செய்ய விரும்ப
லாமா நீ பதிவிரதையாயின் போற்றாவன்கின்றனிதன்
றனர்ந்து போக ருக்மாபாயிமறுத்து - ஓ - ஸ்வாமி
கற்புள்ளவள் ஒருவனைக் கணவனெனத் தீர்மானித்த
பின் அவனையன்றி மற்றொருபுருஷனைக் கனவில் நினை
த்தாலும்- அவள் கற்புக்கேபோம-அவள்முகத்தில்விழித்
தால் தாங்கனுரைத்தபடி பாபம்வந்துசேரும் - ஆத
லால் நீரே பதியென்றும் - நானும்முடைய சதியென்று
ம் தீர்மானித்தபின் உம்மைப்பிரிய எனக்கு நீதியா
உம்மையன்றி வேறுபுருஷனைக் கருத எனக்கென்ன
கொடியவிதியா இப்படி நினைக்க எனக்குக் கெட்டமதி
யா நானுபோறித்தால் நிந்தைக்கிடமாகுமென்றீர் யா
ரும் அறியாமற்போய்விடலாம் வாரும் ஸ்வாமியென,
அதுகேட்ட விடோபா-ஓ- அறிவையே விவேகமில்லாத
தெரிவையே - நீ சொல்லும்வார்த்தை உனக்குத் துன்
பம்வந்தால் வாட்டும - எனக் கின்பம்வந்தால் போது
மென்கிறதுபோ லிருக்கின்றது - நல்லகாரியம் - தன்
யோசனைப்படி நடப்பதுசுகம்-குருபுத்தி விசேஷங்கள்.
பாபுத்தி விநாசகாலம் - ஸ்திரீபுத்தி பிரளயம் மென்கிற
பழமொழியை உன்பால் சேர்த்தேன் - யாரும் அறி
யாமல் நீ யென்னுடன்வருகிறதென்ன நான்மைத்துக்
கொண்டுபோகிறதென்ன என்னறக்கற்று எழுத்தறவா
சித்தாலும் - பெண்புத்தி பின்புத்தியென்கிறது சரியா
யிருக்கின்றது - அருமையாகப் பெற்றுவளர்த்த தாய
தந்தையரை வஞ்சித்து-வழிப்போக்கனுகிய என்னுடன்
வரத்துணிந்த கொடியபாதகியாகிய உன்னுடன் பேசக்
கூடாது - இனி யென்முன் நிற்காதே - என்னை மறுக்
காதே மாதா பிதாக்களை வெறுக்காதே-இந்நிருக்கவெ
ன்மனம் பொறுக்காதே - யென்றுசெல்ல, ருக்மாபாயி
ஓ-ஸ்வாமி - நீர்பதியென்றும் - நான் சதியென்றும்-கட
வுள் முன்னமே அமைத்திருந்தகாரணத்தாலேயே-என்
தந்தையின் சொற்பனத்தில்வந் துரைத்தார்-உம்முடை
ய கனவிலும் வந்துரைத்திருப்பார்-தெய்வ வாக்குக்கும்
மேலான வாக்கொன்றுண்டாதெய்வவாக்கைத்தப்புவது
முண்டா தப்புதற்குத் தெய்வவாக்கு இரண்டா தெய்வ
வாக்கைத் தள்ளினேர்க் கின்பமுண்டா நீ யிப்படிசெய்
வது என்னைச் சோதிக்கவெண்ணங்கொண்டா-ஓ-என
பிராணநாதனே - மெய்ஞ்ஞானபோதனே - தெய்வவாக்
கின்படி நடக்கும் - என்னை நிந்தித்தாலும் துன்மார்க்கி
யென்று நிந்தித்தாலும் எனக்குச் சந்தோஷமேயாம்
ஏனென்றால் உம்முடைய சொந்தை நீரெப்படியே
ண்ணினும் துன்பமுறப் பண்ணினும் . வசியில்வந்
தபடிவைதாலும் - அல்லது சித்திரவதை செய்தாலும்
செய்யலாமென விடோபா ஓ-ஓ இதென்ன பிராமணன்
யாத்திரைபோய்ச் ருத்திரனுனதுபோ லிருக்கின்றது
நாம்வந்த எத்தனமென்ன பகவான்செய்தமாயமென்ன
இனி இவளைச் சந்தோஷவார்த்தைகளால் திருத்தி-மன
துவைராக்கியத்தை விருத்திசெய்யலாமென் றெண்ணி
ஓ-கோதையே விவேகமில்லாப்பேதையே-உன்னுடைய
சவுந்தரியத்துக் குகந்த மணாளன் நானுமா உன்னை
நான் மணம்புரிதல்சந்திரனைக் கிரகணம் பிடிப்பதொக்
கும் - உன் காலழகுக் கிணையாகாவென்னை யிச்சிக்க
உனக்கு லச்சையாயிருக்கவில்லையா சகல லட்சணங்க
ளும் வாய்க்துகண்டோர் மயங்கும்படியான மேனியுள்
ள நீ அவலட்சணமாயிருக்கு மென்னைக் கணவனுக்கினை
க்கலாமா விவேகமற்ற உன் தாயை அறிவீனந்தானு
னை எனக்கு மணஞ்செய்ய யோசித்தார் நீ விவேகி
காமணியாயிருந்தும் பிச்சைக்காரனுகிய என்னுடன் வ
ரச்செய்யலாமா யாராவது வந்தால் கெக்கலிகொட்
டிக் - காங்களைக்கொட்டி - மந்தகாசமும் பரிகாசமும்
செய்வார்கள் . வாயிலவந்தபடி வைவார்கள் - சீக்கிரம்
வீட்டிற்குப் போபோவென் றனைத்தப்பிப் போக ருக்மா
பாயி ஓ-ஸ்வாமி - கற்புள்ள ஸ்திரீ-இவனே நமக்குகந்த
கணவனெனத் தீர்மானித்தபின்-அவன் முடனுய்த் தனி

திருமாடபவனும்-ரோகியைக் குருபியாயிருந்தாலும் அவனையன்றி மற்றொருவன் - மன்மதனுக் கிணையானவனாயிருந்தாலும் இச்சைகொள்வாளா நளாயினி தன் கணவன் குஷ்டரோகியாய்-குரூபியானபோதும் வெறுத்தாளா அம்பா-பீஷ்மனை இச்சித்து - அவர்மறுத்ததால் மரணமடைந்தாளன்றி மற்றொருவனைப் புணர்ந்தாளா தமயந்தி நளமகாராஜனைப்போலவே தேவர்கள்வந்து பலவித தந்திரஞ்செய்தபோதும் - அந்-நளமகாராஜனையன்றித் தேவர்கள்மேலாசைகொண்டாளா இந்த ஞாயங்களெல்லாம் மறந்த நான் - என்னுயிர் நீங்கினும் - வேறொருவனைத் தொடுவேனு நாகவேதனைக்குட்படுவேனுவென, விடோபாதே-தெய்வமே-என்னைப் பறிக்காளாக்கிவிட்டாயே-கடாமற்கட்டாயே-இந்தவம்புக்கென்னசெய்வேன் எப்படி யுய்வேன் என்று அக்கித்துச் சற்றே சோரம்பிறந்து தன்னைமறந்து ஓ அறிவையே - அறிவில்லாத் தெரிவையே - என்னை நல்லதனத்தால் விடுகிறாய அல்லதென் சாபம் பெறுகிறாயவென்று கடுகடுத்துரைக்க ருக்மாபாயி - அவர்பாதங்களிற்றொழுது கண்ணீர்விட்டழுது ஓ-ஸ்வாமி நல்லோர்களை அண்டின புல்லோர்களும் மேன்மையடைவார்களென்றபடி தேவரீரையடைந்த அடியாளை - கருணையுடன் ரக்ஷித்தாலும் - அல்லது சாபமிட்டுச் சிட்சித்தாலும் - ஏற்றுக்கொள்ளுகிறேன் - உமது சித்தம் என்பாக்கியம் என்று அடிபெயர்த்து வைக்காமல்மறுத்து ஓ வென்றழ.

அதனால் - விடோபா கோபங்கொண்டு தூஷணை வார்த்தைகள்விண்டு மூகமறியா வென்சத்தைப்பிடித்த மூதேவி உன்னையும் அடைவாளா ஸ்ரீதேவி நீயிக்கு வினையிலே கண்ணீரென்கிற பழமொழிப்படி தாரைதாரையாகக் கண்ணீர்விட்டழுகிறும் அடிக்கடி காலில் விழுகிறாய் சீகாயே துர்க்குணமுள்ள பேயேயென்றாக்கக்கூவிச் சொல்ல, இவ்வாவத்தால் ஸ்ரீதோபந்து மவர்மனைவியும் விழித்து வெளியிலோடிவந்து விடோபாவிடஞ்சென்று எதிரில் நின்று ஓ வேதமோதியவிப்பிரனே நிஜகளித்த சப்பிரனே யாருமறியாமல் இப்பெண்ணை வெளியி லழைத்துவாலாமா என்கருக்குத் தன்பத்தனாமா வென அவ் வாக்கியத்தைக் கேட்ட விடோபா செவிகளைக் கரங்களால் மூடிக்கொண்டு அரி-அரி-என்னவார்த்தையைச்சொன்னீர்கள் இப்பெண்ணை காளிச்சித்திருப்பேனுகில் கோத்துவந்தவர் முகத்தைப்பாக்காத லோபியும் குருவைக்கண்டெழாத கொடியனும் கம்பிளேனென்கிறவர்களைக் கைவிட்டஊனும் ஏழைகளோடெதிர்த்த கோழையும் ஆடிப்போடெதிர்த்துப் பேசுமடவனும் கர்த்தனைத் துதித்துத் திக்க சடனும் தந்தையைக்கொன்ற சண்டாளனும், பரஸ்திரீ கமனஞ்செய்யும் பாவியுஞ் சகோதரியைப் புணரும் சபலனும் - பரபுருஷனையிச்சிக்கும் பாவையும் தெய்வத்தை யிகழ்ந்தியனும் - இபருதனைநாடினபேயனும் - குருவை நிந்தைசெய்பவரோடு கூடினவனும் பேடியாயிருந்தும் பெண்ணை மணம்புரிந்த பிரட்டனும் ஒருவர் குடிவைத்துமிக்க நிந்தனையும் பெரியோர்களின் மனம்நோகச்செய்தவனும் - பிட்சைகெடுப்போரை வைதவனும் ஜபமிடாதுண்டவனும் - அறிவுள்ளோர்மேல் விரோதங்கொண்டவனும் குண்டனிலவோ செய்பவனும் - கோளைசெய்துவருபவனும் - போதிறதிரும் பேசியென்னடைந்துரிகோபந்துவைநோக்கி உமரால் இவ்வளவுமேன்மை பெற்றது போதும் இப்பட்டில் என்னை விட்டுவிடமயாவென் றவ்விடம் விட்டுப் போக அப்போது ஸ்ரீதோபந்து - ருக்மாபாயைப்பார்த்து அம்மா பதிவிரதாசிகாமணி - விழித்திருக்கும்து விடாச்சலத்தொடு இவரைப் போகாமற்றடுத்து எனக்குவரும் வியாகுலத்தைக் கெடுத்து என்னைப் புனிதனுக்கிறுவே இனி நீ விட்டிற்செல்லு நானிவருக்குச் சமாதானமுரைத்து - அழைத்துக்கொண்டு வருகிறேனென்றதைந்து-விடோபாவைநோக்கி அப்பா என்னருமை மருமகனே - பகவான் உன்சொற்பனத்தில்வந் தோதவுரைத்தாரா இல்லையாவென் றுகேட்க விடோபா - பகவான் பிரத்தியட்சமாய்வந் தென்னை விவாகஞ்செய்துக்கொள்ளும்படியாய்ப் புன்றுறும் செய்துக்கொள்ளமாட்டேன் ஐயாதுவேலையைப் பாருமையாவென் றதிசிக்கிரமாய் நடக்கச்

ஸ்ரீதோபந்து மறுத்து அப்பா விடோபா கடவுள் வாக்கியத்தை மறுத்தல் மிகவுங் குற்றந்துக்கிடமாகும் நீ யறியாதவனல்ல - பலதரஞ்சொல்லச்சந்தோஷமாய் வந்து - ருக்மாபாயை மணந்து - இச்சையானவிடத்திற்குப் போகலாம் - வாருமையாவென் றுசாத்தைப்பிடித்திழுக்க விடோபாஸ்ரீதோபந்துக்குவந்தனஞ்செய்து ஐஜபா என்னுயிரைக் கொடுக்கிறுவேன் -இக்காரியத்திற்குமாத்திரஞ் சம்மதிப்படமாட்டேன் - மன்னித்தருளுமையாவெனச் ஸ்ரீதோபந்து அப்பா விடோபா உன்னால் என்மகளைபிழுக்கவிடலாமிற்று-ஏனென்றால் நீ யென்புத்திரியை மணம்புரியாமல்மறுத்துப்போவாயானல் என்புதல்வி உடனே மரிப்பாள் - நானும்பிராணனிழந்துவிடுவேன் இதனால் உனக்கு ஸ்திரீ ஹத்தி பிரம்மஹத்தி நேரிடும் ஹத்தியை மேற்கண்டபின் உன் யாத்திரை பலிக்குமா தபஞ்சிறக்குமா மோட்சமடையக்கூடுமோ வென இவ்வசனங்களைக்கேட்ட விடோபா



யாபருத்து ஓ-கர்த்தனே - பதிதபாவனே - அநாதரக்ஷகனே - கிருபாகரனே - என் பிரதிக்கினை இப்படிக்கெடுக்கலாமா இவரென்னைப் போகாமற் றடுக்கலாமா விடாச்சலத்தொடுக்கலாமா சாபம் கொடுக்கலாமா வென அழுத, அப்போது கடவுள் அசரீரியாய் ஓ-விடோபா இவ்வுத்தமப் புத்திரியைமணந்து - சுகமுற்றிருப்பாய் என் வாக்கை மறுக்காதேயென்றுரைக்க-விடோபா-அவ்வாக்கியத்தைக் கேட்டுத் திடுக்கிட்டு இனி யென்னசெய்வேன் தெய்வமேயென் றசைவற்றிருக்க ஸ்ரீதோபந்து அருள்வாக்கைக்கேட்டுப் பொங்கி-ஆனந்தங்கொண்டு - விடோபாவின் கரத்தைப்பிடித்தழைத்துக்கொண்டுவந்து இப்போக்கொத்த பாமபக்தருக்கென்புத்திரியைக்கொடுக்க என்னபாக்கியஞ்செய்தேனே ருக்மாபாயி என்னதவஞ்செய்தாளோவென்று உடலைப்பூரித்து-இருவரையுஞ் சிங்காரித்துச் - சகலபந்துக்களுடன் - சந்தோஷமாக் கலியாணஞ்செய்து-ஆனந்தமடைந்தார் விடோபா விவாகமான மூன்றுநாள் மாமனைப்பார்த்து கரங்களைச்சேர்த்து ஓ-ஐயா வேண்டுமென்கிறவன் கழுத்தில் விலங்கிட்டதுபோலவும் முறையோவென்றுவெறுப்பவனுக்கு முத்திரைபோட்டதுபோலவும் எனக்கு மணஞ்செய்து மனமகிழ்ந்தீர் - கடவுள் வாக்கியப்படியே முடித்துவிட்டது என் யாத்திரைகெட்டது பதியாத்திரை செய்வதற்குள் பந்தத்துக் குட்பட்டேன் வைராக்கியங்கெட்டேன் தடைசெய்து விடைகொடுத்தால் மற்ற யாத்திரைசெய்துவருகிறேன் - லாபம்பெறுகிறேனென்றுரைக்கச் ஸ்ரீதோபந்து மருகனைநம்பாக் குறைய[illegible]யை கூடவே பிரயாணப்பட்டு-பண்டரபுரம் - அ[illegible]மேறு திருவேங்கடம்-கோகர்ணம் - கோ[illegible] ராமேஸ்வரம் - சிதம்பரம்-தட்சிணகைலாசம் - [illegible] - சுப்பிரமணியம் தணிகாசலம் - ஸ்ரீ[illegible]ற்பாபுரம்-முதலான திவ்விய ஸ்தலங்களுந் தீர்த்தப்புண்ணிய நதிகளில் ஸ்நானஞ்செய்து - அவ்வாசைதீராய மடைந்தார்கள் விடோபாமாமனார்வீட்டையடைந்தாலாகாமோமறுவப்பமடைந்து ஓ-ஐயா என்தந்தையைப் பிரிந்து-வெகுநாளாயிற்று - விவாகமானதுந்தெரியமற்போயிற்று ஆகலால் காயத்தினம் ஆபேதாருக்குப் பிரயாணமாக வேண்டுமெனச் - ஸ்ரீதோபந்து அப்படியே யாகட்டுமெப்பாவென்று மறுநாள் காலையில் சகலருடன்பிரயாணப்பட்டுச் - சிலநாள் நடந்து-பலகாதங்களைக்கடந்து-ஆபேகாமைச்சேர்ந்து களிகூர்ந்து - வீட்டிற் பிரவேசித்துச் சம்பந்தியையுபசரித்து - மிகவும்நேசித்தார் விடோபா - மாதாபிதாக்களின் மலரடிகளிற் பணிந்து அட்சிகளிரண்டையு மணிந்து - பற்பலவிதங்களாத் தோத்திரஞ்செய்ய லுற்றார்.

ஸ்ரீதோபந்து மனைவியும்-மகளும் வந்தனஞ்செய்து நின்றார்கள் - தநயனைக்கண்ட கோவிந்த பண்டிதனும் - சிருபாயும்-மகனைக் கட்டியணைத்து முகமிட்டு ஆனந்தமேவிட்டுத் - தங்களைமறந்து-பின்னும்தெளிந்து அப்பா மகனே அழகானமுகனே உன்னுடன்வந்த இவர்கள் யாரப்பாவென்று கேட்கச் ஸ்ரீதோபந்து விடோபா யாத்திரைவந்ததும் தன்வீட்டில் தங்கினதும் பகவான் விருவர்சொற்பனத்திலும் வந்து பகர்ந்ததும் விடோபா வெறுத்ததும் பகவான் அசரீரிவாக்காலுரைத்ததும் - விவாகமானதும் - பின்னும் யாத்திரைசெய்ததும சவிஸ்தாரமாகவுரைக்க, அதுகேட்ட சிருபாயிருமாபாயின் முகவிலாசமும் - அழகுமேனியும் - அடக்கமொடுக்க முதலானவைகட்கு மெச்சி வைத்தகையைப் பார்த் தானந்தமடைந்த கௌசலைபோலவும் - பாஞ்சாலியைப்பார்த் தப் பரிவுகொண்ட குந்தியைப்போலவும் சந்தோஷித்து மருகியையும்-அவள் மாதாவையும்-அன்புடன் ஆதரணைசெய்தாள்-கோவிந்தபண்டிதன் ஸ்ரீதோபந்துக்கு வந்தனஞ்செய்து ஓ-உத்தமரே யுமதுநேசமுமாலல்லவா என்னருமைப்பாலனைக் கண்குளிரப் பார்த்தேனுமக்கென்ன உபகாரஞ்செய்யப்போகிறேன் - மகனைக்கண்டகளிப்பா லுமக்கு வந்தனஞ்செய்யாமலிருந்தேன் - இதைக்குறித்து மன்னித்தருளுமையாவெனச் ஸ்ரீதோபந்து - கோவிந்த பண்டிதரைப் பணிந்து உமது குமரப்புத்திரனுக்கு என் சிறுமியைக்கொடுக்க என்ன பாக்கியஞ்செய்தேனே எதுதவஞ்செய்தேனே கடவுளசரீரியாய்ப் பலருமறியத் திருவாய்மலர்ந்த திருவாக்கைக்கேட்டபோதடைந்த களிப்பிலும் - உம்மைக்கண்ட களிப்பே அதிகமென்றெண்ணினேன் - பரமசாதுவாகிய உம்முடன் சகவாசஞ்செய்யக் கூட்டிவைத்த குருடாட்சம் - என்றுரைத்துச் - சகலரும் - அன்போனயமாய்க் களிப்புற்றிருந்தார்கள்.

கேட்பர்களே சித்தர்களேயென்று பின்னுஞ் சொல்லத்தொடங்கினர்.

விடோபாவின யாத்திரை

அத்தியாயம்.

முற்றிற்று.

உ - வது - சன்னியாசிவிடோபா

அத்தியாயம்.

வாருங்கள் சித்தர்களே இவ்விதமாயனேவருஞ்சிலநாள்நன்றுமையோடிருந்து சிநோபத்தும்- அவர்மனைவியும்- கோவிந்தபண்டிதரிடம் விடைபெற்றுக்கொண்டு ருக்மாபாயிக்குச்சொல்லவேண்டிய புத்திமதிகளை யுரைத்து அலங்காவதியைச் சேர்ந்து- களிகூர்ந்திருந்தார்கள், இங்கே-விடோபா-மனமாய்- ஐந்தாறு வருஷங்களாகியும் ஒர்நாள் ருக்மாபாயியைக் கண்ணெடுத்துப் பாக்காமல் மாதுலக்குத் தோக்காமல் வேதாந்தவிசாரணைகளாலும் சாதனங்களாலும் வைராக்கியமடைந்தும் சாசுத்திரேயப்தத்தையடைந்து எப்போதுசந்யாசியாவோமென்காலத்தை இந்தன்னை மறந்திருப்போமென் றேக்கங்கொண்டிருக்கிறகாலில் வருஷகாலம்-சீதகாலம்-வேனிற்காலம்- என்னும் மூன்றுகாலங்களுக்குச்சமானமானபாலியம்-யௌவனம்- விருத்தாப்பியமென்னும்மூன்றுபருவங்களுக்கேக்கத்துடையதுபோலகோவிந்தபண்டிதனும் விருபாயும் மூப்புப்பருவ மடைந்தும்- மழை-குளிர்- வெய்யிலென்னும்-மூன்றுகாலங்களிலும் - ஒரேவிதமாயிராவினத கன்னத்தைப்போல - பால-யௌவன-விருத்தமென்னும்மூன்று பருவங்களும்தானேயிய ஆத்மாவுக் கில்லையென்றுறுதிகொண்டிருந்தும் ஜனித்தமரிக்குமென்னுமகாரணத்தாலசிதியதிகளிருவரும்சமாதிநிஷ்டையிலிருந்தபடியே தேக வியோகமடைந் துமீளாக்கதியடைந்தார்கள் விடோபா தாய்தந்தையிருவரும் கைவல்லியமடைந்ததற்கு வியப்படைந்து செய்யவேண்டிய கிரியைகளெல்லாஞ் செய்துமுடித்துக்கிலநாளிருந்து ஒருநாள்தன்மனைவியைநோக்கி ஓபெண்ணே நானென் தாய்தந்தையின் அஸ்திகளைக்கொண்டுபோய்க் கங்கையில் விடவேண்டும் நான்போனபின்னிருந்து நீ தனித்திருக்கமாட்டாய் ஆதலால் உன்தந்தையிடங்கொண்டுபோய்விட்டுப்போகிறேனென்றுரைத்து தன் தந்தையாயபிறந்தவிடத்தைக்காணடித்து உனக்கெவ்வளவு இச்சையோ அவ்வளவு வைத்துக்கொண்டு மற்றவைகளெல்லாம் இன்றையதினமே அதிதிகட்களிப்பாயென்றுரைக்குருக்மாபாயி கணவன்கட்டளைப்படி அன்றையதினமே வீடுமுதல் வைகளையும் அதிதிகட் கர்ப்பணஞ்செய்துவைக்கவிடோபா-ருக்மாபாயிமகிழ்விய தவிரமற்றவைகளையெல்லாந்தானுஞ்செயதற்கிசைந்து இவனுத்தமியேயென்றுமகிழ்ந்து ருக்மாபாயையுமழைத்துக்கொண்டு அலங்காவதியின்கேகாதிகளைக்கொண்டுபோகச் சென்று அலங்காவதியையடைந்து மாமனார்வீட்டிற்போவேமெத்துமாமா ன்மாமியைப்பூசித்துத் தன் கருத்தைப் புகலச் சிநோபத்தமிகளாசிருந்து போய்வாருமப்பாவென ருக்மாபாயி விரக்தர்களையலையைந்து மாவுடன் தன் கொழுந்தையவைராக்கியத்தைப்பகர்ந்து அவர்சம்மைப்பிரிந்து போகுமினிவருவதசாத்தியம் ஆதலால் காமனேவருங்கூடத்தொடர்ந்துபோவதேகஉத்தமமென அதுசமயத்திநோபத்தாக்குமெதிர்த்து விடோபாவை இனிவிரியமவிருக்கவிடோபாசிநோபத்தைவணங்கிய பன்முறைநமக்கைக்குப்போகவிடைகேட்டு தனித்துப்போகவிடைகொடுக்கவையமல் சிந்தாக்சேர்த்துப் ஞான விசலில் யோகிக்கின்றார் அதனவுதமது காய்ந்தைத மிகுந்துப் போனதைப்பிசத்தியட்சமா யுபிந்திருத்தம்மேனைமிகுந்தமனத்தெளிந்திருத்தம போட்சமடையும் மார்க்கத்தைதாடாமல்சத்துருவைத்தேடாமல் பலசேசங்களி லோடாமல்சற்சனசங்கத்தைக்கூடாமல் மேலவருமெமவாதனைக்குவாடாமல் வெகு நாளைய் சமுசாரத்தி லிருந்து விட்டேனே ஐயகோட்டேனே ஒருகாலினி யெதுக்கு என்னவென்றுசொல்லுவேன் சந்தியாவனை எப்போது கொல்லுவேன் அகமமதைக்கை எக்காலத்தில் வெல்லுவேன் அதற்குமவிட்டையி லெத்தினஞ்செல்லுவேனை ஆ ஆகாவினி அகாக்கனமும் சமசாரத்திலிருக்கலாகாது அநித்தியத்தைநித்தியமென்று அநித்தியத்தைநித்தியமென்றும்பிரிக்கும் அறிவீனர்களன்றி வேறுமுடர்களுமுண்டா எவ்வாச்சென்மங்களிலும் இத்தமானிடஜென்மம்அரிதானதல்லவா இதனைப் பிறப்பெடுக்க என்னதவஞ்செய்தேனோ இப்பிறவியாசாறல் இனிமேற்பிறவிகிடைக்குமோ இப்பிறப்பேயிடை ... பிறப்புவிடப்பிச்சங்கடத்தவிரவும் ... மேற்பிறப்பில்லாமோட்சமடையவேண்டுமெனவென்மதிகொண்டோர் ... கென்னகாரணத்தாலிருக்கின்றனரோ இதைத்தான் மாயையின் சாமர்த்தியமென்றுரைக்கத்தகும்.

அல்லாமல் மானிடனாயோரத்தின் பொருளறிந்தும்வெளிகளே, போனதமாயையின அமரத்தைவேயாற்றி மறவிக்குவாக்கிப் பலஜென்மங்களைக்கொடுத்துச்சனனமரணமெனும் சுழலிலகப்பட்டு ழைமைப்படியாகச்செய்யும் சாமர்த்திய மோசமார்த்தியம் மாயைக்கடத்தல் அரிதென்றமெபரியோர்க ளுரைப்பதினுதேவாம்அம்மையுமதித்தியகாயத்தைமெய்யென்றிருமாபடைக்குளமனுக்கில்லையாகும் பேதைமானிடனைப்போலவாவிருக்கலாமா கோடிபொன் னளித்தாலும் அடையாபேரித்திப்பதென்பயத்தமாமாசனமடைவதற்குமயாமுற்ப வப்புண்ணியபலத்த நகிடைத்தமதுவைவி



புன் நாளேயின்றுளைகக் கழிக்கலாமா அந்தோ நாடு க்கவெண்டுமென்னே பண்டைபதாத்தமுதலானதும் கூடவருவதுண்டா மறுபிறப்பக்காவது உதவியாகுமா என் அஞ்ஞானபுத்தியாலல்லவோ மெய்ஞ்ஞானத்தைத்தேடாமல்போய்ஞானத்தை விட்டேனென்று பற்பலவேசனைசெய்து தன்மனைவியைவிளித்துப்பெண்ணே இனிமேலக்கிவ்வாழ்க்கை வேண்டியதில்லை நான் சந்நியாசியாகவெண்ணங்கொண்டிருக்கிறேன் வஞ்சகஞ்செய்துப்போகும் கொஞ்சமனிதனைப்போல உனக்குப்புலப்படுத்தாமல போகக்கூடாதென்றெண்ணத்தை யுரைத்தேன் ஆதலாலுதவமானதே உன்தந்தைதாயாரிடமினிவி என்மனதின்படிபோக விடை கொடுமென்றுரைய ருக்மாபாயி பதியின் வாக்கை மறுத்துரைக்கக்கூடாக்கொள்கையால மகாபக்தயெனவணங்கித்தன்தாய்தந்தையருக்குரைத்து வாட்டமுகத்துடனின்றான் சிநோபத்து விடோபாவைநோக்கி அப்பா மருமகனே இளமைப்பருவமுள்ளாய் இப்போதே சன்னியாசியாகவெண்ணங்கொள்ளலாமா சிறியமுள்ளமனைவியாவிப்படியும்வின்னலாமா அன்றிஎழுபத்தைத்துவயதுக்கு மேல் சந்நியாசியாகவேண்டுமென்றுடையதம்முறையிதெறதம் தந்தக்கீ இப்படிசெய்யக்கூடுமா எவ்வகைகாலத்தில் இந்திரியங்களிதத்திலணையது கூடாதுழுக்கமலவை ருகாடல்வாதாடல்-முன்னம் இனிப்பாத்தோன்றிப் - பின்னேப்படி இடையூதகட்டமுண்டாக்குமோ அதுபோலவும் கோபத்தாலயாத்திரைபோய் தாபத்தையடைவதேப்படியோ அதுபோலவும் - சன்யாசமாதும்போதவெகு ... வேயிருக்கும் அனேகஇந்திரியசேஷ்டையாதல் - அதக்கணவேஷ்டையாதும் வரட்டமடைய ... அப்புறவிலைமயடைத்தவனே சன்யாசம ... பிற ... தாங்கள ... சக்கினமாய்ப்பத சன்யாசமாகும் ... க்ஞானியாதல் வேசனைதென ... தந்தாருக் ஞானியென்கிற பெரியோர்கள் வாக்கியத்தின் மாமதைத்தன்ருமுதித்தப்பாரு பூசையின் மனசூசையசிவேஷ்டையாது போல-சன்யாசிகளில் மனோகளையாகிய சிரேஷ்டமுள்ளவனுதும், மாயையைக்செயித்தனதனும் - ஓர் மங்கையால் பங்கமுறுன் பிம்மகிருஷ்கோத்திர ஞ்சிருதுசெய்து விசவமித்திதமுப-ஒருகொயால் வேதைதாற்றுன சகருவான பிரகஸ்பதியும் அசாம் குருவான சுக்காச்சாரியும் மாதர்களாசைகுள்ளாமுனர்கள். மாயாதீதரான திரிமூர்த்திகளையு அநிவையமாசைக்குள் சிக்குர்கள்-எமனைச் செய்கதாடுபடுமிக்கலாமன்றி - மாயாச்செயித்தவ மிகவுதாலபம் சம்சாரத்திலிருந்துகொண்டே சிரேஷ்டமடையதுயோக்கியமல்ல நீர் தெரியாதவரல்ல பலதரம் நான் சொல்வேனென்கிற பலவாக்கியங்களுரைக்கும் மாமனை விடோபாவணங்கி ஓ-ஐயா யுத்தகளத்திற்சென்றவீரன் பகைவனைச் செயிக்கக்கூடாமற் போனாலும்-புறங்காட்டியோடாமல் போர்புரிந்து - மாணமடைந்து - வீரசொர்க்கமடைவதுபோல் - அடியேன் - யதியானபின் தன்னைமறந்தாச் சஞ்சலமுயிருந்தாலும் - அதக்குவிபுறக்குவிதலுக் கிடங்கொடுக்காமல் - மனமென்னும் பகைவனை யெதிர்த்து வெதிர்த்து மேன்மையையே யடைவேன் - பரியால் வாட்டமுற்ற சிக்கமானது அருகிலிருக்கும் - இரைகலைக்கொன்று புசிக்காமல் யானையையேதேடுவதுபோல - விரகமடைந்தான்-பேரின்பகிட்டாமற்போனாலும்-அதையே நாடியிருப்பேனன்றிச் சிற்றின்பத்தைக் கோருவேனு மலத்தைப்பரிமளமென பூசிக்கொள்ளும் அறிவீனனைப்போலத் தாக்கச்சம்விசம் தோகையர் போகத்தைக் கனவிலுஞ் சிந்திப்பேனு வென்கிற பலமொழிகள்புகன்று அஸ்திகளெடுத்துக்கொண்டு மாமன் மாமியாரைப் பணிந்து வைராக்கியத்தாற்றுணிந்து யாருரைத்தும் கேட்காமல் விலகுத்து - வாரணசியைநோக்கிப் போகலுற்றார்.

அதனைக் ருக்மாபாயி அலக்கணும் றழுதுக்கொண்டே மணான் பின்தொடர்ந் தோடலுற்றாள் அவையை - தவிசிரிக்கோலமா போவதைக்கண்ட தாயுந்தந்தையும்பின்தொடர்ந்தோடி மனமுருகி வாடிவிடோபாவுக்கனந்தம்பயார்த்தைகளுரைத்துப்போகாமல மறுத்தார்கள். விடோபா அவ்வசனங்களைக் கேட்காமல் சற்றுந்தங்காமல் போக ருக்மாபாயி - தன் கொழுனன்றுன்களில்வீழ்ந்து பதைத்தாழ்ந்து ஓ என்பிராணநாயகா-உமதைப்பிரிந்த தனிருடனிருக்க வெனுலாகுமா ஒருவாசைன் குறைபோருமா வென்று கணைக்குமுத்தொடக்கினள், விடோபா ஓ பெண்ணே நீ புதிவாக்கியமடைக்கான் சதியானல் என் வாக்கைத் தள்ளாமல்-மறுத்திரமொழி சின்னாமல் தந்தையின்பவிருவென்றுரைத்து அதிவேகமாய் நடந்து மறைந்தார் ருக்மாபாயி அவ்வாக்கியத்தாற் கட்டுப்பட்டு மாமனைவிட்டு விலகநிற்சாய்ந்து மூர்ச்சையடைந்தாள் அதைத்தெரிந்த தாயுந் தந்தையும்-அலக்கணுற்று ருக்மாபாயுக் குபசாரஞ்செய்தெழுப்ப ருக்மாபாயி மூர்ச்சைதெளிந்தெழுந்து தந்தையின் முனிவிழுந்து இனிமேன்னசெய்வனென்றலம்புதல கண்ணீர்ததிக்கொழுதுதனாபிராணனை விட்டிவதற்கு முயற்சிக்கலானாள் அதனைக்சிநோபத்து மிகவுந்தம்க்கு ஓ-அம்மா பதிவ்ரதா

சிரோன்மணி விருத்தாப்பியப் பருவமுள்ள எங்களைப்பாதுகாக்கவிட்டு நீ உயிர்விடுத்தால் நாங்களும் உயிர்பிரிந்து பிராணனைவிடமாட்டோமா இத்தோஷமும் உன் மணாளனைச்சேராதா இப்படி கணவனுக்குக் கர்மசம்பவிக்கச் செய்யும் காந்தை புத்தலி யாவாளாவென ருக்மாபாயி ஓ-என் தந்தையே கணவனைப்பிரிந்த நாதுயிருடனிருப்பதனுல் பிரயோசனமேது பிராணநாயகனைப் பார்க்காமல் சாவிருக்கவேமாட்டேன் அவரைத் தேடிப்போகின்றேனென்று நடக்க, ஓ கோபத்து மறந்து ஓ-என்னருமபுதல்வியே இறந்துபோன சத்தியவானை விரதத்தாலெழுப்பிய சாவித்திரியைப்போல் நீ-இவனுடன் கௌரிவிரதத்தை அனுட்டித்து வருவாயானல் - உனது கணவன் உன்பாலடைவதற்குத் தடையில்லையேயன்றி பெண்கள் வைராக்கியத்தின்முன் ஆடவர்வைராக்கியம் அணுவுக்கிணையாகும் இறந்தவனை எழுப்பியவிரதம் கணவனைக் கைவசப்படுத்தமாட்டாதா-ஸ்ரீ பரமசிவனை மணஞ்செய்ய ஆசித்தபார்வதியும் ஸ்ரீகிருஷ்ணனை ஆசித்த ருக்மணியும் - கௌரிவிரதத்தாலல்லவோ கோரிக்கைகளிடேறிக் களிப்புற்றார்கள் அவ்விரதத்தை நீயு மனுட்டிப்பாயானல் அகத்தியமுன்கொழுநன்-இங்கடைந்து உன்மனதுக் கிசைந்திருப்பான் என்று விரதமிருக்குந் தன்மையை யுரைக்க ருக்மாபாயி சந்தோஷித்து யப்போது கணவன் பின்தொடர்வதால் பதிவிரதத்தைக் கடந்தவளாவதன்றி அவருடனன்புற்றிருப்பதற்குங் கூடாது விரதமிருந்து மணாளனைச்சேர்வதே உத்தமமென றுறுதிகொண்டு விரதானுஷ்டானத்தில் பசுமாத்தாணிபோல் விருப்புற்றிருந்து காலங் கழிக்கத்தொடங்கினள். விடோபாவோ அலங்காவதியை விட்டு நீக்கிப் பலகாடுகளையும் நாடுகளையுந்தாண்டி வாரணாசியையடைந்து கங்கையில் ஸ்நானஞ்செய்து மாதாபிதாக்களின் அஸ்திகளைப் பாகீரதியில் விடுத்துக் காசிவிசுவநாதரைப்பணிந்து ஞானசாரியரை நாடிச்-சென்றுள்தேடி-அங்குமிங்கும சாந்தியும் மாயாதீதராயும் தேகாபிமானமிறந்தவராகியும் பிரமானந்தம்நிறைந்தவராகியும் விளங்காநின்றஸ்ரீபாதஸ்வாமிகளைக்கண்டு ஆனந்தங்கொண்டு அவரை வலம்வந்துபணிந்து அவர்பாதங்களிற்றன திருநயனங்களை யணிந்து ஓசாந்தனே உபசாந்தனே ஞானவேந்தனே வேதவேதாந்தனே நாதநாதாந்தனே போதாந்தனே ஏகாந்தனே எனத்தோத்திரஞ் செய்து அழுதகண்ணுந் தொழுதகையுமாய்நிற்கும் விடோபாவை ஸ்ரீபாதஸ்வாமிகள் அருட்கண்ணுற்பார்த்து மாரபுடன்சேர்த்துஓபவபக்தாசனே அருள்முகவிலாசனே என்னைப் பரப்பிரமமாய்ப் பாவித்துஅன்புடன் சேவித்துப் பலநாமேன் தொழுதிருப்பகண்ணீர்விட்டேனழுதிருப் உனக்கென்னகுறைநேரிட்டது உளைப்பாயப்பாவென அவ்வாக்கியத்தைக்கேட்ட விடோபா களிக்கடலிற்படிந்தவனுய் ஓ-என் சத்குருநாதனே மெய்ஞ்ஞானபோதனே-பவப்பிணிக்கயர்ந்தவந்து உமதுபக்கலடைந்தேன் பவசாகரத்தைக்கடந்தேன் முத்தியுமென்னைக் காப்பாற்றுமையா - களங்கமில் தூய்யாவென்றுபோற்ற ஸ்ரீபாதஸ்வாமிகள் இந்த நானிடஜன்மத்தா லுனக்கென் அவஸ்தைநேரிட்டது - இதோ சகலமும் சந்தோஷமாய் விஷயபோகங்களை அனுபவித்துக்கொண்டு - இறவேமேலானபோகமெனவிரும்பி களிப்புற்றிருக்க நீ மாத்திரம் துக்கமென்றேற் வெறுப்புற்றுயென.

விடோபா - ஓ ஸ்வாமி விஷயங்களென்னும் தேள்களும் இந்திரியங்களென்னும் சர்ப்பங்களும் காமக்குரோதங்களென்னும் வியாக்கிரங்களும் எண்ணங்களென்னும் மர்திகளும்-அகங்காரமென்னும் யானைகளும் - அபிமானமென்னும் முட்பன்றிகளும் இச்சையென்னும் கோளரிகளும்-அஞ்ஞானமென்னும் இருட்கூட்டங்களுஞ்சூழ்ந்த தேகமென்னும் காட்டில் அகப்பட்டுக்கொண்டு தப்பிப்போக வழியில்லாமல் வெருளாளமாய் வருந்தமுற்றிருக்குமென்னை இக்கணமே தேவரீர் பாதுகாக்கவேண்டுமென்று பணிய, ஸ்ரீபாதஸ்வாமிகள் - அப்பப்பா இவ்விஷயேந்திரிய காறுதிமிருகங்களைக் கண்டிக்குங்கட்கமும் அஞ்ஞானவிருளைநீக்கும் மார்க்கமும் - அறியாமல் இதையருளும் தேசிகனிலாமையைாலே வெருளாளாய்த் தேறுந்திரிகிறேன் என்னைப்போல் நீயும் கொஞ்சவர்தபோதே தக்கஜயங்கதாயோ இனி யிதைப் பருத்துணர்ந்தால் வேதேதனும் கேள் தருகிறேன் நீ, விடோபா அக்கரளை புக்காணங்களை யொழித்தும் - உபாயமோஸ் நமதிஷம் இருபைகூர்த்தால் நில்லாங்கொடுத்தேயாகும் ஆகலால் ஏழைமைய வருத்தும் இந்திரியங்களை வெல்லும் அந்தக்கரணங்களைக்கொல்லும் தந்திரவித்தையை மாத்திரம் தந்தருளுமையாவென்றுவணங்க, ஸ்ரீ பாதஸ்வாமிகள் ஓ பவித்தனே பரமபக்தனே எனக்குத்தெரிந்த மேலானராஜ்யவசியமந்திரமுபதேசிக்கின்றேன அதைவோர் மண்டலம் ஜபிப்பாயானல் இராஜன் வசமாவான் அதனல் ஸ்திரீபோகங்களினூடும் - தண்டிகை சவாரிகளையும் நிலயான போங்களாலும் மேலான போகங்களையும் சுகமுற்றிருக்கலாம் - இதைவிடுத்துச் சன்யாசத்தையடைந்துச் சங்கடமேனடைகிறுயென, விடோபா அரிச்சந்திரன் நளன் முசுகுந்தன் புருகுற்ச புருரவன்-கார்த்தவீரியன் என்னும் சக்ரவர்த்திகளனைவரும் பட்டாபட்டைச் சாம்ராஜ்யங்களிலழிந்தனரீ பிரீதி



யுட்சமாய் அனேகராஜர்களையும் அலங்கத்தையுங்கண்டான் - இராஜபோகத்தை வேண்டுவேறு மோட்சவிருப்பமுள்ளோர் - விஷய போகத்தின்மே லிச்சைகொள்வாரோவென ஸ்ரீபாதஸ்வாமிகள் ஓ-வைராக்கியனே போகத்தை மீசந்த அப்பாக்கியனே எக்கியபலிதமந்திரமுறைகின்றேன் இதை வில்லக்ஷித்திருந்துக்கொண்டே யாகங்கள்செய்து - மேலான சொர்க்கத்தையடைந்து - ரம்பாமிர்தாதிபோகங்களைத் சுகித்திருக்கலாம் அதைநீக்கி - இதர்னுனும் அபதி ஆசிராயத்தைபேன் கோருகின்றாயென, விடோபா தேவர்களுக்கதிபதியான தேவேந்திரன்-ஓர் காலத்தில் பிரமஹத்திக்கயர்ந்து - தன்பட்டமறைந்தண்டின் நாளின் துறைந்திருந்தலக்கன்ணுத்து-மேகவாகனனுயிருந்தும்-தனதாக்கவனத்துக்கு ஜயமின்றி வாட்டமுற்று-இருந்ததன்றி - இராக்ஷதர்களால் பலதரம் பிடிக்கப்பட்டு இந்திரபதவியைவிட்டு ஓடி வெளித்திருந்தாரென்று சாஸ்திரங்களில் நுறைவிசெயதுவிக்கான்-பொன்றுலகையாசிப்பேனுவென, ஸ்ரீபாதஸ்வாமிகள் ஓ சிவனே-தவபரிபாலனே - வேதங்கள்சிரமும்-அஷ்டாட்சரத்தையுபதேசிக்கின்றேன் அதைச்சிலனுள் ஜியானஞ்செய்துவருவாயாஞல்-ஸ்ரீமந்நாராயணர் வாஸஸ்தானமாகிய பரமபதத்தையடையலாம் - இந்தப் பரமாம்சத்தையேன் வாஞ்சித்தாயென, விடோபா ஓ மாதவனே அஞ்ஞானவிருளைநீக்குமாதவனே - பரமபதமடைந்த-ஜெயவிஜயாள்வசைகசநந்தனதியால்-சாபமடைந்து இராட்சஜன்மமெடுத்து துர்மார்க்கரெனப் பேர் பெற்றதால் அதுமாலபதவியும் வேண்டிலேனென ஸ்ரீபாதஸ்வாமிகள் அரிபுனுக்கேற்க்க கொருப்பரமசிவனுர் வாஸஸ்தானமாயிய - கைலாஸத்தை யடையச்செய்யும்-பஞ்சாட்சாத்தைப் போதிக்கின்றேன் இதனுல் பரமபதநூலா மென்கிடேன சாயாசங்க-பாமசிவனுர்-பிரமனுத்திக்க யெடுத்துமுன்றதாலும் பார்வதிதட்சப்பிரமன்னர் யாகத்தில் வீழ்ந்திறந்து பர்வதராஜனுக்கு மகளாய்த்தர் செனுர் வேண்டிலேனென, ஸ்ரீபாதஸ்வாமிகள் ஓ - புண்ணியவானே அஷ்டமாமந்திரமும் - யோகப்பயிற்சியு முணர்த்துகின்றேன் - அதனுல் - சித்த புருஷனுகி - வேண்டிய சித்திகளையடைந்து கற்பாந்தரங்களினும்-நலியாத் தரம்படைத்திருக்கலாமென விடோபா - சாகாமற் கற்பதே கல்வி - செத்தாற் பிறவாமலிருப்பதே காட்சியானுலும் ஜுஷமத்தில் மோட்சமார்க்கமுணர்த்தும் ஞானதேசிகாகிய தேவரீரிருக்க யோகப்பயிற்சியைக் கற்றுக்கொண்டு பிராணனைக் கும்பித்து வதம்பித்துப்பெருத்திபட்ச ளமவாகதக் குட்டப்பட்டு வமாலைகெட்டுத் தரிபோலிருப்பதைப்பார்க்கிலும் பக்ஷவிக மேன்மையாதலாலும் - எத்தனையுகங்களிக் காயத்தோடிருக்கினும்-அதித்தியமேயாதலாலும்-தேக முத்தியடையக் கூடாமையாலும் - அசத்தியப் பிரபஞ்சம் மெச்சும் காரடவித்தைக்குச் சமானமான பலித்திகளும்-அகத்தைவளர்க்கும்மகத்துவமானதாலும் - அநுபத்துக்குகைத்தியம் முத்தியைக் கொடுக்காமையாலும் - நாமசாதிகளை நீக்கும் மோட்சமார்க்கமே அனுக்கிரகம்புரியுமையாவென்றுபணிய ஸ்ரீபாதஸ்வாமிகள் ஓ-புண்ணியவானே-வேதத்தில் முறையிடும் - மந்திரங்களையும் - தந்திரங்களையும் நீ-பதங்களையும் - இதங்களையும் நீக்கிவிடாமல் வேறேதனைக்குபதேசிப்பேன் இதற்குமேலானதொன்றுக்குத் தெரியாதுவேறே துசாலைத்தேடென் றனைத் தந்துமௌனநாட்டத்தை யடைந்திருந்தார்.

கேட்டீர்களோ சித்தர்களேயென்று ஜயபாஜித்தர் பின்னுஞ்சொல்லுவார்.

சன்னியாசி விடோபா

அத்தியாயம்

முற்றிற்று.

## ஈ-வது - விடோபாஞானோபதேச

## அத்தியாயம்.

கேளுங்கள் சித்தர்களே இப்படிஸ்ரீபாதஸ்வாமிகள் மௌனமுற்றிருக்க, விடோபா - அவரை நீங்காபிரியாமல் பலநாள்தொடர்ந்து ஓர்நாள் சோபமிகுந்து அவரைவணங்கி ஓ-என் சத்குருவே உம்மையன்றி வேறாருமே சரணமடையேன் காரணம் பதிவிருப்பாநிறைந்த உத்தமபக்திவிகளையுமன்றி மற்றைத் திரிமூர்த்திகள் வந்தாலும் வணங்குவானன்றி-இனந்தவாளா காவலனைபோக்கியனிருந்தாலும்-போக்கியமே சாவொளாசேரான் அதுபோல உத்தமன்-ஓர் ஆசானையடைந்து இவருக்கு ஞானமார்க்கந் தெரியவில்லையோக்கியருமல்லவென்று வேறுகுருவைத் தேடான் தேடிவதிருவ் மோட்சலட்சுமியைக் கூடான் - தன்பதி என்ன துர்க்குணமுடையவனுனுலும் அவனைச் சகதி

சுவரூபமாய் பாவிக்கும் விரதசீலியல்லவோ மேன்மையையுடையவள் அவ்விரதமேயன்றி மற்ற விபசாரமாகருக்கு இருமைகளிலும் இடமுமிட்டுமோ ஓ-என்னையனே - நான் அசங்கவருடைய இராஜரீகஞ்செய்து வேதோபதேசங்களும் இயற்றிய திருச்சங்குமகாராஜன் தனைக் காதிருவான வசிஷ்டரைவெறுத்து விசுவாமித்திரரையடுத்துச் - சண்டாளனுய்த் தான் காடியசொர்க்கத்துக்குஞ்செல்லாமல் - இகலோகத்திலும் இல்லாமல் தலைகீழாயிருக்கும் அவாந்திரலோகத்தில் அயர்ந்திருப்பதானுள் இச்சூசனையையறிந்த இவ்விடியேன் - நீயோ ஸனக்குகந்த ஆரியனென்று உமதாஸ்டகலபூர்த்தியின் உண்மையன்றி வேறொரடிகட் கடிமையாவேனு என்னே யேன் பரிசோதிக்கின்றீர் - உமக்குத்தெரிந்திருக்கும் பிரமத்தின் தன்மையை போதித்து - அஞ்ஞானமனதைச் சிதைத்து - மமதாகங்காரங்க ளறும்படியாகவும் பிரபஞ்சவாரியில் மூழ்கும்படியாகவும் - தேகஸ்மாணபிறக்கு இறும்படியாகவும்-கருணைகூர்க் தாட்கொள்ளுமையாவென் றிறந்து கூறும் விட்டோபாவை ஸ்ரீபாதஸ்வாமிகள் அன்புடன்பார்த்து - மார்புடன்சேர்த்து ஓ-சிஸனே-உன்னைப்போலொத்த தீவிரவைராக்கிய முடையானையே நான் தேடித்திரிகின்றேன் - ஆதலால் - நீ விவாகமான பிறகன்றோ - விஷயபோகமறியாப் பிரமசாரியாவென்றுகேட்க, விட்டோபா-கிரகஸ்தனென்றால் உபதேசங்கிடைக்கத் தடையாகுமென்னும்-நிச்சயமாய்த் தாம் விதிப்போகமறியா பிரமசாரியேயெனறும் துணிந்து . அவ்வாறபயனிந்து - நான் பிரமசாரியேயாமென்றுரைக்க ஸ்ரீபாதஸ்வாமிகள் உன் தாய்தந்தை ஜீவித்திருக்கின்றார்களாவென, விட்டோபா இல்லையென ஸ்ரீபாதஸ்வாமிகள் சந்தோஷித்தாய் - ஓ-விட்டோபா உனக்கு வேதோபநிஷத்மானபிரமோபதேசஞ்செய்கிறேன் ஏகமனதுடன் கேட்பாயாகவென்று அஸ்தமஸ் தகையோகஞ்செய்து - பிரணவாதி மந்திரங்களும் மேன்மையாகியும் - அசரீரவாக்கியமாகியும் - பல சித்திகளையுமளிக் கொடுப்பதாகியும் - நிர்க்குணத் தியானத்துக்குரித்தாகியும் - அத்வைதமந்திரமாகியும் - வேதமுடிவாகியும் - தேசபிடைகளை வெளிப்படுத்தியும் - மனோஞ்சலனத்தை யகற்றுவதாகியும் - சதுர்வேதங்களுண்டாவதற்குக் காரணமாகியும்-சமஸ்தமாமந்திரங்களையும்வெளிப்படுவதாகியும் - தானே பிரமமென்னுஞ்சந்தோஷத்தையளிப்பதாகியும் - ஆவலுமுறவினரும் இந்திரியமாகியும் - மதியாப்பதனியை யளிப்பதாகியும் - இரிபவார்த்தங்களெர் பூர்த்தியடைந்ததாகியும் - தன்னைமறந்தும் ஐம்பதத்தைக் காட்டுவதாகியும் - சைவவைஷ்ணவவாதி சமயங்களை வாட்டுவதாகியும் - அஞ்ஞான சங்தேக விபரீதங்களை நீக்குவதாகியும் - மமதாகங்காரங்களை அடியோடு போக்குவதாகியும் - எல்லையற்ற ஆநந்தானந்த வாழ்வைத் தருவதாகியும் - இயானித்தவனைச் சிரேஷ்டமான சம்பாவனையித் கொண்டேகுவதாகியும் - விளங்காநின்ற மகாவாக்கியத்தை உபதேசஞ்செய்தருளினர், விட்டோபு தேசிகஸ்வாமிகளின் திருத்தாட்டாமரைகளித் தெழுது ஓ-என்னையனே இவ்வற்புதமான மகாவாக்கியத்தின் மர்மத்தை விரித்துரைத் தாட்கொள்ளுமையாவென்று பணிய, ஸ்ரீபாதஸ்வாமிகள் மகிழ்ந்து மாணுக்கனிவனேயாகும்-இப்பேர்க்கொத்த அதிதீவிர வைராக்கியமுடையவனுக் கதத்தியம் சொல்லவேண்டுமென்று உன்னி-அப்பா விட்டோபா - நீ மிகவும் புண்ணியவானுனதால்-உமக்கித்த மகாவாக்கியார்த்தஞ் சொல்லத்தொடங்கினேன் ஏனெனில் பன்னிரண்டாண்டு பரிசோதித்தபின்பே பெரியோர்களிதின்மர்மம்வெளிப்படுத்துவர்கள்-பாலைமேல் விதைபோட்டாற்போல்.

+ அபக்குவர்க்குரைக்கின் அபலமாய்ப்போவதன்றி உரைப்பவர்க்கபாயமும் - கேட்பவர்க் கதோகதியும் பலமாகும் - நீயிதற் குதக்தவனென் றுரைக்கச் சம்மதித்தேன் - நீ செய்தபாக்கியமே பாக்கியம் - ஏகமனதுடன் கேட்பாயாக - மறதியின்றி மனதிற்றரிப்பாயாக-அதேதெனில் ஞானமே பிரமமென்னும் ஓர்மொழியினர்த்தமே இருக்குவேதமுறைமிகின்றது-வேதபுருஷனுல் காதுவாக்கியங்களுக்குறை - காதுவேதங்களால் விரித்துரைததும் - அதற்கர்த்தமாகாமல் தயர்கழற்றூன்-தேவர்களுக்குக் காரணகுருவான பிரகஸ்பதியென்பவரும்-மற்றுமுள்ள ரிஷிகளும்-ஞானிகளும் தன்னுலானமட்டும் - மகாவாக்கியார்த்தத்தை விரித்துரைத்து முடிவுபெறாமல் தியக்கமுற்றார்கள் அப்பேர்க்கொத்த வாக்கியவர்ணனைத்தை என்னு அனாக்கப்போமோ - ஆயினும் ஏனதாசாரிய குருவோசொக்க நான் சிரவணஞ்செய்தபடி விரித்துரைக்காமல்-சங்கிரகமாகப் புகல்கின்றேன் அதாவது ஞானமென்பது - ஆத்மா பிரமமென்பது பரமாத்மா-ஞானஸ்வரூபமே பிரமமென்றுரைக்கப்படுவதே இதனர்த்தமென்றுரைக்க.

விட்டோபா ஞானமென்பதென்ன பிரமமென்பதெது ஆத்மாவே பிரமாத்மாவான தெய்வமனைவும் விரித்துரையுமையாவென்றுகேட்க ஸ்ரீபாதஸ்வாமிகள் அப்பா விட்டோபா ஞானமென்பது - விஷயங்களையறியும்-இந்திரியங்களையும் - இந்திரியங்களையறியும்-அந்தக்கரணங்களையும்-அந்தக் கரணங்களையறியும்-பிராமாசனையும்-இ

+ வாகெடம் - இப்படைத்தனந் தெரிந்தது முன்னேயிச்சே யாவையுமாம் பிரமம் நீயென்னக்கேண்டும் விய [illegible] மாதை இழும்வார்க் கிவ்வாறேகில் விரதநீசர்ல விழ்ந்ததாலும்,



விடோபா - அனேகஜன்மங்களாய் வாசனைவேறியிருக்கும் - மனக்குரங்கைச் - சகலபற்றுக்களுமற்ற சப்பர்ம நிஷ்டியால் - ஜெயிக்கப்பட்டதன்றிச்-சுழுப்தி நிலையில்லாமல - தான் பிர்மமென்கிற திடஞானமுள்ள ஜனகரால் -ஜெயிக்கப்படடதல்லவே யென, க்ஞானேசுவர் - கோலாடிஞல் - குரங்காடுவதுபோலத் - திடஞானமுள்ள - ஜனகரால் மனநாசமடைந்ததேயன்றிப் புறப்பற்றுக் காடேகியாயிருந்த சுகரால் மனோலயமடையவில்லையேயென. விடோபா-திருக்குவாயிருந்து கிரியைத்தை யகற்றவேண்டுமேயன்றிக் கிரியைதிலிருந்துக்கொண்டே கிரியைத்தை யெப்படி நீக்கக்கூடுமெ விஷத்தீர விஷமேருடித்தால மாண வேறுவல்லவோவென, க்ஞானேசுவர்-விஷத்தீர-வேறோர் விஷமான அவுஷத முட்கொள்ளுவதுபோலப் - பயமான - விஷயேந்திரிய காரணங்கள் நிர்பயமான திட ஞானத்தாற் கொல்பவனே சமர்த்தன்றி - எப்போதும் - நிஷ்டையிலிருந்துக்கொண்டு எங்கே விஷயங்களென்னும் மிருகங்கள் வரப்போகிறதோவென்று பீதியைக் குடிகொண்டிருப்பவனுக்கு - அட்டசித்திய பலிதமன்றிப் பிர்மானந்த மோர்காலத்துங்கிடையாது என்றுபோதித்ததுபாருமென விடோபாசன்யாசியாதி சதாசமாதி நிஷ்டையிலிருப்பவனையே - சஞ்சலத்துக் குட்டுபெருமா விஷயங்கள் சம்சார வியாபாரத்திலிருப்பவனை என்னென்னபாடுபடுத்தாது - பெருவெள்ளத்தில் விழுந்த சருகு சலனமின்றி ஓரிடத்திலிருக்கவுங் கூடுமோ வென. க்ஞானேசுவர் - திடஞானமில்லாதவன்-எத்தனைநாள் அந்தர் திருஷ்டியிலிருந்தாலும் - கருவிகள் பகிர்முகத்திற் கொண்டுவந்து பல அவமடையச்செய்யும் - பெருத்த வெள்ளத்தில் விழுந்த பருத்தகல்லானது-சற்று மசையாமலிருப்பதுபோல - விஷயாதி விகாரங்களெத்தனை வந்தாலும் சகிக்காத் துன்பந்தந்தாலும்-நிர்சலனமாயிருப்பானே - பிரமானந்தானுபவம் பெறுவானென்றித் திடமில்லாதவனுடைய மடமை ஒருகாலத்தினும் நீங்கவே நீங்காதென.

விடோபா எவ்வளவுதிடமிருந்தாலும் - நிர்சங்கனுய்ச் - சதா பிர்மானுசந்தானஞ்செய்யாமற்போனல் மாயாந்தகாரகூபத்தி லமிழ்ந்துபோவதற்குச் சந்தேகமேயில்லையென, க்ஞானேசுவர்-பிர்மத்தை யன்றி-மாயையென்ப தொன்றுண்டாயிருந்தாலல்லவோ சதாநிஷ்டையிலிருந்ததை நீக்கவேண்டுமெ தன் நிழல் தன்னோடெதிர்த்து யுத்தஞ்செய்யுமென்பதுபோல இல்லா மாயையும் - இல்லா அகத்தையும் ஏற்படுத்திக்கொண்டு சதாநிஷ்டையி லிருக்கவேணுமென்று நினைக்கின்றீர் இல்லாநிழலோடு போராவேதால் - இளைப்பே பிரயோசனமாகுவதுபோல என்றுமில்லா மாயையை இல்லையென் றறிந்துக்கொளுமென்னமுறறிருக்காமல் எந்நேரமும் - நியதிகளைத்துக்கொண்டிருப்பது என்றும் நீங்காச்சஞ்சலையல்லவோவென விடோபாநியதிகளையுமனுமா ஏகாக்கிரசித்தமாகாமனும்சாட்சியாயிருக்காமனும்-சகலஞானமுமெப்படிருந்துவதெப்படியென. க்ஞானேசுவர்-கேதிசெய்யச் செய்யப்புற்றினுள்ளிருந்துபுறப்படும் சர்ப்பம்போல-மிகவும்விஷயங்கள் புலப்பட்டிற்கும் ஏகாக்கிரசித்தமாக்கவாக்க-அடிக்கடிக்கப்பந்தொழும்புவதுபோலமனஞ் சஞ்சலப்பட்டிற்கும் சாட்சியாயிருக்க விருக்கக் - குணங்களெடுத்த சுனைகள் வாலைப்போலத் தனுவாதிகள்தானென்கிற பிரமையேவந்துக் கொண்டிருக்கும் ஆதலால் அவித்தையென்னும் அகந்தையையும் மிதனதயென்னும் மாயையுஞ்சத்திகாரறிதம்போல் முழுதும்மித்தையாயென்னி தானே பிர்மமெனவெண்ணி-விசார க்ஞானத்தால் கெம்பீரத்துடனி



ருப்பதே பிர்மானந்தமென, விடோபா யாதொருனதனையுஞ் செய்யாமல் - விசாரஞானத்தால் தானேபிர்மமென்றிருப்பதால் அந்தியகால விஷயாதிகளை வெல்லக்கூடுமோ ஆனந்தமாகும் அதுமாலைப் புண்ணக்கூடுமோமென. க்ஞானேசுவர்-உபிசோதுருக்கும் பசுவே வியாக்கிரம் வதைக் கொல்லாதாயின்-இறந்தபோன-பசுகொல்லுமா அதுபோல நித்யமாயையும் - நிதானமாகி ஞானசித்தையாக்கியும் விளங்காநின்ற ஆத்மாவை விஷயாதிக ளென்னசெய்யக்கூடும் பொறுக்க பசுவும் புலிமுன்வர அஞ்சலதுபோலத் - திடஞானத்தால் பூர்த்தியடைந்திருக்கும் - ஞானவான்முன் விஷயங்கள் வரவேவராது - வந்தால் புலிமுன்வந்த பசுவைப்படி அபாயமடையுமோ அப்படியே அழிந்துபோமெவென. விடோபா விபசாரியோடுகூடிய சம்சாரி புகழ்கெடுவதுபோல அஞ்ஞானிகளோடு கூடிய மெய்ஞ்ஞானியும்-விஷயாதிகளிற்சிக்கி மனோசஞ்சலத்திற் சிக்கி அவகடமாய்ப்போகுமோவென, க்ஞானேசுவர் திடமுள்ளசமுசாரி - பலவிபசாரிகளோடு கூடியிருந்தாலும் - கற்பழியாமலேயிருப்பாள் திடமில்லாதவள் ஒருவர்கூட்டுறவில்லாதிருந்தும் - பதிவிரதைத்தன்மைக்குத்தானே பழிதேடிக்கொள்வர்கள் அதுபோலத் திடமுள்ளஞானி - அனேக ஞானிகளோடு சூழ்வுற்றிருந்தாலும் - பூரணஞானத்தை யிழக்கமாட்டான் திடமில்லாதவன் ஏகாந்தனுயிருந்து மிழந்துவிடுவானென, விடோபா சம்சாரவியாபாரத்திலிருந்துக்கொண்டு சகலஞானியெப்படியாகக் கூடுமென, க்ஞானேசுவர் பாப்பான் தோட்டிவேஷம்போட்டு காட்டிய மாடிறதும தொட்டியாகாமல் அந்தணனாகவேயிருப்பதெப்படியோ அப்படியே மெய்ஞ்ஞானி - அஞ்ஞானிகளோடு கூடி அனேகவித டனக்கிலிருந்தாலும் பரமானந்தானுபோகியாகவே யிருப்பானென.

விடோபா எவ்வளவு திடப்பக்குவுள்ளவனும் ஓர் முகூர்த்தநேரமாவது பிர்மானுசந்தானஞ்செய்யாமற்போனல் பிர்மஞானியதன் வெகு துர்லபமென, க்ஞானேசுவர் தோட்டிவேஷம்போட்டு காட்டியபமோடும் மறையோன் - அடிக்கடி நான் மறையோனென்று எண்ணவேண்டுமோ அப்படி நினைக்காவிட்டால் தோட்டியாய்ப்போவானே - நாடறிந்தபிராமணனுக்குப் பூணூல்வேண்டுமோ - நானென்னு மகந்தையற்ற பின்னும் நானென்று மகங்காரத்தை வைத்துக்கொண்டு ஆகம் பிர்மமென்னும் பிர்மானுசந்தானம்பண்ணவும் வேண்டுமோ நாடறிந்தபிராமணனுக்குப் பூணூலில்லாவிட்டாலும் எல்லாரும் பூசாரனென்ற பூசிக்கப்படுவதுபோல் தன்னைத்தானென்றும் அகமமைதயற்றவன் யாதொருனுசந்தானஞ் செய்யாவிட்டாலும் எல்லாரும் பூஜிக்கப்பட்டுப் பிர்மானந்தானுபோகியாகவே யிருப்பானென, விடோபாஜகதிலனனுக்கினைபானவனும் தான் பிர்மமென்கிற அனுசந்தானம் நடோறுஞ்செய்யானுகில் அஞ்ஞானியாய்ப் போவதற்கோர் தடையில்லைவேயில்லை தனுவாதிகளைத்தானென்னும் அகந்தைசெஞ்சத்திற்போகவேபோகாதென, க்ஞானேசுவர் விளக்கைக்கையிற் பிடித்துக்கொண்டு இருட்டே இருவென்றால் இருக்குமோ பூனைக்கு அருகில் வைத்துக்கொண்டு கிளியேபேசென்றால்பேசுமா அதுபோல தானென்னும் அஞ்ஞானத்தை வெதிர்த்துப் பிரமமேதானென்றறிந்த பின் அஞ்ஞானமிருப்பாயாக வென்பதா லிருக்குமா நீவேகவானுடைத்தாகின் பொய்யென்றறிந்த பின் மாயையைவாவென்றால் வருமா கயுமலகனென்றறிந்த பின் உடைய நாண்புருஷனென்று சொல்ல நாணமடைந்த பேடியைப்போலப் பிர்மமென்பது சத்தியமென்றும் மாயை அசத்தியமென்றும் - பிர்மம் நிர்விகல்பமென்றும் மாயை சங்கல்பவிகல்பமென்றும் - தானேபிர்மமென்றும் பிர்மமேதானென்றும் சத்குருநாதன் சன்னிதானத்திற் சந்தேகமறத் தெளிந்தவனுக்குச் சங்கல்பமேது விகல்பமேது - பந்தமேது - மோட்சமேது-ஜனனமேது-மரணமேது - நாடேது - காடேது - ஜனமேது-தபமேது சன்யாசமேது - சமுசாரமேது - என்று செத்தாட்டுக்கன்போல ஜாக்கிரத்திலிருப்பவன் முன்-மாயையின் சாமர்த்தியம் அனுவும் நடக்குமா அஞ்ஞானத்திலும் மடக்குமா சற்றும் தப்பாதுமென்றுனைக்கும்போதுவிசித்திரசாதுவென்றதையே நீர் வெகுநேரமாய் தர்க்கிப்பதுவிக்கதையே எனது நினைக்கமாத்திரத்தில் சகலபயங்களும் நிவாரணமாய்ப்போகுமோ எதை யாசரின் அனுக்ரஹவாறே எதனுடைய தரிசனத்தால் தன்னைமறப்பாரோ எது ஞானுர்ச்சனைக் குந்தநோ ஏதமாயிருப்பதெதுவோ அதையே அறியவேண்டு மிகவும் பிரியத்தைத்கொடுப்பதாயும் - அகண்டாகாரத்தைத் தருவதாயும் - ஓர்தரம் தரிசித்தாலும் ஆயுளிறுதியாய்த்தம் நினைத்துகனைத்து வியப்படைவதாயும் வெளியிலுக வெளியிலும் சமீபமானதாயும் - கோடி சூர்யப்பிரகாசமானதாயும் மாயாசக்கிமத்துக்கு எட்டியாதாயும் - எப்போதும் நூதனமானதாயும் - விளங்காநின்றதெதுவோ அதையே தியானிக்கவேண்டும் எதனிடத்தில் இந்த அண்டாண்ட பிண்டாண்ட பிர்மாண்டங்களெல்லாம் - சிருஷ்டி திதிலயங்களைப் பொருந்திநிற்குமோ பூதபவிஷ்ய வர்த்தமானமென்னும் திரிகால

ங்களிலும் பின்னமின்றி அத்துவிதமா யெந்தப்பொருளான திருக்கின்றதோ எது அவாங்மனோகோசரமாயிருக்கின்றதோ எது ஆதிக்காரியத்தையும் - முடிவுக்குமுடிவாகியும் - இருக்கின்றதோ எது மேல் கீழ் சுபெக்கமும் சமருபவிகாரமுமற்றிருக்கின்றதோ அநாபிர்மமெனவுரைக்கத்தகும் என்று வேதத்தில் முறையிட்டாலும் சராசரங்களிலும் - பிருதிவியாதி பஞ்சபூதங்களிலும் - சப்தமாதி - பஞ்சதன்மாத்திரைகளிலும் - அவ்யக்தம் - மகத்வம் - அகங்கார தத்வங்களிலும் - சாத்விகராசத் தமோகுணங்களிலும் - இதின் பிரதிபிம்பமான திரிமூர்த்திகளிலும் - பரமாணுக்களிலும் [illegible] பரிபூரணமாயென்றும் நீங்காதிருக்கும் - பரப்பிரம்மத்தை வணங்குவதெப்படி இணங்குவதெப்படி இப்பேர்க்கொத்ததன்று - வாக்கினாற்சொல்லவும் - மனதினால் நினைக்கவுங் கூடாததான - வஸ்துவை வாழ்த்துவதெப்படி மனனஞ்செய்வதெப்படி எதனுக்கு ரூபஞ்சூன்யமாயிருக்குமோ எதுநாமத்துக்கப்பாற் பட்டிருக்குமோ அதைப்பார்க்கவேண்டும் துதிக்கவேண்டும் என்று பலதாம்பேசுவதனாற் பிரயோசனமேது சுருதிஸ்மிருதிகளே அப்பரமாத்மாவின் நிலையையுரைத்ததற்குக் கூடாமல் மௌன ஸ்திதியைப் பொருந்தியிருக்குமாயின் - காம் செல்வதெப்படி ஈசமருபஞ் குணங்குறி முதலியவைகளை. நீக்கியபின் எந்தப்பொருள் மீதியாயிருக்கின்றதோ அந்தப்பொருளாகி சமஸ்தவஸ்துக்களிலும் சமத்துவம் பொருந்தியிருப்பதே மேன்மையாக [illegible] நிர்மதநியானமாகும்-விருப்புவெறுப்பறுச்-சுகதுக்க சகிதனுகிறானென்னும் - அகங்காரக்கிரந்தியைக்களைந்தலே-மாட்சிமையான பிர்மநிஷ்டையாகும் சாந்தமையாயிருக்க, நீர் காட்டினிலிருக்குங்காரணமேன் - தபோபலசையாதோர் ஸ்தானத்தில வீற்றிருப்பதேன் - என்கிற பலவார்த்தைகளாலும்போது விடோபா தனயரோடு தர்க்கஞ்செய்யச்செய்யச் சாமார்த்தியமன்றி அப்பா நிவர்த்திசாது-ஐயா-க்ஞானேசுவரா நீங்கள் ஜன்மிக்கும்போதே - மெய்ஞ்ஞான நாட்டமும் - சுஞ்ஞானோசுடமும் விளக்கமுற்றிருந்தவர்களாதலால் - உங்களுடன் வாதுசெய்ய என்னாலாகுமோ இப்பேர்க்கொத்த மகானுபாவர்களாகிய-உங்களை நான் மைந்தர்களாய்ப்பெற என்னபாக்கியஞ்செய்தேனோவென்றுதவஞ்செய்தேனோறவர்களை மார்பிலுகத்தழுவிக்கொண்டு-ஆனந்தமேலீட்டால் தன்னைமறந்தார், உடனே க்ஞானேசுவரும் நிவர்த்திசாதுவும் அரியாஸ்வரூபிகளாய்வீற்றிருந்தார்கள் விடோபாகண்களைத்திறந்து ஆலிங்கனஞ்செய்த தனயரிருவரும் சங்கசக்கரசாரங்கபாணியாயிருக்கக்கண்டு ஆனந்தகொண்டு புளகாங்கிதமும் மயிர்க்குச்செறிந்து தழுவினபடியே அரியாரைத் தோத்திரஞ்செய்யத்தொடங்கினர்,

## பகவான் துதி.

### விருத்தம்.

மந்தரகிரிநெருங்கா
வகையுறப்படைக்கிரி
இந்திராதியரைக்காத்த
வெக்கதேயேகொடியமாலே
பந்தமாம்பகுதிக்குள்ளாய்ப்
பவம்பலவெடுப்பேற்கும்நீ
மைந்தனுய்வந்ததென்ன
மாயமோவறிகிலேனே. (க)

மந்தரகிரிக்காற்றுமல்
வாசுகிக்குமாலம்
விந்தையாயுண்டோனேர்
மேற்றனைசெய்தமூர்த்தி
தொந்தமாம்வாழ்வைமேலாந்
சுகமெனநினைந்தேற்கும்நீ
மைந்தனுய்வந்ததென்ன
மாயமோவறிகிலேனே. (உ)

பந்துபோலிருக்குமிந்த
பற்பலவண்டபேதம்
அந்தணன்படைத்ததன்றோ
வவற்குநீதாதையன்றோ
எந்தையேயுனக்குத்தாதை
யிகபரத்துண்டோவுன்றன்
மைந்தனன்பிதாநீயென்ற
மாயமேதறிகிலேனே. (ங)

அந்தணன்பலவனாதி
யோர்சிரமால்பூண்ட
தந்தையுந்தாயுமில்லாச்
சங்காரனைப்பயந்தோர்
எந்தலோகத்திலுண்டி
திங்ஙனமிருக்கவுன்றன்
மைந்தனன்பிதாநீயென்ற
மாயமேதறிகிலேனே. (ச)

சிந்தாஞ்சிஞ்சுமாரஞ்
செயுஞ்சமர்க்கிடந்தயர்ந்தே
உக்கிபூதவலேகோவென்
றோலமிட்டிறைந்துகூவ



வந்தனனஞ்சேலென்று
வருத்தருன்றாலெலீவெய்
மைந்தனுப்பிறந்ததென்ன
மாயமோவறிகிலேனே, (ரு)

அந்தரவெளியோமகார
மவ்விகிவிடையுதைத்தே
நாற்சுவாசக்கண்டாக்கிரெட்
டாண்டினைவளித்தாட்கொண்ட
அந்தாரணத்தருணத்தோன்றலே
தொழும்பனேற்கும்
மைந்தனுப்பிறந்ததென்ன
மாயமோவறிகிலேனே. (சா)

அந்தமர்பிரகலாத
னரியரியெனவேசீற்றம்
வந்துதன்மகவுமாற்கும்
வகைபலவியற்றினோனை
அந்திவேளையிலழித்த
வாயனேநீயுமென்றன்
மைந்தனுனென்றுரைத்த
மாயமேதறிகிலேனே. (எ)

சுந்தரநிதிமைந்தன்
குகவெனவுருவாய்ச்சென்று
அந்தாக்தனைக்கறிக்க
வலவனுமடைந்தனன்றோ என்றன்
கந்தரங்கடித்துமூர்ச்சை
யுறச்செய்தகபாலியுன்றன்
மைந்தனென்றுரைத்த
மாயமேதறிகிலேனே, (அ)

தந்தையின்மடிக்காசித்த
தனயனுக்குருவுதந்தே
அந்தரத்தவாழ்வை
யளித்தகாருண்யமாயா
வெந்துயர்கடலின்மூழ்கி
வேட்கையுற்றிருப்பேற்குந்நீ
மைந்தனுய்ப்பிறந்ததென்ன
மாயமோவறிகிலேனே. (கூ)

நந்திவாகனனேயென்று
கலவுபமன்யரேத்த
மூந்தமிழ்அந்திமீத்த
முக்கணுபகனேநிய
செந்தவர்வாய்மலர்தஞ்
சேயமிச்சித்தேற்கும்நீ
மைந்தனுய்ப்பிறந்ததென்ன
மாயமோவறிகிலேனே. (க0)

என்றிவ்விதமாகத் துதித்தருளி-ஓவைகுந்தவாசனே ஓ-கைலாசவாசனே நீங்களே எனக்குப் புத்திரராயவதரித்திருக்கச் தவமுஞ்செய்யவேண்டுமோ என்னைப்போன்ற புண்ணியவானு மிவ்வுலகிலுண்டோ உங்களுக்குச்சேவைசெய்வதைவிடுத்து - இக்காட்டிலிருந்த வெண்ணறியாமையை என்னவென்றுரைப்பேன்-பிறந்ததினிலேயே உங்களுடைய சுயரூபங்களைக் காண்பித்திருந்தால் யாட்கொள்ளலாகாதோ இதான்பரியந்தம் [illegible] காரணமேதோ வென்கிற பலவார்த்தைகளாடிச்சோபான்தேவைநோக்கி ஓ-மஹாநுபாவ சோபான்தேவா உம்முடைய திவ்வியரூபதையுங் அடியேன் தரிசிக்கும்படியாக அருள்புரியுமையாவென்றுவேண்ட சோபான்தேவ் பிரமதேவனாக்காட்சிகொடுத்தார். தந்தையைநோக்கி ஓ-பரமசாதுவே தனக்குள் பரப்பிரமத்தையறிந்து-தானே பிர்மமெனத் தெளிந்து - தனக்கு எக்காலத்திலும் ஜாமாலோதிகளில்லையென்றுதைத்து பரிபூரணவஸ்துவா யிருப்பானானால்-அவனுக்கு நானமுண்டா ஜன்மமுண்டா இப்படி பிறப்பிறப்பற்ற - பிரமக்ஞானிக்கு நரகமேது-சொர்க்கமேது பந்தமேது - மோட்சமேது - எல்லாம் பிர்மமென்கிற அதர்வணவேத மகாவாக்கியார்த்தத்தின்படி - பிபிலிகாதி சமஸ்தவஸ்துக்களும் - பிர்மமயமென்றும் - பிர்மம் - அணுவுக்கணுவாகியும் - மஹத்துக்கு மஹத்தாகியும் விளங்கும் - பரவஸ்துவென்றும் - அறிந்தவனே பிரமானுபூதிபெற்றவனாகும்-அன்றி இப்பேர்க்கொத்த அனுபவத்தி லிருந்துகொண்டே சம்சாரத்திலிருப்பவன் - பிர்மவித்தென்றும் - சுக்ஞானியென்றும் சொல்லப்படும் இல்லறத்திலிருந்துதேர்ந்த-வசிஷ்டருக்கும் விசுவாமித்திரரும் - ஜனகருக்குஞ் சுகப்பிர்மரிஷியும் ஸ்ரீ கிருஷ்ணருக்குத் தாருவாசரும் ஐக்யமாயிருந்தார்கள்.

ஆதலால்-இல்லறஞானியே-தன்னைமறந்த சன்யாசிகட்கும் மேலானவனாகுமென் றுரையும்போது விடோபா ஓ-சகத்திருஷ்டிகரே உமது வாக்கைக் கடப்பவரு முண்டோ இனி நீங்க ளென்னசொல்லுகிறீர்களோ அப்படியே நடக்கச் சித்தமாயிருக்கிறேனென்றறைந்து - ஆனந்தமிகுந்து - ருக்மா பாயியைநோக்கி ஓ-பெண்ணே நமதாசிரியர் ஆசிர்வசனப்படி - திரிமூர்த்திகளும் நமக்கு மகவாய்ப்பிறந்து - நம்மை நிந்தாத்தாக்கினார்க ளினிநாம் தவமுஞ்செய்யவேண்டுமோ வனத்திலு மிருக்கவேண்டுமோ நம்மைப்போல் புண்

ணியவான்களுமுண்டோ வென்றெணைக்கும்போது ருக
மாபாயி ஆனந்தவாரியில் மூழ்கினவளாய் இவ்வுலகில்
இப்பேர்க்கொத்த விக்கையும் நடக்கதுண்டா ஆனல்
அருகுபாதேவி - புத்திராசையால் வாடக்கண்டமுக
மூர்த்திகளும் - அவ்வுத்தமிக்கு குழவியாய்ப்பிறந்தார்கள்
ஈசுரனும் - அவ்விரகுதேவியின் கணவனாகிய அத்திரிமகா
ருஷியின் தபோபலத்தால் அநுசூயாதேவியைப் பரி
சோதிக்கவந்த மூவரும் தன் வல்லமையால் சிறு
குழவிகளாயிருந்ததிலையாம் - மகாபதிவிரதையாகிய
அநுசூயாதேவிக்கு மகவாய்ப்பிறந்த மூவரும்-யாதொ
ருத்துமுமில்லா அடியாளுக்கு - அருமந்த புதல்வர்களா
யுப்பவித்தது மிகவும் - ஆச்சரியமன்றோ என்று பல
வாறு நினைவுகளடி - முக்தாபாயின் வசனத்தைக் கேட்டு
ஓ-அம்மா ஸ்ரீ-சரஸ்வதியோ-லட்சுமியோ-பார்வதியோ
யாங்களறிய உன் சுயரூபத்தையுங்காட்டி-என்னிதை ஆட்
கொண்டருளமாவேண்டு வணக்க முக்தாபாயி - ...
வேண்டுகினும் தன் சுயரூபமெடுத்து-ருக்மாபாயும்
விடோபாவும் - கண்கூடாக சூழ்ந்தும்படியாகக் கதிச
லைக்காவே சுழிந்திகளிருவரும் - அப்பா பரமேசுவரி
யின பாதங்களிற்றொழுது - ஓ - அம்மணி-பரமேசுவரி
ஜகதீசுவரி-அநந்தி-சக்தி-சித்தி-துர்த்தி-சங்கரி-ப
யங்கரி மகேஸ்வரி-மகாதேவி சகலலோகங்களையும்
உன் உதரத்தில் வைத்திருக்கும் எங்கள் அகட்டிறப்பிற
ந்த குழந்தையென்கிற பெருமானோ தந்தை தாயெ
ன்னும்போ நாங்கள் பெறப்போமோ வென் றனந்தம்வி
தங்களாய்த் துதிக்கும்போது ஆதிசக்தி - ருக்மாபாயி
யையும் - விடோபாவையும் நோக்கிப் புனிதர்களே நா
ங்கள் நால்வரும் உலகிலுள்ள கொடும்பாவங்களைப்பரி
கரிக்கவும்-கோரைநிமுகலளை நிக்குகள்செய்யும்கொ
டியனர அடக்கவும் - கருணைசிருணாதியாவர்கள் நிலை
பெற்றிருக்கவும் - ஸ்ரீரகலட்சுமணபாதகத்துருக்களை
ப்போல அவதரிக்க எண்ணங்கொண்டு - மகாபுண்ணி
யவான்களாகிய - உங்களுக்கு மகவாய்ப்பிறந்தோம்-அநா
தரித்ததாளைத்தைருக்க - காட்டையடையவேண்டு
மாதலால் எங்கள் வாக்கியத்துக்கு மறுவார்க்குறைந்தா
மல் - நீங்களும் காட்டிக்குவரவேண்டும் - அன்றிப் பிர
மாதுபூசிபெறும்படியாக-ஆத்மைகுருஞானி ஜன் காடே
ன்றும் காடேனும்-பின்னபாவமாகப்பார்க்கவேகூடா
து - மனமாதிகளும் - சந்தருக்கும் - அபின்னமாய்
ப்பார்ப்பவனும் - விஷயபிரந்தத்தை ஒன்றெனமதித்துப்
புசிப்பவனும் - சுகதுக்கத்தைச் சமமாகவேநத்திருப்ப
வனும் - உறவும் - பகையும்-வொன்றெனஉன்னுபவ
னும் - சாதிக்கும்படியான பிரமநிஷ்டையைப் பேதபா
வமுள்ளவனு வொரு போழ்தும் சாதிக்கக் கூடவே
கூடாது - ஆதலால் எவ்வகையற்றிலும் சமபாவமுள்ளவ
னல் - சாதிப்பதற்குத்தக பிரகிருதிமட - காடேன்
றும் நாடென்றும் - பேதபாவமுடைய உங்களால்
அந்தஞானபவம் பெறவேகூடாது மூவர் தேவர் மற்
றியாவர்களுக்கும் - பிரியமாகியும் - அவர்கள்பாலனு
மாத்திரமான ஆனந்தமாகியும் - தன்னைன்டுணர்ந்தவ
மாகியும் - சராசரங்களில் நிறைந்திருக்கும் பரமாமாகி
யும் - இருப்பதெதுவோ அதுவே பிரமமென்றுணர்ந்
திருக்கும்-அதைஏகமென்றும்-அநேகமென்றும்-சொல்
லக்கூடாது. ஒன்றென நிச்சயித்தபோதே அநேகனே
கவிகற்பங்களுண்டாகும் அப்பாவல்லுவை - இப்பேர்க்
கொத்ததென்று சொல்வதற்குக் கூடாமையாலே-இப்
பாமேசன் - நிர்முத்திரையால் - ஜனகசனந்தனந்தியர்
க்குக் காட்டாமற் காட்டிப் பரமாத்மாவில் லயப்பட்டு
மௌனநிஷ்டையைப் பொருந்தியிருக்கிறார். இந்தம
கரிஷிகளும் - அப் பரப்பிரமத்தை இப்பேர்க்கொத்த
தென்றுரைக்கக் கூடாமையால் - பௌத்தாவதாரமாய்
மௌனமுற்றிருக்கின்றார்.

இப்பிரமாவும் - அப்பாவல்லுவை விரித்துரைத்
ததி தன்னுள்ளகாமல மூகபாவத்தை யடைந்திருக்கின்
றார் - வாக்கினுற் சொல்லும் - ஓர்மொழியை அவ்வா
க்கிலுலே ஸ்திரப்படுத்தவேண்டியதுபோலப் பரமாத்மா
வின்நிலைமை-அப்பரமாமாத்மாவாலேயே அறியவேண்டும்
சிவலிங்கமல ஆத்மிவனன்றி மற்றவரைதற்குக் கூடா
ததுபோலவும் தாகத்தின் வேதனையைத் தாகமெடுத்
தோனுல் தெரியவேண்டியதுபோலவும் இனிமைபுதார்த்
தத்தின் ருசியை அருந்தினவனுலே அறிந்துக்கொள்
வதுபோலவும் தானே அப்பாவல்லுவை யிராய்த்தறிக்
துக்கொள்ளவேண்டுமென்றி ஒருவரா லுணர்த்துவதற்குக்
கூடாது குருவுஞ்சிஷ்யனுமொன்றாயிருக்கும் அனுபவத
தில் சேவைசெய்பவன் யார்-செய்வித்துக்கொள்பவன்
யார்-ஆசிரியர் மாணுக்கனென்கிற-நீயே நான் நானே
நீ யென்கிற அத்துவிதானுபவத்தை யடைப்பவனுமின்
மாணுக்கன் பின்னபட்டிருக்கக்கூடுமோ தன்னுடைய
சொரூபஸ்திதி அபின்னநித்தியமாயிருக்கப் பின்னப்ப
வெபெதப்படி கன்றென்னும் நீசென்னும்பாமல் காடா
க்கினிக்கினியாயி நுப்பவர்க்குக் காடென்றும்-காடேன்
றும் - அனிதபாவமென்னமோ வென்கிற பலவார்த்
தைகளாடி விடோபாநோக்கி ஓ-புண்ணியவானே உ
ண்மை யிப்படியிருக்க நீர் காட்டைவெறுத்துக் கா
ட்டிலிருக்குங்காரணமேன்னென்றுகேட்க விடோபாவனை
க்கி இனியுங்களிடத்தப்படிப்பட்டபேத எனக்குறுதியாள
துபோபலம் - ஆதலால் காட்டிப்பிரவேசிக்கவும் வாரு



ங்களென்றுரைக்க, மூவரும் துதிசெய்தும் விடோபா
வை நோக்கி ஓ விரதனிலனே - எங்களுடைய ரகசியத்
தைப்பிரகாசக் குணமித்தமாலும் காக்கினிசெய்யும் இ
ருக்கூடத்துக்கு வெதிர்ந்தம் செய்யாமலும் - மௌன
கட்டத்தி லிருப்பதே உகந்ததுமியான பிரம்நிஷ்டை
யென்றறைந்து நால்வருமிருகுழந்தைகளாகி விடோ
பாவுக்கும் - ருக்மாபாயிக்கும் முன்போல் புத்ரவாஞ்
சையையுண்டாக்கி அவர்களை அழைத்துக்கொண்டு கா
ட்டைக்கடந்து - காட்டையடைந்து - சிகோபந்தின்
வீட்டிற்பிரவேசித்துப் பால்யனைப்போலவே விளையா
டத்தொடங்கினார்கள். விடோவைக்கண்ட சிகோபந்தா
சந்தோஷசாகரத்திற் படிந்தவராய்க் களிப்படைந்து
பல வுபகாரஞ்செய்தகொடவினுர். விடோபா மாமன்
மாமியாக்கும் வந்தனஞ்செய்து களிக்கடலினமிழ்ந்தார்
ருக்மாபாயி தனக்குற்றபாக்கியத்தை உன்னியுன்னிப்
புளகாங்கமடைந்திருந்தாள்.

கேட்டீர்களோ சித்தர்களேயென்று பின்னும் கா
பாலிசித்தர் சொல்லுகிறார்,

க்ஞானேசுவரர் தன்தந்தையை
காட்டிலழைத்துவந்த
அத்தியாயம்
முற்றிற்று

## கஎ - வது - க்ஞானேசுவரர் எருமைக்கடாவினல் வேதத்தை விரித்துரைத்த அத்தியாயம்

வாருங்கள் சித்தர்களே விடோபா காட்டைச்
சேர்ந்த மறுகணங்காலையில்க்ஞானேசுவரர் தந்தையைவி
ளித்துக்கொண் டுளையன்பாற்சென்று வேத்தொனே
க்கி - ஓ - ஏகதேச சாத்தியா இப்பாத்தியமைந்த எங்
கள் தந்தை விதேஹனர் - காட்டையிக்க விடைத்த
னர் - காட்டையடைய சொத்தனர் - மிடைத்தற்குரிய
சேவைதந்தனர்-என்றுரைத்ததைக்கேட்ட காபிலை
க்ஞானேசுவரருக்கு மலர்தாளைத்தும் வந்தனஞ்செய்
து விடோபாவைநோக்கி ஓ-புண்ணியமென்லார் நிரஞ்
சோ குருவாய்வைத புனிதசோ-தவத்தில் கனிதரோ-இக
பாகவுக்கியத்தை யளிக்கும் காட்டைவிட்டு ஜனக்குள்ய
மனா காட்டையடைந்ககாரணமேதோ திருவாயமலர்க்
கருளுமையாவென்று பணிவாகக் கேட்க, விடோபா
அசதுக்காசிகூறி ஓ-விரமுதிரமும் விளங்கிச் சவட்ச
லைசலட்சணங்களிற்பூர்த்தியாய்த்துலங்கிக் கொம்பே
லைவாட்டிச் சென்றேயவேட்டிக்-கர்மத்தை நித்தியச
மத்தைப்பாதுகாத்துமரும் நல்லவேனா நாட்டுக்கு காதே
முக்கியம் - சாருஷ்டி பைபதிமேமுக்கியம் பதிக்குப் பன்
பேமுக்கியம் பின்புத்துப் பக்சாதாபமே முக்கியம்
தாபத்துக்குச் சாந்தமேமுக்கியம் - சாந்தத்துக்கு தர்ம
மேமுக்கியம்-தர்மத்துக்குச் சத்புருஷரேமுக்கியம் சத்
புருஷருக்கு ஈசுவரனேமுக்கியம் - ஈசுவரனுக்கு
தாசரேமுக்கியம்-தாசருக்குச் சமபாவமேமுக்கியம்-சம
பாவத்துக்குத் - தற்பரசோதனேயமுக்கியம - தற்பர
சோதனைக்குச் - சர்வசாட்சித்வமேமுக்கியம் - சர்வசா
ட்சித்வத்திற்குச் சாட்சாத்காரமே முக்கியம்-சாட்சாத்
காரத்திற்குச் ... - சாவ
... முக்கியம்-சாட்சித்துவ
த்திற்குத் ... முக்கியம்-ஐகாகாரத்துக்கு ஐகத்
திட்சணமே முக்கியம்-ஐகதிஷ்டணத்துக்குச்-சர்
வசங்கபரித்யாகமேமுக்கியம் - சர்வசங்கபரித்தியாகத்
துக்குச் சதாநிஷ்டையேமுக்கியம் - சதாநிஷ்டைக்குத்
தத்சேவைமுக்கியம்-தபசுக்கு () சந்நிரமமேமுக்கியம்-ஆத
லால் காட்டையடைந்தேன் - அல்லாமல் தியானத்து
க்குப் பொறுமுக்கியம்-தானத்துக்குச் சமுசாரமேமுக்கியம்
ஆதலால் தியானத்துக்குரியான தவஞ்செய்துக்கொ
ண்டிருந்தேனென்றறைய, அவ்வாக்கியங்களைக்கேட்ட
அரையன்-நிக்கென்றெழுந்து அவர் சேடியில் விழுந்து
ஓ-மாதவனே - அஞ்ஞானவிருளைநீக்கும் - ஆதவனே
நார்செய்புக்குற்றம் - பாபால ஜுக்கென்கிற வியுருவ
ன்படி - அடாதஅகமமதை-கெடாத அவிலாசாரத்தை
விடாத அந்தர்முகத்துக் குட்படாத - அந்தணரெனக்க
நிக்கைசெய்யாமல் உம்மை அவமானஞ்செய் தடவி
யிற்போகும்படியாய்ச்செய்த - அபசாரத்தை உபசார
மாகக்கொண்டு - ஆசிர்வசனங்கள்கின்று இப்போதே
என்னை யடிமையாக்கிக்கொள்ளுமையாவென்று - மிக
வும் வேண்டும்போது விடோபா இராஜனுக் கன்பான
மொழிகள்பகர்ந்து - நீர் - பரிசுத்த மனதுடையவராத
லால் - சகல சாமபிராச்சியத்துடன்-சுபமுற்றிருப்பீர்
களென்று - ஆசிர்வாதஞ்செய்ய - இராஜன் சந்தோஷி
த்துத் தன் மந்திரியிடம் - இரூபம் எழுதிக்கொடுத்து-பி
ன்பு வத்தாளர்களுடன் - வைபணாபுரிக்குப்போய்-அங்கி
ருக்கும் - ஆசாரிமரைக்கண்டு - இவர்க சாட்சேபமற
வர்களென்கிற - இருபம் வாங்கிக்கொண்டு வாருமென்

() சந்நியமம் காடு.

றனுப்ப - க்ஞானேசுவரர் - நிவிர்த்திநாதர் முதலானவர்களுடன் பைடணபுரிக்குப் பிரயாணப்பட்டுப்போய் கோதாவரியில் ஸ்நானஞ் செய்தபோன-ஆசாரியரைக் கண்டு-வந்தனஞ்செய்து-அரசன் கொடுத்தனுப்பிய-கடிதத்தைக் கொடுப்பித்தார்.

அம்முடங்களைப்பார்த்த - ஆசான் அதற்குமுன்பே அலங்காவதியிலிருந்து அந்தணர் வரைந்தனுப்பிய கடிதங்களைப் பார்த்திருப்பவனாதலால் ஆங்குஸ்நானஞ்செய்யவந்த பலமறையோரையும் விளித்துக் கேட்டீர்களோ அந்தணரே சன்யாசியாய்ப் பலவிட்டிருமுன்பு பிரஷ்டனாய்ப்போனவனையும் அவனுக்குப்பிறந்த மறையோரை அடுத்த அஷ்டசித்தியையும் எல்லோரும் மரியாதைசெய்து பந்திரில வைத்துக்கொண்டன்றுமன்றி இவர்கள் மனுமாலிலா அந்தணரெல்லாம் வரைந்து கொடுக்கவேண்டுமாம் இதவிந்தை நமக்குப்ராயாவது பார்த்ததுண்டா கேட்டதுண்டா உலகிலெப்படியாகுமா வென்று பலபலவார்த்தைகளாட விழுந்து மதகரியின் தோலையும் - கறுத்த நரியின்தோலையும் இவ்விரண்டுவருமான தோலவல்லவோ இச்சாங்கதி இருக்கின்றது-சன்னியாசியானவன் ஆத்திரன் பத்தியிலுடைத்தாருதற்குக் கூடாது - அப்படியிருக்க இப்படி எம்மால் செய்யக்கூடுமோ விபசாரியைப் பதிவிரதையாக்குவதுபோலல்லவோ இருக்கின்றது ஆத்திரனுமென்ன அம்மாத்திரனுவன் அந்தணரோவென்னைப் பாத்திரனெப்படியாவான் என்றிது பலவார்த்தைகளாடிச்-சிட்டைக்கிழித்தெறிந்து - மந்திரியை நோக்கி இப்பிறப்பில் இவர்கள் விப்பிரரோ டுண்ணுவதருமை மறுபிறப்பக்குதலென் றவ்வாசானுக்குரைப்பாயென் றுரைத்தார்கள், அவ்வசனத்தைக்கேட்ட மந்திரி உலகிப்பலைப ஒருவரால் தீர்த்திடப்படுவதுமென்றுணனி அலங்காவதிக்குப்பிரயாணப்பட்டுப்போய்விட்டான், பின்பு க்ஞானேசுவரர் வேதாசாரியனுக்குத் தன் தந்தையின் வரலாற்றைப்புகன்று பரமார்த்தத்தைக்குறித்துச் சன்னியாசம்பெற்றுக்கொள்பவன் பிரஷ்டனெப்படியாவான் இப்படி மிகவுங்கற்றோர் சொல்லுவமாட்டார்களென்றுரைக்க அதைக்கேட்டபூசுரர் அடாஅஷ்டப்பயலே மிகவுங்கற்றோனைப்போனுபார்த்தாய் கண்டவர்கிட்டிலுண்டு பிரஷ்டனையஷ்டனுக்குப்பிறந்தவர் சிரேஷ்டமொருகாலத்துமடைவதில்லை - ஞாயமாயுங்களைத் தொட்டுக்கொண்டதும் பிரஷ்டமடைய நேரிடுமென் றுரைய க்ஞானேசுவரர் அஞ்ஞானத்தினும் செருக்குற்றுத்-தயவில்லாத்துச்-சுத்திராலயமெக்கும் உங்களைப் பார்த்தமாத்திரத்தில் தோஷம்வந்துநேரிடும் - இதற்குச் சந்தேகமுண்டோ

வென, விடோ அப்பா க்ஞானேசுவரா - நமக்கு வாதேன் வேண்டாமென்றவர்களைத் திண்டலாகாதென்றபடி இச்சைவில்லாத வருடன்வீசைசெய்வதறகல்ல இக்கணம் அலங்காவதிக்குப்போயெல்லாம்வாருமப்பாவென முப்புரிநூலோர் க்ஞானேசுவராவென றுரைத்தவனைக் கேட்டுக் கெக்கலிகொட்டி நகைத்து ஓ - விடோபா இச்சிறுவனை என்ன பேர்சொல்லியழைத்தாயென விடோபா க்ஞானேசுவராவென் றழைத்தேனெனப் பூசுரர் மற்றை மூன்றுகுழந்தைகளின் பெயரென்னவென் மூத்தவன்பேர் நிவிர்த்திநாதர் இளையவன்பேர் சோபான்தேவ் - இப்பெண்ணின்பேர் முக்தாபாயெனவாதிவருணர் மத்தகாசம்புரிந்து ஆச்சரியம் நடைப்பத்தைக்குட்பட்டுக் குஞ்சகட்டினதுபோலவும்பனைக்கொட்டிப்பிழைப்பவனுக்குத் தனவனெனப் பேரிட்டதுபோலவும் உண்டவிட்டில் ரெண்டகஞ்செய்தவனுக்குத் தொண்டனென்றுரைப்பதுபோலவும் விதிமேலவைசையாய்ப் பதிதோஷநதிப்பவனுக்குப்பதியென் பதுபோலவும் பதியையிழந்த மதியிலாமங்கையைச் - சதியென்பதுபோலவும் - குருவ்வாமியை விஞ்சிப்பவனைக்குருபக்தனென்பதுபோலவும்-குண்டனிவேலைசெய்பவனைப்பண்டிதனென்பதுபோலவும் - பிரஷ்டனுக்கு உனக்குப்பிறந்த இந்நஷ்டபிள்ளைகளுக்கு நிவிர்த்திநாதர் க்ஞானேசுவரர் சோபான்தேவ் முக்தாபாயென்றிது பேரிட்டிருக்கின்றது,

எந்தவிச்சையினிது மிக்கவிச்சைதயே கேட்பதற்காச் சரியமாயிருக்கின்றதென் றுரைத்துப் பற்பலபரியாசவார்த்தைகளாடி - ஸ்நானஞ்செய்ய நாடிப்போகும்போது க்ஞானேசுவரர்-ஓ-பிராமணோத்தமர்களே மனைப்பாரத்துக் குலைக்கும் நாய்க்கு ஆயாசமேயன்றிப் பர்வதத்துக்காயாசமுண்டா சுவலோர்களைத் தூஷிக்கும் புல்லோர்களுக்குக் குற்றமுண்டா தெய்வத்தைத்தூஷிக்கும் நியர்க்குக்கேடன்றித் தெய்வத்துக்குக்கேடுண்டா அதுபோலவே முப்பத்திரண்டுபற்களைக்காட்டிக் கெக்கலிகொட்டி நகைக்கும் உங்களுக்கவமானமலமுமேயன்றி எங்களுக்கொருபோழ்தும் வாராதென்றுரைய வேதியர் அடாஅஷ்டப்பயலே வேகள்மேலுமா-நாங்கள் நாய்களென்றல்லவோ - ஒப்பிட்டுரைத்தாய் ஓ-அறிவுகெட்டவனே உன் அஷ்டத்தனமடங்க-வெட்டிவிடுகிறோம்-பற்களைத் தட்டிவிடுவோம்-பாரென்றுரப்பினார்கள்.

அப்போது-நிவிர்த்திநாதர் விப்பிரரை வணங்கி ஓ-பூசுரர்களே-எங்களுடையமுதிர்ந்தவர்களின் நீதிக்கல்லாக் குறைத்தோம் உங்களுக்குத்தப்படி எங்களுக்கேதா



வதெழுதிக்கொடுத்தாலும் சரி-இல்லையென் றுரைத்தாலும்சரி அப்படி செய்யாமல் இப்படி திட்டத்தகுமா திட்டுவதன்றி கிந்தைசெய்யலாமா இப்படிசெய்வதால் தொந்தரவல்லவாவென, ஆதிவருணர்-இனி சந்தடிசெய்யாமல் - வந்தவழிபோனல்-தொந்தரவென்வருமென நிவிர்த்திநாதர்-உங்களோடிவந்த எங்களுக்கு ஒருமையோடொருமிருபம் - ஏழுநிக்கொடுக்கலாகாதோவென வேள்வியாளர் - பறையன் மறையோருகாதுபோலவே - நீங்களும் பிராமணராகமாட்டீர்கள்-ஆதலால்-இக்காரியத்தைக்குறித் தினிபேசாமலிருப்பதே உங்களுக்குரியயோக்கியமென் றுரைய, நிவிர்த்திநாதர்-ஓ-பூசுரரே வேதத்தை விரித்துரைத்த வியாசரும்-அவர் தந்தையின் பாட்டனுகிய வசிஷ்டரும் - பாத்திவாசன்-ஆசிரியாதிய - வால்மீகரும்-குசகாசிவுழியும்-விசுவாமித்திரரும்-குலத்திற்றும்தவராயிருந்தும் - தவத்தாலவர்மேன்மையடைந்து - அந்தணர்களாயிருந்தார்கள்-அப்படியிருக்கத் - தவத்தைச் சாரந்த-எங்கள் தாதை - எப்படி விரஷ்டராவர் சொல்லுங்களென, அவன்முகத் தநித்தோர் - விவேகமில்லா வுனக்கு வெகுசிரமமாயுரைத்தும் - கேட்காமல்-இழுக்கதைசொல்லத்தொடங்கினும் - சபாநுக்கிரக சாமர்த்தியமுள்ள அவர்களுக்கில்லை உன் தந்தை ஒருகாலத்து மாகமாட்டான் மகரிஷிகளைத்-துதிக்கதுபோல் - பதித்தாய்-கோசலமாமுனி - ஓர் தீக்கைசித்திரரைச்சேர்ந்து - அவனுக்குப்பிறந்த - சஸு-குழந்தைகளையும் - அழைத்துக்கொண்டு சொர்க்கத்துக்குப்போய் - இவர்களுக்கு உபயனஞ்செய்து ஆட்கொள்ளுங்களென்று நீதிகளைவேண்ட அவர்கள் கூடாதென மறுத்துவிட்டார்களென்று பெரியோர்களுரைப்பது-மெய்யல்லவா அப்படியே பிரஷ்டனுக்குப்பிறந்த - நீங்களும் மாவைபரியந்தம் பிரஷ்டர்களாயே யிருப்பீர்கள் - பன்னிப்பன்னிப் பேசவேண்டாமென்றுரைப்பதுபோல் அவனுக்கு பயனில்லையென, நிவிர்த்திநாதர்-எங்கள்-தீச்சருக்குப் பிறந்தவர்களாவென.

அந்தணர் - சன்னியாசியாய்க்கண்டோர் வீட்டிலுண்டவன் - நீச்சனிருமியிருப்பான் - மிலேச்சனென்பாயென, நிவிர்த்திநாதர் நீங்கள் ஆராத்தியந்தர் விப்படி கோகமிதித்தோயன்றி அருமறையோராய்த் துணிக்கிறாரிப்படிச் சொல்லமாட்டார்களென, அந்தணர்-இதினையே-நிதிநோக்கன் - நடைபின்றிச்-சன்னியாசியைப் பிரஷ்டனென் றே-புரைப்பார்களென நிவிர்த்திநாதர் - வேதத்தில் பரமார்த்தலிதிக்கும்-பரமாமசயனவன-பிரஷ்டனென்றுரைக்கின்றனரோவென, மறையோர் அப்படியேயுரைக்கின்றதென, க்ஞானேசுவரருன்றைத

சுமந்துக்கொண்டுபோகும் - எருமைக்கடாவைச் சுட்டிக்காட்டி - இம்மேதிக்கடாவுக் கிணையான நீங்கள்-ஆதிநூலோ-ஒதியிருந்தாலல்லவோ நீதிகள்தெரியும் வேதமோதாத நீங்கள் - இம்மேதிக்கடாவேயாம் - வாதுசெய்யமாட்டார்கள் - அப்படியிருக்க - இவருடன் - வாதுசெய்யத்தகுந்தவர்களோ உங்களைத்தூதியபதிலும் - இந்த எருமைக்கடாவோடு - பேசுவதாற் பிரயோசனமுண்டென மறையோர் முக்காலமுடனே-முழுமூடன் கொண்டாடுவதுபோல எருமைக்கடாவிலும் - இழிவானதிவ் வெருமைக்கடாவுடனே - பேசத் தகுதியானவனென, க்ஞானேசுவரர் - இந்த எருமைக்கடாவுக்கிருக்கும் - ஆவியின் ஆவிரமயங்கில் ஓர் பங் கெங்களுக்கிருந்தால் உங்களை அதநியங்கொண்டாடவேண்டியதே வேலை இருமிறப்பாளர்-அடா அஷ்டா அந்த எருமைக்கடாவுக் கென்னவறிவுண்டு - இக்கணம்-அதைப் புகழ்ந்திருக்குமாபோலும் - உங்களை இரண்டுதுண்டாக வெட்டுவோம் - பாவென்றுப்பூரைக்கொலைவந்தார் முன் நிறுத்திப் பலவார்த்தைகள் கூசாமல் பேச, க்ஞானேசுவரர் - இந்தப் பசுவின்பண்பை உங்களுக் கறிவிக்கிறேன் - பாருங்களென்று போகத்துவின் மேல்கரத்தினைக் கல்-தன அவ்விடத்தைவைத்து ஓ-ஓருதத்தலே-அபசாம்-பிராமணனுறு நிபால்பிராமணனு பிமர்த்தானத்தால்பிராமணனுதலேவையோ-காமபாரியங்களுக்குறைவிலையோவானதேவையெனவிடோ உலைகைவய உளைவாய்த்திறக்குமை ப்பயாவியென் று-திருவாய்மலர்ந்தருளிய-மாத்திரத்தில் அக்கடாக்குத்த-யஜுர்-சாமம்-அதர்வணமென் னும்சதுர்மறைகளிலுள்ள-அதிகேவமக்கியங்களைத்து ழுதியில் இந்தகேவலக்குசொன்னது உணைமனுயா தேதுக்க-காமகுனையதேகன்னு - வேதமுக்கியம் அகிபாராணம்-பிரமகுருராவர்குமிரமனு (க) தாசிகாப்பசம்பூதம-காரதனமகறைமுனிகவைப்பிரமமேறுபுகவாசாரிய அதம்கனதாவேத (உ) வால்மீகப்பசமுதம-வசிஷ்டம் மறாமுனி - தவைப்பிரமேறுபுதவா - தல்யாறுத்தம் தாசவேத (ஙு) கனகேர்ப்பசம்பூதம - சவுனக்ய மறாமுனி - தவைப்பிரமமேறுக்புகவா - தன்யாறுதம் நகாபவேத. என்றிது பிராமணனுக்கு - முக்கியமான-இவ்வாக்கியங்களைப்புகன்று - க்ஞானேசுவரர்க்கு - வந்தனஞ்செய்ய அந்தணராச்சரியமுற்றுத்-தங்களுக்குள்ளிருந்தமாச்சரியங்கெட்டு-அப்பா இவன் மகாமகிமைவாதி இதிலேயிருக்கலாமையோவாம். கேரிடுமென் றொருவர்போனவழி - ஒருவர்போகாமல் பலபக்கங்களில் தெறித்தோடிப்பதுங்கலுற்றார்கள்.

அப்போது செந்தினைப்போர்க்குத் தேசிகரானஆசிரியர் பாண்டுரங்கனு-க்ஞானேசுவரர் நிருமடிகளிற்

பணிந்து - நிவிர்த்திநாதர் முதலானவர்களையும் வணங்கி விட்டோமாவுடைய வினைக்கு - எருமைக்கடா வேதத்தைவாக்கியம் - சத்தியம் இவ்வாக்கியம் - வேதத்திலில்லையென்றுரைப்போர் - இருணரகடைவார் - அடியேன் உங்களுடைய மகிமையையறியாமல் அபசாரப்பட்டேன்-இந்த அபசாரத்தை உபசாரமாகக்கொண்டு என்னை யிக்கணமே ஆட்கொள்ள வாருங்களென்று - தன்மனைக்கழைத்துக்கொண்டுபோய் பூசனைசெய்து தனக்குற்ற கிளைகளுடன் அவர்களைப் பந்தியில்வைத்துக்கொண்டனைவரும்ஒன்றி வேதாந்தநூல்களைக் கனாயடிக்கொண்டிருந்து புசித்திருந்தார்கள் இதையறிந்த அவ்வூரிலுள்ள வேதபாராயணர்களும்-ஒரிடத்திற்சேர்ந்து கதாசாரியன் பிரஷ்டர்களைச்சேர்த்துக்கொண்டு பந்தியில்வைத்துக்கொண்டுண்டு ஆசாரங்கெட்டான் அனுசாரத்துக்குட்பட்டான் ஆதலால் அவன் வீட்டில் நடக்கும் - சுபாசுபகாரியங்களுக்கு நாம் யாரும்போகக்கூடாதென்று திர்மானஞ்செய்துகொண்டனருடன் ஆசாரியரைப்பார்த்தாலும் பேசாமல் தூஷித்துக்கொண்டிருந்தார்கள்.

இப்படியிருக்கிறதானால் ஆசாரியர் தன் தந்தையின் திவசம் வந்தநாள் பிதுர்தேவதைகளுக்கு வைவேத்தியஞ்செய்யவேண்டிய கிரிகைகளெல்லாஞ்செய்து முடித்து - அந்தணர்கள் உண்ண முன்பிக்க வேண்டித் தனக்கு மிகவும்அன்பாயிருக்கும் சிலமறையோரை அன்னமுண்ணுதற்கு வரும்படியாய்க்கேட்டுக்கொண்டார். அதற்கு அவர் முகத்தைச்சுளித்தோர்-ஓ-ஆசாரியனே பிரஷ்டர்களான சூத்திரர்கள்-மகோ-ஓர் வித்தையால் எருமைக்கடாவினால் சிலசுலோகங்களைஓதி வைக்கவே - நீ ஆசாரத்தைவிட்டு அனுசாரத்துக் குட்பட்டதன்றி எங்களையுங்கெடுக்க நினைக்கின்றாய்-இனி யுன் வீட்டில் நடக்கும் சுபாசுபகாரியங்களுக்கு நாங்கள் வரமாட்டோமென்று மறுக்க ஆசாரியர் வியாகுலத்தோடு வீட்டையடைந்து இதற்கென்னசெய்வதாமென்று நினைத்து - முகஞ்சுருங்கி-மனங்குழம்பி-மனோராச்சியத்திலிருக்க-நிவிர்த்திநாத - ஆச்சாரியரைநோக்கி ஓ-உத்தமரே யாதுகாரணத்தால் முகவாட்டமும் மனக்கோட்டமும் பொருந்தியிருக்கின்றீர் - என்னவுரைத்திட்டதென, ஆசாரியர்நடந்தவிர்த்தாந்தத்தைப் புகன்று உலகக்கட்டுப்பாட்டை ஒருவராலுங் கடத்தற்கரியதாயிருக்கின்றதேயென, நிவிர்த்திநாத சத்குணமுள்ளவனே நாதிமான் சத்குணமில்லாதவன் சண்டாளனென்று வேதஞ்சாற்றுவதால் சத்குணமில்லாத அத்குணரை அழைத்தல் குற்றத்துக்கிடமுண்டாகுமென ஆசாரியர் உலகவியாபாரத்தி லிருக்கிறபடியக்ஷம் உலகந்தோ கொடுத்துவாழவேண்டும் இன்றேல் அன்னியாகியாய்ப்போகவேண்டும் இவ்விரண்டும் இல்லாவிட்டால் துக்குப் பழியே அனேகநாளாயிருக்கின்றது - ஈரவிடாட நாமும் வோடவேண்டுமென்கிற பழமொழியை இன்று பரீட்சித்தேனென, நிவிர்த்திநாத பிரமஞானத்துப் பிராமணனென்றும் - தபசேபிராமணத்துவமென்றும் - எருமைக்கடாவினுஞ் சொல்லி வைத்தும்-தெளியாத அந்தணர்க் கெளிதெனவித்த வறிவுணர்த்தலாம் பன்றியோடுகூடிய கன்றுக்குட்டிபோல் துஷ்டர்களாகிய அவர்களோடுகூடி நீர் பிறடைந்த படைத்திர இதற்கு நானொன்றுசெய்வேனெனவாட்டமுகத்தை நீக்கிட ஆசாரியர் பரமார்த்தத்தை நாடிய நமக்கு அந்தணரோடக்களாயில்லையாயினும் பிதுர் தேவதைகட்குப் படைத்த அன்னத்தைப் பிராமணரன்றி மற்றவர்களுண்ணத்தகாது - உண்டாலோ பிதுர்களுஞ் செய்தவரும் அவன் குலம்பழமைகாத்ததை யடைவார்களென்று கர்மகாண்டத்தில் முறையிடுகின்ற தகனுலேயே வாட்டமடையகிரிட்டதென, அதற்கிசைந்து ஞானேசுவரர் பிதுர்தேவதைகட்குப் படைத்த அன்னம் அப்பிதுர்தேவதைகளே புசிக்கவேண்டுமென்றிப் பிராமணர் உண்ணவேண்டாமென.

ஆசாரியர் பிதுர்தேவதைகளை யழைப்பித்துண்பிக்கும்படியானவல்லமை யாருக்கிருக்கின்றதென, ஞானேசுவரர் உமக்குற்ற மனக்கோட்டம் நீங்க இக்கணமேவந்துபிதுர்தேவதைகளை அழைப்பிக்கிறேன் யாருமென்றறைந்து ஓ பிதுர்தேவதைகளே இக்கப்பிராமணுத்தமர்களிப்புற இக்கணமே வந்து உண்ணவிய தரிசனந்தந்துஇவ்வன்னத்தைபுண்டு ஆசாரியனையாட்கொண்டு அந்தணர்க்கறிவுணர்த்திப்போங்களென அழைத்தமாத்திரத்தில் அவ்வூரிலுள்ளமாந்தர்யாவரும்பார்த்தாச்சரியப்படக் ககனமார்க்கத்திலிருந்து விமானங்களி லூர்ந்துகொண்டு அனேகபிதுர்தேவதைகள் ஆசாரியர்வீட்டுவிறங்கிப்பத்திரங்களில் வீற்றிருந்தன்னமுண்ணும்போது அவ்வற்புதத்தைப்பார்த்த அந்தணர்முதலானவரும் ஆச்சரியப்பட்டுத் தங்களுக்கிருந்தமச்சரியம்விட்டு ஆசாரியர்வீட்டிலுட்சென்று சத்தியமென்புகன்று அன்னமுண்ணும் பிதுர்தேவதைகளை வணங்கி- ஆசாரியரைவணங்கி-ஞானேசுவரரைத்தாழ்ந்து-நிவிர்த்திநாத முதலானவர்களின் திருவடிகளில் வீழ்ந்து - நீங்களே பிரத்தியக்ஷதெய்வங்களென்று பற்பலவிதங்களாகத் தோத்திரஞ்செய்ய, ஆசாரியர் உடலம்பொங்கிப்புல்லரித்து சந்தித்துங்கித் - அன்புக்குறைந்து - இன்பக்கிறைந்து



ஞானேசுவரர் திருவடிகளிற்பணிந்து - தவ திருவங்களை யணிந்து - நீ ஞானதீசுவரன் - நீரே பரமேசுவரனென்று தோத்திரம்புரிய, ஞானேசுவரர் அந்தணரைநோக்கி ஓ - விப்பிரரே பிரஷ்டரையும் பிரஷ்டனுக்குப்பிறந்த அஷ்டரையும் வணங்கலாமா, வணங்கினேல்கலமா, இப்படிச்செய்வதால் உங்களாசாரத்துக்குக் குறைவாகுமே மேன்மை நீங்கிப்போகுமே யென, மறையோர் ஓ-மாதவனே - யாங்கள் பொழுதுயாதவனே அறியாமையாற்செய்த எங்களபசாரத்தை உபசாரமாகக்கொண்டு இக்கணமே அடியேங்களை ஆட்கொள்ளுமையாவென்று அவர் தாளகளில்வீழ்ந்து தோத்திரஞ்செய்ய, ஞானேசுவரர் ஓ-வேதியரே அகப்பட்டால் முடி-இல்லாவிட்டால் அடியென்கிற பழமொழிக்குகந்த உங்கள் முகத்தைப் பார்க்கவேகூடாது - பிதுர்தேவதைகளன்னமுண்ணும் மிவ்வீட்டில் நுழைதற்கென்ன காரியமிருக்கின்றது, அறிவருணர் சிறியோர்செய்த பிழைபொழுதெல்லாம் பெரியோராயிற் பொறுப்பதுகடனென்கிற பழமொழிப்படி சிறியோங்கள் செய்த பிழையைப் பொறுத்து எங்களுக்குள்ள பாசங்களையறுத்து அடிமையாக்கிக்கொள்ளும் ஸ்வாமியென்றுரைக்கத் துபாசிப்பான - ஞானேசுவரர் ஓர்சாரில் வீற்றிருக்கவென்றுரைத்து பிதுர்தேவதைகள் புசித்தபின் அவர்களுக்குண்டைகொடுத்தனுப்பி வேறுபாத்திரங்கள் போடச்செய்து அந்தணர்களை விருந்திட்டாரைவைத்துத் தாங்களும் வீற்றிருந் தன்னமுண்டு ஆசாரியரைச் சந்தோஷமுறச்செய்தார்.

இப்பால் அவ்வூரிலுள்ள அந்தணரும் அரசனும் மற்ற முன்னுமவர்கைத்தோரும் ஞானேசுவரர் முதலானோரைத் தெய்வங்களாகபாவித்து அன்போடு தினமுன்வைத்திருந்து ஞானேசுவரருத்திரவின்படி அலங்காவதிக்குப் பிரயாணப்பட்டுப் பலநாடுகளைக்கடந்து அலங்காவதியையடைந்து-அலங்காவதியைப் புறத்தும் அரசனையும் - சிதோபந்தையும் புகழ்ந்து - அவ்வூரிலுள்ள விப்பிரரோடுகூடிச் சகலரும் வுண்டு - ஆனந்தமடைகொண்டு - ஞானேசுவரர் முதலானவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு-பைடணபுரியைச் சேர்ந்து-தனிகூர்ந்திருந்தார்கள். அலங்காவதிபி வாசன் ஞானேசுவரர் முதலானோர் பாலியராயிருந்தாலும் பரம தேவதைகளெனத் துணிந்து - அகத்தி சுத்தி - அவர்கள் தரிசனபவுசனத்தால் காலங்கழிக்கலானான். சோபந்து விட்டோபா - ருக்மாபாயீ - முதலானோருக்கும் - ஞானேசுவரர் முதலானோர் தம்திருவிளையாடல்களைக்கூறிடு - ஆனந்தவாரியிற் படிந்திருந்தார்கள் ஞானேசுவரர் முதலானோர் அனேகருக்கு ப்பிரமஞானமும் சகுணத்தியானமும் போதித்துக்கொண்டு டானந்தமாயிருந்தார்கள்;

கேட்டீர்களோ சித்தர்களோவென்று சடாபஜித்தர் பின்னுஞ்சொல்லத்தொடங்கினர்.

ஞானேசுவரர் எருமைக்கடாவினும்
வேதத்தை விரித்துரைத்த
அத்தியாயமுற்றிற்று.

ஞானேசுவரர் சரித்திரம்

முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமகாபக்தவிஜயம்;

# அறுவது

# குசேலமுநிவர் சரித்திரம்

ஸ்ரீ கண்ணபிரான் துதி

பஃறொடைவெண்பா

பூமேவுநான்முகத்தோன் போற்றிமுதிப்பதுவும்
தேமேவுபைந்துளவஞ் சோக்கமழ்வதுவும்
மாமேவுமாமறைகள் வாழ்த்தப்பொலிவதுவும்
தேமேவும்வஞ்சச் சகடமுதைத்ததுவும்
நீமேவுமாரணியஞ்சென் றரித்ததுவும்
நாமேவுமன்பருளத் தோன்றப்பயில்வதுவும்
பாமேகவண்ணன் பதம்;

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்;

முற்றுவிளமென்றளிர்க்கரத்தான் முளரிவிலாதுமெல்லெனச்செம்
பொற்றுமரையிற்குடியிருக்கும் பூவைவருடந்தொறுஞ்செக்கும்
விற்றாணிநற்பதமிரண்டும் வியன்மால்நடந்திண்டிடநடந்து
கற்றுமெய்த்தசிற்றுயன் காமர்சீர்த்திவாழியவே

ஸ்ரீ சுகப்பிரம்மரிஷிவாக்கியம்

வரரீச் அகத்தாயும், புறத்தாயும், அனைத்திலும் வியாபகமாயும், அணுவுக்கணுவாயும், மகத்துக்கும கத்தாயும், பரமாயும், அபரமாயும், வளர்தலும், தேய்தலுமில்லாததாயும், ஏகமாயும், ஏகத்துக்கு ஆதாரமாயும், சகல குணங்களாயும், நிர்க்குணமாயும் பாருபாவிசெய்து வேதங்கள் சொல்லும, பொருள்களின் விரிவுக்கும், எட்டப்படாததாயும், உருவாயும், அருவாயும், உயிர்க்குயிராயும், உணர்வுக்கு உணர்



வாயும், ஒளிவுக்கு ஒளியாயும், அரியமயும், அரியதீதமாயும், தோன்றும் பொருளாயும், நிர்மலனுகியும், மனத்தாலும் வாக்காலும், நினைக்கவும், உரைக்கவும், அரிதானவனுமாயும் அனுபவனுகியும், அகண்ட பரிபூரணனுகியும், காலசக்கரத்தையும், குணங்களையுங் கடந்த நிருவிகற்பனுகியும், சருவக்ஞனுகியும், அலகிலாவிளையாடல்களில் இச்சையுடையவனுகியும், அடிமுடியற்றவனுகியும், முத்தியளிக்கு முதல்வனுகியும், பரதத்துவப்பொருளாகியும், பிராகிருத பந்தமற்றவனுகியும் பிரபுவாகியும், புவனங்களுக்கெல்லாங் காரணனுகியும், ஆதாரனுகியும், அப்பாலைக் கப்பாலாயின்ற அகளங்கனுகியும், சேயச்சையாலன்றி பிறப்பு யிறப்பற்றவனுகியும ஞானுனந்தமயனுகியும், மருவியோரின்றியாவாகேலவாது உயிர்த்தோறுறும், பார்த்தன் பவித்திரனும், உத்தாருமாரன முருமாமுகு பரமயோகவதிப்ராணமணியாகிய பரிட்சித்துமகாராஜனை ஸ்ரீசுகசேல முனிவர் ஸ்ரீபகவானேனுடே கட்டினராகி ஆலராக் இமைமயில் இன்பமும மதுளிலின் பேரின்பமுமுற்ற திவ்யசரித்திரத்தை உரைக்கின்றேன் அதனை உள்ளத்தில் பதியும்படி செவிகுளிரக்கேட்டுப்பேறனக்கடைய நலவாகவென்று சுகமுனிவர் மின்னும் சொல்லாயினர்.

செழிய கடல்புடைசூழ்ந்தபூமண்டலத்தில் பரதகண்டத்தில் பூமாதேவியின முககமல்போலவு, அம்முகத்தில் எழுதிய திலகம்போலவும், கண்கள்போலவும், திருமகள் மார்பிலிருக்கும் மாங்கல்ய சூஸ்திரம்போலவும், அப்பாரசுதந்திரின் ஸ்தனபாரங்களில் புனைந்த முத்துமாலைபோலவும், அத்திருவீற்றிருக்கும் ஆசனமாகிய செந்தாமரைமலர்போலவும் மாயவன் மணிமார்பில் ரிக்கிருக்கும் கௌஸ்துபாபரணம்போலவும் அவ்வணிகலனை வைக்கும் பெட்டிபோலவும் ஊழிக்காலத்தில் சகல சராசரங்களும் ஒடுங்கியுள்ள அப்பரந்தாமன திருவுதரம்போலவும், அப்பரமமூர்த்தி சித்தமுத்தம் கொள்ளுமம அபயிராமிருத வுலகாயிய பரமபதம போலவும், உத்தமதலமென்று ஒருதிருநகரமொன்றுவின்றது அதன்பாங்கர மங்கைப்பருவமுடைய மாதர்கள் தங்கள் நாயகர்களோடு பிணங்கிக் கழற்றிவிட்டிய இரத்தினுபரணங்கள் வீதிகள்தோறும் ஒளிவீசுகின்றதால் இது வைகுந்தலோகந்தானே என்று அமரர்களும் ஐயங்கொள்ளும் அற்புதமான அவந்தியென்னும்தேசம் ஒன்றுள்ளது அதன் வளப்பம் செந்தமிழ்ப்புலவரானும் ஆதிசேடனாலும் புகழ்ந்துரைக்கமுடியாது அப்படிப்பட்ட சிறப்புடைய செழிப்பைக் கூறுதற்கு என்னுல்முடியாதாயினும் எனது உள்ளத்தில் உதிக்கும் சந்தோஷம் தூண்டுதலால் சிறிது உரைக்கின்றேன் அத்தேசத்தின் மருதநிலத்தின் வயல்களில் செம்பயிர்களானவை சூல்முதிர்ந்த பச்சைபாம்புபோல் கருப்பமடைந்து மேனமைக்குறைமற்ற செல்வப்பொருள்ள நீரோர்கள் இறுமாந்து தலைநிமிர்வதுபோல்நிமிர்ந்து கல்விஞானமுற்ற மேலோர்கள் அடக்கமுடையோர்களாய்த் தலைகுனிந்து வணங்குவதுபோலக் கதிர்க்குலைகளைவிட்டுத் தாழ்ந்தாய்க்கும் அவைகளாய்க்கும்படியாகத் தாமரைமலர்களிலிருந்து ஒழுகும்தேனும் கோடிப்பூ வேட்டப்பூ மற்றைநீர்ப்பூ முதலியவற்றின் தும்பிச்சுரிந்தேறலும் பெருகியேறு வயல்களினிலும் கடலிலும் போய்விழும் வாளைமீன்கள் பாய்வதனுல் கயற்கெண்டைகள் துள்ளிவிழ அதனால் வரால்கள் கருமகளின் ஊனை முதுகுநிழியப்பாய்ந்து மேலெழும்பிக்கமுகம்பாளைமொட்டுகளைக்கிழியவிரிக்கின்றனவாகக் குருத்தூற்றுள்ளது சூரியனுடைய உருளைத்தேதிற்கட்டிய பச்சைப்புரவிகள் ஏழும் இளைப்பாறுவதற்குத் தக்க பூஞ்சோலைகளும் அந்நாட்டுமங்கையர்கள் செல்வம் மிகுதியும், உடையவராயிருந்தது மன்றிக் கல்வியிலும் சால்புடையாயிருத்தலினுல் அதிதியர்கட்கும் இரவலர்க்கும் அறுசுவையமுதம் தேங்கனி மாங்கனி பலாக்கனிகளோடு அறுசுவை பதார்த்தவுணவுகளை உண்பிக்கின்ற வுற்சாகச்செய்கையும் குயிலோசையும் மொழியும் அயில்போலும விழியும் மயில்போலுஞ் சாயலும், பஞ்சின்மெல்லடியும் பவளவிதழும் முல்லைநகையும் பங்கயக்கொங்கையும் அன்னநடையுங் கூந்தலும் ஆலிலைவயிறும் நூல்போல் மருங்குலும் அரவகலைகளுமுடைய மாதர்களின் அளகபாரத்தைக்கண்டு கோகிலங்களெல்லாம் மேகங்களென்று வாய்திறந்து மௌனிகளைப்போல் பேசாதிருந்தன மயில்கள் கருப்பஞ்சாற்றைக் காய்ச்சுகின்றநிறைக்கும் வானத்திற் பரவுகின்றபுகையைக் கண்ணுற்றுக்கொண்டுல்லாக்கூத்தாடும் கம்முடைய சாகசங்களின் வளப்பத்தைகிகர்த்து விண்ணுலகத்திலும் ஒருநாடு உள்ளதோவென்று எட்டிப்பார்ப்பதுபோன்ற இந்திரும்பிகளும் மாதர்கள் தானதிகிநிவரு இசைக்கொத்தாகிருந்தனஞ்செய்கின்ற காட்சைகளும் அவ்வகைமாதர்களின் மனவலிமைப்படாத முனிவர்கள் மடங்களும் கல்விச்சாலைகளும் தருமச்சாலைகளும் பொறுங்கியல்களுள்ள அரைமனைகளும் மணிக்குப்பைகளுடைய மண்டபங்களும் அந்தணர் அரசர் வைசியர் சூத்திரர் வாழும் வீதிகளும் விண்ணுலகத்துள்ள அன்னைவர்களாகிய இமையவர்களும இமையாதுபார்க்கின்ற கடைவீதிகளும அங்கு மாஸ

விலைசகர்கின்ற மாலை மதிநுதியர்களாகிய மடமங்கையர் கவி மணமில்லாமலர்களையும் வெறுஞ்சங்கைகயும் விற்க அவற்றைக்கொள்பவர்களாகிய வாலிபர்கள்அப்பாவைமார்களின் கண்ணிறவு பாய்ந்தனுல் கஸ்தூரிகலந்ததென்றும் சுவாசம்பட்டதினுலே நற்கந்தம்பொருந்தியுள்ளதென்றும் அருமையாகவாங்குவதும் அன்னியர்களது பொருளைத் தங்கள் அரும்பொருளாகப் பாவித்து ஒன்றைப் பத்து நூறு ஆயிரம் ஆகப்பெருக்கி வாணிபஞ்செய்யும் வளப்பும் ஐசுவரியத்தால் அனேக வேசகளையும் கல்வியால் அளந்தவையும் அழகால் அனங்கனையும்வென்ற கீர்த்திடையுடைய மைந்தர்களும் கற்பில் அருந்ததியைப் பின்னிடச்செய்து கணவரது சொல் முறைகடவாதமாதர்களும் தங்கி இன்புறுமவரும் இனிதுமலர்ந்த மலர்களலர்ந்த சுந்தரவனங்களும் வாவிகூபங்களும் நான்குவேதங்கள்போன்ற நான்குவேதங்கள்போன்ற நான்குகோபுரங்களும் ஏழில்படியும் மதில்களும் பொற்சிகரங்கள் பல அமைந்துள்ள எழுநிலை மாடமாளிகைகளும் கூடங்களும் அவற்றிடையே புள்ள திருவாயில்களும் பலவுள்ளது அந்நகருக்குச் சமீபத்தில் மந்தாரம் - கச்சோலம் - வாகை வெட்பாலை - சந்தனம்-வகுளம் - சண்பகம்-நாகம்-வேங்கை-பலா-முருக்கு-எழிலம்-பாலை-மாதுளை -ஞாழல் தேக்கு-முதலிய பலவிருட்சங்களுமுடைய வனமொன்றுண்டு அதனிடையில் குரவருமருதும்பெருங்குன்றம் ஒன்று உலகத்தை கோடியாய் அளக்குமிய திருவிக்கிரமனைப்போல் நீண்டோங்கி அமைந்ததாவில் கனி கிழங்கு - சருகுகளாகிய உணவுகளை உண்டும் கோவணடை உடுத்தும் வேடர்களும முனிவர்கள்போல் விளங்குவார்கள் சிங்கம்-யானை-புலி-கரடி-ஓட்டகம்-ஆளி-இவைகளின் வோசைகேட்காது யானைகளின் தந்தங்களினின்றும் சிந்துகின்ற முத்துக்களும் பாகி ஒளி வீசகின்றமையால் அவ்விடத்தில் இருளென்பது அரிதாயிற்று அத்தப்பெரியமலையின் கொடுமுடியினிடையில் முனிவர்கள் வாசஞ்சேரி ஒன்றுள்ளது அந்தச்சேரியில் வேதகோஷமும் யாகசாலைகளில்கூடிமந்திரவோசையும்ஆரக்கினையடைந்து ஆசீர்ப்பாகங்களை அளிக்கின்ற ஆவாரமுமாசீர்வசனவோசையுங்கூடிக்கடலொலிபோல முழங்கிக்கொண்டிருக்கும் தருப்பைபறிப்பவரும் சமிதைகொய்பவரும் மலர்பறிப்பவரும் பஞ்சகவ்வியஞ்சேர்ப்பவரும் பவித்திரமுடி பவப்ருப மலர்களைப்பறிப்பவரும் சாஸ்திர ஆராய்ச்சிசெய்யும் மேலோக்குடேபசரிப்பவரும் சரியை கிரியை யோகம் ஞானம்இவற்றில் சிறப்பவர்களும் ஒருபால் வேத மோதுபவர்களும் கற்பவர்களும் மற்றொருபால் மெய்ப்பொருள் பொய்ப்பொருள்கள் இரண்டையும் கோவிசாரித்து உணர்பவர்களும் உள்ளதாகிய அச்சேரியில் இயற்பெயர்வாய்ந்த குசேலனென்பவர் அங்குவாழும் முனிவர்களுடைய அருங்குலத்தில் இருப்பாற்கடலின் சோடசகலைகளும் நிறைந்தசந்திரன் உதித்தாற்போல அவதரித்து அனேகர் ஈகாரஞ்செய்கின்ற மகரந்தப்பொடியுள்ள செந்தாமரைமலரில் வீற்றிருக்கும் திருமகள் உறையும் திரு மருமார்பனுகிய ஸ்ரீமந்நாராயணனது திருவடிக்கமலங்களை இடையறாது தன துள்ளக்கமலத்தில் பதியவைத்து ஐம்பொறிகளையும் தீயவழிகளில்செல்லாமல் அடக்கும மேலான நற்குணமுடையோனுகி மேலும் தன்னுயிர்போலபிறவுயிர்களையுங்காப்பாற்றுதல் அறிவுடையோர்க்கு உறுதியாகிய செய்கையென்று சதுர்மறைகள் முறையிட்டு உரைப்பது சத்தியமென்று தனது பரிசுத்தமாகிய உள்ளத்தில் வளர்த்தும் உபாதியினை அஃதினையென்னும் இருவகை ஜீவராசிகளும் மனமகிழும்படியாக ஆதரித்து உதவிசெய்தலே வினைதும் அடக்கமும் பெருமையும் கருணையும் சினேகமும் விரதங்களோடு தன்னிடத்து இமைப்பொழுதும் நீங்காதுவளர்த்தும கோபமும் காமமும் மயக்கமும் ஆகிய மூன்று குற்றங்களையே மேலும் மேலும் விரும்பிச்செய்கின்ற தீம்மக்களாகிய பாவிகளது கூட்டுறவை சொற்பனத்திலும் பற்றாமல் அவற்றை அடியோடு பேர்த்தெறிந்தும் ஞானசாஸ்திரங்களை முற்றுங்கற்றுணர்ந்து தன்னை அடுத்தோரை பரிபக்குவம்பார்த்து இத்து அதிகாரர்வரன்வென்றும் முன்றுவகைகளையும் பயிலுவிக்கும் ஆசிரியராகிய சாந்தீபமுனிவர் திருவடிகளை தஞ்சமாக அடைந்து வேதோபநிஷதங்களில் சந்தேக விபரீதங்களால் வாசனைவிலகின்ற காயம்பூ மலர்போலும் திருமேனியையுடைய மணிவண்ணனுகிய கண்ணபிரானோடு கற்றுணர்ந்தும் கொழுந்துவிட்டு எரியும் பசித்தீயைத் தணித்து குற்றமற்ற வைராக்கியம் அதிகரிக்க சாந்திராயணமுதலிய செய்தற்கருமையான விரதங்கள் பற்பலமேலோங்கிவிளங்கப் பலநாள் செய்து முடித்து என்பு நரம்புதன் தோன்றித் தசைவற்றியினை தேகமுடையவனுகியும் சூரியன் உதயகிரிமேல் தோன்றும விடியற்காலத்தின்முன் எழுந்திருந்து உலகோர் நித்திரைவிழிமுன்னும் சிங்கி சௌசாதிகள் முடித்து தீர்த்தத்திற்சென்று தீர்த்தமாடி சந்தி செபம் வேதங்கள முதலிய கிரியைகளைக்குறையாது விதைப் புரிந்துசெய்து அதமைந்து மனக்குறிப்பின்படியே மெய்-வாய்-கண் நாசி-செவி-என்னும் ஐம்பொறிகளின்வழி எப்சுன்பமை ரூபரசகந்தம் என்னும் ஐம்புலன்களும் ஒன்றுபட்டு ஒழுகட்டுதும் தலைவரதி உடையவனுகியும், பொரு



மையைவெழுத்த சிறந்ததவசிகள் [illegible] என்னும் பாருபாட்டைக் கருவருந்து முனி[illegible]கரும் தமிடமதாக வசஞ்செய்வாரென்று மறையோர் உரைப்பதற்கேற்ப இது விதியென்றும் அது காமியமென்றும் தெரிந்து வசிக்கும் பேதமில்லாதவனுமெப்படி [illegible] பெற்ற அக்கிராமணனை ஜனனசாகரத்தைக் கடக்க என்னும் புத்திமான்கள் எவர்தாம் புகழமாட்டார்கள் ஏ - பரீட்சித்துமன்னவனே மேலும் பலபல கிழிந்த வஸ்திரங்களைச்சேர்த்து இணைத்துக் குறிசிறப்புத்திய மெல்லிய இழைநீசாட்டினுல் பொத்திய கந்தையே பட்டாடையாகத்தரித்துக்கொள்ளும் காரணத்தினுல் இம்முனிவனைக்கண்டோர் யாவரும் குசேலனென்னும் பெயரால் அழைப்பார்கள் அதனரியும், அஞ்ஞான சாகரத்தைக் கடந்த மனமுடையவனுகி வேதமுடிவைக்கண்டு ஞானதீபமாய்விளங்குகின்ற இத்தகுசேலமுனிவரானவர் பாற்கடல்மீது கார்க்கடல்போலபடமுடைய பலதலைகளையுடைய அரவணைமீது அறிதுயில்கொள்ளும் ஆதியஞ்சோதியாகிய அலைப்பிரானுடைய திருவடிகள் வருடச்சிவந்து காட்டும் செந்தாமரைமலர்போன்ற திருவடிகளைத் தனது இருதய கமலத்தில் [illegible] மகாசிறப்புடனே பூசைசெய்பவர் இவ்வாறு ஞானவல்லமைபொருந்திய பூசைசெய்துவருபவர் காமிசெய்யும் தவத்திற்கு உதவியாகும்நிமித்தம் அன்பிலும் அழகிலும் கற்பிலும் சிறந்தவளாகிய பொறுமையிற் பூதேவியையொத்த - ஒரு மங்கை வேதவிதிப்படி விவாகஞ்செய்தார் அவரது இல்லறக்கிழத்தியாகிய அம்மாது குற்றமில்லாதகற்குடியிற்பிறந்தவள் வந்தவிருந்தினர்க்கு உண்பித்து இனிவரும் விருந்தையெதிர்பார்த்திருக்கும் அன்புடையவள் தன் நாயகன் நினைப்பறிந்து ஒழுகுந்தன்மையுடையவள் வாய்மையுடையவள் சினஞ்சிறிதுமில்லாதவள் தனதுகணவன் கொடுக்கப்பெற்றதைக்கொண்டு மகிழ்ச்சியுடையவள் பின்னைப்பேதமில்லாதவர்க்குப் பாகதி காண்டியென்று மறைமொழியும் பழமொழியுமுதலானவை தனதுகணவன் நீக்கும் பரமபொருளை அடையமுயற்சிசெய்யும் பண்மையனுகி இருதயமருளுக்குழவியுடைய தன் மனோயானோடு புணர்ந்து அவருக்கு இன்பம் ஆக்கித்தனர் அவ்வண்ணம் அவர் தன்மனைவியைக் கூடிப் புத்திரோற்பத்தி செய்வித்தமாத்திரத்தில் அம்மடந்தையின் தேகமுழுவதும் பரிபாசம்பூத்தாற்போல் விழிகுழித்தும் கொங்கைகளிற்பாலைசுரந்து முகவிளர்த்துமான பலக்ஷணங்களுமிச்சையுற்றுக் கருப்பமுதிர்ந்து பத்துமாதமும் நிரம்பிப் பால்போலும் தவளநிறமுடைய சந்திரனை அலைவிந்து முந்தைப்பெற்றதைப்போல ஒரு ஆண்குழந்தையைப்பெற்றவள்பிறகு சிலநாள்கழித்துப்பின்னும் பிள்ளைகள் பெறவேண்டிக் கருத்துவெறிந்து தனதுநாதனைப்புணர்ந்து ஆறைமையோடிருபத்தாறுபிள்ளைகளையீன்றாள்கேளீர் [illegible] பெற்ற புதல்வனை மகிப்ப பொருள்களைத் தங்கள் சிரசத்திற்கு விலைகசேர்த்துவைத்திருக்கும் செல்வமுடையோர்கள் மகிழும்படியாக ஒருபுத்திரனையும் தராத அம்புயாசக் கடவுளானவர் எவருக்கும் ஆஸ்பதமில்லாத வறியவனுகிய இக்கப்பிராமணனுக்கு இத்தனைப்பிள்ளைகளைக்கொடுத்தது அவரது திருவிளையாடலேயாம் இவர் செல்வத்தினுற் செருக்குற்றவர்களுடைய மாடமாளிகைகளைப்பற்றி பற்களையெல்லாம் தெரியக்காட்டி அகத்தினுள்ள அன்பத்தை முகத்திற்காட்டித் தங்குறைச் சொற்களையெல்லாம் காட்டி இருகரங்களையும் விரித்துநீட்டித் தன்புறத்தும் பசிப்பிணியை அகலவோட்டி மானமென்பதனை முற்றும்விட்டு தெய்வம் இவ்வகைத் தோலஞ்செய்ததேயென்று தலையைபாடிக்கிடைத்த பிச்சையை மக்களுக்கூட்டி யாசகஞ்செய்வது உலகத்தார் இகழ்ச்சிபெறுவதுவெல்லாம் இகழ்வானதென்று அந்த ஒருத்துக் கானகத்தில் [illegible] கின்ற சிறியபுல்லரிசிகளை ஆராய்ந்து ஆராய்ந்து தனது கைத்தாற் கிள்ளிச் சேரவெடுத்துக்கொண்டுவந்து தனது பத்தினிகரத்திற்கொடுப்பார் அதனைப்பெருமை[illegible]ளினுலும் வாங்கிக் குத்தி பாகஞ்செய்து அதிதிக்கு ஓர் பாகம்வைத்துத் தனக்கெனப்பகிர்ந்து ஈந்ததை உண்டு மனமகிழ்ந்து மந்திரங்கட்கும் மறைகட்கும் எட்டாத மாதவனுகிய ஸ்ரீதரனுடைய பாதாரவிந்தத்தை சதாதியானித்துக்கொண்டிருப்பார்.

இவ்விதமாக இவர்வாழ்ந்துக்கொண்டிருக்க இவர் மனைவியார், தனது புத்திரர் இருபத்தேழுபேருக்கும் தனக்குவந்த பசுநோக்குப்பிணியை இல்லைப் படாத்திரத்தில் சுற்றியார்த்துக்கொண்டவராக [illegible] பற்றுமையைக் கொண்டு வெறுந்தடம்பாடி நிற்பாள் ஐயோ இதன்மேலானவனை கண்செய்வாள் ஒரு குழந்தைக்கு வார்க்கும்போது மற்றொரு குழந்தை கை நீட்டும் ஒரேகாலத்தில் இரண்டுகுழந்தைகளும் கைநீட்டிக்கொண்டு மேல்விழும் வேறொருகுழந்தை கைகளைப் பறித்துக்கொள்ளும் அதுகண்டு தேம்பித்தேம்பி மற்றொருகுழந்தை அழும் வேறொருகுழந்தை பொருமிப்பொருமிக் கண்களைப் பிசைந்துகொண்டு ஒழுகும் இன்னுமொன்று புரண்டு விழுந்து எவரிடமிட்டத்தபடியே பிணங்கிக்கொண்டிருக்கும். மற்றொருமகவு எவ்வயற்றில பசித்தனியவில்லையே அந்தோ என்றுவய

ரும் என்னுடைய எனக்குக் கஞ்சிவார்க்கவேயில்லையெ
ன்று ஒருசேய் பொய்பேசி மிக்க ஆவலோடு தாய்
கையிலிருப்பதைப் பறித்து உண்ணச் செல்லும் ஓர்
சேயை வேறொருசேய் ஓடி முழுகியிழுக்க அதுவும்
இழக்க இவ்வண்ணம் ஒன்றை யொன்றுபற்றியிருக்
கும்போது நெருங்கி கொட்டுண்டு போவதைக்கண்டு
சிரிக்கும் ஒரு மகவு இவ்வாறு கலகம் விளைவிக்கின்ற
மைந்தர்களை நோக்கியும் பவளத்தகண்டுகள்போன்ற வி
ரல்களையுடைய கைகளால் தூக்கியும் அணைத்து வீக்கி
யும் மடித்தலத்து இருத்தியும் வகரித்தும் சீர்திரு
ருத்தியும் மை இத்திய ... ததைத் துடைத்தும்
முத்தைத் தடவிக்கொடுத்தும் ஆம்பல் மலர்போலும்
பவளச்செவ்வாயின் முத்தங்கொண்டும் அசிந்த மனை
யிலுள்ள சிறுவன் ஒருவன் நின்று உமது கிரகத்தில்
என்னபணிகாரம் யாதுபதார்த்தம் செய்தார்கள் என்று
அடுத்துக்கேட்க அதைக்கேட்டோடிவந்து அம்மா பணி
கா... என்பது எப்படியிருக்கும் பதார்த்தமாவதுயாது
அவைகள் எவ்விதச்சுவையோடு புள்ளன நீ எடுத்துக்
கூறுவெனு இரந்துகேட்கும் பிள்ளைக்கு அவைகளை
க்குறித்து ... களை யெடுத்துச்சொல்லுவோம்
ஆனால் அவற்றைச்செய்து ... கெருசி எங்
கிறுல் யான் என்செய்வேனென்று வேறுமொழிகூறி
போக்குக்காட்டி அவற்றை மறக்கும் உபாயஞ்செய்
வாள். மற்றொரு மனையிலுள்ள ஒருபிள்ளை கையிலே
தின்பண்டம் ஏந்திக்கொண்டிருக்கக்கண்டு ஓடிவந்து
நின்று தாயின் வதனத்தைப்பார்த்து கண்களில்நின்றும
தாரைதாரையாக நீர்வொழுகத் தாயே என்வாயில் நீர்
சுரக்கின்றது, ஆதலால் இப்பொழுதே செய்து அளிப்
பாயென்றுபிறந் சேலையைத் தொட்டிழுத்து என்னை
தேறுதலாகச் சமாதானஞ்செய்தாலும் தேறாது ஏங்கு
கின்ற மதலையையெடுத்து மார்பிடைஅணைத்து மனம்
வியாகூலப்படுவாள் ஒருகுழந்தை தாயின் எதிர்வந்து
நின்று அன்னாய், அயல்வீட்டில் ஒருபைதல்குண்டலம்
மோதிரம் மணிக்கடகம் நெற்றிச்சுட்டி, பொன் அரை
ஞாண் சதங்கை இவைகளை அணிந்துக்கொண்டிருக்கி
றான். எனக்கு நீயிட்டிருக்கும் பொருமை யென்றே
அவை உள்ளவிடத்தைப் பார்த்து எடுத்து உடனே
எனக்கு இடுவெனச் சிணுங்குகின்றதைநோக்கிக் கடன்
வாங்கி தரித்திரன் ஒருவன் அக்கடன்காரன் வந்தபோ
தெல்லாம் நாளையதினம் நாளையதினமென்று தவ
ணைசொல்வதுபோல அவ் அருமைச் சிறுமகவுக்கு நா
ளைக்கு ஆகட்டும் நாளைக்குஆகட்டும் பூட்டுகின்றேன்
என்பாள் அந்தோ-இவள் இல்லாமைக்கு என்செய்வாள்
ஐயோ-பாவம் அம்மா எனக்குப் பருப்புஞ் சர்க்கரை
யும்தருவா... அன்னாய் எனக்கு மதுரமான பா
லும் வெ... யும் அளிப்பாயென்றும் மக்கள் தன்
மேல்விழுந்து அழும்போதெல்லாம் வாய்திறவாது சும்
மாயிருப்பாள் பாலர்கள் தரித்துக்கொண்டிப்பது பால
மணிப்பூண்களை அல்லாமல் நவமணிகளன்று உடுத்தி
க்கொண்டிருப்பது ஒளியுற மயிரிச் சீலையேயன்றி
அரிய சரிகைப்பட்டுடையன்று உண்ணுதற்குரிய கல
ன்கள் இலைக்கலங்களேயன்றி விலைபெற்ற பொற்கலங்க
ளன்று அருந்துதற்குரிய நீர் கிணற்றுத் தண்ணீராகிய அன்
னபானமேயல்லது அன்பானில்லை அதனை நுகர்தும்
தனையர்களுக்குப்பசிதீர்க்கபயமில்லை பார்க்கச்சகியாத
இவ்வித வறுமையைக்கண்டும் மெய்ஞ்ஞானியாகிய
குசேலமுனிவர்க்கு உள்ளத்தில் கவலையென்பது சிறி
தும் தொடர்ச்சியில்அளவுகூறப்படாத புகழுற்ற அவ்
அந்தணர்தம் செய்கையைப்பார்த்தும் அவாமீது விரு
ப்புஞ் சுற்றுங்குறைந்ததில்லை வாவு அதிற்றுடையவ
ராய் அளவிறந்த பெருஞ்செல்வத்தின் வளப்பமுடை
